காக்கை கரவா கரைந்துண்ணும்

இறக்கை: 14 இறகு: 6

காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

ஜூன் 2025 | விலை ₹ 50

அகஸ்தியர் எனும் புரளி
■ அப்பணசாமி

தமிழியை மீட்ட தகைசால் ராஜன்
■ க.முத்துச்சாமி

வள்ளுவரைத் தேடி ஒரு பயணம்
■ ஜி. ஜான் சாமுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காக்கைச் சிறகினிலே' இதழ் வெளியீட்டு நிகழ்வு

அந்தமான் தமிழர் சங்கம், அகவை முதிர்ந்த தமிழறிஞர் நல சங்கம், கள்ளக்குறிச்சி திருக்குறள் நடுவம், நெமிலி கவியரசு கண்ணதாசன் தமிழ் வளர்ச்சி அறக்கட்டளை, தஞ்சை தமிழ்த்தாய் அறக்கட்டளை ஆகிய அமைப்புகள் இணைந்து 22.03.2025 அன்று அந்தமான் தமிழர் சங்க திருவள்ளுவர் அரங்கில், பன்னாட்டு மகளிர் நாள் விழா, நூல் வெளியீடு, விருது வழங்குதல் என முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவில் சென்னையில் இருந்து வெளிவரும் காக்கைச் சிறகினிலே மார்ச் மாத இலக்கிய இதழை, கள்ளக்குறிச்சி திருக்குறள் நடுவம் நிறுவனத் தலைவர் புலவர் அய்யா மோகன் வெளியிட, அந்தமான் தமிழர் சங்கத் தலைவர் லி. மூர்த்தி, செயலாளர் வே. காளிதாஸ், துணைச் செயலாளர் சோழன் சுதாகர் துணைத் தலைவர் அ. தமிழ்ச்செல்வன், இ. முத்து இருளன், நெமிலி.கு. கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைமுருகன் உள்ளிட்டோர் பெற்றுக் கொண்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் பாரதியார் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற, பாவேந்தர் பாரதிதாசன் 135ஆவது பிறந்தநாள் மற்றும் தமிழறிஞர்கள் பிறந்தநாள் விழா இணைந்து ஐம்பது விழா தியாகதுருகம் தனமூர்த்தி தொழிற்கல்வி நிறுவன வளாகத்தில் நடைபெற்றது. விழாவில் சென்னையில் இருந்து வெளிவரும் காக்கைச் சிறகினிலே ஏப்ரல் மாத இலக்கிய இதழை, அகவை முதிர்ந்த தமிழறிஞர் நலச் சங்கத்தின் பொதுச்செயலாளர் இரா. துரைமுருகன் வெளியிட, பணி நிறைவு பெற்ற மத்திய கலால் மற்றும் சுங்கத்துறை உதவி ஆணையர் பாவலர்.சு. சண்முகசுந்தரம் பெற்றுக்கொண்டார். உடன் வ.இராசகோபால், கலைமகள் காயத்ரி, புலவர்.பெ.சயராமன், மு.பெ. நல்லாப்பிள்ளை, முத்தமிழ் முத்தன், தேவ திருவருள், பேராசிரியர்.வே. ஸ்ரீதரன் மற்றும் தமிழறிஞர்கள் பெற்றுக் கொண்டனர்.

புதுச்சேரி வீரத் தமிழரசி வேலு நாச்சியார் இலக்கிய சமூக இயக்கம் சார்பாக 11.05.2025 அன்று புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில், சென்னையில் இருந்து வெளிவரும் காக்கைச் சிறகினிலே இலக்கியத் திங்கள் இதழை புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு செல்வம் அவர்கள் வெளியிட, பணி நிறைவு பெற்ற முதுகலைத் தமிழாசிரியர் பேச்சாளர் சீனு. வேணுகோபால் பெற்றுக்கொண்டார். உடன் அமைப்பின் நிறுவனர் என்.எஸ். கலை வரதன், திருமதி கலைவாணி கணேசன் மற்றும் நிர்வாகிகள் பெற்றுக் கொண்டனர்.

– தியாகதுருகம் இரா. துரைமுருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே

இறக்கை: 14

இறகு: 6

திருவள்ளுவராண்டு 2055

வைகாசி - ஆனி

ஜூன் 2025

ஆசிரியர்

வி. முத்தையா

9841457503

ஆசிரியர் குழு

முகிலன்

இரா.எட்வின்

தொடக்க கால நெறியாளர்கள்

காலஞ்சென்ற

கி. பி. அரவிந்தன்

வீர. சந்தானம்

உலகளாவியத் தொடர்பாளர்:

க. முகுந்தன்

K. Mukunthan

kmukunthan@gmail. com

முகப்பு ஓவியம்:

தமிழ்ப்பித்தன்

உள் ஓவியங்கள்:

லெசி

தொடர்பு முகவரி:

காக்கை, 22, MJB தெரு,

திருவல்லிக்கேணி,

சென்னை- 600 005.

செல்பேசி: 98414 57503

மின்னஞ்சல்:

kaakkaicirakinile@gmail.com

இணைய முகவரி: kaakkai.in

www.facebook.com/kaakkai.cirakinile

சாதிவாரிக்கணக்கெடுப்பு

நாடு சுதந்திரம் பெற்று 77 வருடங்களாகிவிட்டது. சுதந்திரமடைந்ததும் முதலில் மக்கள்நலனை அடிப்படையாகக்கொண்ட பொருளாதார உற்பத்திமுறை நிலவியது. அதன்பின் சந்தைப்பொருளாதார முறை அமலுக்கு வந்தது. தற்போது சந்தைபொருளாதாரத்துடன் வலதுசாரி அடையாளமும் ஒன்றிணைந்த ஆட்சிமுறை நிலவி வருகிறது. இன்றையநிலையில் ஒருபக்கம் அதீத தேசியத்தையும், மதவெறியினையும் இருகண்களாகக்கொண்டு செயலாற்றிவரும் வலதுசாரி அடையாள அரசியலும் இன்னொருபக்கம் தனியார்மயமும், கட்டுபாடுகளற்ற வணிகமும் சேர்ந்து, சமூகம் மற்றும் பொருளாதாரத்தளத்தில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கி ஏழைமக்களை சொல்லமுடியாத துயரத்திற்குள்ளாக்குகிறது என்றால் அது மிகையல்ல.

சட்டசபை, அதிகார அமைப்புகள் யாவுமே இன்றைக்கு சந்தைக்கு முன்னுரிமை அளிக்கும் விதமாக மாறிவிட்டிருப்பதால், சமூகம் மற்றும் பொருளாதாரத்தளத்தில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வினை ஆட்சியாளர்களால் சீர்செய்ய முடியாத அளவுக்கு நீடித்து வருகிறது. இதுவரை ஏழை மக்களுக்கு போதிய கல்வி, மருத்துவவசதி, வேலைவாய்ப்புகள், வீடு, உறுதி செய்யப்படாததிலிருந்தே இதனை உறுதி செய்துகொள்ளமுடியும்.

கல்வி, மருத்துவத்தில் தனியார்மயம் பெருகி வணிகமயமாகிவிட்டன. வேலைவாய்ப்பினை நல்கக்கூடிய அரசுத்துறைகளில் காலிப்பணியிடங்கள் நிரப்பாமல், கான்ட்ராக்ட் மற்றும் அவுட்சோர்சிங் முறையைக்கையாளுகின்ற போக்கு நிலவுகிறது. பொதுத்துறைகள் தனியார்மயகிவருகிறது. தனியாரும் தன்பங்கிற்கு திறன் எனக்கூறி, தொழில்நுட்பங்களைப்புகுத்தி ஏழைமக்களுக்கு வேலைவாய்ப்பினை உறுதியளிக்க மறுக்கின்றன. இதிலிருந்து பொது மற்றும் தனியார் துறைகளில் இடஒதுக்கிடு என்பது ஏழைமக்களுக்கு எட்டாக்கனியாக இருப்பதினை உணரலாம். இன்னும் சொல்லப்போனால், திறனற்ற உடல் உழைப்பாளர்களின் வாழ்வாதாரத்தினை உறுதி செய்யும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டத்திலும்கூட ஒருபுறம், 100 நாட்கள் முழுமையாக வேலை கிடைக்காத நிலை. இன்னொருபுறம் நிதி ஒதுக்கிடும் குறைக்கப்பட்டதினால் சம்பளமும் கிடைக்காத சூழல்.

இப்படியான காரணங்களினால், ஏழைகள் மேலும் ஏழைகளாகவும்; பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும் ஆகுகின்ற சூழல். சமூக-பொருளாதாரத்தளத்தில் நிலவும் கடுமையான ஏற்றத்தாழ்வுகளைப்பற்றியெல்லாம் கவலையற்ற இந்த ஒன்றிய ஆட்சியாளர்கள் சமூகத்தளத்தில் மக்களைப்பிளவுபடுத்தும் அரசியலைக்கையிலெடுத்து, வன்முறைகள் மூலம் சிறுபான்மையினர், தலித், பெண்களை அச்சுறுத்தி அவர்களை ஒழுங்குபடுத்துவதிலேயே குறியாக இருக்கின்றனர். நாட்டில் பெரும்பான்மையாக வாழும் ஏழைமக்களின் இத்தகைய அவலநிலையைக் கருத்தில் கொண்டு சமூகநீதியில் அக்கறைகொண்ட எதிர்கட்சிகள் பலவும் சாதிவாரிக்கணக்கெடுப்பினைநடத்திட பலவேறு போராட்டங்களின் வாயிலாக கோரிக்கை எழுப்பி வந்தனர். அதன் விளைவாக, ஒன்றிய அரசானது அடுத்துவரும் மக்கள் தொகைக்கணக்கெடுப்புடன் சாதிவாரிக்கணக்கெடுப்பையும் நடத்த முடிவெடுத்துள்ளது.

நாட்டின் வளங்களும், பொதுத்துறை நிறுவனங்களும் தனியாருக்கு கைமாறும் போது, ஏழைமக்கள் வாழ்வாதாரத்திற்காக அரசைச்சார்ந்து இருக்கவேண்டியுள்ளது. ஆட்சியாளர்களோ செலவில் சிக்கனத்தைக்கடைபிடித்து மக்கள் நலத்திட்டங்களுக்கான நிதியினை குறைத்துவிடுகின்றனர். இதனால் ஏழைமக்கள் மேலும் இன்னலுக்கு உள்ளாகவே செய்வர். இச்சூழலில், சாதிவாரிக்கணக்கெடுப்பினை விரைவில் நடத்திடக்கோருவது மட்டுமல்லாது, அதனடிப்படையில் சமூகத்தில் பின்தங்கியுள்ள மக்களின் இன்னலைத்தீர்க்கும் விதமாக உறுதிப்பாட்டு நடவடிக்கையை மேற்கொண்டு அம்மக்களுக்கு வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்துவது அவசியம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே

ஒவ்வொரு மாதமும்
1 ஆம் தேதி உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே' இதழ்
அஞ்சல் செய்யப்படுகிறது.
அடுத்து வருகிற 5ஆம் தேதிக்குள் இதழ்
கிடைக்கப் பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: 98414 57503

தனிஇதழ் விலை ரூ. 50.00
ஆண்டு சந்தா ரூ. 500.00
இரண்டாண்டு சந்தா ரூ. 750.00
ஐந்தாண்டு சந்தா ரூ. 2000.00

வெளிநாடு

ஆண்டு சந்தா $ 50.00

வங்கி விவரம்

A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
IFSC: CNRB0000914

Google Pay மூலம் செலுத்த:
செல்பேசி எண்: 98414 57503

வெளிநாட்டு வாசகர்கள் சந்தா செலுத்த:

A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
SWIFT CODE : CNRBINBBBFD

விளம்பரக் கட்டணம்

பின் அட்டை வண்ணம் ரூ.15000
உள் அட்டை வண்ணம் ரூ.10000
உள்பக்கம் கருப்பு - வெள்ளை ரூ.5000

காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், எழுத்தாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.

சிறகுக்குள்ளே...

அகஸ்தியர் எனும் புரளி
► அப்பணசாமி 05

மாநில உரிமை:
மறைந்து நின்று தாக்கும் மோடி அரசு
► தி. சிகாமணி 12

பாலின வன்முறைகளைக் களைதல்
► ச.பாலமுருகன் 15

அமைதிக்கான போர்!
► இரா.மோகன்ராஜன் 18

நெக்ரி & ஹார்ட் விளக்கும்
பேரரசின் ஏகாதிபத்திய இறையாண்மை
► இரா.முரளி 23

நாம் பொறுப்புமிக்கவராகச் செயல்பட...
► க.பழனித்துரை 29

தமிழியை மீட்ட தகைசால் ராஜன்
► க.முத்துச்சாமி 33

தலதா புனித தாதுப்பல்
கோவாவில் அழிக்கப்பட்டுவிட்டதா?
► என்.சரவணன் 40

உழவுக் கம்புப் போராட்டம்
► அ.கா.பெருமாள் 46

சோழர்களின் அடிமைப் பணிப்பெண்கள்
► செள.குணசேகரன் 50

சங்க இலக்கியங்களில் நாகப்பாம்பு!!
► சு.இராமசுப்பிரமணியன் 53

போரின் வலியும் இழப்பும் தோய்ந்த நாடகம்
► ந.முருகேசபாண்டியன் 57

பொங்கல் கரும்பும் பொங்கிய கண்ணீரும் காலனிய
காலத்தின் கரும்புத்தோட்டங்களில் அடிமைப்பாடுகள்
► கி.இரா.சங்கரன் 60

65/66
► இரா.எட்வின் 65

வள்ளுவரைத் தேடி ஒரு பயணம்
► ஜி. ஜான் சாமுவேல் 68

மனிதத்துவமும் பின்-மனிதத்துவமும்
► வின்சென்ட் 74

அண்டார்டிகாவின் பனி மழையிலும்
நுண் பிளாஸ்டிக்குகள்
► சிதம்பரம் இரவிச்சந்திரன் 81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகஸ்தியர் எனும் புரளி

அகஸ்தியர் தென்பகுதிக்குச் சென்றது வெறும் தொன்மப் புனைவா அல்லது பெருங்கற்காலப் பெரும் துறவிகளோடு உண்மையிலேயே தொடர்பு கொண்டதா என்பதைத் தீவிரமான, முறைப்படுத்தப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் மூலமே தெளிவுபடுத்தமுடியும்.

(வரலாறு, பண்பாடு, அறிவியல் : டி டி. கோசம்பி வாழ்வும் ஆய்வுகளும், பக்கம்164)

(இக் கட்டுரை பிறந்த கதை: 1920களில் சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியராகப் பணியாற்றிய சிவராஜா பிள்ளை அவர்கள் அக் காலகட்டத்தில் எழுதிய அரிய பொக்கிஷமான Agastya in Tamil Land எனும் ஆங்கிலப் புத்தகத்தின் PDF ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு தம்பி எனக்கு அனுப்பியது. சுடச்சுட வாசித்தும் விட்டேன். வாசிக்க, வாசிக்க பிரமிப்பாக இருந்தது. பின் அமைப்பியல் பாணியில் அகஸ்தியன் எனும் புராணிகத் தொன்மத்தை சல்லி சல்லியாக கட்டுடைத்து ஒன்றுமில்லாமல் ஆக்கி விட்டார். இதை உடனடியாகக் கட்டுரையாக்க முடிவு செய்து தமிழ் நிலத்தில் அகத்தியர் எனும் பெயரிட்டு எனது கணிணியில் சேமித்தும் வைத்தேன். ஆனால் வழக்கம் போல வேலைப்பளு காரணமாகத் தள்ளிப்போய்க்கொண்டே இருந்தது. நல்லவேளையாக ஆளுநர் ரவி மூலமாகக் காலம் அழைத்தது. சரி உடனடியாக வேலையில் இறங்க கூடுதல் தகவல்களுக்கான வாசிப்புகளில் இறங்கினேன். கூடுதலாக அகத்தியர் வரலாறு- அ. சிதம்பரனார், கழக வெளியீடு, 1964, அகத்தியர் ஆராய்ச்சி- கா. நமச்சிவாய முதலியார், குடியரசு பதிப்பகம், 1931, அகத்தியர், ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், சென்னை, மறைந்து போன தமிழ்நூல்கள், மயிலை சீனி வேங்கடசாமி போன்ற நூல்கள் கிடைத்தன. அப்போதுதான் வலது கண்ணில் பார்வைப் பிரச்சனை ஏற்பட்டு வாழ்க்கையே இருண்டது போல் ஆனது.

இதற்கிடையே எனது மதிப்புக்குரிய வரலாற்றாய்வாளர் ஆர். பாலகிருஷ்ணன் இ. ஆ. ப அவர்கள் அகஸ்தியர் ஆய்வில் ஈடுபட்டு ஒரு மிகச்சிறப்பான உரையை கணிணி வரைகலை உதவியுடன் நிகழ்த்தினார். தனது உரையின்போது அகத்தியர் என அழைக்காமல் அகஸ்தியர் என்றே அழைத்ததுடன் அன்னிய மனிதனான அகஸ்திய எனும் வடமொழிப் பெயர் கொண்ட அகஸ்தியனை அகத்தியன் எனும் தூய தமிழ்ச்சொல்லாலம் விளிப்பது தகுமா என நியாயமான கேள்வியையும் எழுப்பினார். நானும் கற்பூரம் போல் பற்றிக்கொண்டு அகஸ்தியர் என்றே அழைக்கத் தொடங்கினேன். இந்தக்கட்டுரையிலும் அகஸ்தியர் என்றே குறிப்பிட்டு எழுதுகிறேன். அத்துடன் சிவராஜா பிள்ளை அவர்களை சிவராஜா என்றே அழைக்க அனுமதி கோருகிறேன். இவரது நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது என்பதால் அதன் தமிழாக்கத்தில் அகஸ்தியர் என்றே கையாண்டுள்ளேன்.

இதேபோல, அகத்தியர் ஆராய்ச்சி (ஆசிரியர் நமச்சிவாய முதலியார், குடியரசு வெளியீடு, 1931), மறைந்து போன தமிழ் நூல்கள்(ஆசிரியர், மயிலைசீனி வேங்கட சாமி), தந்தை பெரியாரின் மொழியாராய்ச்சி உள்ளிட்ட நூல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நூலாசிரியர்கள் கையாண்டவாறே அவரவர்கள் மேற்கோள்களில் அகஸ்தியர் பெயர் கையாளப்பட்டுள்ளன.)

நாமும் அகஸ்தியர் புராணத்தை ஒரு சினிமாவில் இருந்தே ஆரம்பிக்கலாம். புகழ்பெற்ற தமிழ் சினிமா இயக்குநர் ஏ. பி. நாகராஜனால் இயக்கப்பட்டு அனைவராலும் அறியப்பட்ட அந்த படம் - அகத்தியர்!

ஒவ்வொரு புராணத்தைப் பற்றியும் கால இடைவெளியில் வெவ்வேறு சினிமாக்கள் வந்திருந்தாலும் அகஸ்தியர் குறித்து அந்த ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சினிமா மட்டுமே வந்துள்ளது.

தொடக்கத்தில் சனாதன புராணங்கள் மட்டும் ஆதிக்கம் செலுத்திவந்த நிலையில் 1940களின் இறுதியில் பகுத்தறிவு கதைகள் மாபெரும் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து புராணப் படங்கள் குறைந்தன. இதனால் அஞ்சிய சனாதன முதலைகள் அதனை மாற்றுவதற்காக உருவாக்க ஒரு நேரேட்டிவை செட் செய்தது.

இதன் தொடக்கமாக ஔவையார் படத்தைக் கூறலாம். தொடர்ந்து ஞான சௌந்தரி போன்ற படங்கள் வந்தன. மதுரை வீரன், காத்தவராயன் போன்ற படங்களையும் இந்த வரிசையில் அடுக்கலாம். இப்படங்களின் சிறப்பு வைதிக புராணங்கள், இதிகாசங்களின் தொன்மங்களுக்கு மாற்றாக தமிழ் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு பின்னப்பட்ட பக்தி திரைக்கதைகள் ஆகும். இதில் தொடர்ந்து பெரும் வெற்றிபெற்றவர் ஏ. பி. நாகராஜன். திருவிளையாடல், கந்தன் கருணை, திருமலை தென்குமரி, அகத்தியர், காரைக்கால் அம்மையார் போன்றவை அன்று பலம் பெற்றுவந்த சமூக நீதி, பகுத்தறிவுக் கருத்துகளுக்கு மாற்றாக பொதுப்புத்தியில் மதம், பக்தி போன்றவற்றை முன்வைத்தவை. இவர் இயக்கி வெற்றிபெற்ற முதல் புராணப் படமான சம்பூர்ண ராமாயணம் ராஜாஜியால் மிகவும் பாராட்டப்பட்டதில் இருந்தே இதனை உணர்ந்து கொள்ளலாம்.

காங்கிரசில் இருந்த தமிழ் தேசியவாதி ம. பொ. சி., தமிழரசுக் கழகம் தொடங்கினார். திராவிடக் கருத்துகள் அடித்தட்டு மக்கள் மத்தியில் நன்றாக வேர் பிடிக்கத் தொடங்கிய 40களின் பிற்பகுதியில் அதை முறிக்கும் மாற்று மருந்தாக திராவிட என்பதற்கு மாற்றாக தமிழ் தேசியத்தை முன் வைத்தவர். இவரது தமிழ் தேசியம் என்பது பக்தி சார்ந்த அதாவது மத நம்பிக்கை சார்ந்த தமிழ் தேசியம் ஆகும். இந்த அமைப்பில் திரு. வி. க., மு.வ., தெ. பொ. மீ., டி. கே, சண்முகம், சக்தி கிருஷ்ணசாமி தமிழ் தேசிய கொள்கைகளை வலியுறுத்தினர். இந்த அமைப்பில் இயங்கியவர் ஏ. பி. நாகராஜன்.

ம. பொ. சி., டி. கே. சண்முகம் போன்ற அறிஞர்களின் ஆலோசனைகள் பயன்படுத்தப்பட்டு அகத்தியர் திரைக்கதை அமைக்கப்பட்டது. ஆனால், இதற்கும் ஐந்து ஆண்டுகளுக்கு முன் 1967 இல் வெளியான இதே இயக்குநரின் கந்தன் கருணை (1967) படத்தில் அகஸ்தியர் இல்லை. முருகப் பெருமான் வரலாறு குறித்த இந்தப் படத்தில் முருகப் பெருமான் அருள் பெற்று சங்கம் அமைத்த அகஸ்தியர் இடம்பெறாதது வியப்புதான். ஆனால் இதே இயக்குநர் ஐந்து ஆண்டுகள் கழித்து அகஸ்தியர் புராணிகம் குறித்து தனிப்படம் எடுக்க என்ன தேவை என்பதும் மில்லியன் டாலர் கேள்விதான்!

அதுமட்டுமில்லை. நாம் தேடிய அளவில் அகஸ்தியர் புராணிகம் குறித்து வேறு எந்த மொழியிலும் - இந்தி உள்பட, தனிப் படம் எடுக்கப்படவில்லை. சில தென்னிந்திய மொழிகளில் சில படங்களில் அகஸ்தியர் புராணிகம் கருவேப்பிலை போலப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அகலிகை முதல் ஏராளமான புராணிக தொன்மங்களைப் பயன்படுத்தியுள்ள தமிழின் நவீன உரைநடை இலக்கியங்களிலும் அகஸ்தியர் புராணிகம் பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்திய துணைக் கண்டம் முழுவதும் தேடினாலும் அகஸ்திய புராணிகம் தென்னாட்டுக்கு மட்டுமேயானதாக கட்டமைக்கப்பட்டது ஏன்? ஏனென்றால் ஆயிரமாயிரம் ஆண்டுகள் தனித்தன்மையுடன் தொடரும் திராவிட மண்ணில் நச்சுவேர் பாவச் செய்யும் சதிதான் இது.

அகஸ்தியர் எனும் பெயர் முதன் முதலில் ரிக் வேதத்தில் காணப்படுகின்றது. அவரது வம்சாவளி குறித்து திருவிளையாடல் புராணம், கந்தபுராணம், காவிரி புரணம், இன்னும் சில புராணங்களில் வேறு வேறான கதையாடல்கள் கிடைக்கின்றன. மொத்தமாகத் தொகுத்துப் பார்க்கையில் ஊர்வசியின் மீது பிரம்மனுக்கு ஏற்பட்ட காமத்தில் வெளிப்பட்ட விந்துவை ஒரு குடத்தில் பிடிக்க அதில் இருந்து பிறந்தவர் என்று ஒருவாராக அறியலாம்.

[கும்பம் என்பது வளையம் கொண்ட பானை ஆகும். ..... கருப்பையையும் தாய்தெய்வத்தையும் குறிக்கிறது. காந்தாரியின் நூறு கவுரவர்களும் ஒரு மகளும் வெண்ணெய் தாளியிலிருந்து பிறந்தவர்கள். இவர்கள் அனைவருமே அசுரர்கள். வசிட்டர், அகத்தியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரசில் இருந்த தமிழ் தேசியவாதி ம. பொ. சி., தமிழரசுக் கழகம் தொடங்கினார். திராவிடக் கருத்துகள் அடித்தட்டு மக்கள் மத்தியில் நன்றாக வேர் பிடிக்கத் தொடங்கிய 40களின் பிற்பகுதியில் அதை முறிக்கும் மாற்று மருந்தாக திராவிட என்பதற்கு மாற்றாக தமிழ் தேசியத்தை முன் வைத்தவர். இவரது தமிழ் தேசியம் என்பது பக்தி சார்ந்த அதாவது மத நம்பிக்கை சார்ந்த தமிழ் தேசியம் ஆகும். இந்த அமைப்பில் திரு. வி. க., மு.வ., தெ. பொ. மீ., டி. கே, சண்முகம், சக்தி கிருஷ்ணசாமி தமிழ் தேசிய கொள்கைகளை வலியுறுத்தினர். இந்த அமைப்பில் இயங்கியவர் ஏ. பி. நாகராஜன்.

பிறப்பிலும் இதேபோல் கதைகள் உள்ளன. இருவரும் கரு-குடுவைகளிலிருந்து பிறந்தவர்களாம் என்கிறார் டி. டி கோசம்பி. (வரலாறு, பண்பாடு, அறிவியல் : டி. டி. கோசம்பி வாழ்க்கையும் ஆய்வுகளும்)]

சிவபெருமான் இமயமலையில் உமாதேவியை மணக்க இருந்த காலத்தில், தேவர், முனிவர் முதலான முப்பத்து முக்கோடி பேர் கூடினர். இதனால், வடபகுதி தாழ்ந்து தென்பகுதி உயர்ந்தது.

உடனே, தேவர், முனிவர் முதலானவர்கள் நடு நடுங்கி, சிவ பெருமானிடம் முறையிட்டனர். அதைத்தொடர்ந்து, சிவபெருமான் அகஸ்திய முனிவரை அழைத்து, நீர் சென்று தென்திசையிலுள்ள பொதிய மலையில் அமர்ந்தால் பூமி நடு நிலைக்கு வந்து விடுமென்றார். ஆகவே அகஸ்தியர் தென்திசை போனார். போகிற வழியில், தற்போதைய நாசிக் பகுதியில் பஞ்சவடியில் ஆசிரமம் அமைத்துத் தங்குகிறார். இங்குதான் ராமன் இவரைச் சந்தித்ததாக இராமயணம் கூறுகிறது. அதாவது, ராமர் சீதையுடன் காடு சென்ற காலத்தில், அகஸ்தியர் ஆசிரமத்தில் தங்கிச் சென்றுள்ளனர். அப்போதுதான் அஸ்திரம் முதலியவற்றை இராமர் அகஸ்தியரிடமிருந்து பெற்றுக்கொண்டாராம்.

தொடர்ந்த தென் பயணத்தில், விந்தியமலை கர்வங்கொண்டு உயர்ந்து அகஸ்தியரை வழிமறித்ததாம். அகஸ்தியர் பேருருக் கொண்டு அதன் உச்சியில் காலால் அழுத்த, விந்திய மலை தாழ்ந்து வழிவிட்டுள்ளது. பின்னர் தென்னாடு நோக்கித் தொடர்ந்து பயணம் செய்துள்ளார்.

இடையில் வாதாபி எனுமிடத்தில் வாதாபி, வில்வலன் என்ற அசுரர் இருவர் முனிவர்களுக்குத் துன்பம் செய்து வந்தனர். அதாவது, வில்வலன் வாதாபியை ஒரு ஆடாக உருமாற்றி, கொன்று, சமைத்து முனிவர்களுக்கு இட்டு, அதை முனிவர் உண்டபிறகு வாதாபி வருக என்றழைப்பானாம். வாதாபியும் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வருவானாம். அதனால் விருந்துண்ட முனிவர்கள் இறந்து படுவராம். அதனை வில்லவனும் வாதாபியும் உண்பார்களாம். அவ்வாறே அகஸ்தியனார்க்கும் ஒரு ஆட்டினை பலியாக்கி விருந்திட்டானாம். வில்வலன் பின்னர், 'வாதாபி, வருக' என்றானாம். அவன் வெளிவருவதற்குள் அகஸ்தியனார் 'ஜீர்ணாபி' என்றார். அவன் அவ்வாறே ஜீரணமாகி இறந்து பட்டான். அதன்பிறகுதான் அகஸ்தியர் பொதிய மலை வந்து அதன் உச்சியில் அமர, பூமி சமநிலையடைந்தது என்று புராணங்கள் கூறுகின்றன.

(ஆனால் அகஸ்தியர் படத்தில், வல்லவன் வாதாபியை ஒரு மாங்கனியாக்கி விருந்து படைத்ததாகக் காட்டப்படுகிறது.)

பொதிய மலை தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. இந்த தமிழ்நாட்டினை சுப்பிரமணியர் ஆண்டு வந்தாராம். அகஸ்தியனார் சுப்பிரமணியரிடத்துத் தமிழ்நாட்டைப் பெற்று பாண்டியனுக்குக் கொடுத்தார் என திருநெல்வேலிப் புராணம் கூறுகிறது. இந்தப் பாண்டியர்கள் யார் என்றால் துவாரகையில் இருந்து தம்மோடு அழைத்துவந்த யதுகுல மன்னர்களும் அருவாளர்களும்தான் என்கின்றன இதர புராணங்களும்.

இந்திரனோடு போரிடப் பயந்த விருத்தாசுரன் எனும் அசுரன், இங்கு ஓடிவந்து கடலில் ஒளிந்துகொள்ள, இந்திரன் அகஸ்தியனாரை வேண்டினான். அகஸ்தியர் கடலைக் குடிக்க கடல் வற்றிப் போனது. இதனால் விருதாசுரன் வெளியே வர அவனை இந்திரன் கொன்றதாகவும் பின்னர், அகஸ்தியர் உறிஞ்சிய கடல் நீரை வெளியே விடுவித்தார் என்றும் திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதல்லாமல், காவிரி நதியின் திமிரை அடக்குவதன் பொருட்டு காவிரியைத் தனது கமண்டலத்தில் அடைத்தாராம். இதனால் காவிரி வரண்டு விட்டதாம். ஆனால், நாரதர் காக்கை வடிவில் வந்து கமண்டலத்தைத் தட்டிவிட்டதால் தான் காவிரி விடுதலை அடைந்தது. அந்தக் காவிரிதான் தமிழ்நாட்டில் பொங்கிப் பாய்கிறது என்று காவிரி புராணம் உள்ளிட்ட புராணங்கள் கூறுகின்றன.

முன்னதாக, ராவணன் எனும் நல்லரசன் தென்னாட்டை நல்லாட்சி செய்து வந்தான். அவன் தனது இசைத்திறமையால் ஈஸ்வரனையும் வென்று யாராலும் வெல்ல முடியாத பெரு வீரனாகத் திகழ்ந்தானாம். அவனை அகஸ்தியர் தனது இசையால் வென்று தென்னாட்டுக்கும் தெற்கே கடலுக்கும் அப்பால் இலங்கைத் தீவுக்குத் தூக்கி வீசினாராம்.

தொடர்ந்து அகஸ்தியர் தமிழ்நாட்டில் தங்கி தமிழுக்கு இலக்கணம் எழுதினார்; முச் சங்கங்கள் அமைத்து தமிழை வளர்த்தார் என்றெல்லாம் புராணங்களும் பல்வேறு உரையாசிரியர்களின் உரைகளும் கூறுகின்றன.

இதுதான் அகஸ்தியர் கதை. பல்வேறு புராணங்கள், உரையாசிரியர்கள் உரைகளில் இருந்து தொகுக்கப்பட்டவை. ஒரு முறை ஏ. பி. நாகராஜன் இயக்கிய அகத்தியர் படத்தையும் பார்த்துவிட்டால் இன்னும் தெளிவாகும்.

இவ்வாறு அகஸ்தியர் வாழ்ந்த காலம் எவ்வளவு என புராணங்களில் சொல்லப்பட்டபடி கணக்கிட்டால், சிவபெருமான் தென்னாடு செல்லக் கட்டளையிட்டதில் இருந்து தென்னாடு அடையும் வரையில் 3000 ஆண்டுகள், தென்னாட்டில் அகத்தியம் எழுதியது, முச் சங்கங்கள் வளர்த்தது என 11000 ஆண்டுகள் ஆக மொத்தம் 14000 ஆண்டுகளாம். இதன் பின்னர் மலேயா, ஜாவா தீவுகளுக்கும் கம்போடியாவுக்கும் கடல் கடந்து பயணித்து அங்கெல்லாம் தங்கி சைவம் வளர்த்ததோடு திருமணங்கள் செய்து வம்ச விருத்தியிலும் ஈடுபட்டார். அந்த வம்சாவளியினரே இப் பகுதிகளை ஆண்டு வந்தனராம். இதையெல்லாம் கணக்கிட்டால் இன்னும் சில நூறு ஆண்டுகளோ அல்லது சில ஆயிரம் ஆண்டுகளாவது அந்த சூப்பர்மேன் வாழ்ந்திருக்கலாம்.

இவ்வாறு அதீதமாக, நம்பமுடியாத அளவுக்குத் தொன்மங்களைக் கட்டமைப்பது புராணிகம் ஆகும். இதை அறிவியல் அடிப்படையில் கேள்வி கேட்க முடியாது. இது ஒன்றுமட்டுமல்ல கணக்கற்ற புராணிகங்களை சனாதன வாதிகள் கட்டமைத்திருக்கிறார்கள். ஏன் இவ்வாறு புராணங்களை உருவாக்கி இருக்கிறார்கள் என்றால் நாடு பிடிப்பதற்காகத்தான். நிலங்களைப் பறிப்பதற்கும் அங்கு வாழும் தொல்குடிகளின் பண்பாடுகளை அழித்து தங்களது மதத்தைத் திணித்து அடிமைப்படுத்துவதற்காகத்தான். இதனை சமசுகிருதமயமாக்கல், ஆரியமயமாக்கல் என்கிறார்கள். இந்திய துணைக்கண்டம் முழுவதும் கத்தியின்றி, ரத்தமின்றியே இத்தகைய நாடு பிடித்தலும், ஆரியமயமாக்கலும் நடந்துள்ளது தென்னாட்டைத் தவிர.

இங்கு ஆரியமயமாக்கலை இன்னும் கொஞ்சம் மிகச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளலாம். இந்திய துணைக்கண்டத்துக்குள் நுழைந்த ஆரியர்கள் தொடக்கத்தில் தங்களை தனிமைப்படுத்திக்கொண்டு வாழ்ந்தனர். இங்கு வாழ்ந்த தொல்குடி மக்களை மதிக்கவில்லை. அவர்களைத் தங்களைவிட தாழ்வானவர்களாக நடத்தினர். சிறிது வன்முறையைப் பயன்படுத்தி அடிமைகளாக்கினர். அவர்களை 'தாசர்கள்' என்றே அழைத்தனர். தங்கள் வாழ்பரப்பை மேலும், மேலும், விரிவுபடுத்திக் கொள்வதற்காக நில ஆக்கிரமிப்பில் ஈடுபட்டனர். இப்போது வன்முறையைப் பயன்படுத்தவில்லை. இதனை 'பரஸ்பரம் பண்பாடுகளை ஏற்றல்' எனும் அணுகுமுறையில் கையாண்டதாக இந்திய வரலாற்றியலின் தந்தை டி. டி. கோசம்பி கூறுகிறார்.

அதாவது நீ அரிசி கொண்டுவா நான் உமி கொண்டு வருகிறேன். ரெண்டு பேரும் ஊதி, ஊதிச் சாப்பிடலாம் என்கிற கதையில்தான். குரங்கு அப்பம் பிட்டுப் பகிர்ந்த முறையும் பின்பற்றப்படுவதுண்டு. நீண்டகாலமாக தென்னிந்தியா அவர்களுக்கு சிம்ம சொப்பனமாகவே இருந்தது. ஆரியர்களைவிட செழித்த நாகரிகமும் வரலாறும் இங்கு நிலைத்து நீடித்து வந்ததும் அவர்களால் விந்திய மலையைக் கடந்து பெருங்கூட்டமாக நுழைய முடியாதது காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாட்டில் இத்தகைய புனிதப்பணியை மேற்கொள்ள அனுப்பப்பட்ட சிங்கிள் மேன் ஆர்மிதான் அகஸ்தியர் புராணிகம்.

முன் கூறிய கணக்கற்ற புராணிகங்கள் அனைத்தும் விந்திய மலைக்கு வட பகுதிக்குச் சொந்தமானவை என்பது கவனிக்கத்தக்கது ஆகும். அகஸ்திய புராணிகம் மட்டுமே தென்னாட்டைச் சார்ந்தது ஆகும். இதோடு தொடர்புடைய ஸ்கந்த புராணம், திருவிளையாடல் புராணம் போன்றவை பின்னர் உருவானவை. வட இந்திய புராணங்கள் அங்கு செல்வாக்கு செலுத்திய தொல்குடி பண்பாடுகளையும் சமணம், பவுத்தம் உள்ளிட்ட அவைதிக மதங்களையும் கபளிகரம் செய்ய மேற்கொள்ளப்பட்ட புராணங்கள் ஆகும். அகஸ்திய புராணிகம் தென்னாட்டுப் பண்பாட்டை அழிக்கத் தோற்றுவிக்கப்பட்ட புனைபாவை ஆகும். பின்னர் புனையப்பட்ட ஸ்கந்த புராணம் போன்றவற்றையும் இந்த வரிசையில் சேர்த்துக் கொள்ளலாம்.

முதல் முதலில் அகஸ்திய புராணிகத்தை கட்டுடைத்து சல்லி சல்லியாக்கியவர் முன்னர் கூறியவாறு சிவராஜா ஆவார். அதன் முக்கியப்பகுதிகள் . கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:

"சிவன் திருமணத்தால் நிலப்பரப்பில் ஏற்பட்ட சமநிலைக்குலைவைச் சீர்படுத்த அனுப்பப்பட்ட அகஸ்திய முனிவர் தென் பயணத்தில் விந்திய மலையை அடக்கினார்; கடலைக்குடித்து வற்றச்செய்தார் என்றெல்லாம் புராணங்களில் கூறப்படுவதை அன்றைய கால விண்ணியல் மற்றும் நிலவியல் கணிப்புகள் என்று கொள்ளலாம் என்கிறார் சிவராஜா. இயற்கையின் போக்கில் இதுபோன்று மாற்றங்களும் இடையீடுகளும் நிலப்பரப்பில் ஏற்படுவது உண்டே!

"ஆரியமயமாக்கலுக்காக புனையப்பட்ட கட்டுக்கதைகள் இவை. இது வேதகால நாகரிகம் என்றும் கூறப்படுகிறது. ஆனால் நாகரிகம் என்பது இலக்கியங்களும், தத்துவமும், மதமும் சார்ந்தததுதான் என்றால் அதுதான் ஆரியமயம் என்றால் சமசுகிருத நாடு மட்டுமல்ல, திராவிட நாடுகூட ஆரியவர்தம் என்றுதான் கூறப்பட வேண்டும். ஆனால், இதுபோன்ற பிற்காலக் கட்டுக்கதைகளை நம்பாமல் நாகரிகம் என்பது மனிதன் தமது தேவைகளுக்காகவும் வாழ்வை மேலும் மேம்படுத்திக்கொள்ளவும் இயற்கையை கட்டுப்படுத்துவதும் மேம்பட்ட வாழ்வை நோக்கி முன்னேறுவதும் கலைகளை உருவாக்குவதும் சமுதாய கட்டுமானத்தை மேலும் மேலும் முன்னேற்றுவது என்றால் திராவிடம் தான் மேம்பட்ட நாகரிகமாகக் கருதப்படக்கூடியது" என்கிறார் சிவராஜா. (பக் 5-6)

"உதாரணமாக, வேளாண்மையையும் கட்டடக்கலையையும் எடுத்துக்கொள்ளுங்கள். ஆரியத்திடம் என்ன இருக்கிறது. இன்னமும் ஆரியமயம் பற்றிப்பேசிக்கொண்டிருப்பது திராவிடம் குறித்த வரலாற்று அறிவு இல்லை என்பதையே காட்டுகிறது. இது நியாயம் கிடையாது. அகஸ்தியர்கூட தாம் செய்கிற காரியங்களின் பின்விளைவுகளை முன்னுணர்ந்திருப்பாரா என்பதை உறுதியாகக் கூற முடியாது. தொடக்க காலத்தில் அவைதிக மதங்கள் (சமணம், பவுத்தம் போன்றவை) நாடு பிடிப்பதற்காகத்தான் தென் நாட்டுக்கு வந்தனர் எனினும் அவர்கள் மதப்பிரசாரகர்களாகவே வந்தனர். ஆனால் அகஸ்தியன் வருகை என்பதும் ஆரிய சடங்குகளைத் திணித்ததும் ஆரிய ஆட்சியை தென்னாட்டுக்கு விரிவுபடுத்துவதற்காகவே ஆகும். அல்லது அகஸ்தியன் வருகையே பின்னர் ஆரியமயமாக்கலுக்கு வித்திட்டது. நில ஆக்கிரமிப்பு மட்டுமல்லாமல் அதன் தொடர் விளைவுகளை அகஸ்தியர் முன்னுணர்ந்துதான் செயல்பட்டார் என்று கூறமுடியாது. ஆனால் அகஸ்தியர் ஊடுருவல் என்பது அபரிமிதமான ஆற்றல்கள் கொண்ட (திராவிட) நிலப்பரப்பு ஆகும். ஆனாலும் தமிழ் நிலம் குறித்து முழுமையாக அறிந்த முதல் அன்னியன் அகஸ்தியரே ஆவார். அதனால்கூட ஒருவேளை (இந்து மதத்தில்- கட்டுரை ஆசிரியர்) அவருக்கு அளிக்கப்படும் உயர் மத மதிப்பும் வழிபாடும் பொருத்தமாக இருக்கலாம். ஆரியக் கண்ணோட்டத்தில் தவறும் அல்ல. ஆனால், திராவிடக் கண்ணோட்டத்தின் மூலம் நோக்கும்போதுதான் இதன் உண்மையான சிக்கல் புலப்படுகிறது. அன்னிய மனிதன் - மதம், தத்துவம், கல்வி ஞானி என்ற போர்வையில் ஒட்டுமொத்த நிலத்தையும் அடிமைப்படுத்தி தன்னை ஞானாசிரியனாக ஏற்கச் செய்தான் என்பது நம்பக்கூடியதாகவோ ஜீரணிக்கக்கூடியதாகவோ இல்லை" (பக். 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மேலும் கூறுகிறார்.

"இங்கு, எப்படியாயினும் ஒரு ஆரிய ரிஷியான அகஸ்தியனை தமது ஞானாசிரியராக இன்றைய ஒட்டு மொத்த தமிழ் இனமும் கருதுவதாகக் கூறுவதும் தனது உற்ற உறவினராகக் கருதுகின்றனர் என்பதும் ஒரு அசாதரணமான விழுமியமே ஆகும். ஆனால் இது ஒரு அலட்சியமான பார்வையே யாகும்.

இதுபோன்ற ஒரு அப்பட்டமான இனத் துரோகம் சாத்தியமா என்பதையும் கேட்டுக்கொள்ள வேண்டும். ஒரு ஆரிய ரிஷியை திராவிடனாக்குவது தொப்புள் கொடி உறவில் இருந்து தன்னைத் தானே துண்டித்துக்கொள்ளச் செய்வதாகும்" என்கிறார்.- பக் 8

"ஆரிய அலைபாய்வு கிழக்கு நோக்கி தென் முகமாக கங்கைப் படுகையில் வங்கக்கடல் முகத்துவாரம் வரை விரிந்தது. பின்னும் வழிந்த கூட்டம் தென் மேற்காக தற்போதைய ஒடிசா (உத்கலம்) வரை நகர்ந்தது. ஐதரேயா பிரம்மானம் கூறுகிறபடி சாபத்துக்குள்ளான விஸ்வாமித்திரன் 50 குழந்தைகள் மூலம் வம்சாவளிகளை உருவாக்கியதாக குறிப்பிடுகிறது. தொல்குடி மக்களுடன் கலந்து பிரசவிக்கப்பட்ட இவர்கள் தாசர்கள் என அழைக்கப்பட்டனர். அவர்களில் ஆந்திரர், புந்தரர், புலிந்தர், முதிபர் ஆகியோரும் அடங்குவராம். இந்த தொல்குடிகள் பிந்தைய புராணங்களிலும் குறிப்பிடப்படுகின்றனர். விந்திய மலைக்குத் தெற்கே கோதாவரியின் வடக்குக் கரையில் இருந்து மேற்கே நர்மதா மலைத்தொடர்வரை இவர்கள் பரவியிருந்ததாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் ஐதரேய பிரமாணத்தில் அதிகமாகக் காணப்படவில்லை. ஆனால் பாணினியில் கணக்கில் காட்டப்படுகின்றது. டாக்டர் ஆர். ஜி. பந்தர்கர் இவர்களின் காலம் பொது ஆண்டுக்கு முன் (பொ. ஆ, மு.) 700 என்கிறார்."

"பாணினி மேற்கொண்டுள்ள கணக்கிலும்கூட இதற்கும் தெற்கே அதாவது விந்திய மலைக்குத் தெற்கே வாழ்ந்த எந்த நாடு அல்லது நிலப்பரப்பு பற்றியும் குறிப்புகள் காணப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் பந்தர்கர் பாணினி காலத்தைச் சேர்ந்தவர்களுக்கு விந்திய மலைக்கு வடக்கே வாழ்ந்த மக்கள் பற்றி மட்டும் தெரியும் என்கிறார். விந்திய மலைக்கு வடக்கே கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் அவர்களுக்குள் தொடர்புகள் இருந்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். ஆனால் அவர்கள் ஒருபோதும் விந்திய மலைக்குத் தெற்கே எட்டிப்பார்க்கவில்லை. எனவே விந்திய மலையின் கர்வத்தை அடக்கி அகஸ்தியர் தெற்கு நோக்கி நகர்ந்து காலனிகளை ஏற்படுத்தினார் எனும் கதை பொ. ஆ. மு 700க்கு முன்பாக நடந்திருக்க வாய்ப்பில்லை.

"தொடர்ந்து ராமாயண, மகாபாரத இதிகாசங்களில் இருந்து பேரர்கள் (விதர்பா) கணக்கைக் கையில் எடுக்கும் சிவராஜ் இந்த நாடுதான் ஆரிய வர்தத்தின் மிகத் தொன்மையான தென் எல்லையாகும்" என்கிறார் சிவராஜா. - பக் 10 -12.

இவை குறித்த சரியான காலக் கணக்குகளை அளிப்பதில் இந்த இதிகாசங்களின் கணக்குகள் நம்பிக்கைக்குரியதாக இல்லாத சூழலில், பொ. ஆ. மு 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்கப் பயணிகளான தேசியாஸ், மெகஸ்தனிஸ் ஆகியோரின் குறிப்புகள் எதிர்பாராதவிதமாக புதிய ஒளியைப் பாய்ச்சுகின்றன என்கிறார் சிவராஜ். இவர்கள் குறிப்பிடும் இந்தியா என்பது விந்திய மலைக்கு வடகே ப்ரந்துள்ள நிலப்பரப்பு மட்டும்தானாம். மேற்கில் சிந்து நதியின் பாடலி முதல் கிழக்கே கங்கையின் வங்கக்கடல் முகத்துவாரம் வரை விரிவாகக் குறிப்பிட்டுள்ள அவர்களுக்குத் தென்னிந்தியா குறித்த தகவல்கள் தெரிந்திருக்குமானால் உறுதியாக தென்னிந்தியா குறித்தும் தமது குறிப்புகளில் எழுதியிருப்பார்கள் என்கிறார். இதில்"தேசியாஸ் குறிப்புகளைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாவிட்டாலும் பாடலிபுத்திரம் அரண்மனையில் நீண்டகாலம் தங்கியிருந்த மெகஸ்தனிஸ் அச் சமயத்தில் பாடலிபுத்திரம் அரசு வசமிருந்த அனைத்து தகவல்களையும் அறிந்தவர் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் அவர்களிடமே தென்னிந்தியா குறித்த தகவல்கள் இல்லை என்பது உறுதியாகிறது. இது ஒரு முக்கியத்துவம் கொண்ட குறிப்பாகும்" என்கிறார். - பக் 13 -14.

(இதனால் அவர்கள் கூறுகிறபடி அகஸ்தியர் என ஒரு மகாரிஷி இருந்திருப்பார் என்றால் அவர்கள் பொ. ஆ. மு. 400 க்கு முன் தென்னிந்தியாவுக்குள் அல்லது அன்றைய தமிழ்நாட்டுக்குள் வந்திருக்கும் வாய்ப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவு. - கட்டுரை ஆசிரியர்)

தென்னாடு குறித்த கிரேக்க குறிப்புகளையும் இனி கவனிக்கலாம்.

"அடுத்து பிற்கால கிரேக்கப் பயணிகள் மற்றும் தமிழ் செவ்வியல் இலக்கியங்களில் (இங்கு செவ்வியல் இலக்கியம் என்பதை சங்க இலக்கியங்களை மட்டும் சிவராஜ் குறிக்கிறார்.) என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கலாம். இக் காலம் என்பதை பொ. ஆ. முதல் இரண்டு நூற்றாண்டுகள் என கணிக்கிறார். இக்கணக்குகள் எதிலும் அந்த ரிஷி குறித்து எதுவும் காணப்படவில்லை என்கிறார். அதாவது, தாலமி தனது குறிப்புகளில் பொதிகை மலையைக் குறிக்கும் பெட்டிகோ என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார். ஆனால் அங்கு வாழ்ந்ததாகக் கூறப்படும் புனித முனி (அகஸ்தியர்) குறித்து எதுவும் இல்லை." - பக். 15.

(இக் கணக்குகளின் படி அகஸ்தியர் ஒருபோதும் பொ. ஆ. 200 க்குள் தமிழ் நிலம் வந்திருக்க முடியாது. - கட்டுரை ஆசிரியர்.)

சங்க இலக்கியங்களில் என்ன சொல்லி இருக்கிறது?

"சங்க இலக்கியம் என்று கூறப்படும் இலக்கியங்களில் பரிபாடல் தவிர, அதுவும் இது பொ. ஆ 6 அல்லது 7ஆம் நூற்றாண்டில் பாடப்பட்டு சேர்க்கப்பட்ட இடைச்செருகல் என்று கூறப்படுகிறது - வேறு எதிலும், பிற்காலத்தில் உருவக்கப்பட்ட உரைகள் உட்பட எதிலும், இந்த முனி குறித்த ஒரு குறிப்பு கிடையாது. குறிப்பாக பத்துப்பாட்டில் அகஸ்தியர் குறித்தோ அவரது நடவடிக்கைகள் குறித்தோ ஒரு புலவரும் பாடவில்லை. திருமுருகாற்றுப்படை, மதுரைக்காஞ்சி போன்றவற்றில் பொதிகை மலை குறித்த பல தகவல்கள் காணப்படுவது உண்மைதான் என்றாலும் அவையெல்லாம் மக்கள் கூடும் பொதுவெளி எனும் பொருளிலேயே சுட்டப்படுகின்றன. முன்னர் கூறப்பட்டதுபோல எட்டுத்தொகையிலும் பரிபாடல் தவிர எதிலும் குறிப்பு இல்லை. பொதிகை இடம் பெறும் புறநானூறு (2,128) அல்லது நற்றிணை (379) ஆகியவற்றில்கூட அகஸ்தியர் பெயர் இடம்பெயரவில்லை. இந்த இடங்களிலும் பாண்டிய அரசனோடுதொடர்பு படுத்தியே பொதியமலை பாடப்பட்டுள்ளது; அகஸ்தியர் வரவில்லை" என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் சிவராஜா. - பக். 15 -16

(எனவே, பொ. ஆ 7 ஆம் நூற்றாண்டுக்கு முன் அகஸ்தியர் எனும் முனிவர் சான்றுப்பூரமாகக் காணப்படவில்லை. அப்படியே இருந்தாலும் அவர் அகத்தியம் போன்ற நூல்களை எழுதவில்லை.)

உரையாசிரியர்கள் எனும் புனிதப்பசுக்கள்.

அகஸ்தியர் எனும் புனைபாவையை கட்டமைத்தவர்கள் உரையாசிரியர்கள் தாம் என்கிறார் சிவராஜா. இதன் காலம்தான் என்ன?

"முதலில் நச்சினார்க்கியர்; அகஸ்தியரைப் புனிதப்படுத்தும் வேலையைத் தொடங்கியவர் அவர்தான் என்பதை இங்கு வலியுறுத்திக் குறிப்பிட வேண்டும். மதுரைக்காஞ்சியில் இடம்பெறும் சில வரிகளை தம் மனப்போக்குக்கு ஏற்றவாறு வியாக்கினம் செய்து அகஸ்தியரைப்புனிதப்படுத்தும் வேலையைத் தொடங்கினார். அந்த வரிகள்:

தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற் 40
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந

இதில் முதுகடவுள் என்பதை அகஸ்தியர் என்றும் தென்னவன் என்பதை ராவணன் என்றும் தொடர்பு படுத்தி ஒரு இசைப் போட்டியில் ராவணனை அகஸ்தியர் தோற்கடித்து, அவனை மூட்டையாகக் கட்டி தமிழ்நாட்டுக்கு வெளியே தூக்கி எறிந்தார் என்ற கதையை அவிழ்த்து விடுகிறார். இந்தக் கதைக்கான ஆதாரங்கள் எதுவும் காட்டப்படவில்லை. மேலும், இங்கு இந்த இரு சொற்களும் வெகு இயல்பான வேறு எந்த சிறப்புக் குறிப்புகளும் அற்ற பொருளிலேயே கையாளப்பட்டுள்ளது." - பக். 16-17

(நச்சினார்க்கினியர் பொ.ஆ. 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் - கட்டுரை ஆசிரியர்)

-தொடரும்

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | தி. சிகாமணி

மாநில உரிமை: மறைந்து நின்று தாக்கும் மோடி அரசு

சட்ட மசோதாக்கள் மீது முடிவெடுக்க ஆளுநர்களுக்கும் குடியரசுத் தலைவருக்கும் மூன்று மாத காலம் கெடுவை நிர்ணயித்து உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு விஷயத்தில் விளக்கம் கேட்டு உச்ச நீதிமன்றத்திற்கு 14 கேள்விகளுடன் குறிப்பு ஒன்றை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அனுப்பி உள்ளார்.

இவ்வாறு குறிப்பு ஒன்றை அனுப்பி இருப்பது ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட ஒரு விஷயத்தை மீண்டும் உயிர்ப்பிக்கும் அரசியல் தந்திரம் கொண்டது. தீர்ப்பை சீர்குலைக்கும் நோக்கம் கொண்டது. குடியரசுத் தலைவருக்கு பின்னே ஒன்றிய அரசு ஒளிந்து கொண்டிருக்கிறது என்பது அப்பாவிகளுக்கு கூடத் தெரியும்.

இந்த ஆண்டு ஏப்ரல் எட்டாம் தேதி ஜே. பி. பர்திவாலா, ஆர். மகாதேவன் ஆகிய நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் அளித்த தீர்ப்பை முன்வைத்து இந்த சர்ச்சைக்குரிய அரசியல் சட்டப் பிரச்சனைக்கு ஒன்றிய அரசு ஒரு வழியாக முடிவு கண்டிருக்கலாம். ஆபரேஷன் சிந்தூர் கூட எட்டு மணி நேரத்தில் முடிவடைந்துவிட்டது. ஆனால் அது போல் அரசியல் விளையாட்டை அவர்களால் நிறுத்தி விட முடியாது. தீர்ப்பை பலவீனப்படுத்த வேண்டும் என்ற வெறியில் ஒன்றிய அரசு ஆட்டம் போடுகிறது. அரசமைப்புச் சட்டத்தின் 143 (1)வது பிரிவை பயன்படுத்தி மிகவும் சிக்கலான விஷயத்தில் உச்ச நீதிமன்றத்திடம் கருத்து கேட்பது என்பது வழக்கம். இவ்வாறு பாபர் மசூதி வழக்கு உட்பட 15 சந்தர்ப்பங்களில் குடியரசு தலைவர்கள் உச்ச நீதிமன்றத்திடம் கருத்து கேட்டுள்ளனர்.

பல்வேறு வழக்குகளில் முன்பு வழங்கப்பட்ட தீர்ப்புகளின் அடிப்படையிலும் மத்திய, மாநில உறவுகள் பற்றி ஆராய்ந்து பல்வேறு கமிட்டிகள் தந்த அறிக்கைகளின் அடிப்படையிலும் உச்சநீதிமன்ற; தீர்ப்பு அமைந்திருந்தது. இந்திய கூட்டாட்சிக்கு சவால் விடும் வகையில் மாநில அரசுகளின் முடிவுகளை சட்டமன்றங்களை சிறுமைப்படுத்தும் வேலையை ஆளுநர்கள் செய்து வந்தார்கள். ஏறக்குறைய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிரான யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். சட்ட மசோதாக்களுக்கு அனுமதி தராமல் ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் காலவரையின்றி வைத்திருக்க முடியாது. அத்தகைய சட்டவிரோத அதிகாரம் அவர்களுக்கு இல்லை என்பதை இந்தத் தீர்ப்பு விளக்கி உள்ளது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 200-ல் தெரிவிக்கப்பட்டுள்ள "எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில்" என்ற தெளிவில்லாத காலவரையறைக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது.

மாநில அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் பெயரில்தான் ஆளுநர்கள் செயல்பட வேண்டும் என்பதை ஏராளமான வழக்குகள் உறுதிப்படுத்தியுள்ளன. ஆ.என். ரவி போன்ற ஆளுநர்களுக்கு அது தெரியாத விஷயம் அல்ல. அரசியல் விளையாட்டுக்கு ஆளுநர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதும் மறைக்க முடியாத உண்மை. இப்போதுள்ள ஒன்றிய அரசு ஓயாமல் மாநில உரிமைகளை பறிப்பதில் மிகுந்த முனைப்பு காட்டி வருகிறது. இந்தப் போக்குக்கு கடிவாளம் இடும் வகையில் வந்துள்ள இந்தத் தீர்ப்பை பின்னடைவை ஒன்றிய அரசு தனக்கு ஏற்பட்ட பின்னடைவாகத்தான் பார்க்கிறது என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

குடியரசுத் தலைவரின் இந்த கருத்து கேட்பு விஷயத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பாஜக அல்லாத மாநில அரசுகள் இதனை எதிர்க்க வேண்டும் என கேட்டு கடிதம் எழுதியுள்ளார். "உச்சநீதிமன்றத்திடம்கேள்விகள் கேட்டு குடியரசுத் தலைவர் அனுப்பி உள்ள குறிப்பினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டும் நீதிமன்றத்தின் முன் நாம் அனைவரும் ஒருங்கிணைந்த சட்ட உத்தியை உருவாக்கி உச்ச நீதிமன்றம் தனது வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பில் உறுதி செய்தபடி அரசியல் அடிப்படைக் கட்டமைப்பை பாதுகாக்க வழிவகுத்திட வேண்டும்என்றுகுறிப்பிட்டிருக்கிறார். இப்போது இல்லாவிட்டாலும் ஸ்டாலின் விரும்புவதுபோல ஒன்றுபட்ட எதிர்ப்பு விரைவில் உருவாகும்.

குடியரசுத் தலைவர் கேள்விகளுக்கு நீதிமன்றம் கருத்தை தெரிவிக்கலாம். அல்லது தெரிவிக்காமலும் இருக்கலாம். அப்படி தெரிவிக்கும் கருத்து தீர்ப்பை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது. சட்ட ரீதியான அந்தஸ்து அதுக்கு கிடையாது. தீர்ப்பை எதிர்த்து மறு ஆய்வு மனு தாக்கல் செய்திருக்கலாம். அதன்பின்னர் சீராய்வு மனுவை தாக்கல் செய்யலாம். ஆனால் மேல்முறையீடு செய்தாலும் அதில் ஏற்கனவே வந்த தீர்ப்புக்கு மாறாக தீர்g;G வராது என்பதை ஒன்றிய அரசு புரிந்து கொண்டுள்ளது.

இதே போன்ற ஒரு வழக்கை கேரளா அரசும் நடத்தி வருகிறது. தமிழ்நாடு அரசின் வழக்கில் தீர்ப்பு வந்தவுடன் அந்த தீர்ப்பு இந்தியா முழுக்கவும் உள்ள ஆளுநர்களுக்கு பொருந்தும் என்பதால் தங்கள் வழக்கை திரும்பப் பெற கேரளா அரசு விரும்பியது. அப்படி செய்ய இருப்பதை ஒன்றிய அரசு வரவேற்W ,Pக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக வழக்கை வாபஸ் பெறுவதற்கு மத்திய அரசு எதிர்ப்பு தெரிவிக்கிறது .இனி கேரளா அரசின் வழக்கு வரும்போது குடியரசுத் தலைவரின் கேள்விகள் நிலுவையில் இருப்பதாக ஒன்றிய அரசு சொல்லலாம்.

ஆளுநர்களின் அதிகாரம் விஷயத்தில் ஒரு தீர்மானமான முடிவு வந்து விட்டால் ஒன்றிய அரசு ஆளுநர்களை வைத்து சித்து விளையாட்டுகளை அரங்கேற்ற முடியாது. அதனால் இந்த பிரச்சினையை தொடரும் விவாதப் பொருளாக சட்டப் பிரச்சனையாக வைத்து மாநில அரசுகளுக்கு தொடர்ந்து நெருக்கடி தர முயற்சிக்கிறது. குடியரசுத் தலைவர் அட்டர்னி ஜெனரலிடம் கருத்து கேட்டு இருக்கலாம். பெரும் பொருள் செலவில் சட்ட வல்லுநர்களை நியமித்து உச்ச நீதிமன்றத்தை அணுகுவது நியாயமற்றது.

தீர்ப்பை எதிர்த்து பாஜக மனு

ஒன்றிய அரசு ஒரு பக்கம் மாநில அரசுக்கு

கவிதை | ச.சத்தியமூர்த்தி



குறியீடு

கண்டுகொள்ளப்படாத-எம்மூர்
காட்டு அய்யனாரிடம்
கால ஓட்டத்தில் வண்ணமிழந்த
ஆறு குதிரைகள் உள்ளன!

எல்லா
குதிரையின் உடலும்-பறவையின்
எச்சம்பட்டும் பொலிவிழந்தும்...

மழை வெயில் தாங்காது
இற்று கீறி
தலை இழந்த குதிரையொன்று...

ஒற்றைக்கால்
ஒடிந்த நிலையில்
ஒரு குதிரை..

மண்ணைக் கவ்வியபடி
குப்புறக் கிடகுகும்
குதிரையொன்று...

உண்மையில் இவற்றை
குதிரை என்பதா?
எங்கள் விவசாய வாழ்வின்
குறியீடு என்பதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை | கவிசித்தன் ASM.முனியாண்டி



கோட்சேயின் நூலகம்
அகிம்சை புத்தகம்.
உனக்குள் நான்..

o

வழிப்பறி செய்யும் காற்று
வரிப் போடவில்லை பூக்கள்
வாக்குத் தேன்

o

கண்ணீர்க் கடல் அடங்கியது
பார்வை கமண்டலத்தில்
காதல்

o

ஒட்டிய வயிறாய் அமுதசுரபி
எலும்புக்கூடாய் ஆபுத்திரன்
சனநாயகம்

o

நட்சத்திரங்கள் தொலைவில்
நிலவு என்னருகில்
காதலி

o

துளையிட யாருமில்லை
புல்லாங்குழல் ஆகவில்லை
முதிர்கன்னி

o

மணப்பந்தலில் திருடன்
மாலையுடன் இருந்தான்.
மாப்பிள்ளை

o

புலியிடம் தப்பிய மான்
சிங்கத்திடம் சிக்கியது.
சுதந்திரம்.

உரிமையைத் தர மறுக்கும் நிலையில் துணைவேந்தர்கள் நியமனத்தில் தமிழ்நாடு அரசுக்கு அதிகாரம் கிடைக்க வழிவகை செய்யும் சட்ட திருத்தத்திற்கு சென்னை உயர் நீதிமன்ற அமர்வு இடைக்காலத் தடை விதித்துள்ளது. சட்டமசோதாவை ஆளுநர் காலவரையின்றி வைத்திருந்ததற்காக அவற்றைச் சட்டமாக்கி நிவாரணம் தர 142 பிரிவு மூலம் உச்ச நீதிமன்றம் முன்வந்திருக்கும் நிலையில் அதற்கு எதிராக உயர்நீதிமன்றம் செயல்படுவது விசித்திரமானது. கோடைகால விடுமுறை காலத்தில் நடந்த நீதிமன்ற அமர்வு அவசர அவசரமாக இந்த பொது நல ரிட் மனுவை விசாரணைக்கு எடுத்திருக்க வேண்டியதில்லை. தமிழ்நாடு அட்வகேட் ஜெனரல் பி.எஸ். ராமன் மற்றும் வழக்கறிஞர் பி.வில்சன் இந்த வழக்கில் பதில் மனு தாக்கல் செய்ய அனுமதி கேட்டார்கள். ஆனால் அதற்கு அவகாசம் தரவில்லை. இந்த வழக்கை உச்ச நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்று ஏற்கனவே அங்கு மனு செய்துள்ளதை சுட்டிக்காட்டிய போதும் அதை நீதிபதிகள் ஜி.ஆர். சாமிநாதன், வி. லட்சுமி நாராயணன் பொருட்படுத்தவில்லை.

இந்த வழக்கை தாக்கல் செய்தவர் பாரதிய ஜனதா கட்சியின் திருநெல்வேலி மாவட்ட செயலாளர் கே. வெங்கடாசலபதி என்பது குறிப்பிடத்தக்கது. வழக்கறிஞராகவும் உள்ளார். ஆளுநர்கள் அரசியல் செய்கிறார்கள் என்று நாம் விமர்சிக்கிறோம். இந்நிலையில் துணைவேந்தர் நியமனத்தில் அரசியல் புகுந்து விடும் என்று மனுதாரர் கூறுகிறார். ஆளுநர் மட்டும் அரசியலுக்கு அப்பாற்பட்டவரா? அரசியல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத்தானே அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்?

யுஜிசி விதிமுறைப்படி ஆசிரியர்கள் நியமனத்தில் குறைந்தபட்ச கல்வித் தகுதி உட்பட 56 காரணங்களை பட்டியலிட்டு துணைவேந்தர் நியமனச் சட்டத் திருத்தத்தை மனுதாரர் எதிர்த்துள்ளார். இந்த வழக்கை தாக்கல் செய்ய ஒன்றிய அரசு பின்னணியில் இருந்து செயல்பட்டுள்ளது. ஆளுநரை காரணம் காட்டி பல அதிகாரங்களை எடுத்துக் கொள்ள ஒன்றிய அரசு முயற்சிக்கிறது. அப்படிச் செய்ய அரசியல் சட்டத்தில் அனுமதி இல்லை. ஒன்றிய அரசின் போக்கு கடுமையாக எதிர்க்கப்பட வேண்டும். இந்தியாவில் கூட்டாட்சி கோட்பாடு நிலை பெற சட்டப் போராட்டங்கள் மட்டுமின்றி மக்கள் போராட்டங்களும் தேவைப்படுகிறது.

●

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலின வன்முறைகளைக் களைதல்

நமது சமூகத்தில் இந்த குற்றத்தின் வேர் எங்கே இருக்கின்றது என்பதை அறிதல் வரும் காலங்களில் இந்த வகை குற்றத்தை தடுக்க உதவும். குற்றத்தடுப்பு என்பதை ஒரு சமூக சனநாயக பிரச்சனையாக பார்க்க வேண்டியது அவசியம். இவ் வழக்கில் ஈடுபட்ட குற்றவாளிகள் ஒரு கும்பலாக இயங்கி உள்ளனர். கும்பல் மனப்பான்மையில் குற்றத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பொள்ளாச்சியில் கடந்த 2019 ஆண்டு பொதுச் சமூகத்தை அதிரவைத்த ஒரு பெண்ணின் அலறல் குரல், அந்தப் பெண்ணை தாக்கும் கும்பல் . அதன் தொடர்ச்சியாக மாநிலம் முழுதும் அரசியல் கட்சியினர் , இடதுசாரி மாணவர் மற்றும் மாதர் சங்கங்கள், வழக்குரைஞர்கள் என பெரும் எண்ணிக்கையில் சனநாயக ஆர்வலர்களின் போராட்டம் வெடித்தது. 2019 பிப்ரவரி11 ஆம் தேதி தாக்குதலுக்கு ஆளாகும் பெண் அடுத்த நாள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும், அந்த புகார் பதிவு செய்ய பத்து நாட்கள் ஆனாது. ஒரு புறம் காவல்துறை அந்த வழக்கினை மூடி மறைப்பதில் கவனம் செலுத்தினர். ஆதாரங்கள் கவனிக்கப்படவில்லை. அச் சூழலில் கள ஆய்வின் போது பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கும் மேல் இருக்கும் என்ற தகவல் இருந்தது. வழக்கு பொது மக்களின் இடைவிடாத போராட்டம் காரணமாக முதலில் சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது. அதன் பின்னர் பாதிக்கப்பட்ட; புகாரளித்த பெண்ணின் அடையாளங்களை மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் வெளிப்படுத்திய பின்னர், இவ்வழக்கானது மத்திய புலனாய்வு பிரிவுக்கும் மாற்றப்பட்டது.

இவ் வழக்கில் போராடிய எல்லோரின் மீதும் காவல்துறையினர் வழக்கு தாக்கல் செய்தனர். அதன் பின்னர் இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு விசாரனைக்காக அலைக்கழிக்கப்பட்டனர். இன்னமும் வழக்கு பலருக்கு நிலுவையில் உள்ளது. பொள்ளாச்சி வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணின் வீடியோ வெளியான வகையில் நக்கீரன் கோபால் மீது விசாரணை நடைபெற்றது. இவ் வழக்கில் நீதிமன்றம் சிறப்பு கவனம் எடுத்துக் கொண்டது. இதன் தொடர்ச்சியாக விசாரணை நிலுவையில் இருந்த போது, நீதிபதிக்கு இயல்பாக வரும் பணி இடமாற்றம் கடந்த ஆண்டு வந்தது. ஆனால் உயர்நீதிமன்றம் அந்த மாவட்ட நீதிபதியின் பணி மாற்றத்தை இவ் வழக்குக்காக நிறுத்தி வைத்தது. கடந்த ஏப்ரல் மாதம் இறுதியில் அந்த நீதிபதிக்கு மீண்டும் பணி மாறுதல் வந்தது. ஆனாலும் தீர்ப்பை சொல்லிவிட்டு பணி மாறுதல் அடைய உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியது. மே மாதம் 13 ஆம் தேதி வழங்கிய தீர்ப்பில் குற்றம் சாட்டப்பட்ட ஒன்பது நபர்களுக்கும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. இவ் வழக்கில் சாட்சியமளித்த எட்டு பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது. தீர்ப்பை வரவேற்று பொது சமுகம் கொண்டாடி உள்ளது.

நமது சமூகத்தில் இந்த குற்றத்தின் வேர் எங்கே இருக்கின்றது என்பதை அறிதல் வரும் காலங்களில் இந்த வகை குற்றத்தை தடுக்க உதவும். குற்றத்தடுப்பு என்பதை ஒரு சமூக சனநாயக பிரச்சனையாக பார்க்க வேண்டியது அவசியம். இவ் வழக்கில் ஈடுபட்ட குற்றவாளிகள் ஒரு கும்பலாக இயங்கி உள்ளனர். கும்பல் மனப்பான்மையில் குற்றத்தில் ஈடுபட்டுள்ளனர். ஒரு சில ஆண்டுகள் தொடர் குற்றத்தில் ஈடுபட்டுள்ளனர், அச்சுறுத்தி பெண்களை பாலியல் வன்முறை, கூட்டு வன்புணர்வு, பணம் பறித்தல் , மிரட்டிப் பணிய வைத்தல் அதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை ஆபாசமாக படம் எடுத்தல் மற்றும் அந்தப் படங்களை குழுவாக சமூக வலைதளங்களில் பகிர்ந்து கொண்டுள்ளனர். இந்த தொடர் குற்றங்களில் இந்த நபர்களை தொடர்ந்து ஈடுபட தூண்டுதலாக இருந்த செயலுக்கு ஆதாரமாக இருப்பது பெண்கள் மீது இந்த நபர்கள் நிகழ்த்திய வன்முறைகளை அவர்கள் எவரிடமும் பறிமாற மாட்டார்கள் அல்லது குடும்பத்தின் உதவியையோ அல்லது சட்டத்தின் உதவியையோ கோர முன் வரமாட்டார்கள் என்ற ஒன்றாக உள்ளது.

இது போன்று பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையை உருவாக்கத்தில் பெரும் காரணிகளாக இருப்பது குடும்பத்தினருக்கு ஏற்படும் அவமரியாதை மற்றொன்று பாதிக்கப்பட்டவர்களை இழிவு படுத்தும் அல்லது மீண்டும் பாதிப்புக்கு உள்ளாக்கும் ஒரு நிலை. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் பாதிப்புக்களை தங்களுக்குள் பூட்டி நடைபிணங்களாக வாழ வேண்டிய அவலம் உள்ளது. இவர்களின் பேச இயலாத நிலையே இவ் வழக்கு குற்றவாளிகளுக்கு தொடர் குற்றத்தைச் செய்ய பாதுகாப்பாக இருந்துள்ளது. இது போன்ற பாலின அடிப்படையில் நிகழும் வன்முறைகள் (*Gender based violence*) முறையாக விவாதிக்கப்படாத நிலையே பாலியல் வன்முறைகளை இயல்பான செயலாக மாற்றும் அநீதிக்கு வித்திடுகின்றது. கடந்த 2012 ஆண்டு டெல்லியில் நிர்பயா பலியல் வன்முறைக்கு உள்ளான போது பாலியல் வன்முறைகளின் வடிவம் வேறு வடிவங்களில் வளர்ந்துள்ளதை சமூகம் விவாதித்தது. சட்டத்தின் போதாமையை சரி செய்ய நீதிபதி வர்மா தலைமையில் அமைக்கப்பட்ட குழு பல தரப்பட்ட பரிந்துரைகளை வழங்கியது. சமூக ஊடகங்களில் பரப்பப்படும் பெண்களின் அந்தரங்க காட்சிகள் குற்றச் செயலாக மாற்றப்பட்டது. ஒரு பெண்ணும் ஆணும் தனியே எடுத்துக் கொண்ட அந்தரங்க படங்கள் கூட, அந்தப் பெண்ணின் அனுமதியின்றி பதிவேற்றம் செய்தல் குற்றமாக மாற்றப்பட்டது. பெண்ணை விருப்பமின்றி தொடர்தல், இரட்டை அர்த்தத் தொணியில் பேசுதல், சீண்டுதல் என பெண் உடல் மீது நிகழும் அத்துமீறல்கள் குற்றச் செயலாக மாற்றப்பட்டது.

ஆனாலும் நமது சமூகமும் , சட்டத்தை நடைமுறை படுத்தும் காவல்துறையும் தனது

நமது பொதுச் சமூகத்தில் ஊடகங்களில், திரை மற்றும் சின்னத் திரைகளில் பதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கை பெறுவதற்கு எதுவும் இல்லை. முழுக்க ஆணாதிக்க மொழியில் பெண்களை காட்சிப்படுத்தல் என்பதே அதன் மொழியாகி உள்ளது. ஆண்கள் பார்வைக்கு பெண் உடல் காட்சிப் பொருளாக தொடர்ந்து எல்ல நிலைகளிலும் காட்சிப்படுத்தப் படுகிறது. சமூக ஊடகங்களின் ஆதிக்கம் நிறைந்த சூழலில் இது இன்னமும் எளிய வடிவில் நிகழுகின்றது,

மனநிலையை வளர்ச்சி படுத்திக் கொள்ளவில்லை. பாலியல் தாக்குதல் என்பது ஒரு வன்முறை என கருதும் கல்வியை நாம் சமூகத்தில் கற்பிக்க தவறி வருகின்றோம். பெண் உடல் என்பது மற்றவர்கள் அத்துமீறும் இடமல்ல. அவர்கள் உடல், அவர்களின் உரிமை . மரியாதையுடனும், கண்ணியத்துடன் அணுக வேண்டும் என்பது விவாதப் பொருளாக மாறவில்லை. பாதிக்கப்பட்டவர்களை தொடர்ந்து குற்றவாளிகளாகச் சித்தரிக்கும் சமூக கட்டமைப்பு இன்னமும் இங்கே நிலவுகின்றது. இதனால் பாலியல் வன்முறைக்கு உள்ளானவர்கள் தங்கள் பாதிப்பை பேச முன் வருவதில்லை. ஒரு வேளை தங்கள் பாதிப்புகளைப் பேசினால் அதனால் சமூகம் மற்றும் குடும்பத்தினரால் வாழ்நாள் முழுதும் இழிவு படுத்தப்படுவோம் என அவர்கள் நம்புகின்றனர். இவர்களுக்கு நம்பிக்கை தர நமது சமூக கட்டமைப்பை மாற்றவேண்டும்.

பாலியல் வன்முறைகள் சில சமயம் மக்களின் மனசாட்சியை உலுக்கும் போது அந்த எழுச்சியை ஆட்சியாளர்கள் சமாதனப்படுத்தவோ அல்லது அவர்களை தங்கள் பக்கம் நிறுத்தவோ சில அலங்கார சட்டங்கள் , திட்டங்கள் போடுவதுண்டு. அது போல நிர்பயா வன்முறைக்கு உள்ளான போது பாலியல் குற்றத்திற்கு மரனதண்டனை கொண்டு வரப்பட்டது. உண்மையில் இந்த மரணதண்டனை எந்த வகையிலும் பாலியல் குற்றத்தை குறைக்கவும் இல்லை. பாலியல் குற்றவாளிகளை அச்சுறுத்தவும் இல்லை.

நமது பொதுச் சமூகத்தில் ஊடகங்களில், திரை மற்றும் சின்னத் திரைகளில் பதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கை பெறுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவும் இல்லை. முழுக்க ஆணாதிக்க மொழியில் பெண்களை காட்சிப்படுத்தல் என்பதே அதன் மொழியாகி உள்ளது. ஆண்கள் பார்வைக்கு பெண் உடல் காட்சிப் பொருளாக தொடர்ந்து எல்ல நிலைகளிலும் காட்சிப்படுத்தப் படுகிறது. சமூக ஊடகங்களின் ஆதிக்கம் நிறைந்த சுழலில் இது இன்னமும் எளிய வடிவில் நிகழுகின்றது,

பெண் உடல் மீது நிகழும் வன்முறைகளை களைய அரசு கல்வியை ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுத்த வேண்டும். ஹார்வார்ட் பல்கலைகழகத்தின் சுகாதாரம் மற்றும் மனித உரிமை பேராசிரியர் டாக்டர். ஜேக்குலின் பாபா பள்ளிகளில் நல்ல தரமான கல்வி மற்றும் பாலினம் சார்ந்த தொடர் உரையாடல் மற்றும் எதிர் பாலினத்தவரிடம் நடந்து கொள்ளும் மனித கண்ணியம் சார்ந்த கல்வி எதிர்காலத்தில் அவர்கள் எதிர் பாலினத்தவரிடம் கண்ணியமாக நடந்து கொள்ள உதவும் என்கின்றார். நமது பாடங்களில் பெரும் பகுதி ஆண் என்ற ஒற்றை பாலினத்தின் பிம்பம் தூக்கி பிடிக்கப்படுவதாக உள்ளது. பெண் சார்ந்த பாத்திரங்கள் அவற்றில் பாதி கூட இல்லை. பாலின சமத்துவம் குறித்து புரிதல் ஆசிரியர்கள் மத்தியிலும் இல்லை. இன்னமும் பாலியல் தாக்குதலுக்கு பெண்கள் அணியும் ஆடை காரணம் என நம்பும் ஆசிரியர்கள் பெரும்பான்மையோர் இருக்கின்றனர். இந்த நிலை குழந்தைகளை பாலினச் சமத்துவத்திற்கு அழைத்து செல்லாது.

பாலியல் தாக்குதல் என்ற வன்முறையை சமூக அவலம் என கருதி அதனை நீக்கும் சமூக பொறுப்பு அதனைப் பற்றி ஆரோக்கியமான உரையடலை கட்டமைப்பதில் துவங்கலாம். நமது குடும்பங்களில், பொதுத்தளங்களில் அதனை விவாதிக்கலாம். மொத்தத்தில் சமூகம் போர்த்தி உள்ள மௌனத்தை தகர்த்தல் என்ற புள்ளியில் துவங்கி சமூக உரையாடலாக கட்டமைப்பது அவசியம். பாலினம் சார்ந்த வன்முறைகளை தடுக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளுக்கு சமூகம் உட்படாமல் கடந்து சென்றால் வருங்காலத்தில் இந்த அநீதி ஒரு தொடர் கதையாக மாறி கோரமாக மீண்டும் நம் முன் நிற்கும்.

●

கட்டுரையாளர்: வழக்கறிஞர்

கவிதை | வெ.தமிழ்க்கனல்

தனித்த பொழுதுகள்



டோக்கன் நம்பர் பதினாறு
ராமையா இருக்கீங்களா.?
என்ற மருத்துவமனை
வரவேற்புப் பெண்ணின்
குரலுக்குச் சற்றே செவிசாய்த்த பாதங்கள்
மருத்துவர் அறையை நோக்கிப்
மெல்ல பயணிக்கின்றன

பஞ்சடைந்த கண்களில்
டார்ச் விளக்கை
ஊடுருவச் செய்த மருத்துவர் பின்
இழுத்துவிடப்பட்ட மூச்சுகளை
ஸ்டெதஸ்கோப்பின் வழியே
பரிசோதிக்கிறார்

எதிரேயிருக்கும் காகிதத்தாளில்
தன் சீரற்ற எழுத்துக்களால் நிரப்ப
இப்போது காகிதம் முழுக்க
உருபெறுகின்றன
மாத்திரை வில்லைகள்

மருந்தகத்தின் கண்ணாடி
துவாரத்தின் வழியே
நீட்டிய சில ரூபாய்த் தாள்களைச் சரிபார்த்து
நான்கைந்து நாளைக்கான
மாத்திரைப் பட்டைகளை
நெட்டித் தள்ளுகிறாள்
ஒரு நடுத்தரப் பெண்மணி

இரண்டு இட்லி விள்ளல்களுக்குப்
பின்னான இரவில்
உதிர்த்து விழுங்கும் அம்மாத்திரையானது
மனைவியின் இறப்பிற்குப்
பின்னான நாளிலிருந்து
தினம் தின்று செரிக்கும்
தனிமையைப்போல் அத்தனை
பெரும் கசப்பில்லைதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.மோகன்ராஜன்

அமைதிக்கான போர்!

"போர் என்பது ஹாலிவுட் திரைப்படம் அல்ல, கொண்டாடப்பட வேண்டிய ஒன்றும் அல்ல. போர் எவ்வளவு மோசமானது, ஒரு நாட்டிற்கு எவ்வளவு இழப்பை ஏற்படுத்தும் என எனக்குத் தெரியும். போரால் எண்ணற்ற உயிர் சேதங்கள் ஏற்படும். குழந்தைகள், பெற்றோர்களை இழப்பர். குடும்பங்கள் உணர்வு வழியிலான அதிர்ச்சிகளைப் பல தலைமுறைக்கு சுமப்பர். ஒரு படைவீரனாக எனக்கு உத்தரவிடப்பட்டால் போரை முன்னெடுப்பேன். ஆனால் அது என் முதல் தெரிவாக இருக்காது. முதல் நடவடிக்கை எப்போதும் பேச்சுவார்த்தைதான்".
– போர் நிறுத்தம் குறித்து இந்திய படையணி மேனாள் தளபதி எம்.எம்.நரவனே

பயங்கரவாதம் எல்லை தாண்டி வந்தால் பயங்கரவாதத்தை எல்லைத்தாண்டி போய் ஒழிக்க வேண்டும் என்பது இன்றைய பயங்கரவாதத்திற்கெதிரான நீதி. இந்த நீதியை முன்மொழிந்தது அமெரிக்கா அதை வழி மொழிந்தது இஸ்ரேல். அமெரிக்கா, செப்டம்பர் தாக்குதலுக்கு நீதி வேண்டி, பாகிஸ்தானிற்குள் அனுமதியின்றி நுழைந்து அமெரிக்கா மீதான தாக்குதலுக்கு காரணமான பின்லாடனை வேட்டையாடியது. அது போல அமெரிக்காவிற்கான எதிர்கால அச்சுறுத்தல் என்று சொல்லி ஈராக் அதிபர் சதாம்உசேனை பதுங்குழியில் வைத்து பிடித்து தூக்கிலேற்றியது.

ஹமாஸ் இஸ்ரேலில் புகுந்து தாக்குதல் நடத்தி அந்நாட்டு மக்களை பிணைக் கைதிகளாகப் பிடித்ததற்கு பதிலடியாக காசாவை தரைமட்டமாக்கிவருகிறது. ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி மாறியிருக்கிறார். எனவே அந்த நாட்டின் மீதான தாக்குதலை ரஷ்யா புதிய போர் அறமாக்கியிருக்கிறது. இந்த நிலையில் இந்தியா தனது வட எல்லைகளில் பாகிஸ்தான் துணையுடன் அத்துமீறி நுழையும் முஜாகிதின்களை முஜாகிதின் என்று இனியும் அழைக்கத்தயாரில்லை.

இந்திய வழி இஸ்ரேல் வழி என்று காசாவை காட்டி பிரதமர் மோடியும் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்தும் அடிக்கடி பேசுவது, பேசியது வெறும் பேச்சோடு போவதை ஊடுறுவல்காரர்கள் விரும்பவில்லை போலும். காஷ்மீரின் 370வது சட்டப்பிரிவை நீக்கியது, அந்நியர்கள் அங்கு நிலம் வாங்க வழி செய்தது. சுற்றுலாவிற்கு காஷ்மீரைத் திறந்துவிட்டு அமைதி திரும்பிவிட்டதாக நம்பச் செய்தது என்பவற்றையெல்லாம் தீவிரவாதிகள் காஷ்மீரிகளின் அதிருப்தியோடு சேர்த்து தகர்க்க விரும்பினார்கள்.

காஷ்மீரி மக்களின் கோபத்தின் விருப்பத்தின் பேராயுதம் தமது கையிலிருக்கும் காலஷ்னிக்கோவ் என்று அவர்கள் கருதியதில் நீதி இருக்கிறதோ இல்லையோ தெரிவு செய்த இடம், பொருள் ஏவள் அவர்களுக்கு எதிராகவே திரும்பியிருக்கிறது. கடந்த மே 22ஆம் திகதி மாலை 3 மணியளவில் சுற்றுலா பயணிகள் மீது நடந்த தாக்குதலை காஷ்மீரிகளே ரசிக்கவில்லை. சுற்றுலாவில் கிடைக்கும் குறைந்த பட்ச வாழ்வாதாரத்துடன் அவர்களது உயிரும் பறிக்கப்பட்டதை கொஞ்சமும் விரும்பியிருக்கவில்லை. காஷ்மீர் இந்தியாவுக்கோ, பாகிஸ்தானுக்கோ முஜாகிதின்களுக்கோ சொந்தமில்லை என்பதே அவர்களது நிலைப்பாடு. காஷ்மீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஷ்மீரிகளுக்கே சொந்தம் அதை எப்படி மீட்பது என்பது காஷ்மீரிகளின் தெரிவு. காஷ்மீரிகள் தெரிவு உரிமை. இதை ஆயிரம் ஆண்டுகளாக அழுத்தமாக சொல்லி வருகிறார்கள். அவர்களது அரசியல், அல்லது ஆயுதத் தலைமை சொல்லி வருகிறது. ஆனால் பயங்கரவாத மொழி காஷ்மீருக்கு அந்நியமானது. காஷ்மீரிகளுக்கு அந்நியமனது இந்தியாவோ, பாகிஸ்தானோ முஜாகிதின்களோ முதலில் காஷ்மீரிகளின் மனதை வெல்ல வேண்டும் அப்படி வென்றால் அதுதான் மெய்யான காஷ்மீர்.

உலக ஒழுங்கில் இன்றைக்குக் காஷ்மீரில் சுற்றுலா பயணிகளின் மீதான தாக்குதல் என்பது காஷ்மீருடன், இந்தியாவுடன் முடிந்துவிடுவதில்லை. அது உலக முதலாளியத்தின் மீதான, மூலதனத்தின் மீதான, உலக முதலாகளின் மீதான தாக்குதல். பின்லாடனின் அமெரிக்க செப்டம்பர் 22 தாக்குதலுக்கு சமமானது. இஸ்ரேல் மீதான ஹமாசின் தாக்குதலுக்கு நிகரானது. தாக்குதலுக்கு ஒரு பெயர்தான் உண்டு அது பயங்கரவாத தாக்குதல் அந்நிகழ்வுக்கு ஒரு பெயர்தான் உண்டு அது பயங்கரவாதம், அந்த தாக்குதலை எதிர் கொள்ளும் நாடும் ஒன்றே ஒன்றுதான். முஜாகிதின் போன்றோருக்கு பல எதிரிகள் இருக்கலாம் ஆனால் உலக முதலாளியத்திற்கு ஒரு எதிரி மட்டுமே உண்டு அது பயங்கரவாதம்.

இந்தப் பயங்கரவாதம், பயங்கரவாதி என்ற அரசியல் பெயர் வணிக அரசியலுக்கு நகர்ந்திருக்கிறது. வணிக அரசியலுக்கு மூலதன சந்தைக்கும் பொதுவான பெயராக ஆகியிருக்கிறது. ஆக அரசியல் வழிப்பட்ட பயங்கரவாதத்தாக்குதல் என்பது வணிக அரசியல் மீதான தாக்குதலுமாகும். அரசியல் வணிகத்தின் மீதான தாக்குதலுமாகும்.

எனவே கொல்லப்பட்ட 22 சுற்றுலா பயணிகள் வணிக சந்தையையும் அதிரவைக்கக் கூடியது. இந்த தாக்குதலை அடுத்து மோடி தலைமையிலான மதவாத அரசு அதன் பண்பு மாறாமல் எடுத்துச் செல்ல விரும்பியது. ஏறக்குறைய அந்த தாக்குதலையும் அதன் மீதான நாட்டின் எதிர்வினையையும் அப்படியே கையாள விரும்பியது. கையாண்டது. ஆண்களை மட்டுமே தெரிவு செய்து கொன்றுள்ளார்கள்

இந்தப் பயங்கரவாதம், பயங்கரவாதி என்ற அரசியல் பெயர் வணிக அரசியலுக்கு நகர்ந்திருக்கிறது. வணிக அரசியலுக்கு மூலதன சந்தைக்கும் பொதுவான பெயராக ஆகியிருக்கிறது. ஆக அரசியல் வழிப்பட்ட பயங்கரவாதத்தாக்குதல் என்பது வணிக அரசியல் மீதான தாக்குதலுமாகும். அரசியல் வணிகத்தின் மீதான தாக்குதலுமாகும்.

துப்பாக்கியேந்திகள். அதன் உளவியலிலும் மத நோக்கம் இருக்கிறதோ இல்லையோ பாஜக அரசுக்கு இருந்தது உயிருடன் விடப்பட்ட பெண் பயணிகளிடம் அவர்கள் இஸ்லாமியர்களா என்று கேட்டு சுட்டதாகவும் உடையை நீக்கி பார்த்துவிட்டு ஆண்களை சுட்டதாகவும் ஊடகத்திடம் சொல்ல வைக்க பாஜகவினர் முயன்றனர். அவ்வாறே தாக்குதலில் கொல்லப்பட்ட கடற்படை அதிகாரி வினய் நர்வாலின் மனைவி ஹிமான்சியை துயரத்தின் சாட்சியாக்க அல்லது கொடூரத்தின் சாட்சியாக்க முயன்றய ஏககாலத்தில் இஸ்லாமியர் மீதான வெறுப்பை உமிழும் கருவியாக்க முயன்றனர். ஆனால் ஹிமான்சியோ, எனது கணவரின் இறப்பிற்கு நீதி வேண்டும். அது எளிய இஸ்லாமியர் மீதான காஷ்மீரிகளின் மீதான வெறுப்பாக மாற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து பாஜக பரிவார்ங்கள் தமது பாசறையிலிருந்து தமது சொல்லாயுதங்களை ஹிமான்சியின் மீது ஏவத் தொடங்கினர். முஜாகிதின்களிடம் தாக்குப்பிடித்த அவரது கண்ணீர் இப்போது பாஜக பரிவாரிங்களின் சொல்லாயுதங்களிடம் வழிந்து வற்றிப்போனது. தேசிய மகளிர் ஆணையம் தலையிட்டு அந்த தாக்குதலை நிறுத்தும் வரை வினய் நர்வால் தேசபக்தராகவும், அவரது மனைவி ஹிமான்சி தேசவிரோதியாகவும் மாறிப்போயிருந்தனர்.

இதற்கிடையே வெளிநாட்டுச் சுற்றுலாவில் இருந்த மோடி அதனை ரத்து செய்துவிட்டு தாக்குதலுக்கு உள்ளான பகுதிகளுக்குச் செல்வதற்குப் பதிலாக பிகார் தேர்தல் களத்திற்கு சென்றார். பாதிக்கப்பட்டவர்களை சந்திக்க, பஹல்காமிற்குச் சொல்ல அவரிடம் அப்போது எந்தவிதமான ஆறுதல் சொற்களும் இல்லை. அவரிடமிருந்தது ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட சங்கரபரிவாரங்களிடமிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவேசமான சொல்லாயுதங்கள். அதைத் தேர்தல் களத்தில் மட்டுமே பயன்படுத்த முடியும் எனவே பயங்கரவாதிகள் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் பதிலடி இருக்கும் என்று சபதம் செய்தார்.

ஆபரேசன் சிந்தூர் என்று பெயரிடப்பட்ட வான்வழி தாக்குதலை மே 6ஆம் திகதி நள்ளிரவில் பாகிஸ்தானின் காஷ்மீரில் ஊடுறுவல்காரர்களின் முகாம் என்று கண்டறிப்பட்ட 9 இடங்களில் இந்திய வான்படை தாக்குதல் நடத்தியதில் மோடியின் ஆவேசம் வெளிப்பட்டது. ஆபரேசன் சிந்தூர் என்பதற்கு மோடி நாட்டு மக்களுக்கான உரையில் விளக்கமளித்தார். பழமை மாறாத ஆணாதிக்கத்தின் எஞ்சிய தாத்தா ஒருவர் நமது வீடுகளில் இருப்பார். அப்படி இருந்தது அவரது கற்காலத்தின் நெடி மாறாத பேச்சு. பஹல்காமில் கொல்லபட்டவர்களின் வீட்டுப் பெண்கள், வினய்நர்வாலின் மனைவி ஹிமான்சி போன்றவர்கள் இனி பொட்டும் பூவும் தமது வாழ்நாளில் வைக்கவே வழியில்லை என்பது போல அல்லது கூடாது என்பதுபோல பதிலடிக்கான விளக்கத்தை மோடி வைத்தபோது பெண்கள்தானே என்று விட்டுவிட்டுப்போன தீவிரவாதிகளே பரவாயில்லை என்று நமது பெண்களுக்குத் தோன்றியிருக்கக் கூடும்.

கடந்தகாலத்தில் புல்வாமா மற்றும், உரி தாக்குதலை எதிர்கொண்டது போல எல்லை தாண்டிய தாக்குதலில் பாகிஸ்தான் இம்முறை உறங்கிக் கொண்டிருக்கவில்லை. துல்லிய தாக்குதலை அவர்களும் எதிர்பார்திருந்தனர். இந்தியா ட்ரோன் மற்றும் ஏவுகணைகளைக் கொண்டு சண்டையைத் தொடங்கிற்று. பயங்கரவாதம் ஒரு உலக பொது சிக்கல் என்ற அளவில் ஏற்றுக் கொண்ட மேற்கத்திய நாடுகள், அமெரிக்கா போன்றவை இந்த நடவடிக்கையை பகுதியாக மட்டுமே ஏற்றுக் கொண்டன. அமெரிக்க அதிபர் வழமையான தனது கிண்டல் தொனியில் வெக்ககேடான சண்டை என்றார். எனினும் இந்தியாவின் பதிலடியில் தீவிரவாத உற்பத்திக் கேந்திரங்கள் மட்டுமே அழிக்கப்பட்டதாக கூறிக் கொண்டது 100 திவிரவாதிகள் அழிக்கப்பட்டதாக அது கூறிக் கொண்டது.

இந்த தாக்குதலில் மசூத் அசாரின் நெருங்கிய உறவினர் மற்றும் குடும்பத்தினர் கொல்லப்பட்டப்பட்டதை அசார் உறுதிபடுத்தினார். தமது இலக்கும் நோக்கும் முடிந்துவிட்டதாக இந்திய தாக்குதலுக்குப் பொறுப்பேற்ற இரண்டு பெண் அதிகாரிகள் (ஹிமான்சியின் பெண் வடிவங்கள்) செய்தியாளர் சந்திப்பில் கூறினர். ஆனால் நிலைமை அவ்வாறு இருக்கவில்லை. இந்தியா 26 பேரைக் கொன்றதற்கு பழிக்குப் பழியாக 100 தீவிரவாதிகளைக் கொன்றதாக அறிவிக்க பாகிஸ்தான் பதிலடியில் எல்லைப்புற மாநிலங்கள், காஷ்மீர் போன்றவை அதன் பின்னரும் விலை கொடுக்க நேர்ந்தது. 3 பக்கமும் பாகிஸ்தான் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் பூஞ்ச் கடுமையான செல் தாக்குதலை எதிர் கொண்டது. பொதுமக்களில் 45 பேர் வரைக் கொல்லப்பட்டதாக செய்திகள் வரத்தொடங்கின.

இந்தியா இஸ்ரேலைப் பின்பற்றி காசாவைப் போல பாகிஸ்தானைப் பட்டினி போட முயன்றது. இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குச் செல்லும் சிந்துநதி நீரை சர்வதேச விதிமுறைகளை மீறி தடுத்து நிறுத்தி வைத்துக் கொண்டது. பதிலுக்கு பாகிஸ்தான் சிம்லா ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக கூறிக் கொண்டது. தண்ணீரும் ரத்தமும் ஒன்றாக ஓட முடியாது என்று நாட்டுமக்களுக்கான உரையில் பிரதமர் குறிப்பிட்டது சிந்துநதி மற்றும் பாகிஸ்தானுடனான மோதலைக் குறிப்பிட்டதாக எடுத்துக் கொள்ளலாம். முறுகல் நிலை ஒரு கட்டத்தில் இருதரப்பு போராக மாறக்கூடும் என்ற அச்சம் எழத் தொடங்கியிருந்தது. ஏழாம் திகதி இரவு இரண்டு தரப்பும் மாறி மாறி தாக்கிக் கொள்ளத் தொடங்கினர்.

ரஷ்யாவின் எஸ். 400 வான் பாதுகாப்பு கருவியானது ட்ரோன்கள் மற்றும் பாகிஸ்தானின் ஜெ.எப்.17 ரக வானூர்திகளைத் தாக்கும் வல்லமை கொண்டதாகக் இந்திய படையணி கூறியது. இந்திய எல்லை நோக்கிப் பறந்த ட்ரோன்களை இடை மறித்து அவை வீழ்த்தின. ஜெ.எப். ரக விமானங்களும் எஸ்.400 வான் ஏவுகணைகளால் தாக்கி அழிக்கப்பட்டதாக மேலும் இந்திய படைத்தரப்பு கூறிக் கொண்டது. இவற்றில் ஆளில்லா விமானங்களும் அடங்கும்.

இந்திய ட்ரோன்கள் மே 7 ஆம் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பயங்கரவாதிகளின் நிலைகளை, முகாம்களை மட்டுமே தாக்கினோம். ஆனால் பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயல்படுவதுடன், அவர்களுக்காக எல்லைப் பகுதியில் படைகளைக் குவித்துவருகிறது. பயங்கரவாதிகளுக்கான ஆதரவை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ளும் வரை தாக்குதல் தொடரும் என்று இந்தியப் படைத்தரப்பு தெரிவித்தது.

பாகிஸ்தான் எதிர்பார்க்காத நிலையில் பாகிஸ்தானின் கராச்சி மற்றும் லாகூர் பகுதிகளில் இருந்த பாகிஸ்தான் ஆயுதக்கிடங்குகளை ஊடுறுவி தாக்கி அழித்ததாக மே 8இல் இந்திய படையணி சார்பிலான அதிகாரிகள் தெரிவித்தார். பதிலாக பாகிஸ்தானின் ராவல்பிண்டி, சாக்வால், பஹகவல்பூர், மியானோ, குஜ்ரன்வாலா இங்கெல்லாம் இந்திய ட்ரோன்களின் தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டதாக பாகிஸ்தான் கூறிக்கொண்டது.

மே 8 ஆம் திகதி செய்தியாளர்களைச் சந்தித்த வெளியுறவு செயலர் விக்ரம் மிஸ்ரி, இந்திய படையின் கர்னல் சோஃபியா, விமானப் படையின் வின்காமாண்டர் வியோமிகா ஆகியோர் மோதல் குறித்து விளக்கினர். மே-8-9 இரு நாட்களில் மட்டும் பாகிஸ்தான் 400 ட்ரோன்களை ஏவியதாகவும் ஒரே நேரத்தில் அது நூற்றுக்கணக்கான ட்ரோன்களை ஏவியதாகவும் அவை அனைத்தும் முறியடிக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மிஸ்ரி, இந்தியா பாகிஸ்தானின் வழிபாட்டுத்தளங்களைக் குறிவைத்து தாக்கியதாக கூறிய அதே நேரம் பாகிஸ்தானும் தமது நாட்டிலுள்ள வழிபாட்டிடங்களை இந்தியா தாக்கியதாக தெரிவித்தது.

மேலும் இந்த சண்டையைப் பயன்படுத்திக் கொண்டு ஜம்மு எல்லையில் ஊடுறுவ முயன்ற 7 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக எல்லைக் காவல் படையினர் அறிவித்தனர். போர் எல்லா முனைகளிலும் பற்றிக் கொள்ளத் தொடங்கியது. தாக்குதலில் ரஃபேல் விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. அவை சிறப்பாக செயல்படவில்லை என்று செய்திகள் வந்தன. மேலும் பாகிஸ்தானின் அணுகட்டமைப்பாக செயல்படும் கிராணா ஹில்சை இந்தியா இலக்கு வைத்து தாக்க முயற்சித்தாக வந்த தகவலை, ஏர் மார்சல் ஏ.கே.பர்தி மே12 ஆம் திகதி பத்திரிகையாளர்களுக்கான செய்தியறிக்கையில் மறுத்திருந்தார். எது எப்படி என்றாலும் இப்படியான மோதலில் அல்லது போரில் முதலில் பலியாவது மெய் என்பது இந்த செய்திகளிலும் இருக்கவே செய்தன.

நாம் பயங்கரவாதிகளின் நிலைகளை, முகாம்களை மட்டுமே தாக்கினோம். ஆனால் பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயல்படுவதுடன், அவர்களுக்காக எல்லைப் பகுதியில் படைகளைக் குவித்துவருகிறது. பயங்கரவாதிகளுக்கான ஆதரவை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ளும் வரை தாக்குதல் தொடரும் என்று இந்தியப் படைத்தரப்பு தெரிவித்தது.

இந்தியா தனது வான் எல்லைகளை மூடியும் பாகிஸ்தான் அவ்வாறு செய்யவில்லை என்றும் பயணிகள் விமானங்களை இயக்கவிட்டு இந்திய வான்வழி தாக்குலுக்கு அவற்றை கேடயம் போல பயன்படுத்துவதாகவும் இந்தியா குற்றம் சாட்டியது. இந்தியா-பாகிஸ்தானின் இந்த முறுகல் போக்கு இரு தரப்பும் அணு ஆயுதங்களை பயன்படுத்துவது வரைச் செல்லக் கூடும் என்று இருதரப்பிற்கும், இரு பிரதமர்களுக்கும் தமது வாய்ச் சவடால்களை மீறி உதறல்களாக உளறல்களாக வெளிப்படுத்த தொடங்கிற்று போரும் சமாதானமும் இருபக்க நர்ணயம் என்பதால் இரண்டும் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டியதாயிற்று. பொருளாதாரத்தில் வீழ்ந்து கிடக்கும் பாகிஸ்தான், வீழ்ந்து கொண்டிருக்கும் இந்தியா இரண்டிற்குமே யார் வந்து இதை நிறுத்தித் தொலைவது என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். போரின் விதி மற்றும் நியதிகளில் இதுவும் ஒன்றுதான் என்பதை இரு நாடுகளின் போருக்கு முண்டாதட்டிக்கொண்டே பேச்சுவார்த்தைக்கு அலைந்த அவலத்தையும் குறிப்பிட்டுச் சொல்லாத்தான் வேண்டும்.

இந்தியா நீதி, நிதி இந்த இரண்டிலுமே பாகிஸ்தானுடன் மல்லுக்கட்டலுக்கு தயங்கியே இருந்தது. பாஜக பரிவாரங்கள் உசுப்பவில்லை என்றால் நிதானமான பேச்சுவார்த்தை நோக்கி நகர்ந்திருக்கக் கூடும். ஆனால் விதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதாயில்லை. போர் முறுகலை காரணம் காட்டி பாகிஸ்தான் உலக நிதியத்திடம் முன்பிருந்தே கேட்டுக் கொண்டிருந்த நிதி வந்து சேரத்தான் செய்தது. சிந்து நதியைத் தடுப்பது உலக நிதி நதியை இந்தியாவால் தடுக்க முடியாமல் போனது அப்பட்டமான ராஜதந்திரத் தோல்வியே. எனினும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்தம் படையணிக்கு திருப்பிவிடப்படவிருந்த நிதி பாகிஸ்தானின் கிரக பலனை விரயஸ்தானத்திலிருந்து லாபஸ்தானத்திற்கு மாற்றிவிட்டது. 850 மில்லியன் டாலரை அது சமூக விவகாரங்களுக்கு பயன்படுத்தலாம். பாகிஸ்தானிற்கு நிதி கிடைத்தது. இந்தியாவிற்கு நீதி கிடைத்தா என்பதே இப்போதய கேள்வி.

இந்திய ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் பாகிஸ்தானின் வான் எல்லைகளை உடைத்தெரிந்தன என்று படைத் தரப்பு சொல்லிக் கொண்டிருக்க சீனா அமைதியான வில்லனாக தனது கருவிகளை பாகிஸ்தானிடம் கொடுத்து பரிசோதிக்கத் தொடங்கிற்று. அவற்றில் ஒன்று ரஃபேலை வீழ்த்தியது. மற்றவை இந்தியாவின் ட்ரோன்களை தகர்த்தன. இதனை அடுத்து பாகிஸ்தான் புதுதில்லி மற்றும் சண்டிகரை நோக்கி தமது ஆயுதங்களைத் திருப்பக்கூடும் என்ற பதட்டம் எழுந்தது. ஏக காலத்தில் இந்தியா-பாகிஸ்தான் போரை நிறுத்தத்தை ட்ரம்ப் மே 9 ஆம்திகதி தனது எக்ஸ் வலைதளத்தில் அறிவித்த சில நிமிடங்களில் இந்தியா தனது தாக்குதலை நிறுத்திக் கொண்டது. தொடர்ந்து பாகிஸ்தானின் ட்ரோன்களின் வருகையும் திடீரென்று நின்றன.

வெளியுறவு செயலர், ராணுவதரப்பு என பலதரப்புக்களில் பேச்சுவார்த்தைகள் தொடக்கப்பெற்றன. இந்த சமாதானத்தின் பின்னணியில் 36 நாடுகள் இருந்ததாகச் சொல்லப்பட்டது. எனினும் இந்த போரின் பின்னணியில் அமெரிக்கா-சீனா என இரு நாடுகள் இருந்ததையும் மறுத்துவிட முடியாது. சீன-அமெரிக்க வணிக பேரத்திற்கு இந்திய-பாகிஸ்தான் மோதல் ஒரு தளமாக பயன்படுத்தப்பட்டது. பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்தும் முடிவிற்கு எதிர்கட்சித் தலைவர் ராகுல்காந்தியை அழைத்த மோடி, நாடாளுமன்ற கூட்டத்தைக் கூட்டி போர் நிறுத்தத்தை அறிவிக்காததும், ட்ரம்பின் போர் நிறுத்தத்தை மோடி ஏற்றுக் கொண்டதும் பேசுபொருளாகியிருக்கிறது. மூன்றாம் தப்பு தலையீடு இல்லாமல் எந்த ஒரு சிக்கலையும் இந்தியா-பாகிஸ்தான் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற சிம்லா ஒப்பந்தத்தை இருவருமே ட்ரப்பின் காலடியில் சமர்ப்பித்தன.

இந்த போர் நிறுத்த முடிவை மோடி, அமித்சா ஒப்புதலுடன் அறிவித்த வெளியுறவு செயலர் விக்ரம் மிஸ்ரி மீது சங்கபரிவாரங்கள் தமது ஆபாச ட்ரோன்களை கூச்சநாச்சமின்றி ஏவத் தொடங்கினர். அவர் தமது எக்ஸ் தளத்தை பொது வெளியிலிருந்து சொந்த வெளிக்கு மாற்றிக் கொண்டு அமைதியானார். போரில் தாமே வென்றதாக பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ்செரிப், மோடி இருவருமே உரிமை கொண்டாடினர். பாகிஸ்தான் கெஞ்சியது(தமிழ்நாடு போல அழுதது என்பதை சொல்ல மறந்திருக்க வேண்டும்.) என்று நாட்டு மக்களுக்கான தனது ஆவேச உரையில் குமுறினார். போர் நிறுத்தம் குறித்து அறிவித்த ட்ரம்ப், பகுத்தறிவையும், அறிவாற்றலையும் இரண்டு நாடுகளும் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பட்டதானது இரண்டு பேரும் சொந்த அறிவுடன் நடந்து கொள்ள முயற்சி செய்யுங்கள் அல்லது உங்கள் இருவருக்கும் அறிவு என்று ஏதாவது இருக்கா என்பதுதான். இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி போல போர் முன்னெடுப்பு பெரும்பாலும் ட்ராவில் முடிந்திருந்தாலும் நடுவர் ட்ரம்ப் மூன்றாவதாக வேறொன்றை சொன்னார். அது கிரிக்கெட்டில் எதிர்பார்க்க முடியாத ஒன்று.

மோதலை நிறுத்தவில்லை என்றால் இருதரப்பிடமும் வணிகம் செய்யமாட்டோம் என்று சொன்னேன் அவர்கள் உடனடியாக ஒப்புக் கொண்டு மோதலை நிறுத்தினர். இதற்கு முன்பு இப்படி வணிகத்தை யாரும் பயன்படுத்தியதில்லை என்றார். வணிகர்களின் அதிபர் என்பதால் அவரால் வணிகத்தை ஒரு ஆயுதமாக பயன்படுத்த முடிந்ததில் வியப்பில்லை. ஆனால் உலக ஒழுங்கின் படி இன்றைக்கு வெற்றி பெற்றிருப்பது என்னவோ உச்சத்திலிருந்த அமெரிக்க-சீன வணிகப் போர் நிறுத்தமே.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.முரளி

நெக்ரி & ஹார்ட் விளக்கும் பேரரசின் ஏகாதிபத்திய இறையாண்மை

புகழ்பெற்ற இத்தாலிய அரசியல் தத்துவஞானி மற்றும் மார்க்சிய சமூகவியலாளர் அன்டோனியோ நெக்ரி, தனது 90 வயதில் பாரிஸில் இறந்தார், 30 வயது இளையவரான மைக்கேல் ஹார்ட் டுடன் இணைந்து, தத்துவம், அரசியல் மற்றும் சமூக இயக்கங்கள் குறித்த விரிவான விவாதங்களை உருவாக்கி, அதன் மூலம் உலகளாவிய பாராட்டையும் விமர்சனங்களையும் பெற்றார். நெக்ரியும், ஹார்ட் டும் சேர்ந்து எழுதிய நூலான பேரரசு இடதுசாரி அரசியலில் பெரும் விவாதத்திற்குரியதாக ஆனது. அதைத் தொடர்ந்து இவர்கள் படைத்த காமன்வெல்த், பேரரசு காலத்தில் மக்கள் திரளும், ஜன்நாயகமும், ஆகிய நூல்கள் புதிய அரசியல் விளக்கங்களை முன்வைத்தன. நெக்ரியின் பேரரசு குறித்த நிலைப்பாடுகளை இக்கட்டுரை விளக்குகின்றது.

ஏகாதிபத்திய இறையாண்மை உருவாக்கம்

உலகளாவிய முதலாளித்துவ சந்தை வளர்ச்சியை கட்டுப்படுத்திக் கொண்டிருந்த சோவியத் தடைகள் தளர்ந்து போன நேரத்தில், மாற்றவியலாத, தடுக்கவியலாத பொருளாதார மற்றும் பண்பாட்டு உலகமயமாதலை நாம் காண நேர்ந்தது என்கின்றார் நெக்ரி. உலக சந்தைகளின் மூலமும், உலகளாவிய உற்பத்தித் தொடர்புகள் மூலமும்,புதிய அமைப்பு விதிகளும், தர்க்கமும், சொல்லப்போனால் புதிய வடிவத்திலான இறையாண்மையும் இன்று தோன்றியுள்ளன. உலகமயமாதலின் ஒரு நிகழ்வாக தேசிய அரசுகளின் இறையாண்மை படிப்படியாக குறைந்து வருகின்றது. உற்பத்தி பரிவர்த்தனை, தொழில் நுட்பம், பணம், மக்கள் மற்றும் பொருட்கள் ஆகிய முக்கிய அம்சங்கள் தேசிய எல்லைகளை எளிதாக கடப்பதினால், தேசிய அரசுகள் இவற்றின் போக்குகளைக் கட்டுப்படுத்த இயலாத நிலையும் மற்றும் பொருளாதரத்தின் மீது கட்டுப்பாடுகள் கொள்ள இயலாத நிலையும் அவற்றிற்கு ஏற்பட்டுள்ளன என்றும் இவர்கள் விளக்குகின்றனர்.

இந்தப் புதிய இறையாண்மை என்பது தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளை ஒரே தர்க்கம் மற்றும் அதிகாரத்தின் கீழ் செயல்படுத்தும் என்கின்றனர் இவர்கள். சர்வதேச அளவில் உருக்கொள்ளும் இந்த புதிய வகை இறையாண்மையை பேரரசு என இவர்கள் அழைத்தனர். தற்போதுள்ள தேசிய அரசுகளின் இறையாண்மை வீழ்ச்சியடைவதும், பொருளாதார பண்பாட்டு பரிவர்த்தனைகளை ஒழுங்கு படுத்த இயலாமையும்தான் இந்தப் புதிய பேரரசு உருவாவதிற்கான குறியீடாகக் காணலாம். பேரரசு என்பது உலகையாளும் இறையாண்மை கொண்ட சக்தியாகின்றது என்ற ஒரு கருத்தியலை நெக்ரியும் ஹார்ட்டும் முன் வைத்தனர்.

பேரரசின் வடிவத்தில் ஒரு மேலாதிக்க இறையாண்மை என்பது உலகமயமாக்கலுக்குப் பிறகு தோன்றிய பின் நவீனத்துவ முதலாளியம் என விளக்குகின்றார் நெக்ரி. பேரரசின் அரசியலமைப்பு, நவீனத்துவத்தின் இறையாண்மை என்றழைக்கப்பட்ட நிலையிலிருந்து (தேசிய அரசு) ஏகாதிபத்திய இறையாண்மை என்று பெயரிடப்பட்ட ஒரு புதிய வகையான இறையாண்மைக்கு மாறியுள்ளதாக இவர்கள் விளக்குகின்றனர்.

நவீனத்துவ காலத்தில் ஏகாதிபத்தியம் ஐரோப்பிய தேசிய அரசுகளின் இறையாண்மை என்பதை கட்டியமைத்தது மைல்கல்லாக இருந்தது.ஆனால் இன்று உருவாகும் பேரரசு என்பது ஏகாதிபத்தியத்திலிருந்து முற்றிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபட்டது. ஏகாதிபத்தியம் எல்லைகளை வரையறுப்பதில் கண்டிப்பானது. உற்பத்தி மற்றும் பரிவர்த்தனைகள் மீது கட்டுப்பாடு கொண்டது. ஆனால் புதிய பேரரசின் நவீன இறையாண்மை எல்லைக் கட்டுப்பாடுகளை மீறியது. ஒரு மைய அதிகாரத்திற்குட்படாதது. அது மையமற்றது . எல்லைகள் வரையறையற்றது. அது எல்லைகளைக் கட்டுப்பாடின்றி விரிவாக்கம் செய்ய எத்தனித்துக் கொண்டே இருக்கும். நெகிழ்வுத்தன்மை கொண்ட புதியவகை ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கும். கலப்பு அடையாளங்களை உருவாக்கும். ஏகாதிபத்திய ஐரோப்பிய நாடுகள் தனித்த வண்ணங்களைக் கொண்டவையாக அல்லாமல், இனி எல்லா வண்ணங்களும் இழையோடும் வானவில்லாக அவை மாறும். நவீன ஏகாதிபத்தியம் தன்னுடைய உற்பத்தி முறைகளை முற்றிலும் மாற்றிக்கொள்ளும். உலக சந்தையில் அதன் பிரிவினைகளாக இது காறும் இருந்து வந்த முதலாம்,இரண்டாம் மற்றும் மூன்றாம் உலகங்கள் என்ற வரையறை உடைந்து போகும். எல்லைகள் மாற்று உருவாக்கம் அடையும்.தேச எல்லைகளைப் புரிந்து கொள்வதில், நெகிழ்வுத் தன்மைக் கொண்ட புதிய வரையறைகள் உருவாகும். மரபு சார் தொழிற்சாலை தொழிலாளர்களின் முக்கியத்துவம் குறைந்து, புதிய வகை தொழிலாளர்கள் முக்கியத்துவம் பெறுவார்கள். அவர்கள் தொடர்பாற்றல், கூட்டுறவுடன் கூடிய நவீன திறன் மிக்கத் தொழிலாளிகளாக இருப்பர். உலகப் பொருளாதாரம் நவீனத் தன்மையிலிருந்து, பின் நவீனத்தன்மை கொண்டதாக மாறுகின்றது. இவ்வகை உலகளவிளாய முதலாளியத்தின் பொருளாதாரம் என்பது உயிரியல் அரசியல் *(bio politics)* சார்ந்த உற்பத்தியை உருவாக்கும் என்று நெக்ரி விளக்கினார்.

உயிரியல் அரசியல் என்பது அரசியல் அதிகாரத்திற்கும் ஒருவரின் உயிரியல் சுயாட்சிக்கும் இடையிலான தொடர்புகளைக் குறிக்கிறது. ஃபூக்கோவின் கூற்றுப்படி, உயிரியல் அரசியல் என்பது காலனித்துவ குடிமக்கள் அல்லது குடிமக்களாகக் கருதப்படும் தனிநபர்களின் உடல்களைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட நவீன காலனித்துவ அரசியல் செயல்கள், சொற்பொழிவுகள் மற்றும் கொள்கைகளைக் குறிக்கின்றது. தனி நபர்கள் மற்றும் சமூகத்தின் செயல்பாடுகளை, தனி நபர்களின் ஆசைகளை, உடலை மற்றும் சமூக உறவுகளை உயிரியல் அரசியல் தீர்மானிக்கின்றது. மரபு சார்ந்த ஆதிக்க முறைகளை விட இந்த வகை ஆதிக்கம் மிகவும் ஆபத்தானதும், வலுவானதும் ஆகும். இது மனிதர்களின் ஆசைகள் மற்றும் குணங்களைக்கூட கட்டுப்படுத்தக் கூடியது. அரசியலைக் கடந்து தினசரி வாழ்விலும், தனி நபர் சிந்தனைகளிலும்,இந்த உயிரியல் அரசியல் சக்தி எப்படி ஊடுருவுகிறது என்பதை நெகிரி விளக்குகின்றார்.

இதற்கான கூறுகள் உடல்நலம் பேணும் நிறுவனங்கள் மூலமாகவும், கல்வி திட்டங்கள் மூலமாகவும் ஊடகங்கள் மூலமாகவும் செயல்படுகின்றன. அவை பொது மக்களின் உணர்வுகளைக் கட்டமைக்கின்றன. மேலும் சமூக விதிமுறைகளையும் தீர்மானிக்கின்றன என்று நெகிரி கூறுகிறார். இதன் மூலம் பேரரசின் மதிப்பீடுகள் உருவாக்கப்பட்டு மக்களிடம் மனதில் திணிக்கவும் படுகின்றன. நிதி மூலதனம் என்பது முன் காலங்களில் இருந்த வடிவத்தில் இருந்து பேரரசின் காலத்தில் முற்றிலும் மாறியதாக இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டுகிறார். மூலதனம் என்பது தேச எல்லைகளுக்குள் மட்டும் கட்டுப்பட்டு இருப்பது அல்ல அது உலகளாவிய மூலதனமாக இன்று மாறுகிறது. இவ்வகை உற்பத்தி முறை சமூக வாழ்க்கை, பண்பாடு, அரசியல் என எல்லா அம்சங்களையும் ஒன்றோடு ஒன்று பின்னிக் கொண்டு முன்னேறும்.

பேரரசு என்பது அரக்கத் தன்மை கொண்ட முதலாளியம் என்று கருதிய இவர்கள், அது உழைப்பு என்பதையே மறு கட்டமைப்பு செய்கின்றது என்றனர். உற்பத்தி செயல்முறையின் கணினிமயமாக்கல் மற்றும் தானியக்கமாக்கலில் தொழில்நுட்பம் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது, புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சியும், புதிய தாராளமயக் கொள்கையும் சமகால உற்பத்தி முறையை தொழிற்சாலை தளத்திற்கு அப்பால், வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் மூலதனத்தின் ஆட்சியின் கீழ் கொண்டு வந்து, சமூக தொழிற்சாலையை உருவாக்குகின்றன' என்றார் நெக்ரி. இதன்படி ஒட்டு மொத்த சமூகவெளியை தொழிற்சாலையாகக் கட்டமைக்கப்படுகின்றது. இங்கு சேவை, அறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரியல் அரசியல் என்பது காலனித்துவ குடிமக்கள் அல்லது குடிமக்களாகக் கருதப்படும் தனிநபர்களின் உடல்களைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட நவீன காலனித்துவ அரசியல் செயல்கள், சொற்பொழிவுகள் மற்றும் கொள்கைகளைக் குறிக்கின்றது. தனி நபர்கள் மற்றும் சமூகத்தின் செயல்பாடுகளை, தனி நபர்களின் ஆசைகளை, உடலை மற்றும் சமூக உறவுகளை உயிரியல் அரசியல் தீர்மானிக்கின்றது.

அல்லது தொடர்பு போன்ற ஒரு பொருளற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்றார் ஹார்ட். இது 'பொருள் உற்பத்தி சாராத உழைப்பின்' மீது கட்டமைக்கப்பட்டுள்ளது என்றும், 'இன்று உற்பத்தித்திறன், செல்வம் மற்றும் சமூக உபரிகளை உருவாக்குதல் ஆகியவை மொழியியல்,தொடர்பு மற்றும் உணர்ச்சிகரமான வலையமைப்புகள் மூலம் கூட்டுறவு செயல்பாட்டின் வடிவத்தை எடுக்கின்றன'என்றும் இவர்கள் விவரித்தனர்.

பேரரசு எல்லா இடங்களிலும் உள்ளது, ஆனால் எங்கும் இல்லை, அதற்கு நிலையான இருப்பிடம் இல்லை, ஆனால் முழு உலகையும் அதன் திறந்த, விரிவடையும் எல்லைகளுக்குள் படிப்படியாக ஒருங்கிணைக்கிறது. பின்நவீனத்துவப் பேரரசு, மூலதனத்தை தடையற்ற ஒரு தளத்தில் நகர்த்துவதன் மூலம் உலகச் சந்தையின் மீது ஆதிக்கத்தையும் கட்டுப்பாட்டையும் விரிவுபடுத்த முயல்கிறது' என்பது நெக்ரியின் சிந்தனையின் மையக்கருவாகும்.

பேரரசின் மேலாதிக்கம் என்பது, உற்பத்தி செயல்பாட்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்களின் விளைவாக, பேரரசு தேசிய அரசுகள் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து மேலிருந்து கீழ் செலுத்தப்படும் கட்டுப்பாட்டிலிருந்து விலகிச் அதற்குப் பதிலாக,'நெகிழ்வான மற்றும் ஏற்ற இறக்கமான வலை பின்னல்கள் மூலம் சமூக நிறுவனங்களின் கட்டமைக்கப்பட்ட தளங்களுக்கு வெளியே நன்றாக விரிவடைகிறது.'

உலகளாவிய நிதி நிறுவனங்களான ஐ எம் எஃப், உலக வங்கி, பிற உலக வர்த்தக அமைப்புகள் போன்ற தொடர்பு வலை பின்னல்களால் உலகளாவிய ஒழுங்கை இது சாத்தியப்படுத்துகிறது. இந்த நிறுவனங்கள் பன்னாட்டு கார்ப்பரேட்டுகளுக்கு அவர்கள் பொருளாதார அரசியல் அதிகாரத்தை செயல்படுத்தும் அமைப்புகளை உருவாக்கித் தருகின்றன. நேரடிக் கட்டுப்பாடு என்பதிலிருந்து மாற்றம் கொண்டு, பல்வகை வலைப் பின்னல்கள் மூலமாக இதை சாத்தியப்படுத்துகின்றன. பேரரசு என்பது பல்வகை அம்சங்களை சுவீகரித்துக் கொள்கின்றது. இது பன்முகம் கொண்டதாக இருப்பதால் இதை எதிர்ப்பது என்பது பெரிய சவாலாகும். முந்தைய ஏகாதிபத்திய நாடுகள் ராணுவம் மூலமும், எல்லைகளை விரிவாக்குவதன் மூலமும் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டியது போல் அல்லாமல் இந்த பேரரசு பொருளாதார கொள்கைகள் மூலமாகவும்,பண்பாட்டு விதிமுறைகளை உருவாக்குவதின் மூலமாகவும், அரசியல் நிறுவனங்களை நிலைநாட்டுவதன் மூலமாகவும் தங்கள் ஆதிக்கத்தை செலுத்துகின்றன.

இணையம் மற்றும் சமூக ஊடகங்களின் கண்டுபிடிப்பு மற்றும் வளர்ச்சி உட்பட, இந்தத் தொழில்நுட்ப யுகத்தில், பேரரசு அதன் குடிமக்களை எவ்வாறு கட்டுப்படுத்துகிறது என்பதற்கான விளக்கம் நம்பமுடியாத அளவிற்கு உள்ளது. சமூக ஊடகங்களில் செலவிடும் நமது ஓய்வு நேரம் கூட நம் வாழ்வில் பேரரசின் கட்டுப்பாட்டின் அடிப்படையை உருவாக்குகிறது. அது அரசியல் ஆதாயத்திற்காக பல வகைகளில் தரவுகளை சேகரிக்கும். தரவுகளைக் கொண்டு மனிதர்களின் அகத்தின் போக்குகளை கணித்து, அதன் விருப்பு, வெறுப்புகளை கட்டமைக்கும் சக்தி கொண்டது. தனி மனிதர்களிடம் கருத்துக்களை உருவாக்கும் பல நுணுக்கங்களை அது மேற்கொள்ளும். முதலாளித்துவம் வெறும் பொருள் பொருட்களைப் பண்டமாக்குவது மட்டுமல்லாமல், மனித ஆசைகளை ஒரு பண்டமாக மாற்றுகிறது என்று நெக்ரி மற்றும் ஹார்ட் வாதிடுகின்றனர்.

பொருளற்ற உழைப்பு:

இந்த செயல்முறையின் முக்கிய அங்கமாக "பொருள் உற்பத்தி சராத உழைப்பை" அவர்கள் அடையாளம் காண்கிறார்கள். இதில் அறிவு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தைய ஏகாதிபத்திய நாடுகள் ராணுவம் மூலமும், எல்லைகளை விரிவாக்குவதன் மூலமும் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டியது போல் அல்லாமல் இந்த பேரரசு பொருளாதார கொள்கைகள் மூலமாகவும்,பண்பாட்டு விதிமுறைகளை உருவாக்குவதின் மூலமாகவும், அரசியல் நிறுவனங்களை நிலைநாட்டுவதன் மூலமாகவும் தங்கள் ஆதிக்கத்தை செலுத்துகின்றன.

தகவல், கலாச்சாரம் மற்றும் சேவைகளை உருவாக்கும் வேலை அடங்கும், இவை அனைத்தும் முதலாளித்துவ அமைப்பில் பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி மற்றும் புழக்கத்திற்கு அவசியமானவை. பொருளற்ற உழைப்பைச் சுரண்டுவது மூலம் மூலதனம் குவிக்கப்பட்டு, அதன் ஆதிக்க வலிமை பராமரிக்கப்படும் ஒரு முக்கியமான வழிமுறையாகக் கருதப்படுகிறது.

பிரதிநிதித்துவம் எனும் பெயரில் ஆதிக்கம்

புதிய உலகளாவிய ஏற்பாட்டில் மக்களைக் கட்டமைத்து பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளை பேரரசு உருவாக்கும். அது உலகளாவிய மக்கள் அரசாங்க அமைப்புகளால் அல்ல, மாறாக குறைந்தபட்சம் ஒப்பீட்டளவில் சுயாதீனமாக இருக்கும் பல்வேறு அமைப்புகளால் மிகவும் தெளிவாகவும் நேரடியாகவும் பிரதிநிதித்துவப்படுத்தப் படுகிறார்கள். "மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துதல்" என்ற தனது கூற்றை நியாயப்படுத்த, பேரரசு "உலகளாவிய மனித தேவைகள்" மற்றும் "உலகளாவிய மனித உரிமைகள்" பற்றிய ஒரு உரையாடாலை உருவாக்குகிறது. இந்த "தேவைகள் மற்றும் உரிமைகள்" தேசிய அரசுகளால் அவற்றை அடைய முடியாத வகையில் வெளிப்படுத்தப் படுகின்றன. இந்த "உலகளாவிய தேவைகள் மற்றும் உரிமைகளை" பிரதிநிதித்துவப்படுத்த, மனித உரிமைகள் கண்காணிப்புகள் (அமெரிக்காஸ் வாட்ச், அம்னஸ்டி சர்வதேசம்), அமைதி குழுக்கள் (சமாதான சாட்சி) மற்றும் மருத்துவ மற்றும் பஞ்ச நிவாரணக் குழுக்கள் (ஆக்ஸ்பாம்) போன்ற "மனிதாபிமான அமைப்புகளின்" தொகுப்பு போன்றவை கட்டமைக்கப் பட்டுள்ளன. இந்த அமைப்புகள் தங்களை ஒரு உலகளாவிய சிவில் சமூகத்திற்காக வேலை செய்வதாகவும் "ஒடுக்கப்பட்டவர்களையும், தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியாதவர்களையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக்" காட்டிக் கொள்கின்றன என்று நெக்ரி மற்றும் ஹார்ட் வாதிடுகின்றனர். அவர்களின் கூற்றுப்படி, இந்த அமைப்புகள் பேரரசின் ஆட்சி மற்றும் சுரண்டலை ஆழப்படுத்த உதவுகின்றன என்கின்றனர்..

இந்த அமைப்புகள்தான் பேரரசு மற்றும் அதன் உலகளாவிய வழிமுறைகளைப் பற்றிய விளக்கங்களை மக்களிடம் கொண்டு செல்கின்றன. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இந்த அமைப்புகள் உலகளாவிய கருத்துத் தொழிற்சாலைகளாக செயல் படுகின்றன, அவை பேரரசின் மக்களாக மாறுவதற்கு ஏராளமான மக்களை ஒழுங்குபடுத்துகின்றன. மனித உரிமைகள் எனும் பெயரில் மக்கள் போராட்டங்களை துருக்கி போன்ற நாடுகளில் நசுக்கவும் இவை செயல்பட்டன என விளக்குகின்றார் நெக்ரி. "அம்னஸ்டி இன்டர்நேஷனல் தன் அறிக்கையில் துருக்கியின் மக்களைப் பற்றியோ அல்லது தேசிய அரசைப் பற்றியோ கவலைப்படவில்லை, ஆனால் பேரரசைப் பாதுகாக்க "உலகளாவிய மனித உரிமைகள்" என்ற உரையைப் பயன்படுத்தியது. உலகளாவிய பொது விதிகள் என்பது நாடுகளின் தனித்தன்மையை இழக்க வைக்கும் ஆபத்தைக் கொண்டவை. இந்தப் பொது விதிகளை பேரரசு மறைமுகமாக உருவாக்கி அவற்றுக்கு பொது ஒப்புதல் பெற்று அவற்றின் வழியே தேசிய நாடுகளைக் கட்டுப்படுத்தும்.

போர்களைத் தீர்மானிக்கும்

பேரரசு தனக்கான நெருக்கடிகள் ஏற்படும் போதெல்லாம் அதை எப்படி சரி செய்வது என்பதை தெரிந்து வைத்திருக்கிறது. அந்த மாதிரி சமயங்களில் அது பகுதியாகவோ அல்லது உலகளாவிய அளவிலோ பொருளாதார, மற்றும் அரசியல் நெருக்கடிகளை உருவாக்கும். இந்த நெருக்கடிகளைத் தாங்களே சமாளிக்கும் யுக்திகளையும் அது வைத்திருக்கும். இதன் புதிய தாராளமயக் கொள்கை என்பது நாடுகளில் பொருளாதாரங்களைக் கட்டுப்படுத்தும். லட்சக்கணக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களின் வேலைகளைப் பறித்து பொருளாதார நெருக்கடியை கட்டுப்படுத்தும் வழிவகைகளை ஏற்படுத்தும். இந்த உலக மூலதனத்திற்கு, தான் செழிக்க வேண்டும், வளர வேண்டும் என்பது மட்டுமே குறிக்கோள். ராணுவத்தையும் இது விட்டு வைக்காது. நாடுகளில் எதிர்ப்பு குரல்களை நசுக்குவதற்கும் இதற்கு மறைமுகமான அதிகாரம் உண்டு. போரில் ஈடுபடுவதற்கோ அல்லது விலகுவதற்கோ அதிகாரம் இறையாண்மை கொண்ட தேசிய அரசுகள்தான் கொண்டிருந்தன. ஆனால் உருவாகிவரும் பேரரசு உருவாக்கியுள்ள அதன் இறையாண்மை, நவீனத்துவ தேசிய அரசுக்கு எதிராக அமையும். இரண்டு நாடுகளுக்கு இடையிலான போரை அது ஆதரிக்கவும் செய்யும். அதே சமயம் நிறுத்தும் வல்லமையையும் கொண்டிருக்கும். அதன் உலகளாவிய முதலீடுக்கு அத்தனை வலிமை. ஒரு வகையில் உலகளாவிய ஏகாதிபத்தியமாக அது மாறிவிட்டது. அதே போல உள்நாட்டுப் போர் என்பது பேரரசின் இறையாண்மை ஒழுங்கிற்கும், அதன் இறையாண்மை என்ற அதிகாரத்தை ஏற்க இயலாதப் போராளிகளுக்கும் இடையிலான ஒரு ஆயுத மோதலாகும். எனவே அவர்கள் உலக மக்களுக்கே எதிரிகள் என்று கட்டமைக்கப்படுவார்கள். பயங்கரவாதத்திற்கு எதிரான போர் மற்றும் மனித உரிமைகள் என்ற பெயரில் நடத்தப்படும் பல்வேறு இராணுவ நடவடிக்கைகளின் பின்னணியில் "நியாயமான போர்" என்ற கருத்து உருவாக்கப்படுகின்றது. மனித குலநீதி என்ற கருத்து, போரை உலகளாவியதாக்க உதவுகிறது என்கின்றனர் இருவரும்.

புது வகைத் தொழிலாளர்கள்

மூலதனம் எல்லைகளுக்கு அப்பால் தன் பயணத்தை விஸ்தரிக்கிறது. உலகளாவிய நிதி மூலதனம் தற்போது தொழிலாளர்களை உலகஅளவிலே சுரண்டுகிறது. தொழிலாளர் சந்தை என்பது ஒன்றோடு ஒன்று இணைக்கப் பட்டுள்ளது. உலகின் பல பகுதிகளில் வேலை என்பது ஒரு போட்டியாக மாற்றப்பட்டுள்ளது. இந்தப் போட்டியே தொழிலாளியின் ஊதியத்தையும் பணிச் சூழலையும் நிர்ணயிக்கின்றது. புதிய வகைத் தொழிலாளர்கள் உலக அளவில் உருவாகிவிட்டனர். அவர்கள் பல வேறுபாடுகளை கொண்டவர்களாகவும் அதே சமயத்தில் இணைப்பு கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். பழமையான முதலாளியத்தை விட, பேரரசின் முதலாளியம் மாறுபட்டது என நெகிரி கூறுகிறார். அறிவு சார்ந்த பொருளாதாரத்திற்கு அது இடம்பெயர்ந்துள்ளது. பொருள் சாராத உழைப்பு மற்றும் உழைப்பாளிகள் பண்பாட்டு தளத்தில் அதன் உள்ளடக்கங்களை உருவாக்கும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அந்த வகையில் தகவல்கள் மற்றும் பல்வகை சேவைகள் அமைகின்றன. இவ்வகைத் தொழிலாளர்களைச் சுரண்டுவது புது வகையானது. அதற்கு எதிரான எதிர்ப்புகளும் மிகவும் குறைவானவை வலுவற்றவை. இங்குதான் ஒரு வித்தியாசமான பார்வையை நெகிரி செலுத்துகிறார். இந்த வகை தொழிலாளர்கள் ஒருவகையில் சுரண்டலுக்கு ஆட்பட்டாலும் மறு வகையில் எதிர்ப்பு சக்தியாகவும் செயல்படுவார்கள் என்கிறார். இவ்வகை தொழிலாளர்கள் மிகவும் மோசமான பணிச் சூழலுக்கு எப்போதும் தள்ளப்படுகிறார்கள். எந்த நேரத்திலும் பணி நீக்கம் செய்யப்படலாம் என்ற அச்சமும், குறிப்பிட்ட நேரத்திற்குள் பல்வகை வேலைகளை செய்ய வேண்டிய அழுத்தத்திற்கும் ஆளாகிறார்கள். இவ்வகைத் தொழிலாளர்கள், ஆக்க சக்தி கொண்ட மூளை தொழிலாளர்களாக இருப்பதால், இவர்கள் தங்கள் தகவல் தொடர்புத் திறன் மூலம் நிறுவனங்களுக்கு எதிரான செயல்பாட்டையும் முன்னெடுக்க முற்படுவார்கள். ஒரு வகையில் இவர்கள் நவீனப் போராளிகளாக மாறக்கூடிய வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன என்கிறார் நெகிரி.

பேரரசுக்கு எதிராக மக்கள் திரள்

இந்தக் கட்டத்தில் "பேரரசின்" சக்திக்கு எதிராக சவால் விடக்கூடிய மக்கள் திரள் (மல்டிடியூட்) எனும் எதிர்ப்பு சக்தியை இவர்கள் அடையாளம் காண்கின்றனர். மல்டிடியூட் என்பது பல்வகைப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் தனி நபர்களின் குழுக்களின் வலைப்பின்னல் ஆகும். பேரரசின் பல்வகை ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடும் இந்தத் திரள் என்பது பல்வகை வேறுபாடுகளைக் கொண்ட மக்களைச் சேர்ந்தது. இந்தச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கை என்பதை ஒரே வகையான தன்மை கொண்ட, ஒற்றுமை கொண்ட அடையாளமாக ஆக்க முடியாது. இது பல்வகை வேறுபாடுகளை இணைத்துக்கொண்டு செயல்படும் அமைப்பு ஆகும். ஒரே அடையாளமாக இதை மாற்ற இயலாது. பல்வகை பண்பாடுகள், இனங்கள், இனக்குழுக்கள்,பாலினங்கள் பல்வகை பாலியல் விருப்பங்கள் கொண்டவர்கள் ஆகியோர் இதில் இணைந்திருப்பார்கள்.

மரபு சார்ந்த தொழிலாளர் வர்க்கம் என்ற பொதுமைப் பண்பில் இருந்து மாறுபட்டது மக்கள் திரள். இது தனியான ஒரு வர்க்கம் அல்ல. பேரரசை எதிர்க்க வேண்டும் என்ற ஒற்றைக் குறிக்கோளை கொண்ட சமூக செயல்பாட்டாளர்களை இணைத்துக் கொண்ட அமைப்புதான் இது. வேற்றுமை தான் இதன் பலம் ஆகும். வேற்றுமை தான் போராட்டங்களுக்கு தேவையான பல்வகை பார்வைகளையும், புரிதல்களையும் போராட்ட யுக்திகளையும் கொடுக்க வல்லது. இந்த மக்கள் திரள் என்பது புதுவகையான அரசியல் அமைப்பை உருவாக்கும். மேலிருந்து கீழே திணிக்கப்படும் அதிகார உத்தரவுகளை விட இது சுதந்திரமானது. உறுப்பினர்கள் நேரடியாக பங்கு பெற்று முடிவு எடுக்கும் தளத்தில் இருப்பார்கள். எனவே கூட்டமைப்பின் அடிப்படை என்பது நெகிழ்வுத் தன்மை கொண்டதாகவும் அந்தந்த சூழலுக்கு ஏற்ப செயல்படக்கூடிய தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்று நெகிரியும், ஹார்ட்டும் கருதுகிறார்கள்.

கம்யூனிஸ்ட்டுகளின் பங்கு

கம்யூனிஸ்ட்கள் பேரரசுக்கு எதிராக அல்லது மாற்றாக உருவாக்க விரும்புவது நவீனத்துவம் சார்ந்த மற்றுமொரு அரசு எனும் நிறுவனமே. இது மீண்டும் தேசிய அரசையே நிலை பெறச் செய்யும். தேசிய அரசை மீண்டும் அதிகாரம் பெறச் செய்வது அடிப்படையில் தவறானது. உலகமயமாக்கல் அரசு அதிகாரத்தின் தன்மையையும் வரம்புகளையும் மாற்றியுள்ளதால், அரசைக் கைப்பற்றுவது என்பது புரட்சியாளர்களுக்குத் தவறான குறிக்கோள் என்று அவர் வாதிடுகிறார். தேசம், மக்கள், தொழிலாளர் வர்க்கம் அல்லது கட்சி போன்ற நவீனத்துவ கால அரசுடன் தொடர்புடைய பாரம்பரிய அரசியல் வகைகளுக்குப் பதிலாக, அவர் 'உலகளாவிய மக்கள் கூட்டமைப்பு, உழைப்பின் வகைகள், மற்றும் நிறுவனங்கள் பற்றி சிந்திக்க நெக்ரி பரிந்துரைக்கிறார். அதாவது வர்க்க அரசியல் என்பதும்,அரசு என்பதும் மாற்று விளக்கங்களுக்குள்ளாக்கப்படவேண்டும் என்கின்றார். "மக்கள்" அல்லது "தொழிலாள வர்க்கம்" போன்ற நவீனத்துவ அரசுடன் தொடர்புடைய பாரம்பரிய அரசியல் வகைகளுக்குப் பதிலாக மல்டிடியூட் அடிப்படையில் சிந்திக்க வேண்டும் என்று நெக்ரி முன்மொழிகிறார். மல்டிடியூட் என்பது பல வகைப்பட்ட மக்களை, இயக்கங்களை உள்ளடக்கியதாகும். நவீன அரசுடன் தொடர்புடைய அரசியல் வகைகளை நாம் நிராகரிக்க வேண்டும் என்று நெக்ரி பரிந்துரைக்கிறார், இதில் பாரம்பரிய அரசியல் கட்சியும் அடங்கும்.

மக்கள் திரளுக்கு எந்த முன்னணிப் படையும் இல்லை(*vanguard*), மேலும் இவற்றை கட்சிகளுடன் தொடர்புடைய பாரம்பரிய அர்த்தத்தில் பிரதிநிதித்துவப்படுத்தவோ அல்லது வழிநடத்தவோ முடியாது. இவை தன்னெழுச்சியானவை. இவை தனக்குரிய அரசியல் வழிகாட்டுதலை தானே உருவாக்கும். ஆனால் நோக்கம் மக்களுக்கானாதாக அமையும் என்கின்றார் நெக்ரி.

பன்மைத்துவம் கொண்ட மக்கள் திரளின் எதிர்ப்பு என்பதே இங்கு முதன்மை பெறுகின்றது. இது தன் பயணத்தில் புதிய ஜனநாயக வடிவங்களை கண்டுபிடிக்கும். இது ஆதிக்க அரசமைப்புச் சட்டங்களை உடைத்து புதிய அரசமைப்புச் சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தை கொண்டிருக்கும். அது பேரரசு என்பதையும் தாண்டிய ஒரு அரசியல் உருவமாக ஆகும். புதிய மாற்று உலகை உருவாக்கும். இவ்வகை மக்கள் திரள் என்பது ஒரு நாட்டிற்குள்ளாக மட்டும் எழுவது அல்ல. புவி எல்லைகளால் இவற்றை வரையறுக்க முடியாது. இந்த மாற்று மக்கள் அதிகாரத்தின் எல்லைகள் தன்னெழுச்சியான எதிர்ப்புகளாலும், போராட்டங்களாலும் இன்று உருவாக்கப்பட்டு வருகின்றன.

•

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | க.பழனித்துரை

நாம் பொறுப்புமிக்கவராகச் செயல்பட...



நாடு சுதந்திரம் அடைந்தவுடன் அது தன்னை தகவமைத்துக் கொண்டு அரசாங்கமும் மக்களும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு வழிகாட்டுச் சாசனத்தை அரசியல் சாசனமாக நாட்டின் தலைவர்கள் உருவாக்கினார்கள். அந்த சாசனம் என்பது எப்படிப்பட்ட நாடு உருவாக வேண்டும் என்பதை அதன் முகப்புரையிலேயே கோடிட்டுக் காட்டியிருக்கிறது. அந்த நாட்டை உருவாக்குவதில் அந்த அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் ஒரு பெரும் பங்கு இருக்கிறது. நாடு அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைய மிகப்பெரிய போராட்டத்தையும் தியாகத்தையும் செய்ய வேண்டி இருந்தது. ஆனால் பெற்ற விடுதலையை, அனைவருக்கும் கொண்டு சேர்க்க உருவானதுதான் அரசமைப்புச் சாசனம். உருவாக்கிய அரசமைப்புச் சாசனத்தில் உள்ள அடிப்படை மனித உரிமைகளைப் பெற்றிட குடிமக்கள் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் அறிந்து செயல்பட வேண்டும். உரிமைகளும் கடமைகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்தது. அவைகளைப் புரிந்து கொண்டு செயல்பட சாதாரண மக்களுக்கு ஒரு கல்வி தேவைப்படுகிறது. உரிமைகளை எப்படி எடுப்பது என்பது மக்களுக்குக் கற்றுத் தரவேண்டும். பெரும்பாலான விடுதலை அடைந்த நாடுகளில் அரசமைப்புச் சாசனம் இருந்தும், மக்களாட்சியில் அந்த நாடு இருந்தும், பெரும்பான்மை மக்கள் தங்கள் வாழ்வை செம்மைப்படுத்திக் கொள்ள முடியவில்லை. இதன் விளைவுதான் விடுதலை அடைந்த நாடுகளில் மக்கள் தொடர்ந்து அரசாங்கத்திற்கு அடிமைகளாக இருப்பதும், அரசாங்கத்தின் கொடுமை தாங்க முடியாதபோது அரசாங்கத்தை எதிர்த்துப் போராடியும் வருகின்றனர். இந்தப் போராட்டங்களை வடிவமைத்து தலைமைதாங்கி நடத்துவதன் மூலம்தான் அரசியல் கட்சிகள் மக்களுக்கான அரசியல் கல்வியை போதிக்கின்றன. இன்றைய நிலையில் அப்படிப்பட்ட போராட்டங்களை அரசியல் கட்சிகளை முன்னெடுத்து நடத்துவதில்லை என்பது ஒரு மக்களாட்சி சோக வரலாறு. இந்தியாவில் கடந்து 30 ஆண்டுகளில் மட்டும் 50,000க்கு மேற்பட்ட போராட்டங்களைப் பாதிக்கப்பட்ட மக்களே நின்று அரசுக்கு எதிராகப் போராடி இருக்கின்றனர் என்பதை டி.எல்.சேத் என்பவர் ஆய்வு செய்து வெளியிட்டுள்ளார்.

இந்தச் சூழல் ஏன் வந்தது என்றால் மக்களாட்சி நடைபெறும் நாட்டில் மக்கள் அரசுடன் ஒப்பந்தம் செய்கின்றார்கள். தங்கள் அதிகாரத்தை அரசுக்குத் தந்து, தங்களைப் பாதுகாப்பதும் தங்களை மேம்படுத்துவதும் அரசாங்கத்தின் கடமை பொறுப்பு என்று அறிவிக்கின்றார்கள். அதை அரசும் ஏற்றுக் கொண்டுதான் செயல்படுகிறது. பிரச்சினை எங்கே தோன்றுகிறது என்றால், அரசுடன் மக்கள் இணைந்து செயல்படுவதில்தான். அரசுடன் இணைந்து செயல்பட மக்களுக்கு அரசு செயல்படும் விதம் பற்றிய புரிதல் வேண்டும். அந்தப் புரிதல் என்பது பெரும்பாலான மேற்கத்திய நாடுகளில் மக்களாட்சிக்காக போராடும்போது கிடைத்துவிடுகிறது. எங்கெல்லாம் குடிமக்களாக அரசுடன் இணைய வேண்டும். எப்படி அரசு தன் கடமைகளை ஆற்றுகின்றது என்பதைப் புரிந்து கொள்ளுவார்கள். ஆனால் காலனியாதிக்கத்திலிருந்து விடுபட்ட நாடுகள் அனைத்தும் விடுதலைக்குப் போராடியது. ஆனால் அந்த நாடுகளில் மக்களாட்சிக்காக மக்கள் போராடவில்லை. நாடு சுதந்திரம் அடைந்தவுடன் மக்களாட்சியை தலைவர்கள் பிரகடனப்படுத்திக் கொண்டார்கள். மக்களாட்சி மக்களுக்கு கொடையாகக் கிடைத்தது என்றுதான் கூறவேண்டும். கொடையாகக் கிடைத்த விலைமதிப்பற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களாட்சி என்ற ஆயுதத்தை மக்கள் பயன்படுத்தி நன்மைகள் பெற்றுக்கொள்ளத் தேவையான அறிதலை, புரிதலை, தெளிவை மக்களிடம் உருவாக்க வேண்டும். அதைச் செய்ய வேண்டிய பொறுப்பு, அரசுக்கு, அரசியல் கட்சிகளுக்கு, கல்விச்சாலைகளுக்கு, ஊடகங்களுக்கு, பொதுக் கருத்தாளர்களுக்கு உண்டு. ஆனால் அப்படி அந்த நாடுகளிலெல்லாம் மக்களுக்குத் தேவையான மக்களாட்சிக்கான கல்வியை தரவில்லை. தருவதற்கு முயற்சிகூடச் செய்யவில்லை. அடுத்து என்று மக்களாட்சி நடைமுறைக்கு வந்ததோ அன்றிலிருந்து மக்களாட்சி நடைபெறும் நாட்டில் மக்களுக்கு பொறுப்புக்களும் கடமைகளும் அதிகமாக்கப்பட்டுவிட்டன. பெரும்பாலான நாடுகளில் ஏன் நம் நாடு உள்பட, பொதுமக்களுக்குள்ள பொறுப்புக்களை, கடமைகளை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையை மக்களுக்கு உருவாக்கித் தரவில்லை. பெரும்பான்மை மக்கள் அரசின்மேல் நம்பிக்கை வைத்து தாங்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவே உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அடுத்து தங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு அரசுக்குள் மக்களுக்கு வாய்ப்பில்லை. அத்துடன் அரசுக் கட்டமைப்புக்கள், நிர்வாகக் கட்டமைப்புக்கள் சிக்கல் நிறைந்ததாகவே இருந்த காரணத்தால் பொதுமக்கள் அரசுடன் இணைய முடியவில்லை. பொதுமக்கள் குடிமக்களாக குடிமைச் சமூக அமைப்புக்களில் செயல்படும்போது தான் அரசுடன் அவர்கள் இணைய முடியும். அதற்கு அவர்கள் நேரமும் கிடைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் தங்கள் வாழ்வாதாரத்திற்காக அலையும் ஏழை மக்கள் எப்படி குடிமைச் சமூகப் பணிகளில் இணைய முடியும் என்ற கேள்விக்கும் இன்றுவரை விடை கிடைக்கவில்லை. நடுத்தர வர்க்கம் அதிக எண்ணிக்கையில் இருக்கும் நாட்டில் குடிமக்களின் அறிவார்ந்த பங்கேற்பை பார்க்க முடியும்.

அரசு அனைத்தையும் செய்யும் என்று பெரும்பான்மை மக்கள் அரசுடன் கைகோர்ப்பதற்குப் பதில் அந்நியப்பட்டு இருந்ததால் அரசாங்கம் என்ன செய்கின்றது என்பது பெரும்பான்மை மக்களுக்குத் தெரியவில்லை, அரசின் திட்டம் என்ன, சட்டம் என்ன, அரசின் நிதி ஒதுக்கீடு எவ்வளவு, இவை அனைத்தும் யாரால் எப்போது யாருக்கு நடைமுறைப்படுத்துகிறது என்பது பற்றிய புரிதல் இல்லாமல் இருக்கின்றனர். யார் யாரெல்லாம் அரசாங்கத்தின் செயல்பாடுகள் பற்றி தெளிவுடன் இருந்தார்களோ அவர்கள் அரசுடன் இணைகின்றனர். அரசுடன் இணைந்து அரசைப் பயன்படுத்தி மேம்படுத்திக் கொண்டு விட்டனர். இதன் விளைவுதான் நாம் பார்க்கும் ஏற்றத் தாழ்வுகள். சுதந்திரம் அடைந்த நாட்டில் அரசாங்கம் செயல்படாமல் இருக்கவில்லை. அதற்கான எல்லா முயற்சிகளையும் செய்து கொண்டுதான் இருக்கின்றன. இருந்தபோதும் ஒட்டுமொத்த சமூகமும் மேம்பாடு அடையவில்லை என்பதை அரசாங்கமே ஆமோதிக்கின்றது.

சுதந்திர இந்தியா ஐம்பது ஆண்டு முடியும் தருவாயில் அதன் சாதனைகள் என்னென்ன என்று பட்டியல் போட்டது. நிறைய ஆய்வுகள் நடத்தப்பட்டன. அதில் குறிப்பாக ஓர் ஆய்வை உலக வங்கி நடத்தியிருந்தது. 50 ஆண்டு காலத்தில் கிராம மக்களுக்காக அவர்களின் மேம்பாட்டுக்குச் செய்தவைகள் யாவை என ஆய்வை மேற்கொண்டன. அதில் தெரிய வந்தது என்ன என்றால் 2000க்கு மேற்பட்ட திட்டங்களை மத்திய மாநில அரசுகள் தீட்டி நிதி ஒதுக்கீடு செய்து நடைமுறைப்படுத்தி இருக்கின்றன என்பதை அறி;fகையாக வெளியிட்டன. அடுத்து இந்தத் திட்டங்களின் மூலம் செலவழித்த தொகை என்பது ஏறத்தாழ ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் 5 முதல் 7 கோடி ரூபாயாகும். உள்ளபடியே இந்தத் திட்டங்கள் அனைத்தும் என்னென்ன குறிக்கோள்களுக்காக போடப்பட்டதோ, அவைகளை நிறைவேற்ற ஒதுக்கப்பட்ட தொகையை முறைப்படி பயன்படுத்தியிருந்தால் ஒவ்வொரு கிராமமும் சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள கிராமமாக மாறியிருக்கும் என்பதுதான் நிதர்சனமான உணமை. அதில் ஒன்று தெளிவானது. அரசு கொண்டு வரும் திட்டங்களை முறையாக யாருக்கு கொண்டு சேர்க்க வேண்டுமோ அவர்களுக்கு கொண்டு சேர்க்க மக்கள் அரசுடன் இணைந்து செயல்படவில்லை. ஆகையால் திட்டங்கள் சென்று அடைய வேண்டிய இலக்கை அடையவில்லை என்பதைப் புரிந்து கொண்டுதான் புதிய உள்ளாட்சியை அரசாங்கமாக உருவாக்கிச் செயல்பட வைத்தனர். இந்த புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாட்சியில் நேரடியாக மக்கள் பங்கேற்று அரசாங்கத்தை கேள்வி கேட்டு தங்களுக்கானவற்றை பெற்றுக் கொள்ள வழிவகை கிராமசபை மூலம் உருவாக்கி முப்பது ஆண்டுகளைக் கடந்த பின்பும் அது எப்படி நடைபெறுகின்றது என்பதைப் பார்த்தால் உண்மை நிலவரம் நமக்குப் புரிந்துவிடும்.

இந்தியா இரண்டு செயல்களுக்குப் பெயர் பெற்றது. இந்திய அரசாங்கம் சாதாரண மக்களுக்காகப் போடும் திட்டத்தை மற்றவர்கள் பிடித்துக் கொள்வது. அதேபோல் விளிம்புநிலை மக்களுக்குஒதுக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவத்தை மற்றவர்கள் தந்திரமாக பிடித்துக் கொள்வதில் வல்லமை படைத்த நாடு. இந்த இரண்டு நிகழ்வால் தான் எது யாருக்குச் சேர வேண்டுமோ அது அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. அதில்தான் ஊழல் உற்பத்தியானது. இதைப் பிடித்துக் கொள்பவர்கள் அனைவரும் அரசுடன் கைகோர்த்து மக்கள் அறியாமையை பயன்படுத்திக் கொண்டவர்கள்.

இந்தக் கூட்டணியை உடைக்க வந்ததுதான் புதிய உள்ளாட்சி அரசாங்கம். அந்த அரசாங்கம் வலுப்படாமல் பார்த்துக் கொள்வதும் இந்தக் கூட்டணிதான். யாருக்காக இந்த உள்ளாட்சி அரசாங்கமாக வந்ததோ அவர்களுக்கு அந்தச் செய்திபோய் சேரவில்லை. அதேபோல் அவர்களுக்கு அந்தச் செய்தியை கொண்டு சேர்க்கவும் எவரும் முயலவில்லை. மக்கள் எந்த விழிப்புணர்வும் இன்றி கிராமசபைக்கு சென்று மனுக் கொடுத்தேன் ஒன்றும் நடக்கவில்லை என்று கூறுகின்றனர். கிராமசபை மனுக் கொடுக்கும் இடமல்ல, அங்கு எவரும் எஜமானர் இல்லை. கிராமசபை மக்களின் பாராளுமன்றம். அந்த மன்றம் அதற்குக் கொடுத்த அதிகாரத்திற்கு உட்பட்டு முடிவுகள் எடுத்துவிட்டால் அதை நிறைவேற்றுவது கிராம ஊராட்சி மன்றம்தான். எப்படி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மத்திய அரசு செயல்படுத்துகின்றதோ, எப்படி சட்டமன்றத்தில் எடுத்த முடிவுகளை தீர்மானங்களை மாநில அரசு நிறைவேற்றுகின்றதோ அதேபோல்தான் கிராமசபை தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டியது கிராம ஊராட்சியின் கடமை மற்றும் பொறுப்பு. எப்போது பார்த்தாலும் நிதி இல்லை என்று பஞ்சப்பாட்டு பாடும் பஞ்சாயத்துத் தலைவர்கள் இ-கிராம் சுவராஜ் போர்ட்டலில் ஒவ்வொருகிராமப் பஞ்சாயத்தின் வரவு செலவு கணக்கை வெளியிட்டு வைத்திருக்கிறது. அந்தப் பணம் எங்கே இருந்து வந்தது. வந்தது பல கோடிகள். மத்திய அரசும் மாநில அரசும் தரும் திட்டங்கள் எண்ணிக்கையில் அடங்காதவைகள். அவற்றை முறையாக தன் பஞ்சாயத்துக்களுக்குக் கொண்டுவர தேவையான நிர்வாக நடைமுறைப் புரிதல் அற்று இருப்பது ஒரு வேதனையான நிகழ்வு.

உள்ளாட்சி என்பது ஆளுகைக்காக பொறுப்பேற்பது ஊரக வளர்ச்சி என்பது திட்டச் செயல்பாடுகள். இந்த உள்ளாட்சிக்கு பதவிக்கு வந்தவர்கள் ஊரக வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதுதான் தங்களின் கடமை பொறுப்பு என்று எண்ணிச் செயல்படுகின்றனர். உள்ளாட்சித் தலைவர்கள் இல்லாமலேயே அந்தச் செயல்பாடுகளை மாநில அரசுகள் செய்துவிடும். உள்ளாட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் தருவது கிராம மேம்பாட்டுக்கு மக்களைத் தயார் செய்து பொறுப்பேற்க வைக்கத்தான்.. பொறுப்பேற்பு என்பது தலைவர் மட்டும் அல்ல, ஒட்டு மொத்த கிராம மக்களையும் தான் அதற்குத்தான் கிராமசபை.

இன்றைய நிலையில் விபரம் அறிந்த ஒருவர் பஞ்சாயத்துக்கு தலைவராக வந்தால் மத்திய மாநில அரசுகள் கொண்டுவரும் திட்டங்களை அப்படியே ஒரு பைசா சேதாரம் இல்லாமல் கொண்டு வந்து யாருக்கு உரியதோ அவர்களுக்குச் சேர்த்துவிடலாம். அடுத்து ஓர் அறிவியல்பூர்வ ஆய்வை கிராமங்களில் மேற்கொண்டு பஞ்சாயத்து வளர்ச்சிக்கூறுகளை பின்புலத்தில் வைத்து ஒவ்வொரு பஞ்சாயத்தும் எந்த நிலையில் உள்ளது என்பதை கிராமங்களில் புள்ளி விபரங்களை சேகரித்து ஆராய்ந்து கண்டுபிடித்து விடலாம். இந்த புள்ளி விபரங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று குடும்ப புள்ளி விபரங்கள். இரண்டு பஞ்சாயத்து புள்ளி விபரங்கள். குடும்பங்களின் பொருளாதார நிலை என்ன? கிராமத்தில் உள்ள வசதிகள் எவ்வளவு? இந்த இரண்டையும் கணக்கிட்டு கிராமத்திற்குத் தேவையான வசதிகளைக் கொண்டுவர முடியும். அதேபோல் குடும்பங்களின் பொருளாதார நிலை அறிந்து குடும்ப மேம்பாட்டுக்கான அரசிடம் இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்களைக் கொண்டு வந்து, பஞ்சாயத்துக்கான த்னித்துவமாக திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்த வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்தும் செலவிடும் தொகை இன்று இ-கிராம் சுவராஜ் போர்ட்டலில் உள்ளது. அதைப் பார்த்தால் எவ்வளவு நிதி ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் வந்துள்ளது என்பதை தெரிந்து கொள்ளலாம். இன்றைய சூழலில் நிதியை முறையாகப் பஞ்சாயத்துத் தலைவர்கள் கையாண்டால் அனைத்துக் குடும்பங்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து விடலாம். அதேபோல் அனைத்துக் குடும்பங்களுக்கும் வாழ்வாதாரத்தை பாதுகாத்து மேம்படுத்தி விடலாம்.

இதற்கு நிதி மேலாண்மை தெரிந்திருக்க வேண்டும் தலைவர்களுக்கு. இது பெரும்பாலான தலைவர்களுக்கு தெரிவதில்லை. நிதி மேலாண்மை தெரிந்தவர்கள் தங்களுக்கு வரவேண்டிய மத்திய அரசு மானியம், மாநில அரசு மானியம், பஞ்சாயத்து திட்டங்களுக்கான நிதி, மத்திய மாநில அரசுகளின் திட்டங்களின் நிதி, சொந்த நிதி, வெளிநாட்டில் வாழும் அந்த ஊர் மக்களின் நன்கொடை, தொழில்துறை தரும் பொறுப்பு நிதி, அந்த ஊரில் பல செயல்பாடுகளுக்கு பொறுப்பெடுக்கும் செல்வந்தர்களின் நிதி என அனைத்தையும் திரட்டினால் ஒவ்வொரு பஞ்சாயத்தையும் குட்டி ஜப்பானாக மாற்றிவிடலாம். அதற்குத் தேவை தலைவருக்கு மூன்று திறமைகள் அல்லது குணங்கள். ஒன்று விபரம் தெரிந்தவர். பஞ்சாயத்து நிர்வாகம் தெரிந்து இருக்க வேண்டும். இரண்டு அதில் குறிப்பாக நிதி மேலாண்மை தெரிந்தவராக இருக்க வேண்டும். அடுத்து அவர் மக்களை ஒருங்கிணைக்கும் திறன் பெற்றவராக இருக்க வேண்டும். அத்துடன் அவர் ஊழலற்ற நிர்வாகத்தை நடத்தக் கூடியவராக இருக்க வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இவர் சாதிக்கக்கூடியவர் என்ற நம்பிக்கையை மக்களிடம் உருவாக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

ஆனால் இன்றைக்கு மேற்கூறிய தகுதிகள் பெற்றவர்கள் எண்ணிக்கையில் ஒரு 5% கூட கிடைக்க மாட்டார்கள். 50% பெண்களுக்கு இட ஒதுக்கீடு பதவிகளில் செய்யப்பட்டு பதவிகளுக்கு வந்துவிட்டார்கள். அவர்கள் அனைவரும் தன் முனைப்புடன் பதவிகளுக்கு வரவில்லை. பதவிக்கு அவர்களை கொண்டு வந்து உட்கார வைத்து பின்புலத்தில் பலர் நின்று இயங்குகின்றனர்.

இதேபோல்தான் தமிழகத்தில் 19% பதவிகள் தலித்துக்களுக்கு ஒதுக்கப்பட்டு அவர்கள் பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களும் யாரோ சிலரால் கொண்டுவரப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். ஆக 70% பதவிகளில் இருப்போர் அந்தப் பதவிகளைக் கையாளத் தேவையான ஆற்றலும், முனைப்பும், திறனும், கல்வியும் பெற்றவர்களாக உருவாக்கப்படாததன் விளைவு, பெண் தலைவர்களால், தலித் தலைவர்களால் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து நன்மைகளும் கிடைக்கவில்லை என்பதைத் தான் ஆய்வு அறிக்கைகள் காட்டுகின்றன. தங்களுக்குக் கொடுத்த அதிகாரங்களைக் கையாளத் தெரிந்து பெண் தலைவர்களும், தலைவர்களும் செயல்பட்டிருந்தால் தமிழ்நாட்டில் பெண்கள் நேயப் பஞ்சாயத்துக்களையும், குழந்தைகள் நேயப் பஞ்சாயத்துக்களையும், சமூகநீதியை நிலைநாட்டிய பஞ்சாயத்துக்களையும் நாம் பார்த்திருக்க முடியும். இந்த இடஒதுக்கீட்டின் எதிர்பார்ப்பு மேற்கூறியவைகள்தான். அது நடைபெறவில்லை என்பதுதான் நாம் பார்க்கும் எதார்த்தம்.

எனவே இந்தச் சூழலை மாற்ற நாம் முனைய வேண்டும். அதற்கு இரண்டு மிக முக்கியமான செயல்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒன்று மக்களை பொறுப்புமிக்க குடிமக்களாக மாற்ற வேண்டும். அடுத்து பஞ்சாயத்து பதவிகளுக்கு வரவேண்டும் என்று எண்ணுவோருக்கு பஞ்சாயத்து நிர்வாக நிதி மேலாண்மை பற்றிய புரிதலை ஏற்படுத்த வேண்டும். அடுத்து கிராம மக்களை ஒருங்கிணைக்கும் பணியையும் ஒற்றுமையாக்கும் பணியையும் செய்வதற்காக ஆற்றல் தலைவராக வர எண்ணுபவர்களுக்கு உருவாக்கிட வேண்டும். ஆக ஒட்டு மொத்தமாக ஒரு மிகப் பெரிய மக்கள் தயாரிப்புப் பணி நடந்தாலன்றி எத்தனை கோடி பணம் வந்தாலும் கிராமங்கள் முன்னேறாது. ஒரு சிலர் மட்டுமே மேம்படுவர்.

●

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | க.முத்துச்சாமி

தமிழியை மீட்ட தகைசால் ராஜன்



முன்னுரை

பாண்டிச்சேரிப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் முனைவர் கா.ராஜன் அவர்களின் தொன்மைத் தமிழ் எழுத்தியல் (குறியீடுகளிலிருந்து தமிழ் - பிராமியை (தமிழி) நோக்கிய பயணம்) எனும் நூல் வெளிவந்துள்ளது. கொடுமணலில் நிகழ்த்திய அகழாய்வு முடிபுகளை மையப்படுத்தித் தவறான பழைய முன்முடிபுகளைத் தகர்த்து எறிந்து அரிய ஆராய்ச்சி முடிபுகளை ஆவணப்படுத்திய இது ஓர் ஆராய்ச்சி நூலாகும். ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற இந்நூல் அரியவாய்ப்பாகத் தமிழ் மொழிபெயர்ப்பில் கிடைக்கிறது.

சங்ககாலம் என்பதும், தமிழ்-பிராமிக்காலம் என்பதும் கி.மு.2ஆம் நூற்றாண்டு முதல் தொடங்குகிறது என்று இதுவரை தவறாக நம்பப்பட்டு வந்த கருதுகோளை அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தி அவற்றின் காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டிற்கு முன்பே தொடங்குகிறது என்று இந்நூலில் அவர் நிலைநிறுத்தியுள்ளார். தமிழ் வரலாற்றுக் காலத்தையும், தமிழ் - பிராமிக் காலத்தையும் முன்னெடுத்துச் சென்றது ஒருபுறமிருக்க, தமிழ்-பிராமி, பிராகிருத பிராமி ஆகிய இவற்றில் காலத்தால் முந்தியது எது? என்ற கேள்விக்கு விடைகாணும் முயற்சியில் குறியீடுகள் குறித்த ஆய்வைத் தொடர்ந்துள்ளார். அதன்வழி எதிர்காலத்தில் தமிழ்-பிராமியே முந்தியது என நிலைநிறுத்தும் வாய்ப்புக்கான வழிமுறைக் கூறுகளையும் முன்னெடுத்து மொழிந்துள்ளார். விடையை எதிர்காலக் குறியீடுகள் குறித்த ஆய்வுக்கே விட்டுவிடுகிறார். தமிழ்ப்பிராமி (தமிழி) வரிவடிவின் காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்பதில் எந்த ஐயமும் கிடையாது.

நூலின் அமைப்பு

தொன்மைத்தமிழ் எழுத்தியல் என்ற நூல் மொத்தத்தில் 540 பக்கங்களைக் கொண்டது. அதில் நிலப்படங்களின் பட்டியல் 10, ஒளிப்படங்களின் பட்டியல் 96, வரைபடங்களின் பட்டியல் 29, பின்னிணைப்புகள் 6, கருவிநூற்பட்டியல், சொல்லடைவு ஆகியன அடங்கியுள்ளன.

நூல் நுவல் பொருள் சுருக்கங்கள்

1. கொடுமணல் - ஓர் அறிமுகம்

கொடுமணம் என்று பதிற்றுப்பத்தில் இடம்பெற்ற ஊர், இன்றையக் கொடுமணலுக்குக் கிழக்கே 1.5 கி.மீ. தொலைவில் இருந்துள்ளது. இன்றையக் கொடுமணல் ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் நொய்யல் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. சங்ககாலச் சேரர்களின் இரண்டாம் தலைநகரான கரூர் - வஞ்சியையும், மேலைக் கடற்கரையில் பேரியாற்றின் (இன்றையப் பெரியாறு) கழிமுகத்திற்கு அருகில் அமைந்துள்ள புகழ்பெற்ற கேரள முசிறித்துறைமுகத்தையும், பாலக்காட்டுக் கணவாய் வழியாக இணைக்கும் பண்டைய வணிகப் பெருவழியில் இவ்வூர் அமைந்துள்ளது. கீழடி போன்று இவ்வூரின் வணிக வாய்ப்புக்கு இப்பெருவழியே காரணம் எனலாம்.

கொடுமணலில் பல்வேறு காலங்களில் தமிழ்நாட்டின் பல்வேறு நிறுவனங்களின் ஆய்வுத் துறைகளால் ஏழு பருவங்களிலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பெற்றன. வாழ்விடப் பகுதியிலும், ஈமக்காட்டுப் பகுதியிலும் நிகழ்த்தப்பெற்ற அகழாய்வுகளின் வழி 551 தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புப் பெற்ற மட்பாண்ட ஓடுகளும், 598 குறியீடுகள் கொண்ட மட்பாண்ட ஓடுகளும் கண்டறியப்பெற்றன. இவை பெருங்கடற்படைச் சின்னங்கள் சார்ந்தவை என்பதால் இரும்புக் காலத்தைச் சேர்ந்தது என்று பொதுவாகக் கருதப் பெற்றாலும், தொடர்ந்து வருவதால் இவை தொடக்க வரலாற்றுக் காலத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சேர்ந்தவை (சங்ககாலம்) என்றே கணிக்கப் பெறுகின்றன. எனவே இவை பொ.ஆ.மு. 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை அல்லது அதற்கு முந்தியவை.

2. குறியீடுகள் - ஓர் அறிமுகம்

தொல்லியலில் மட்பாண்டங்களில் பொருள் அறிய இயலாத கீறல்களைக் குறியீடுகள் என்று சுட்டுவது வழக்கம். குறியீடுகள் மட்பாண்டங்களைச் சுட்டபின் அவற்றின் மேற்பரப்பில் அதன் கழுத்து அல்லது தோள் எனக் கூறப்படும் பகுதியில் இடமிருந்து வலமாகக் கீறப்பெற்றவை.

சிந்துவெளி எழுத்துகள் மறைவிற்குப்பின்னும், தமிழ் - பிராமி எழுத்தகளின் தோற்றத்திற்கு முன்னும் உள்ள இடைப்பட்ட காலத்தில் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் இக்குறியீடுகள் நின்று நிலவியுள்ளன. இக்குறியீடுகளை ஆய்வதன்வழி சிந்துவெளி எழுத்தகளைப் பகுத்துப் படித்தறிய வழிபிறக்கும் என்பதும், இந்தியாவின் எழுத்துக்களின் தோற்றத்தை அறியமுடியும் என்பதும் கொண்டு தொல்லியல் அறிஞர்களிடையே குறியீடுகள் குறித்த ஆய்வில் ஆர்வம் மிகுந்துள்ளது. குறியீடுகளின் தோற்றத்திற்குத் தொல்பழங்காலப் பாறை ஓவியங்களே அடிகோலின என்பர். மேலும் தமிழ் - பிராமி எழுத்துகளுடன் இக்குறியீடுகள் இணைந்து அடுத்தடுத்த அடுக்குகளிலும் இணைந்து ஒரே அடுக்கிலும் கிடைத்துள்ளமை இவற்றிற்கிடையே உள்ள நெருக்கமான தொடர்பை வற்புறுத்துகின்றன.

3. கொடுமணல் குறியீடுகள்

தமிழ்நாட்டில் இதுவரை நிகழ்ந்த அகழாய்வுகளில் கொடுமணலில் நிகழ்த்திய அகழாய்விலதான் மிகுதியான பானை ஓட்டுக் குறியீடுகள் கண்டறியப்பெற்றன. ஆவணப்படுத்தப்பெற்ற 1456 குறியீடுகளில் 596 குறியீடுகள் முழுமையானவைகளாக அடையாளம் காணப்பெற்றுள்ளன. அவற்றுள் 24 குறியீடகள் அடிப்படைக் குறியீடுகளாகவும் கண்டறியப்பெற்றுள்ளன. அடிப்படைக் குறியீடுகளின் மாற்றுவடிவங்களாக 216 குறியீடுகள் கண்டறியப்பெற்றுள்ளன. அவை கிட்டத்தட்ட 96.3% குறியீடுகள்.

4. கொடுமணல் குறியீடுகள் குறித்த செய்திகள்

தமிழ் - பிராமி 'ம' என்ற எழுத்து வடிவமைத்தைப் போன்ற குறியீடு 37 மாற்று வடிவங்களைக் கொண்டுள்ளது.

ஆங்கில எழுத்து 'U' வடிவிலான குறியீடு தமிழ்-பிராமி எழுத்து பொறிக்கப்பெற்ற பானையோடுகளின் இறுதியில் இடம் பெற்றுள்ளது.

முக்கோண வடிவக்குறியீடு தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பெற்ற பானையோடுகளின் எழுத்துக்களின் இறுதியில் காணப்பெறுகின்றது.

கொடுமணல் குறியீடான ஏணிவடிவக் குறியீடு பாறை ஓவியங்களிலும் காணப்படும் ஒரு குறியீடு. கேரளப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அஜித்குமார் இதனை இறப்பிற்குப் பிறகு ஆன்மா சொர்க்கத்தை நோக்கி மேலே செல்வதைக் குறிக்கும் ஒரு குறியீடாகக் கருதுகிறார்.

மிகுந்த அளவில் கிடைக்கும் குறியீடுகளில் மற்றொரு குறியீடு. இது படுக்கைநிலைக் கோட்டிலிருந்து தொங்கும் கோடுகள் 3, 4, 5 என்ற எண்ணிக்கையிலும் உள்ளன. பெருங்கற்படைச் சின்னங்களிலும் இக்குறியீடு செம்புப் பொருள்களுடன் கலந்து காணப்படுகின்றன. செம்புடன் சூது பவளம் காணப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குறியீட்டைக் கொண்ட சில பெருங்கற்படைச் சின்னங்களில் சூதுபவளமணிகள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு உள்ளமை குறியீடுகளுக்கும் ஈமச்சடங்குகளுக்கும் இடையே காணப்படும் ஒரு வேறுபாட்டு நிலையை நமக்கு உணர்த்துகின்றன.

இக்குறியீடு கொங்கர்புளியங்குளம் தமிழ்-பிராமி குகைக்கல்வெட்டிலும்காணப்பெறுகிறது.

இக்குறியீடு ஆள்வோருடன் இணைத்துப் படைப் பார்க்கப்பெறுவதால் ஆய்வுக்குரிய முதன்மையான குறியீடாகும். கேரளாவில் எடக்கல் என்ற இடத்தில் உள்ள பாறைக் கீறல்களின் ஊடாகக் காணப்பெறும் கருமிபுதசேர் என்ற தமிழ்-பிராமிக் கல்வெட்டின் இறுதியில் இக்குறியீடு இடம்பெற்றுள்ளது. இக்கல்வெட்டு சேரஅரச மரபுடன் தொடர்புடையது. இலங்கையில் ஆனைக்கோட்டை ஈமக்குழியில் கண்டெடுக்கப்பெற்ற முத்திரையிலும் இக்குறியீடு பொறிக்கப்பெற்றுள்ளது.

இந்த நட்சத்திரக்குறியீடு பிற குறியீடுகளுடன் சேர்ந்து வரும்போது அக்குறியீடுகளின் இறுதியிலேயே இடம்பெறுகிறது.

சுழற்குறி எனப்படும் 'சொஸ்திகா' என்ற குறியீடு வலஞ்சுழியாகவும் இடஞ்சுழியாகவும் பல்வேறு மாறுபட்ட வடிவங்களில் காணப்பெறுகிறது.

எருதின் தலைபோன்ற இக்குறியீடு வெள்ளி முத்திரை நாணயங்களிலும் காணப்பெறுகிறது. இதனை நந்திபாதச் சின்னம் என அழைக்கின்றனர்.

வில் அம்புக்குறியீடு சேரமரபின் அரசு முத்திரைச் சின்னமாகும். சங்ககாலச் சேரர்கள் வெளியிட்ட நாணயங்களிலும் இக்குறியீடு காணப்பெறுகிறது. பல்வேறு மாறுபட்ட வடிவங்களில் வில் அம்புக் குறியீடுகள் கொடுமணலில் காணப்படுகின்றன.

பலவகையான மீன் குறியீடுகள் கொடுமணலில் பானை ஓடுகளில் கண்டறியப்பெற்றன. இச்சின்னம் அரப்பா காலம் முதல் பரவலாகக் காணப்பெறுகின்றது. பாண்டியர்களின் அரசமுத்திரைச் சின்னம் இது. சங்ககாலப் பாண்டிய அரசர்களின் பெயர் கொண்ட தமிழ் - பிராமி எழுத்துப் பொறிப்புப் பெற்ற பாண்டியர் நாணயங்களிலும் இக்குறியீடுகள் இடம்பெற்றுள்ளன. பாண்டிய அரசர்களின் வெள்ளி முத்திரை நாணயங்களிலும் இம்மீன் முத்திரைகள் இடம்பெற்றுள்ளன.

கொடுமணலில் கண்டெடுக்கப்பெற்ற பல குறியீடுகளுக்கு சரிநிகரான இணை ஒப்புமை சிந்துவெளி முத்திரைகளில்காணப்பெறுகின்றன. 17 சிந்துவெளி முத்திரைகள் கட்டுரை ஆசிரியரால் ஐராவதம் மகாதேவன் அவர்களின் நூலிலிருந்து கண்டறியப்பெற்றுள்ளன.

சங்ககாலம் என்பதும், தமிழ்–பிராமிக்காலம் என்பதும் கி.மு.2ஆம் நூற்றாண்டு முதல் தொடங்குகிறது என்று இதுவரை தவறாக நம்பப்பட்டு வந்த கருதுகோளை அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தி அவற்றின் காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டிற்கு முன்பே தொடங்குகிறது என்று இந்நூலில் அவர் நிலைநிறுத்தியுள்ளார்.

5. தமிழ் - பிராமி எழுத்துப் பொறிப்புகள்

தமிழ்நாட்டில் ஆவணப்படுத்தப்பெற்ற 795 பொறிப்புப் பானையோடுகளில் 710 பானையோடுகள் கொடுமணல் (550) அரிக்காமேடு (66) உறையூர் (20) அழகன் குளம் (73) என்ற நான்கு இடங்களில் மட்டுமே கிடைத்தவை. தமிழ்-பிராமி எழுத்துகள் பொறிக்கப்பெற்ற பானை ஓடுகள் இந்தியாவிற்கு வெளியே 13 இடங்களில் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டில் தமிழ்-பிராமிக் குகைக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப் பெற்று 60 ஆண்டுகளுக்குப் பிறகே தமிழ்ப் பொறிப்புப் பெற்ற நாணயங்கள், முத்திரைகள், மோதிரங்கள் ஆகியவை கிடைத்தமை தமிழ்-பிராமி குறித்த ஆய்விற்கு வலுச்சேர்ப்பதாக உள்ளது.

சேரஅரசன் கொல்லிப் பொறையன் பெயர் தாங்கிய தமிழ்-பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள், மாக்கோதை, பெருவழுதி ஆகியோரின் பெயர் பொறித்த தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புப் பெற்ற நாணயங்கள் ஆகியன தமிழ்-பிராமி குறித்த எழுத்தாய்வுக்குப் பெரிதும் உதவின. இருபதிற்குள் மேற்பட்ட அகழாய்வு இடங்களில் தமிழ்-பிராமி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிக்கப்பெற்ற பானையோடுகள் கிடைத்துள்ளன.

பொருந்தல் அகழாய்வில் பரல் உயர் பதுக்கையிலிருந்து கண்டெடுக்கப்பெற்ற நெல்மணிகளும் அதன் காலவரையறையும் அதனுடன் வைக்கப்பெற்றிருந்த வய்ர என்ற தமிழ் - பிராமி எழுத்து பொறிக்கப்பெற்ற பிரிமணையும் தமிழ்-பிராமி எழுத்துகளை அறிவியல் முறைப்படி காலவரையறை செய்ய உதவின. பொருந்தலில் கிடைத்த நெல்மணிகளைக் கதிரலைக்கரிமப் பகுப்பாய்வின் மூலம் தமிழ்-பிராமியின் காலம் பொ.ஆ.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

தமிழ்-பிராமி எழுத்துப் பொறிக்கப்பெற்ற உடைந்த பானையோடு ஒன்று 'ன்' என்ற ஓரெழுத்தையே கொண்டுள்ளதுகொண்டு இது ஓர் ஆண் பெயரைச் சுட்டுகிறது என எவரும் பொருந்த ஊகிக்கலாம். கூல அந்தைய சம்ஜன் அகல் என்ற பொறிப்புப் பெற்ற பானையோடே மிகுதியான 13 எழுத்துக்களைக் கொண்டதாகும். கிடைத்துள்ள பானையோடுகளில் 49% ஆட்பெயர்களாக அதுவும் ஆண் பெயர்களாகவே உள்ளன. 1% பானையோடுகள் ஆட்பெயரோடு ஒரு சிறப்புப் பெயரை முன்னடையாகவோ இறுதிச் சொல்லாகவோ கொண்டுள்ளன. மேலும் மேற்கொள்ளப்பெறும் ஆய்வுகள் மூலமே தமிழ் - பிராமி பற்றிய தெளிவான முடிவுக்கு வர இயலும் என்கிறார் பேராசிரியர் முனைவர் கா.ராஜன் அவர்கள். ஆனால் தமிழ் - பிராமி அசோகருக்கு முற்பட்டது என்பதையும் பொ.ஆ.மு. 6ஆம் நூற்றாண்டிற்கு முந்தியது என்பதையும் தெள்ளத்தெளிவாகக் கூறமுடியும் என்கிறார் முனைவர் கா.ராஜன் அவர்கள்.

6. மட்பாண்டங்களில் காணும் தொல்வரிவடிவங்கள்

கொடுமணல் மட்பாண்டப் பொறிப்புகள் தமிழ்ப் பிராமி, பிராகிருதப் பிராமி ஆகிய எழுத்துகளைக் கொண்டுள்ளன. குகைக் கல்வெட்டுக்கள் முழுவதும் தமிழ் அல்லாத ஸ (S), த4 (dh4) என்ற இரண்டே பிராகிருத எழுத்துகள் மட்டும் இடம்பெற்றுள்ளன. மாறாக பானைப் பொறிப்புகளில் க2 (kh) க3 (g) ச4 (jh) ட3 (d4) த3 (d3) ப3 (b) ப4 (bh) ச0 (S) ஆகிய பதினோரு பிராகிருத எழுத்துக்கள் கொடுமணலில் பானை ஓடுகளில் கிடைத்துள்ளன.

உயிர் எழுத்துகளில் ஆ, ஈ, ஊ, ஏ என்ற நான்கு எழுத்துகளும் சொல்லின் தொடக்கத்தில் வருகின்றன. ஔ நீங்கிய உயிர்எழுத்துகள் அனைத்தும் உயிர்மெய் எழுத்துகளோடு இணைந்து சொற்களின் இடையில் வருகின்றன. ஐ, ஔ ஆகிய இரண்டு உயிர் எழுத்துக்களும் இதுவரை கிடைக்கவில்லை. எனவே அப்போது அவை பயன்பாட்டில் இல்லை என்றே கருதவேண்டியுள்ளது.

7. வரிவடிவவியல்

1. கொடுமணலில் கிடைத்த மட்பாண்டப் பொறிப்புகளில் அ, இ, உ, எ, ஒ என்ற உயிர்க்குறில், ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்ற உயிர்நெடில் என்ற பத்து உயிரெழுத்துகளையும் குறிக்க ஐந்து உயிர்க்குறில் வடிவங்களே பயன்படுத்தப்பெற்றுள்ளன. சான்றுக்கு ஆதன் என்பது மட்பாண்டத்தில் அதன் என்றே பொறிக்கப் பெற்றிருக்கும். இடத்திற்கேற்ப ஆட்பெயரே இடம்பெற்றுள்ளது என்பதற்கு ஒப்ப அதன் என்பதை ஆதன் என்றே படிக்க வேண்டும். இவை கி.மு. 1ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட நிலை.

2. இ/ஈ, செங்குத்தான கோடுஒன்றின் மையத்தில் இருபுறமும் புள்ளியிட்டு எ, ஏ முக்கோண வடிவத்திலும் தமிழ்-பிராமி எழுத்துக்கள் கொடுமணல் மட்பாண்டத்தில் இடம்பெற்றுள்ளன. இவை அசோகர் பிராமி எழுத்துகளிலிருந்து வேறுபட்டவை.

3. 'ம' ஆங்கில எழுத்தான U வடிவின் நடுவில் புள்ளி இடப்பட்ட வடிவில் உள்ளது. அசோகர் பிராமியில் 'ம' ஒரு வட்டத்தின்மீது பிறையொன்று வரையப்பெற்றது போன்ற வேறுபட்ட வடிவத்தில் உள்ளது. தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புப் பெற்ற மட்பாண்டம் அனைத்திலும் அசோகர் பிராமி 'ம' வடிவம் பயன்படத்தப் பெறவில்லை.

4. ர ரா 'ர' வடிவம் செங்குத்தான கோடு, 'ரா' வடிவம் பாம்பு போன்ற வளைந்த செங்குத்தான கோடு என்ற வடிவங்களில் காணப்படுகின்றன. அசோகர் பிராமியில் பாம்பு போன்ற வளைந்த வகையே காணப்பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



5. அடிப்படை வரிவடிவத்தோடு புள்ளியை இணைக்காமல் இடத்திற்கேற்பப் படிக்கும் புள்ளியில்லா வரிவடிவே கொடுமணல் மட்பாண்டத்தில் இடம்பெற்றுள்ளது.

6. உயிர்க்குறியான 'அ' வரிவடிவம் குறிலையும் நெடிலையும் குறிக்கப் பயன்பட்டது. பிற்கால வழக்கான 'அ' வரிவடிவத்தின் உச்சியில் வலப்புறமாகப் படுக்கை நேர்கோடு ஒன்று இடப்பட்டிருப்பதற்கான சான்று கொடுமணலில் கிடைக்கவில்லை.

7. சொற்களின் இறுதியில் பொதுவாகத் தோன்றும் மூக்கொலி 'ன்' (சில இடங்களில் ந்) என்ற வரிவடிவம் 'அன்' என்ற விகுதியுடன் முடியும் சொல்லின் இறுதி எழுத்திற்கு முந்திய எழுத்தோடு இணைக்கப்பட்டு அளவு குறைந்தும் இடம்பெற்றுள்ளது.

சான்று: ஆதன் என்ற இப்பொறிப்பில் 'ன்' 'த்'வுடன் இணைக்கப்பட்டுள்ளது. காண்க.

மேற்குறித்த பண்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயும்போது தமிழ்-பிராமி அசோகர் பிராமியிலிருந்து தோன்றியது அன்று என்பதும், அசோகர் பிராமிக்குத் தமிழ்-பிராமி முற்பட்டது என்பதும் தெளிவாகும். அசோகர் பிராமிக்கு முன்பே தமிழ் பேசும் மக்கள் பிராகிருதம் பேசும் மக்களுடன் பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதைத் தமிழ்நாட்டு அகழ்வாய்வில் கிடைத்த மட்பாண்டங்கள் அறிவிக்கின்றன.

தமிழ்-பிராமி, பிராகிருத பிராமி ஆகிய இரண்டில் முற்காலத் தோற்றத்தைக் கொண்டே எது முந்தியது என்று வரையறுக்க முடியும் என்று பேராசிரியர் முனைவர் கா.ராஜன் அவர்கள் கருதுகிறார். மேலும் அசோகருக்கு முன்பே வடஇந்தியாவில் பிராகிருத பிராமி வழக்கில் இருந்ததா என்பதை எதிர்காலக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையிலேயே இறுதி செய்யமுடியும் என்று கோயில் தேரை, கொண்டுவந்து நிலைநிறுத்துவதைப் போல தமிழி ஆய்வை இந்த இடத்தில் கொண்டுவந்து நிலைநிறத்தியுள்ளார் பேராசிரியர் முனைவர் கா.ராஜன் அவர்கள்.

8. தமிழ்-பிராமியின் காலம்

இந்தியாவின் காலத்தால் முந்திய வரிவடிவங்கள் சிந்துவெளி வரிவடிவங்கள், செம்பு இரும்புக்காலக் குறியீடுகள், பிராமி எழுத்துக்கள் என்ற மூன்றாகும். சிந்துவெளி வரிவடிவம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் இன்றும் படிக்கப் பெறவில்லை. செம்பு இரும்புக்காலக் குறியீடுகள் முறைப்படி முழுவதுமாக ஆவணப்படுத்தப் பெறாமலும், கண்டறியப்படாமலும் ஆய்வாளர்களின் புரிதலுக்கு அகப்படாமலும் உள்ளன. பிராமி என்றழைக்கப்படும் எழுத்து வடிவமே தொடக்க காலத்தில் தமிழ், பிராகிருதம் என்ற இருமொழிகளில் இடம்பெற்றுள்ளன. எனவே பிராமியின் தோற்றம், அதன் காலம் குறித்து ஆய்வாளர்களுக்கிடையே பெரிய எதிர்பார்ப்புக் காணப்படுகிறது.

புள்ளிமான் கோம்பை என்ற இடத்தில் கிடைத்த, சங்க காலத்தைச் சேர்ந்த நடுகற்கள் மாங்குளம் கல்வெட்டில் குறிக்கப்பெறும் பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்திற்கு முந்தியன என்பது ஆய்வறிஞர்கள் கருத்தாகும். இவ்வாறே புள்ளிமான் கோம்பைக்கு 5 கல் தொலைவில் உள்ள தாதப்பட்டியில் கிடைத்த ஒரு நடுகல் உட்பட நான்கு நடுகற்களும் சமயச்சார்பும் பிராகிருத மொழிக் கலப்பும் இல்லாதவை. ஆதலின் காலத்தால் முந்தியவையாகக் கணக்கிடப்பட்டது. ஆயின் இக்காலக் கணிப்பு அறிவியல் அடிப்படையில் அமையாமையால் இவற்றின் காலக் கணிப்பை அறிஞர்கள் ஏற்கத் தயங்கினர். எனவே கொடுமணல் பொருந்தல் ஆய்வுகள் அறிவியல் அடிப்படையில் கதிரலைக் கரிமப் பகுப்பாய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்து தமிழ்---பிராமி பானைஓடுகளின் காலம் கி.மு.5ஆம் நூற்றாண்டாகக் கணக்கிடப்பட்டது. இச்சான்றின் அடிப்படையில் வரலாற்றுத் தொடக்காலம் கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கு முந்தியது என வரையறுக்கப்பெற, தமிழ்-பிராமியின் காலம் கி.மு.6ஆம் நூற்றாண்டு என முடிவு கட்டப்பெற்றது.

9. பானைப்பொறிப்புகளில் காணும் செய்திகள்

பானை ஓடுகள் பெரும்பாலானவை ஒன்று அல்லது இரண்டு எழுத்தக்களைக் கொண்டனவாகவே உள்ளன. கூ(ல) அந்தைய சம்பன் அவை என்பது கொடுமணலில் கிடைத்த மிக நீண்ட 13 எழுத்துக்களைக் கொண்ட பானை ஓடாகும். ஆண்கள் பெயர்கள் பானை ஓடுகளில் இடம்பெற்றுள்ளன. ஒருசில ஓடுகளில் பானையுடன் தொடர்புடைய பாண்டப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. வாழ்விடப்பகுதியில் தமிழ்ப் பிராகிருதக் கலப்பு பொ.ஆ-மு. 6ஆம் நூற்றாண்டிற்கு வெகுமுன்னரே தொடங்கியிருக்க வேண்டும்.

தொல்காப்பியர் வடசொற்கள் என்று குறிப்பது பிராகிருதத்தையே தவிர சமற்கிருதத்தை அன்று. ஏனெனில் தொல்காப்பியர் காலத்தில் பிராகிருதம் வழங்கியதற்கான மட்பாண்டச் சான்றுகள் உள்ளது. தவிர, சமற்கிருதம் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. வேதமொழி வேறு, சமற்கிருதம் வேறு. எனவே முனைவர் கா.ராஜன் அவர்கள் "தொல்காப்பியம் வடசொற்களை (பிராகிருதம்) தமிழில் பயன்படுத்தும் பொழுது பிராகிருத எழுத்துகளை நீக்கித் தமிழ் எழுத்தகளை இட்டு எழுதவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது இங்கு கருதத்தக்கது" என்று கூறியிருப்பதே வரலாற்று நோக்கில் பொருந்தும் போற்றத்தக்க சிறந்த கண்டுபிடிப்பும் உண்மையும் ஆகும். இதற்கு பேராசிரியர் முனைவர் கா.ராஜன் அவர்களுக்குத் தமிழ்நாடு உரிய மதிப்பை வழங்கவேண்டும். தமிழியை ஆய்வுலகில் தக்க சான்றுகளைக் கொண்டு நிலைநாட்டியதற்காகவும், குறியீடுகள் குறித்த ஆய்வைச் சிறப்பு நிலைக்கு உயர்த்தியதற்காகவும் பேராசிரியர் முனைவர் கா.ராஜன் அவர்களுக்குத் தமிழ்நாட்டரசு தகைசால் தமிழர் விருதை அவருக்கு வழங்க வேண்டும்.

முடிவுரை

தமிழி என்ற தமிழ்ப் பிராமியின் தோற்றம் குறித்து ஒரு முடிபுக்கு வராமல் பேராசிரியர் கா.ராஜன் அவர்கள் தமிழ்-பிராமி, பிராகிருத பிராமி என்ற இரண்டின் பானை ஓடுகள் ஒரே மண்ணடுக்கில் கிடைப்பதால் அவை சமகாலமான கி.மு. 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருப்பதால் எது முந்தியது என்று தாம் ஒரு முடிவுக்கு வராநிலையில் இருப்பதாகக் கூறுகிறார்.

வரலாற்று உண்மைகளை ஏறிட்டுப் பார்த்தால் தமிழ்-பிராமியே பிராகிருத-பிராமிக்கு முந்தியது என்பதை உய்த்தறிய முடியும்.

1.சிந்துவெளி நாகரிகக் காலம் கி.மு.3500 - கி.மு.1500. ஆரியர் வருகை கி.மு.1500. தமிழ்மொழி சிந்துவெளி போல திராவிட நாகரிகத்தைச் சார்ந்தது. பிராகிருத மொழியோ இந்தோ - ஆரிய மொழி (The medieval or Middle Indo-Aryan period is represented in literature by pali and prakrits) Introduction to Parkrit by Alfred c. Woolner M.A. (oxen) C.I.E., F.A.S.E. Principal of the Oriental College Lahore, Published by University of the Punjab, Lahore, Second Edition 1928, p.20.

எனவே சிந்துவெளி நாகரிகமே முந்தியது. எனவே தமிழ் - பிராமியே பிராகிருத பிராமிக்கு முந்தியது. எனவே தமிழ் - பிராமியில் தான் வரிவடிம் முந்தித் தோன்றியிருக்க வாய்ப்புள்ளது.

சிந்துவெளி முத்திரைகளுக்கும் தமிழி எழுத்துக்களுக்கும் குறியீடுகளுக்கும் இடையே நெருங்கிய உறவுள்ளது என்பதை சான்றுகளால் அறியப்படுகிறது. பூர்ணச் சந்திர ஜீவா சிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் முந்து தமிழ் என்ற தம் நூலில் சிந்துவெளி முத்திரைகளோடு தமிழி வரிவடிவங்களுக்கும் உள்ள நெருக்கத்தை ஆராய்ந்துள்ளார். சிந்து முத்திரைகள் 16 மெய்யெழுத்து வடிவங்களாகவும் 6 உயிரெழுத்து வடிவங்களாகவும் இன்றையத் தமிழ் எழுத்துக்களோடு இணைத்துப் படித்துக் காட்டியுள்ளார். இவ்வாறு பிராகிருதத்திற்கும் சிந்துவெளி எழுத்திற்கும் வரலாற்று முறையிலான தொடர்பு ஏதுமில்லை. எனவே தமிழிலே பிராகிருதப் பிராமிக்கு முந்தியது என ஊகிக்கலாம்.

தமிழ் மொழியின் தோற்றக் களம் குமரிக் கண்டம் என்பது மேலை அறிஞர்களாலும் பாவாணர் போன்ற உள்நாட்டு அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடு. அக்கோட்பாட்டை ஏற்றுக் கொண்டால் தமிழே முதற்றாய்மொழி என்பது உறுதிப்படும். உறுதிப்படவே தமிழிலே இந்தியாவின் முதல் வரிவடிவம் என ஒப்புக்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

கால்டுவெல் தம் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலில் கூறியுள்ள கருத்துக்கள் தமிழின் தொன்மையையும் முதன்மையையும் நிலைநாட்ட வல்லவை. "திராவிட மொழிக் குடும்ப மொழிகள், இந்தோ--ஐரோப்பிய மொழிக் குடும்பம், உரால் அல்தாமக் மொழிக்குடும்பம் ஆகிய இரண்டு மொழிக் குடும்பங்களுக்கும் இடையே உள்ள உறவை விளக்குவனவாக உள்ளன. அது மட்டுமா? மாந்தன் முதன்மொழி தோன்றிய பின்னர் அம்முதன் மொழியிலிருந்து இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பமும், உரால் - அல்தாய்க் மொழிக் குடும்பமும் பிரிவதற்கு முன்னர் இருந்த காலத்திய நிலைகளை இன்றும் காட்டுவனவாக உள்ளன எனத் தோன்றுகிறது" எனத் தமிழின் தொன்மையை கால்டுவெல் வற்புறுத்துகிறார். மேலும் அவர் "திராவிட மொழிகளில் உள்ள சில சொற்களும் வேர்களும் மாந்தன் முதன் மொழியில் இருந்திருக்கக் கூடிய வடிவங்களிலேயே இன்றும் உள்ளனவாகக் கருத இடமுண்டு" என்கிறார்.

"திராவிடத் தோற்றமானது மொழி உருவாகியதும் தற்கால மாந்த இனம், உலகெங்கும் பரவத் தொடங்கியதுமான ஐம்பதாயிரம் ஆண்டுத் தொன்மை உடையதாகலாம்" காலின் மாசிலி (2001) என்ற கூற்று தமிழின் தொன்மையை உறுதிப்படுத்துவதன் வழி தமிழியின் தொன்மையையும் நிலைநாட்டும்.

இங்கிலாந்து மொழியியல் அறிஞர் ஸ்டெபான் ஹில்யா லெவிட் தமது 2007ஆம் ஆண்டுக் கட்டுரையில் "ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் தென்னிந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்தது ஏறத்தாழ 40,000 ஆண்டுகட்கு முன்னர் இருக்கலாம் என்கின்றனர் ஆஸ்திரேலிய அறிஞர்கள். இதிலிருந்து குறைந்தது 40,000 ஆண்டுகட்கு முன்னரே திராவிட இந்தியாவில் இருந்தனர் என்பது தெளிவாகின்றது" என்கின்றார். (உலக அறிஞர்கள் பார்வையில் தமிழ் - பி இராமநாதன் தமிழ்மண் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2009, ப.37).

எனவே திராவிட மொழியான தமிழினைக் காட்டிலும் இந்தோ - ஆரிய மொழியான பிராகிருதம் பிந்தித் தோன்றியது வரலாற்று முறையில் நிலைநாட்டப் பெற்றதால் தமிழியே முதலில் தோன்றியிருக்கும் என ஊகிக்கலாம். உலகத்திற்கு எண்களை வழங்கிய நாமே எழுத்துகளையும் வழங்கியுள்ளோம் என்ற உண்மை எதிர்கால ஆய்வுகளின் வழிநிலை நிறுத்தப்பெறும். இந்நூலில் இத்தகைய ஊகங்களை வைத்தத் தமிழி முந்தித் தோன்றியிருக்க வாய்ப்புள்ளது என்று நூலை முடித்திருந்தால் பேராசிரியர் முனைவர் கா.ராஜனின் நூல் இன்னும் மிகமிகமிகமிகச் சிறப்பானதாக இருந்திருக்கும். எனினும் தமிழ்-பிராமி என்பதை இனிமேல் எப்போதும் தமிழி என்று அழைப்பதன் மூலம் பேராசிரியர் முனைவர் கா.ராஜன் அவர்களுக்கு நம் நன்றியைத் தெரிவிப்போம்.

நூல்: தொன்மைத் தமிழ் எழுத்தியல் (குறியீடுகளிலிருந்து தமிழ் -பிராமியை (தமிழி) நோக்கிய பயணம்)
ஆசிரியர்: கா. ராஜன், பேராசிரியர், வரலாற்றுத்துறை, பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி
நூல் பக்கங்கள்: 540; விலை: ரூ.1500
நூல் கிடைக்குமிடம்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி.வளாகம், தரமணி, சென்னை - 600 113. கைபேசி: 9789555941

●

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலதா புனித தாதுப்பல் கோவாவில் அழிக்கப்பட்டுவிட்டதா?

புத்தரின் அடையாளச் சின்னங்களென இலங்கையில் குறிக்கப்பட்ட அத்தனையும் இலங்கையின் தன்மையை வடிவமைப்பதில் பெரும் பங்கு வகித்துள்ளன.

பௌதீக நினைவுச்சின்னங்கள், பயன்பாட்டு நினைவுச்சின்னங்கள், அழகியல் நினைவுச்சின்னங்கள் என வகுக்க முடியும். புத்தரின் அஸ்தியில் இருந்து எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் பகுதிகள், புத்தர் பயன்படுத்திய பொருட்கள், புத்தர் சிலைகள், அரச மரங்கள், பௌத்த தூபிகள், புத்தரின் அட்சய பாத்திரம், அவரின் தர்ம நூல்கள் என அடுக்கிக் கொண்டு போகலாம். இவற்றில் தலையாய அடையாளமாக கருதப்படுவது தான். கண்டி தலதா மாளிகையில் காணப்படும் புனித தாதுப்பல்.

1561 ஏப்ரல் மாதம் போர்த்துகேயரால் கோவாவில் வைத்து அப்புனிதப்பல் அழிக்கப்பட்டுவிட்டதாக ஒரு பிரபல கதையுண்டு. அதைப் பற்றிய ஆய்வுகளின் மீதான ஒரு பார்வையே இது.

இதைப் பற்றி பல ஆங்கில ஆய்வுகள் உள்ளன. இறுதியில் *The Buddha's Tooth: Western Tales of a Sri Lankan Relic* என்கிற நூலில் ஜோன் ஸ்ட்ரோங் அந்த சம்பவத்தை மறுக்கிறார்.

போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் கதையின் தொடக்கம் எது என்று ஆராய்ந்து கொண்டு போனால் *Diogo Do Couto* 17-18 ஆம் நூற்றாண்டுகளில் இல் போர்த்துக்கேய மொழியில் எழுதிய *"Da Asia de Jo□o de Barros e de Diogo de Couto"* என்கிற நூல் தொகுதிகள் வரை பின் செல்கின்றது.

அவரோ பல நூற்றுக் கணக்கான பக்கங்களைக் கொண்ட 12 தொகுதிகளாக போர்த்துகேய நூல்களை எழுதி வைத்திருக்கிறார். சில தொகுதிகள் பாகங்கள் 1,2,3, என நீள்கின்றன. அத்தொகுதிகள் அனைத்தையும் தேடி எடுத்துக் கொண்டேன். இதில் எந்த நூலில் இதைப் பற்றி எழுதி இருக்கக் கூடும் என்பதை அறிவதில் கடும் சிக்கலை எதிர்கொள்ள நேரிட்டது. இதை ஆதாரம் காட்டி எழுதிய பல ஆங்கில ஆய்வுகளும் கூட எத்தனையாவது தொகுதியில் என்பதை கூறவுமில்லை. அந்த செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் என்னிடம் இதைப்பற்றி உள்ள ஆய்வு நூல்கள், ஆவணங்கள் அனைத்தையும் கொடுத்து பதில் கேட்டேன். அங்கே இவற்றை அறிய முற்பட்டபோது ஏழாவது தொகுதியில் இத்தகவல்கள் இருபதாகக் கூறியது. ஆனால் போர்த்துகேய மொழியில் தான் *Sexta, Setima, Ottava, Nona* என்கிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையில் இத்தொகுதியின் இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதை மொழிபெயர்த்து அது *Setima* (ஏழாவது தொகுதி) என்பதை அறிந்து கொண்டு எத்தனையாவது பக்கம் என்பதை கேட்டறிந்தேன். 316-318 பக்கங்களில் உள்ளதாகவும் வேறு சில இடங்களிலும் இதைப் பற்றிய விபரங்கள் உள்ளதையும் அப்பதில்களில் இருந்து அறிந்துகொண்டேன்.

இறுதியில் அப்பக்கங்களை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து அதில் உள்ள எழுத்துக்களை தனியாக பிரித்து எடுத்து தோராயமாக மொழிபெயர்த்து அப்பகுதிகளை கண்டு பிடித்தேன்.

தியோகோ டோ கூட்டோ (1542 - 1616) ஒரு போர்த்துகேய வரலாற்றாசிரியர். 1559 இல் அவர் போர்த்துகேயரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்தியப் பகுதிக்கு சென்று ஒரு படை சிப்பாயாக பணியாற்றியிருக்கிறார்.

1561 ஆம் ஆண்டு இலங்கைத் தீவின் வடக்கு முனையில் உள்ள யாழ்ப்பாணத்தில் ஒரு மதஸ்தலத்தில் வைத்து புனித தாதுப்பல் நினைவுச்சின்னம் கைப்பற்றப்பட்டதாக கூட்டோ கூறுகிறார். யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய பின்னர் போர்த்துக்கேய வைஸ்ராய் டோம் கொன்ஸ்டன்டினோ டா பிராகன்சாவின் (*Don Constantino de Braganza*) படையெடுப்பின் போது இச்சம்பவம் நிகழ்ந்தது என்கிறார் அவர்.

போர்த்துக்கேயரால் அத்தாதுப்பல் கைப்பற்றப்பட்டது என்பதைப் பற்றி வெளிப்படையாகக் கூறிய முதல் மேற்கத்திய ஆதாரம் கூடோவின் நூலாகும். அவர் "பூர்வீகவாசிகளிடமிருந்து" அறிந்தகொண்டவற்றின் அடிப்படையில் புத்தரின் வாழ்க்கைக் கதையையும் விவரிக்கிறார். கூட்டோ தொகுத்துள்ள இலங்கை பற்றிய குறிப்பின்படி, புத்தர் இறப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கும் 'பெகு'வுக்கும் விஜயம் செய்ததாகவும் அவரின் இறப்புக்குப் பின்னர் அஸ்தியில் இருந்து ஒரு பல்லை எடுத்து இலங்கைக்கு அனுப்பப்பட்டதையும் விபரிக்கிறார்.

இந்த காலப் பகுதியில் கோட்டே மன்னர் தொன் ஜுவான் தர்மபாலவும் (1551-1581) 1567 ஆம் ஆண்டில் பர்மாவுக்கு அனுப்பிய தூதுக்குழுவிடம் புனிதப் பல்லை கொடுத்து அனுப்பியதாக சில பர்மிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதே காலப்பகுதியில் சபரகமுவவின் உள்ள விகாரையொன்றில் அது வைக்கப்பட்டிருந்ததை சூளவம்சம் தெளிவாகக் கூறுவதால், பர்மிய ஆதாரங்களில் உள்ள விளக்கத்தை நம்புவது கடினம் என்பது தெளிவாகிறது.

மேலும், இக்காலப்பகுதியில் முதலாம் இராஜசிங்கமன்னனினதும்போர்த்துக்கேயரதும் தாக்குதல்களின் காரணமாக வீதிய பண்டார புனிதப்பல்லுடன் யாழ்ப்பாணத்திற்குத் தப்பிச் சென்றதாகசிலநூல்களில்குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில் யாழ்ப்பாணத் தமிழ் மன்னன் வீதிய பண்டாரவுக்கு உதவ இணங்கியதாகவும், அதற்காக நல்லூர் கோவிலில் ஒரு விசேட வைபவத்தை நடத்தியதாகவும் இக்கதைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







குறிப்பிடுகின்றன. ஆனால் அங்கே நிகழ்ந்த சில எதிர்பாராத சம்பவங்களால் வீதிய பண்டார கொல்லப்பட்டுவிட்டதால் வீதிய பண்டாரவின் வசம் இருந்த புனிதப் பல்லும், பொக்கிசங்களும் யாழ்ப்பாண அரசர் வசம் சென்று விட்டதாக வரலாற்றாசிரியர் கொட்ரிங்டன் கூறுகிறார்.

கி.பி. 1560 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் மீது படையெடுத்த போது மன்னனின் அரண்மனைக்கு தீயிடப்பட்டதாகவும் போர்த்துக்கேயர் அங்கிருந்த வீதிய பண்டாரவின் உடைமைகளைக் கைப்பற்றியதாகவும் கூறப்படுகிறது.அதன்போதுகண்டெடுக்கப்பட்ட புத்தரின் புனிதப்பல் போர்ச்சுக்கேய படையினரால் காப்பாற்றப்பட்டு டொன் அகோஸ்டினோ நொரேக்ஞோவிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டது என்றும், போர்த்துக்கேய பாதிரிமார் அதைக் கோரிய போதும் அவர்களிடம் அது கொடுக்கப்படவில்லை என்றும் பின்னர் சிறைபிடிக்கப்பட்ட யாழ்ப்பாண மன்னருடன் சேர்த்து கோவாவுக்கு அனுப்பப்பட்டதாகவும் கொட்ரிங்டன் குறிப்பிடுகிறார்.

இந்தச் சம்பவம் பர்மா அரசனுக்குத் தெரிய வந்ததும் அவன் கோவாவுக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பி அப்புனிதப் பல்லை சுமார் 300,000-400,000 குரோசோடோவுக்கு கேட்டிருக்கிறார். அதை பர்மிய அரசனுக்குக் கொடுப்பதை கோவாவிலிருந்த அதிகாரிகளும் பாதிரிமாரும் கடுமையாக எதிர்த்ததால், டொன் அகோஸ்டினோ நொரேக்ஞோ இறுதியில் அப்பல்லை கோவாவின் பேராயரிடம் அதை ஒப்படைத்தார்.

கோவாவில், நினைவுச்சின்னத்தை என்ன செய்வது என்பது குறித்து பேராயருக்கும் பிற இறையியலாளர்களுக்கும் இடையில் ஆலோசனை நடத்தப்பட்டது என்றும், இறுதியில் அது ஒரு அந்நிய மத அடையாளம் என்றும் பிசாசின் நினைவுச் சின்னம் (*reliquia do demonio*) என்றும் அதை வைத்திருப்பது கடவுளை அவமதிப்பதாகும் என்றும் வாதிட்டனர். இறுதியில் அதை அழிக்க வேண்டும் என்றும் அவர்கள் முடிவு செய்தனர்.

டோம் கொன்ஸ்டான்டினோவின் செயல்களுக்கு ஆதரவாகவும், எதிராகவும் எதிர்வினைகள் இருந்ததாக கூட்டோ குறிப்பிடுகிறார். சிலர் விக்கிரகாராதனைக்கு எதிராக நின்றதற்காக அவரைப் பாராட்டினர், மற்றவர்கள் போர்த்துக்கேய சாம்ராஜ்யத்திற்கு சாதகமான செயலை ஆற்றியதாகவும், பௌத்தர்கள் வழிபடுவதற்கான மற்றொரு பொருளை உருவாக்கிக் கொள்வார்கள் என்றும் கருத்துக்கள் கூறப்பட்டன.

பேராயர் டொன் காஸ்பர் (*Don Gaspar*) தலைமையில் அன்றைய வைசிராய் கொன்ஸ்டண்டைன் கோவாவில் மண்டோவின் ஆற்றோரத்தில் பகிரங்கமாக அனைவரிடமும் காண்பித்து அப்பல்லை ஒரு உரலில் நசுக்கி, சிதைத்து பொடியானதை எடுத்து எரிந்துகொண்டிருந்த தீயில் போட்டு எரித்து, அதன் மீதான வணக்கத்தைத் முற்றாகத் தடுக்க அதன் சாம்பலை அங்கிருந்த ஆற்றில் எறிந்து அழித்ததாகவும் கூட்டோ கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொந்தளிப்பான காலகட்டத்தில் தலதாவை ஆக்கிரமித்த போர்த்துகீசியர்கள் அதை அழித்ததாகவும் குவைரோஸ் குறிப்பிடுகிறார்.

ரிபைரோவும் இதே போன்றே விபரித்திருப்பதாகத் தெரிகிறது. அவரின் கூற்றுப்படி யாழ்ப்பாணத்தில் அப்பல் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, பெகு (பர்மா) மன்னன் அதைப் பற்றி அறிந்து, அதை எப்படியாவது தன்னிடம் கொடுக்குமாறு கேட்டதாக அவர் கூறுகிறார். இதற்காக கோவாவுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பிய மன்னர் அப்புனிதப்பல்லை பெறுவதற்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலுத்துமாறு கோவாவுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பினார். அவர்கள் இதற்காக போர்த்துக்கல்லுடன் ஒரு நிரந்தர ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளவும், மலாக்காவில் உள்ள போர்த்துகேய கோட்டைகளுக்குத் தேவையான அனைத்தையும் வழங்கவும் ஒப்புக் கொண்டதைக் காண முடிகிறது. அப்போது கோவாவில் இருந்த போர்த்துக்கேய அதிகாரிகள் அப்பல்லை மன்னரிடம் ஒப்படைக்கவும் தயாராக இருந்தனர், ஆனால் பாதிரிமாரும், பேராயரும் அதை எதிர்த்ததுடன் கடவுளின் நற்பெயருக்கு அவமானம் என்று அறிவித்து அழிக்கப்பட்டு கடலில் வீசப்பட்டன என்று ரிபெய்ரோ குறிப்பிடுகிறார்.

எவ்வாறாயினும், தங்கத்தால் அலங்கரிக்கப்பட்ட ஒரு குரங்கின் பல் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் ரிபைய்ரோ குறிப்பாக குறிப்பிடுகிறார், எனவே இலங்கையர்கள் ஒரு குரங்குப் பல்லை வணங்குகிறார்கள் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். புனிதப் பல் என்று நம்பப்பட்ட வேறொன்றைத் தான் போர்த்துகேயர் அழித்தார்கள் என்று பிற்கால ஆய்வாளர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். பிரபல வரலாற்றாசிரியர் எமர்சன் டெனன்ட் இந்த

நினைவுச் சின்னங்களின் நம்பகத்தன்மை

புத்தரின் அஸ்தியில் இருந்து எடுக்கப்பட்ட பகுதிகளை தாங்கள் வைத்திருப்பதாகக் கூறும் நாடுகள் பல உள்ளன. இலங்கை, இந்தியா, ஆப்கானிஸ்தான், பர்மா, சிங்கப்பூர், சீனா, அமெரிக்கா, யப்பான், தென் கொரியா, மேலேசியா, கம்போடியா, தாய்வான், நேபாள், பங்களாதேஷ், திபெத், போன்ற நாடுகளில் இத்தகைய புத்தரின் நினைவுச் சின்னங்கள் இருப்பதை காணமுடியும்.

ஆனால் இவற்றில் பல நம்ப முடியாத அளவுக்கு புனைவுகளைக் கொண்டிருக்கிறதா என்கிற கேள்வி நமக்கு எழும். உதாரணத்திற்கு சீனாவில் இருபது இடங்களில் புத்தரின் உடற்பாகங்களினாலான நினைவுச் சின்னங்கள் உள்ளதாகக் குறிப்பிடுகிறார்கள்.

சீனாவில் பீஜிங் நகரில் உள்ளதாக இன்றும் நம்பப்படும் புத்தரின் தாதுப் பல்லின் அளவு மூன்று அங்குலமாகும்.

சிங்கப்பூரில் சைனா டவுனில் புத்த விகாரையும், அதனோடு இணைந்த நூதனசாலையொன்றும் உள்ளது அங்கிருப்பதாக சொல்லப்படும் புத்தரின் புனிதத் தாதுப் பல் விகாரையின் நான்காம் தளத்தில் 350 கிலோ தூபியின் உள்ளே வைக்கப்பட்டிருகிறது. இந்தப் பல் 7.5 சென்றிமீற்றர் நீளமானது என்றால் இதன் உண்மைத் தன்மையை நீங்களே புரிந்துகொள்ளலாம். சிங்கப்பூர் சுற்றுலாத்துறைக்கு இதனால் ஏராளமான வருமானம் வருகிறது. அந்த விகாரைக்கு மட்டும் வருடாந்தம் சராசரியாக 75 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் ஈட்டப்படுகிறது. சுமார் 3.6 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இதைப் பார்ப்பதற்காக மட்டும் வருகிறார்கள்.

உலகம் முழுவதும் உள்ளதாகச் சொல்லப்படும் இந்த எந்தவொரு நினைவுச் சின்னங்களும் புத்தரது தான் என்று தொல்லியல் ரீதியில் நிறுவப்பட்டதில்லை.

இலங்கையில் காணப்படுவதாகக் கூறப்படும் புத்தரின் எந்தவொரு அஸ்தி தொடர்பான நினைவுச் சின்னங்கள் பற்றிய கதைகள் இலங்கையில் உள்ள இலக்கியங்கள் மட்டுமே குறிப்பிடுகின்றனவே ஒழிய எந்தவொரு இந்திய நூல்களோ அல்லது புத்தர் பற்றி இலங்கைக்கு வெளியில் எழுதப்பட்ட பண்டைய திரிபீடகம் உள்ளிட்ட எந்தவொரு நூல்களிலும் குறிப்பிடப்பட்டதில்லை. அதே திரிபீடக நூல்கள் எதுவும் இலங்கைக்கு புத்தர் மூன்று முறை விஜயம் செய்ததையோ, ஐயாயிரம் வருடங்களுக்கு பௌத்தத்தை பாதுகாக்கும் பணி இலங்கைக்கு ஒப்படைக்கப்பட்டதையோ பற்றி கூட குறிப்பிட்டதில்லை என்பதையும் நினைவிற் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்பவத்தை சற்று வித்தியாசமான வேறு வழியில் விளக்குகிறார், போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் ஒரு குரங்குப் பல்லை கைப்பற்றியதாகவும், ஆனால் அது ஒரு தங்கப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்ததாகவும், அது ஹனுமனை வணங்குவதற்கான அடையாளமாக பொதுமக்களால் அது பேணப்பட்டு வந்ததாகவும் விளக்குகிறார். அதுவே கோவாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அழிக்கப்பட்டதாகவும் டெனன்ட் விவரிக்கிறார்.

பின்னர் "உண்மையான" தாதுப்பல் இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், பின்னர் கோட்டே மன்னர் யுவான் தர்மபால அதனை பெகுவின் (பர்மா) மன்னருக்கு விற்றதாகவும் கூட்டோ மேலும் விவரிக்கிறார். அதனைத் தொடர்ந்து, கண்டி மன்னன் விமலதர்மசூரிய இதற்கு முரணாக, உண்மையான புத்தரின் பல் நினைவுச்சின்னம் தன்னிடம் இருப்பதாக தெரிவித்திருக்கிறார். மனனர் தர்மபால போலிப்பல்லையே அவ்வாறு பர்மா மன்னருக்கு விற்றார் என்கிறார்.

கூட்டோவின் பதிவுகளில் உள்ள உண்மைத்தன்மையை பகுப்பாய்வு செய்வதற்கு, மேற்கத்திய மற்றும் சுதேச ஆதாரங்களில் இருந்தும் வரலாற்றுப் பின்னணியிலிருந்தும் அதைப் பரிசீலிக்க வேண்டும்.

"புத்தரின் பல்..." மேற்கத்திய ஆதாரங்கள் குறிப்பிடத்தக்க மாறுபட்ட கருத்துக்களை பதிவு செய்துள்ளன. சில டச்சு ஆதாரங்கள் *1554* ஆம் ஆண்டில் ஆதாமின் சிகரத்திற்கு அருகில் அப்பல் எடுக்கப்பட்டதாகக் கூறுகின்றன, இன்னும் சிலர் இது காலிக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறுகின்றன. கூட்டோவுக்கு முன்பு, மேற்கத்திய நூல்களில் பொதுவாக அவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருள் புத்தரின் பல்லே அல்ல என்றும் குரங்கின் பல் என்றும் குறிப்பிட்டன.

இதைப் பற்றிய முன்னைய பல ஆய்வுகளை மறு ஆய்வுக்கு உட்படுத்தி "புத்தரின் பல்: இலங்கை நினைவுச்சின்னம் பற்றிய மேற்கத்திய கதையாடல்கள்" *(The Buddha's Tooth: Western Tales of a Sri Lankan Relic)* என்கிற நூலை எழுதியவர் ஜோன் எஸ்.ஸ்ட்ரோங் *(John S. Strong)*. இதைப் அப்ற்றிய முதற் தகவல்களைக் கூறியவர் கூட்டோ என்கிறார் அவர்.

பிற்கால போர்த்துகீசிய வரலாற்றாசிரியர்கள், குவைறோ மற்றும் டி சூசா போன்றவர்கள், இது புத்தரின் பல் என்பதை அதிகளவில் உறுதிப்படுத்தினர். பிரான்சிஸ்கோ டி சூசா *(1710)* இது புத்தரின் பல் தான் என்று திட்டவட்டமாகக் கூறினார்.

இலங்கை மக்கள் "புத்தரின் பல்லை" போர்த்துக்கேயர்கள் கைப்பற்றியதையும், அதை அழித்ததையும் ஏற்க மறுத்தனர். யாழ்ப்பாணத்தில் அது கிடைத்திருக்க வாய்ப்பில்லை என்றும், அவர்கள் அழித்தது இராமாயணக் கதைகளில் வரும் குரங்குத் தெய்வமான ஹனுமானின் பல்லாக இருக்கக் கூடும் என்றும் கூறினர். இன்னும் சிலர் அது அதிர்ஷ்டவசமாக தப்பி இருக்கிறது என்றும். தாதா வம்சத்தின் பிரகாரம் அது அளிக்கப்பட முடியாதது என்றும் கூறினார். அதற்கேற்றாற் போல தொன் ஜூவான் தர்மபால, கொனப்பு பண்டார போன்றவர்கள் தம்மிடம் அப்பால் பத்திரமாக இருக்கிறது என்று தெரிவித்த கருத்துக்களும் மக்களின் நம்பிக்கைக்கு சாதகமாக அமைந்தன.

தாதாவம்ச காப்பியமானது இலங்கையின் புனித தாதுப்பல் நினைவுச்சின்னத்தின் வரலாற்றை விரிவாக விளக்குகிறது. தாதவம்சம் போன்ற 12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சுதேசிய பாலி மொழி வம்ச காப்பியங்கள் அதற்கு முந்தைய சிங்கள இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டது. கிபி 4 ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டில் புத்தரின் தகனத்திலிருந்து; அஸ்தி இலங்கைக்கு வரும் வரையிலான புனிதப்பல் வந்து சேர்ந்த வழித்தடத்தை விவரிக்கிறது. ஆனால் ஸ்ட்ரோங் அதில் உள்ள பல விவரங்களின் வரலாற்றுத் தன்மையையும் கேள்விக்குள்ளாக்குகிறார். பிற மத மற்றும் இலக்கியப் படைப்புகளிலிருந்து எடுத்தாண்டு புனையப்பட்ட பல கதைகளும் அதில் உள்ளதாக குறிப்பிடுகிறார் ஸ்ட்ரோங். 4 -15 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் இலங்கையில் புனிததாதுப்பல் ஏற்படுத்தியிருந்த அரசியல் முக்கியத்துவத்தை இக்காப்பியம் விளக்குகிறபோதும் 16 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை எப்படி சேர்ந்தது என்கிற விபரங்களை அது சொல்லவில்லை.

இலங்கையில் பௌத்த மத நினைவுச் சின்னங்கள் இலங்கையின் அரசியல் அதிகார மையங்கள் நிலை கொண்டிருந்த பிரதேசங்களோடு தொடர்புடையவை. மாறாக 16 ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்துடன் தொடர்புபடுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்கிறார் அன்ன பிலேக்பௌர்ன்.

கூட்டோவின் பதிவுகள் எச்சரிக்கையுடன் கையாளப்பட வேண்டும் என்கிறார் ஸ்ட்ரோங். அவர் அன்றைய கால பல விவரிப்புகளை வழங்கினாலும், கைப்பற்றப்பட்ட பல்லின் அமைவிடம் மற்றும் ஆரம்ப அடையாளம் போன்ற தகவல்களை வழங்கும் பொது மற்ற மேற்கத்திய ஆதாரங்களுடன் முரண்படுகிறது. சுதேச நூல்களோ அல்லது வேறு இலக்கியங்களோ இந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் அத்தகைய ஒரு நினைவுச்சின்னம் இருந்ததை உறுதிப்படுத்தியதில்லை.

கண்டி ராஜ்ஜிய காலத்தில் எழுதப்பட்ட "சிறு ராஜாவலிய", "சிறு பூஜாவலிய" போனர் நூல்களில் இத்தாதுப்பல் எங்கெல்லாம் பாதுகாக்கப்பட்டு இறுதியில் கண்டி தலதா மாளிகையில் நிலைகொண்டது என்பது பற்றிய விபரங்களைத் தருகிறது.1693 இல் எழுதப்பட்ட "தலதா புவத்" என்கிற காவிய நூலிலும் இதைப் பற்றிய விபரங்களை பதிவு செய்திருக்கிறது.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

கவிதை | நலங்கிள்ளி

பிடித்த மீன்

மின்னும்
வெள்ளி நிறச்
செதில்
கவரும் கண்
தூரிகை வால்
விரல் பிடியில்
அடங்கும் வாய்
துள்ளல் பிசகாமல்
சுவாசம்
நீரிலே நடந்தேறி
ஒளிப்புகா பேராழம்
செல்லும்
பெருமிதமாய்
பறைசாற்றி
பிரகாசமாய்
உளம் கவரும்
அம்மீன்
ஆச்சி மீன் குழம்பு மசாலாவில்
வெந்து கொண்டிருப்பது
பரிதாபத்திற்குரியவொன்றாக
இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | அ.கா.பெருமாள்

உழவுக் கம்புப் போராட்டம்

சென்ற இதழ் தொடர்ச்சி

அரசர் சிக்கலில் மாட்டிக்கொண்டார். இந்த நேரத்தில் அதிகாரிகள் கொள்ளையடித்த வரிப்பணம் அரசு கஜனாவிற்குப் போகவில்லை. இத்தனை பிரச்சனைகளிலும் மாட்டிக்கொண்டவர்கள் விவசாயிகளே. வரிச்சுமை, விவசாயம் செய்யமுடியாத நிலை. வித்துக்கள் கூட இல்லாத நிலை. இப்படியான சூழலில் தான் போராட்டத்தை அறிவித்தனர்.

நாஞ்சில் நாட்டு விவசாயிகளின் போராட்டம் குறித்துக் கிடைத்த நாலாவது ஓலை கடுக்கரை (தோவாளை வட்டம்) என்ற ஊரில் திருவாசலில் விவசாயிகள் கூடியிருந்து எழுதிய ஒப்புரவு மொழி ஓலை. இது மலையாள ஆண்டு 898 கார்த்திகை மாதம் 16ஆம் தேதி (1723) எழுதப்பட்டது. இந்த ஓலையில் மதுரை நாயக்கரின் படையெடுப்புப் பற்றியோ கொள்ளை பற்றியோ செய்திகளில்லை. அரசரின் ஆட்களும் அதிகாரிகளும் மக்களைத் துன்புறுத்தியிருக்கிறார்கள். இந்த ஓலையில் உள்ள செய்திகள் வருமாறு:

வேணாட்டின் கடைசி அரசனான ராமவர்மாவின் வருவாய்த்துறை அதிகாரிகள்தாம் வரி வசூலிப்பு என்னும் பெயரில் மக்களைக் கொள்ளையடித்திருக்கின்றனர். மக்களிடம் வரி வசூலிக்க வந்த முத்துப்பிள்ளை என்பவர் குதிரை வீரர்களுடன் தெரிசனங்கோப்பு ஊருக்கு வந்தார். பொதுக்கிணற்றில் தண்ணீர் கோரிக் கொண்டிருந்த பெண்களை அடிக்க ஆரம்பித்தார். குடங்களை உடைத்தார். ஊருக்கு உள்ளே புகுந்து நெல்லையும் புழுங்கலையும் வாரிச் சென்றார்.

முத்துப்பிள்ளையுடன் வந்த சிற்றம்பலம் பண்டாரம் என்பவர் கிராமத்துச் சாதாரண மனிதர்களையும் கோவில் வயல் குத்தகைக்காரர்களையும் குற்றவாளிகளைப் போல் வளைத்துப் பிடித்தார். மக்கள் பதறிப் போய் எங்கே ஓடுவது என்று தெரியாமல் அஞ்சி நின்றார்கள். அப்போதும் அந்த அதிகாரிகள் அவர்களை விடவில்லை.

இதனால் அரசருக்கு நாங்கள் சொல்லிக் கொள்வது என்னவென்றால், நாங்கள் இப்போது கொடுக்கும் அஞ்சாலி மேல்வாரம் வரிகளை நீக்க வேண்டும். புதிய வரிகளை இப்போது தரமாட்டோம். இதையும் மீறி எங்களைத் துன்புறுத்தினால் எங்கள் சொந்த வயல்களையும் கோவில் குத்தகை வயல்களையும் நாங்கள் இனி பயிர் செய்ய மாட்டோம். நாங்கள் குடும்பத்துடன் கடுக்கரை மலை வழி பணகுடி ஊருக்குக் குடிபெயரப் போகிறோம். இங்கே உள்ள செழிப்பான வயல்கள் பாழாய்ப் போகட்டும். வயல் விளைச்சல் இல்லாமல் அறுவடை இல்லாமல் ஆகட்டும். கோவில்களின் பூஜைகள் முடங்கட்டும் என்னும் செய்திகளை அரசருக்கு அறிவிக்கிறோம்.

அரசர் இந்தச் செய்தியை அறிந்ததும் பூதப்பாண்டி என்ற ஊருக்கு வந்தார். இது நாஞ்சில் நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள முக்கியமான ஊர். இங்கு அரசர் தங்குவதற்குரிய சிறு மாளிகையும் உண்டு. இங்கே தங்கிய அரசர் நாஞ்சில் நாட்டு விவசாயிகள் எல்லோரையும் தன்னைச் சந்திக்க வரும்படி ஆணை அனுப்பினார். எல்லோரும் வந்தார்கள். அவர்களிடம் நேரடியாகவே அரசர் பேசினார்.

குத்தகைக்காரர்களிடமும் வயல் விவசாயிகளிடமும் காட்டுத்தனமாக (இந்தச் சொல் மூல ஓலையில் உள்ளது) நடந்துகொண்ட அதிகாரிகளைக் கண்டிக்கிறேன். இனிமேல் அவர்கள் அப்படி நடந்துகொள்ள மாட்டார்கள் என்று உறுதி சொல்லுகிறேன். அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இதை அறிவுறுத்துவேன். மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் விவசாயிகளிடமும் நேரடியாகக் கேட்பேன் என்னும் உறுதியைக் கொடுத்தார்.

மக்களின் பிரதிநிதிகளைக் கவுரவப்படுத்தும் அடையாளமாக நாஞ்சில் நாட்டுப் பிரதானிகளுக்கு வெங்கல முரசு, கொம்பு, வெள்ளி கட்டிய பொந்தம் தடி ஆகியவற்றையும் கொடுத்தார். முக்கியமாக விவசாயிகள் கேட்டுக்கொண்டபடி பழைய வரிகளை (அஞ்சலி மேல் வாரம்) தள்ளுபடி செய்கிறேன். புதிய வரிகளைக் கட்ட வேண்டாம். இது அரச உத்தரவு என்றார். மூல ஓலையில் 34 நீண்ட வரிகள் கொண்ட இந்த ஓலையை அச்சில் கொண்டு வருவதாக இருந்தால் 180 வரிகள் வரும். மக்களின் வேண்டுகோளும் அரசரின் உத்தரவாதமும் விரிவாக இந்த ஓலையில் உள்ளன.

இந்த ஓலை எழுதப்பட்ட காலத்தில் வேணாட்டில் ராம வர்மா என்பவர் அரசராக இருந்தார் (1721-1729). இவர் வேணாட்டின் கடைசி அரசர். இவரது காலத்துக்குப் பின் வேணாடு திருவிதாங்கூர் என்ற பெயரைப் பெற்றது. இதன் முதல் அரசராக அனுஷம் திருநாள் மார்த்தாண்ட வர்மா (1729-1758) பதவியேற்றார். இவர் வந்தபின் விவசாயிகளின் பிரச்சனைகளை நேரடியாகக் கேட்டு அறிந்து தீர்த்தார். நீர் ஆதாரங்களைப் பெருக்கினார்.

ராம வர்மாவின் காலத்தில் திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவில், சுசீந்திரம் தாணுமாலய பெருமாள் கோவில், பூதப்பாண்டி பூதலிங்கசுவாமி கோவில், திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில் ஆகிய கோவில்களுக்கு உரிய பெருமளவு நிலங்கள் நாஞ்சில் நாட்டில் இருந்தன. மற்ற கோவில்களின் நிலங்களும் நாஞ்சில் நாட்டில் இருந்த இவை மட்டுமல்லாமல், அரச குடும்பத்தைச் சார்ந்த பெண்களின் வயல்களும் (இது அம்மச்சி கோணம் எனப்பட்டது) நாஞ்சில் நாட்டில் இருந்தன. இவற்றையெல்லாம் பயிரிட்ட குத்தகைக்காரர்கள் நாஞ்சில் நாட்டிலே இருந்தனர்.

அப்போது கோவில்களைத் தனிப்பட்ட நிர்வாகம் கவனித்தது. இந்த நிர்வாகிகள் கோவில் இருந்த ஊரையும் கவனித்துக் கொண்டனர். ஒருவகையில் கோவில் நிர்வாகிகள் கோவில் இருக்கும் கிராமத்தில் பெரும் அதிகாரம் கொண்டவர்களாக இருந்தனர். இதனால் கோவில் நிர்வாகிகளுக்கும் குத்தகைக்காரர்களுக்கும் எப்போதும் முரண்பாடு இருந்து கொண்டே வந்தது.

ஒருமுறை திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோவிலுக்குச் சொந்தமான வயல்களைக் கவனித்த குத்தகைக்காரர்களின் கூட்ட நிகழ்வில் முரசு அடிக்கும் பணிக்கன் ஒருவனின் கையைத் திருவட்டாறு கோவில் நிர்வாகியான நம்பூதிரி ஒருவர் வெட்டிவிட்டார். அதனால் கோபம் கொண்ட குத்தகைக்காரர்கள் அந்த நம்பூரியின் மடத்துக்கு (வீட்டுக்கு) நெருப்பு வைத்தனர். இந்தச் செய்தி அரசனுக்குத் தெரிந்த பிறகு இரண்டு தரத்தாரையும் அழைத்துச் சமாதானப்படுத்தி இருக்கிறார். இப்படி ஒரு செய்தி முதலியார் ஓலையில் உள்ளது.

அஞ்சாலி என்னும் வரி கோவிலுடன் தொடர்புடையது. (அஞ்சு – 5; ஆலி – உருவம்). இந்த வரியைக் கோவில் இருக்கும் ஊரில் உள்ளவர்கள் செலுத்த வேண்டும். கோவில் விழாவிற்குரிய பொருள்களுக்கு வேண்டிய மூங்கில் மரம் போன்றவற்றைக் கொடுப்பது சொக்கப்பனை விழா (பனைமரம், பனை ஓலை, மூங்கில் கம்பு), சூரன்பாடு விழா (மூங்கில், வைக்கோல் போன்றவை), தேர்த் திருவிழா, தெப்பத் திருவிழா (மூங்கில் மரம்) போன்றவை உதாரணங்கள். இந்த வரியைத் தானியங்களாகக் கொடுக்க வேண்டும்.

இப்படியாக கோவில் நிர்வாகிகளுக்கும் குத்தகைக்காரர்களுக்கும் இடையே இருந்த மாறுபாடு அரசியலைப் பாதித்திருக்கிறது. கோவில் நிர்வாகிகள் தான்தோன்றியாக நடந்து கொண்டதால் அரசரால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு கட்டத்தில் கோவில் நிர்வாகிகளின் அடியாட்களை அடக்க நெல்லைச் சீமையிலிருந்து மறவ வீரர்களை அரசன் வரவழைத்திருக்கிறான். இந்தச் சூழ்நிலைக்கு அரசரே தள்ளப்பட்டிருக்கிறான். இந்த மாதிரி குழப்பத்தில் தான் விவசாயிகள் போராட்டத்தை அறிவித்தனர். இப்பகுதியில் கிறிஸ்தவ மதம் எளிதாகப் பரவுவதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷனரிகள் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்ததற்கும் இந்தச் சூழ்நிலையும் ஒரு காரணம்.

இந்தப் பின்னணியில் நாஞ்சில் நாட்டு விவசாயிகளின் போராட்டத்தைப் பார்க்க வேண்டும். இந்தப் போராட்டத்திற்கு மூன்று காரணங்கள். அவை: 1. கோவில் நிர்வாகிகளின் ஆணவப் போக்கு, 2. வேணாட்டு அதிகாரிகள் வரி வசூலிப்பதில் கையாண்ட காட்டுமிராண்டித்தனம், 3. வரிவசூலிப்பு என்ற பெயரில் மதுரை நாயக்கப் படைகளின் கொள்ளையடிப்பு ஆகியன. திருவிதாங்கூர் கல்வெட்டுத் தொகுதி 5இன் (1925) பதிப்பாசிரியரான ராமநாத அய்யர் மதுரை நாயக்க அரசின் செல்வாக்குப் பற்றி விரிவான ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதன் பின்னிணைப்பில் பதினாறு முதல் 19ஆம் நூற்றாண்டுவரை வேணாட்டில் நடைமுறையில் இருந்த வரிகளைப் பற்றி விளக்குகிறார். வரிகளின் பட்டியலும் உள்ளது.

பழைய தென் திருவிதாங்கூரின் மீது (இன்றைய கன்னியாகுமரி மாவட்டம்) விஜயநகரப் பேரரசு மூன்று முறை படையெடுத்திருக்கிறது. அச்சுத தேவராயர் காலத்தில் சாளுவ திம்மன் ஒரு முறையும் (1532) ராமராய விட்டலர் இரண்டு முறைகளும் (1544, 1558) நாஞ்சில் நாட்டின் மீது படையெடுத்தனர்.

இதற்குத் திறை வசூலிப்பது மட்டும் காரணமன்று. வேறு அரசியல் காரணங்கள் உண்டு. மதுரை நாயக்கர்கள் 1609 முதல் 1723 வரை 114 வருடங்களில் பலமுறை படையெடுத்துள்ளனர். அவர்களின் படையெடுப்புக்குத் திறை வசூலிப்பது மட்டுமே காரணம்.

மதுரை நாயக்கர் வரலாறு எழுதியவர்கள் வேணாட்டின் மீது மதுரை நாயக்கர்கள் படையெடுத்த செய்தியையும் அதன் எதிர் விளைவையும் பற்றி விரிவாகச் சொல்லவில்லை (R.S. நாராயணசாமி அய்யர், T.V. மகாலிங்கம், சத்தியநாத ஐயர், அ.கி. பரந்தாமனார்). ஆனால் நாஞ்சில் நாட்டின் வில்லிசை கலையில் பாடப்படுகின்ற 40க்கு மேற்பட்ட கதைப்பாடல்களும் இரவிகுட்டி பிள்ளை போர் என்னும் கதைப்பாடலும் 12க்கு மேற்பட்ட முதலியார் ஆவணங்களும் திருவிதாங்கூர் பகுதிகளில் காணப்படுகின்ற கல்வெட்டுகள் சிலவும் நாஞ்சில் நாட்டின் மீது நாயக்கர் படையெடுப்பு பற்றி விரிவாகக் கூறுகின்றன. இது பற்றி விரிவாகவே எழுத முடியும். 114 ஆண்டுகள் நாயக்கர்கள் நாஞ்சில் நாட்டின் மீது தொடர்ந்து படையெடுத்த காரணத்தால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

மதுரையில் ராணி மங்கம்மாள் ஆட்சியிலும் (1680-1706) விஜயரங்க சொக்கநாத நாயக்கர் ஆட்சியிலும் (1706-1732) நாஞ்சில் நாடு பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அரங்க கிருஷ்ண முத்து வீரப்ப நாயக்கர் (1682-1689) ஒருமுறை திருநெல்வேலிக்கு வந்தபோது வேணாட்டு அரசி உமையம்மா ராணி, நாயக்க அரசனை நேரடியாகச் சந்தித்துப் பணிந்து திறை கொடுத்திருக்கிறாள். இனிமேலும் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறாள்.

இதன்பிறகு வந்த அரசன் இரவி வர்மா திறை கொடுக்கவில்லை. திறை வாங்க வந்த மதுரை படை வீரர்களின் உதவியுடன் கோவில் நிர்வாகிகளின் அடியாட்களைப் பயமுறுத்தியிருக்கிறான். இதன் பிறகு நாயக்கப் படைகளைத் தந்திரமாக கல்குளம் கோட்டைக்குள் வரவழைத்துக் கைது செய்து துன்புறுத்தியிருக்கிறான். பலரைக் கொன்றான். எஞ்சியவர்கள் மதுரைக்குச் சென்றனர்.

இதனால் நரசப்பையன் தலைமையில் 1697இல் நாஞ்சில் நாட்டுக்கு வந்த நாயக்கர் படை தன் பழியை முடித்துக் கொண்டது. மதுரை அரசன் விஜயரங்க சொக்கநாதன் காலத்தில் (1706-1732) நாயக்க அரசு பலவீனமடைய ஆரம்பித்தது. இந்த அரசன் கோவில்களுக்கும் மடங்களுக்கும் வாரி வாரிக் கொடுத்தான். படைத் தலைவர்களும் அதிகாரிகளும் ஊழல் பேர்வழிகளாக இருந்தனர். இஷ்டம் போல் கொள்ளை அடித்தனர். அதன் ஒரு பகுதிதான் திருவிதாங்கூரின் படையெடுப்பு.

ராமநாத அய்யர், திருவிதாங்கூர் கல்வெட்டு தொகுதி 5இல் அன்று நடைமுறையில் இருந்த வரிகளைக் குறித்து விரிவாக விளக்குகிறார்.

நாஞ்சில் நாட்டு விவசாயிகள் "நாங்கள் வையா வரி, கோட்டை வரி, மேல் வாரம், மாத்தால், மடப்புறம் ஆகிய வரிகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமாட்டோம்" என்று சொல்லிப் போராடுகிறார்கள்.

இவற்றில் வையா வரி என்பதற்குப் பொறுக்க முடியாத வரி என்று விளக்கம் கொடுக்கிறார் ராமநாத அய்யர். வையா என்பது மலையாளச் சொல். இதற்குப் பொறுக்க முடியாதது என்று பொருள். இந்த வரி பொதுவான வரியாக இருக்கலாம். காரணம் இல்லாமல் கட்டாயப்படுத்திய வரியாக இருக்கலாம்.

மேல் வாரம் என்ற வரி பற்றித் தோவாளை வட்டம் வீரவநல்லூர்க் கல்வெட்டு (1515) கூறுகிறது. கோவில் வயல் நிலங்களைக் குத்தகை எடுத்தவர்கள் கோவிலுக்குக் குத்தகை நெல்லையும் கொடுக்க வேண்டும். அதுபோக அரசாங்கத்திற்கு ஒரு வரி செலுத்த வேண்டும். அதுதான் மேல்வாரம். கோவில் நிர்வாகம் நிலங்களுக்கு வரி செலுத்த வேண்டாம் (இந்த முறை சில காலங்களில் மாறியிருக்கிறது). அதை குத்தகைக்காரர்களே கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இதைத்தான் விவசாயிகள் எதிர்த்தனர்.

அஞ்சாலி என்னும் வரி கோவிலுடன் தொடர்புடையது. (அஞ்சு - 5; ஆலி - உருவம்). இந்த வரியைக் கோவில் இருக்கும் ஊரில் உள்ளவர்கள் செலுத்த வேண்டும். கோவில் விழாவிற்குரிய பொருள்களுக்கு வேண்டிய மூங்கில் மரம் போன்றவற்றைக் கொடுப்பது சொக்கப்பனை விழா (பனைமரம், பனை ஓலை, மூங்கில் கம்பு), சூரன்பாடு விழா (மூங்கில், வைக்கோல் போன்றவை), தேர்த் திருவிழா, தெப்பத் திருவிழா (மூங்கில் மரம்) போன்றவை உதாரணங்கள். இந்த வரியைத் தானியங்களாகக் கொடுக்க வேண்டும்.

குத்தகைக்காரர்கள் இதற்குரிய வரியைக் கொடுத்துவிட்டு மூங்கில், பனை மரம் போன்றவற்றைத் தங்கள் பண்ணைகளில் வேலை செய்த அடிமைகளிடம் அல்லது கூலி விவசாயிகளிடம் கட்டாயமாகக் கொண்டு வரும்படி வற்புறுத்தியிருக்கிறார்கள். திருவிதாங்கூரின் மதமாற்றத்திற்கு இதுவும் ஒரு காரணம்.

கோட்டை வழி என்பது போர்க்காலங்களில் மக்களைப் பாதுகாப்பதற்காக வாங்கிய வரி கோட்டையைக் கட்டுவதற்கும் பந்தங்களைக் கொளுத்துவதற்கும் துணி, எண்ணெய்க்காக வாங்கப்பட்ட வரி. இது குறித்து அச்சில் வராத முதலியார் ஓலைகளில் சான்று உண்டு.

மாத்தால் என்பது அசாதாரண வரி. கோவிலுக்குச் சொந்தமான புதிய தரிசு நிலங்களைக் குத்தகை எடுத்தவர்கள், அதைத் தரிசாகப் போட்டாலும் கொடுக்க வேண்டிய வரி. இவை தவிர வேறு நிறைய வரிகளும் இருந்தன. அரசர் பதவி ஏற்கும் போது கொடுக்கப்பட்ட வரி, அரசர் பிறந்தநாளில் பிராமணர்களுக்கு விருந்து வைப்பதற்காகக் கொடுக்கப்பட்ட சிறப்பு வரி, அரசர் வரும்போதும் முகாம்களில் தங்கும்போதும் பொருத்தப்படும் பந்தங்களுக்கும் கச்சைத் துணிகளுக்கும் ஆன வரி.

இவை பெரும்பாலும் ஊர்ப் பிரதானிகளுக்கும் கோவில் நிலக் குத்தகைக்காரர்களுக்கும் தொடர்புடையவை.

நாஞ்சில் நாட்டில் பறக்கை , சுசீந்திரம், பூதப்பாண்டி, திருப்பதிசாரம் எனச் சில கிராமங்களில் இருந்த அரசர் தங்குவதற்குரிய சிறிய கொட்டாரம் எனப்படும் சிறு கட்டிடத்தில் மராமத்து வேலைகளை அந்த ஊரைச் சார்ந்த விவசாயக் குடிகளும் நிலச் சுவாந்தார்களும் கவனிக்க வேண்டும். இதற்காக அரசு அதிகாரிகள் அசாதாரண வரிகளை வாங்கினர். மக்களின் பிரதிநிதிகள் கவுரவத்திற்காகச் சில பட்டங்களைப் பெறவேண்டும் என்றாலும் (செண்பகராமன், மூத்தண்ணன், இளையண்ணன் போன்ற விருதுகள்), முடுகு, வீரச்சங்கிலி போன்ற விருது அடையாளங்களைக் பெற வேண்டுமென்றாலும் தனியான வரி உண்டு. ஒரு ஊருக்கு வரும் அதிகாரிகளின் சாப்பாடு, பிற வசதிகளுக்குரிய செலவை அந்த ஊர் விவசாயிகளே கொடுக்க வேண்டும். இது இராசகர உபாதி. அதிகாரி பிராமணர்களாக இருந்தால் 12 நாள் நெல்லும் பிராமணர் அல்லாதவராக இருந்தால் பத்து நாள் நெல்லும் கொடுக்க வேண்டும். அவர்கள் இரவில் தங்கினால் அதற்குரிய வசதிகளையும் விவசாயிகள் செய்து கொடுக்க வேண்டும். இது ஏற்சோறு என வழங்கப்பட்டது (கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுக்கள் (1968 - 26).

●

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | சௌ.குணசேகரன்

பெண்டாட்டி:
சோழர்களின் அடிமைப் பணிப்பெண்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி

பெண்டாட்டிகள் மற்றும் தேவரடியார்கள்

சோழர் காலத்தில் அரண்மனையில் வேலை செய்த பெண்டாட்டிகளும் கோவில் பணிகளுக்கு அமர்த்தப்பட்ட தேவரடியார்களும் ஏறக்குறைய ஒத்த சமூக நிலையில் இருந்தவர்கள். கோவில் பணிப்பெண்டிர்களைப் பற்றி லெஸ்லி ஓர் அவர்களின் ஆய்வு விளக்கமாகப் பேசுவதுடன் இவர்களுள் பெரும்பாலானோரை அடிமைப் பணிப்பெண்களாகப் பார்க்கின்றது. பொதுவாக, தேவரடியார் என அழைக்கபட்டாலும் இக்கோவில் பணிப்பெண்கள் கல்வெட்டுகளில் வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். குறைந்தது இருபத்தொரு கல்வெட்டுகளில் அவர்கள் அடிமைகள் என அழைக்கப்படுகின்றனர் *(Leslie Orr : 2000)*. அதைப் போல் கோவில் பணிப்பெண்கள் சந்தைப்பொருட்களாக விற்கப்பட்டதையும் வாங்கப்பட்டதையும் எடுத்துகாட்டப் பல்வேறு கல்வெட்டுக் குறிப்புகள் உள்ளன. ஆனால், பெண்டாட்டிகள் அவ்வாறு வாங்க-விற்கபட்டதற்கான குறிப்புகள் குறைவு. எனினும் இதுகுறித்து முதலாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு ஒன்று தரும் செய்தி குறிப்படத் தக்கது. அரசனின் கீழ் இருந்த கோவில் அடிமைப் பணிப்பெண்டிர்கள் மீண்டும் கோவிலுக்கே இடமாற்றம் செய்யப்பட்டதை இக்கல்வெட்டு பதிவு செய்கின்றது. அவ்வாறு இடமாற்றப்படும்போது, அவ்வடிமைப் பெண்களின் உடம்பில் பொறிக்கப்பட்டிருந்த அரசனின் இலட்சினை அகற்றப்பட்டு, மீண்டும் கோவில் இலட்சினையான திரிசூலம் பொறிக்கப்பட்டதையும் இக்கல்வெட்டின் மூலம் நாம் அறிகின்றோம். எனவே, இக்குறிப்புகளினூடாக அரண்மனையும் கோவிலும் தம் அடிமைப் பணிப்பெண்களை அவ்வப்போது கொடுத்துவாங்கிக் கொண்டதை விளங்கிகொள்ள முடியும். தேவரடியார்கள் போன்று, பெண்டாட்டிகளும் கோவிலுக்குப் பணக்கொடை கொடுத்துள்ளனர். இது பொதுவாகக் கோவிலில் நந்தா விளக்கு எரிப்பதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. பெண்டாட்டிகளுக்கு இப் பணம் எவ்வாறு கிடைத்தது? தேவரடியார்களைப் போல், ஒருசில பெண்டாட்டிகளுக்கு அரச குடும்பத்தினர் கொடுத்த வெகுமானங்களூடாக பெற்றிருக்கலாம். மேலும், வேளத்திற்குக் கொண்டுவரும்போது பெண்டாட்டிகள் தம்மோடு வைத்திருந்த செல்வங்களாகவோ அல்லது கைக்கோளர் போன்ற பெண்டாட்டிகளின் பிள்ளைகள் சம்பாதித்துக் கொடுத்த உடமைகளாகவோ இருந்திருக்க வாய்ப்பு உள்ளது.

பெண்டாட்டிகள் மற்றும் கைக்கோளர்கள்

கல்வெட்டுகள் குறிப்பிடும் பெண்டாட்டிகளின் குடும்ப உறவுகள் ஆராயப்பட வேண்டும். பெண்டாட்டிகளோடு இரத்த உறவுடையவர்களாகக் கல்வெட்டுகள் கூறுவது அவர்களது பிள்ளைகள் மற்றும் சகோதர சகோதரிகள் மட்டுமே. அவை பெண்டாட்டிகள் தம் பிள்ளைகள் அல்லது உடன்பிறப்புக்களின் நலத்திற்காகக் கோவிலுக்குத் தானம் வழங்கியதாகக் குறிப்பிடுகின்றன. பெண்டாட்டிகளின் தந்தையரோ அல்லது கணவன்மார்களோ ஒருபோதும் குறிப்பிடப்படவில்லை என்பது இங்கு உற்றுநோக்க வேண்டியதாகும். மேலும், வேளங்களோடு தொடர்புடைய ஆண்களாகக் கூறப்படுபவர்கள் சோழப் படைவீரர்களான கைக்கோளர்கள். இவர்கள் பெண்டாட்டிகளின் மகன்களாகவோ அல்லது சகோதரர்களாகவோ காட்டப்படுகின்றனர். அரசனின் மெய்க்காப்பாளர்களாகவும் நிலைப்படைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய நிலையிலும் இருந்த கைக்கோளர்களைக் குறிப்பிடும் சோழக் கல்வெட்டுகள் அதிகம். எனினும் அவர்களையும் வேளத்தையும் அல்லது பெண்டாட்டிகளையும் ஒன்றிணைத்துப் பதிவு செய்யும் கல்வெட்டுகள் குறைவு. சோழர் காலத்திற்குப் பின்பு கைக்கோளர்கள் நெசவுத் தொழிலைப் பின்பற்றும் ஒரு சாதிக் குழுவாக உருவெடுத்தனர். குறைந்தது இரண்டு இடங்களில் கைக்கோளர்கள் வேளத்தைச் சேர்ந்த பெண்களுக்காகவோ அல்லது குறிப்பிட்ட பெண்டாட்டிகளுக்காகவோ கோவில்களுக்குத் தானம் கொடுத்துள்ளனர். குறிப்பிட்டதுபோல், இவர்களுக்கும் வேளத்திற்கும் உள்ள உறவைக் குறிப்பிடும் கல்வெட்டுகள் குறைவு எனினும், கைக்கோளர் மற்றும் பெண்டாட்டிகளுக்கிடையே குறிப்பிடும்படியான (மகன் அல்லது சகோதரன்) உறவு இருந்ததை உறுதியாகக் கூறலாம். இக்குறிப்பை முன்பு குறிப்பிட்ட கலிங்கத்துப்பரணிப் பாடலோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போதும், 'வீரர்கள் வருகிறார்கள்; கதவைத் திறவீர்' எனக் கோரப்பட்ட வேளத்தைச் சேர்ந்தப் பெண்டிர்களுக்கும் வெற்றி வாகைசூடி திரும்பிய சோழப் போர்வீரர்களுக்கும் உள்ள தொடர்பை விளங்கிக்கொள்ளலாம். எனினும், பெண்டாட்டிகளுக்கும் கைக்கோளர்களுக்கும் உள்ள இரத்த உறவை விளங்கிக்கொள்ள போதுமான தரவுகள் நம்மிடையே இல்லை என்றே கூறவேண்டும்.

பாலியல் உறவுகள்

பணிப்பெண்களின் உறைவிடமாக இருந்ததற்கு அப்பால், வேளம் அமைப்பு அரண்மனையோடு வேறு வகையில் தொடர்புடையதா என ஆராய வேண்டிய தேவை உள்ளது. பெண்டாட்டிகள் பற்றி இதுவரை விளக்கியதை மீண்டும் சுருக்கமாகக் கூறவேண்டுமானால், 1. அவர்கள் போரின்போது பிடிபட்டவர்கள் அல்லது சிற்றரசர்களின் கப்பமாக வந்தவர்கள், 2. அரண்மனையின் வீட்டுவேலைப் பணிகளுக்கு (ஆடல் பாடல் உட்பட) நியமிக்கப்பட்டவர்கள், 3. அவர்களது தந்தையரைப் பற்றியோ கணவன்மாரைப் பற்றியோ குறிப்புகள் இல்லை, 4. கைக்கோளரோடு இரத்த உறவு கொண்டவர்கள் எனலாம். அப்படியாயின், பெண்டாட்டிகள் அரண்மனை ஆண்களோடு பாலியல் உறவு கொண்டிருந்ததற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். அவர்களது பிள்ளைகள் அவ்வுறவில் பிறந்தவர்களாகக் கருதலாம். சமகால இலக்கியங்களும் இதற்கான முகாந்திரத்தைக் கொடுக்கின்றன. எடுத்துக்காட்டாக, சோழர்கால உலா இலக்கியங்கள், அரசனின் உலாவின்போது வேடிக்கை பார்க்கும் (வேளத்தை சேர்ந்த) பெண்களின் உடம்பைப் பாலியல் மயமாக்கும் போக்கைக் கூறலாம். அவர்களது பாலியல் பண்பு மற்றும் முதிர்ச்சியை முன்வைத்து அவர்களைப் பேதை, பெதும்பை என வெவ்வேறு வகையாகப் பிரிக்கின்றன. இவ்வகைப்படுத்தலில் குழந்தைகளும் முதியோர்களும் இடம்பெறாதது குறிப்பிடத் தக்கது. எனவே, நேரடியான தரவுகள் நம்மிடையே இல்லாதபோதிலும், பெண்டாட்டிகள் அரச குடும்பத்தினரோடு கொண்டிருந்த பாலியல் உறவுகளை ஒருவாறு விளங்கிக்கொள்ள முடியும்.

குறிப்பாகத் தெற்காசியாவின் இடைக்கால அரசுகளைக் கவனிக்கும்போது, வெவ்வேறு யுத்திகளைப் பின்பற்றி அரண்மனை வேலைக்கும் நம்பத் தகுந்த வீரர்களின் தேவைக்கும் ஆள்சேர்ப்பு நடந்தது. எடுத்துக்காட்டாக, இராசப்புத்திரர்களின் அரண்மனையில் வேலைசெய்த பெண்கள் பெரும்பலானோர் போரில் பிடிபட்டவர்கள், சிற்றரசர்களின் கப்பமாக அல்லது அரசிகளின் திருமணச் சீதனமாக வந்தவர்கள். இவர்களுள் பலர் அரசர்களோடு நெருங்கிய பாலியல் உறவில் இருந்தவர்கள். பலர் மறைமுகமாக நாட்டை ஆளும் அளவிற்குத் தம்மை வளர்த்துக்கொண்டனர் (*Ramya Sreenivasan, 2006*). படைவீர்களின் தேவைக்கு, வட இந்தியாவை ஆண்ட சுல்தானிய அரசர்கள் மத்திய ஆசியாவிலிருந்து அடிமைகளை விலைக்கு வாங்கி அவர்களுக்குப் போதுமான பயிற்சி கொடுத்து உயரிய பதவியில் வைத்திருந்தனர். இங்கு அரசன் மற்றும் அவனது அடிமை உறவு தந்தை-மகன் உறவாகப் பார்க்கப்பட்டு, அரசனின் இறப்பிற்குப் பின் அவனது அடிமை ஆட்சிக்கு வந்ததைப் பார்;கிறோம் (குத்புதின் அய்பெக், இல்டுமிஷ், பல்பன், மாலிக் கபூர் போன்றோரை இங்குக் குறிப்பிடலாம், *Sunil Kumar, 2006*). அதைப் போல் தெக்கானிய சுல்தான்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தியோப்பியாவிலிருந்து கடல் மூலமாக அடிமைகளை இறக்குமதி செய்தனர். மிகவும் புகழ்பெற்ற மாலிக் ஆம்பர் அவ்வாறு கொண்டுவரப்பட்டவர். இடைக்கால அரசர்கள் தம் சொந்த மகன்களைவிட அடிமைப் படைவீரர்களையே பெரிதும் நம்பிக்கைக்கு உரியவர்களாகக் கருதினர். அவ்வகையில் பார்க்கும்போது, சோழ அரசர்கள், தமக்கான பணிப்பெண்களின் தேவையை, அதுபோல் நம்பத் தகுந்த மெய்காப்பாளர்களாக நியமிக்கபடக்கூடிய வீரர்களின் தேவையை வேளம் என்ற அமைப்பினூடாக நிவர்த்தி செய்துகொண்டனர். எனவே, பெண்டாட்டிகளின் பெண் குழந்தைகள் பிற்காலத்தில் தம் தாய்மார்கள் போன்று வேளத்தில் பெண்டாட்டிகளாயினர். ஆண் குழந்தைகள் கைக்கோளர் போன்று படையிலும் அல்லது மற்ற அரண்மனை வேலைகளுக்கான பணிமகன்களாயினர் எனக் கருதலாம்.

வேளம் நிறுவனத்தின் வீழ்ச்சி

வேளம் நிறுவனத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் சோழப் பேரரசின் வளர்ச்சி-வீழ்ச்சியோடு ஒத்துப்போகின்றது. சோழர் அதிகாரம் மேலோங்கி நின்ற பதினொன்றாம் நூற்றாண்டில் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் வேளங்களின் எண்ணிக்கை அதிகமாகவும், அதற்கு முன்பும் பின்பும் படிப்படியாகக் குறைவதையும் காண முடியும். எனவே, வேளம் என்பது சோழ அரசமைப்போடு ஒன்றிய ஒரு நிறுவனமாகும். அதுபோல் பதினொன்றாம் நூற்றாண்டில், சோழ அரசர்கள் தம் அதிகாரத்தை மையப்படுத்த முயன்ற காலத்தில் பெரும்பாலான வேளங்கள் அரசனின் பெயர்களையே பட்டங்களாகக் கொண்டிருந்தன (அதற்கு முன்பு சமமாக அரசிகளின் பெயர்கள் பட்டங்களாக இருந்தன). பதிமூன்றாம் நூற்றாண்டில் சோழ அரசு வீழ்ச்சியைச் சந்தித்தபோது, கல்வெட்டுகளில் வேளங்கள் பற்றிய குறிப்புகளும் காணாமல் போகின்றன. அப்படியாயின் வேளத்தில் இருந்த பெண்டாட்டிகள் என்னவாயினர்? சோழர்களுக்குப் பின் கோலோச்சிய பாண்டியர், ஹொய்சாலர்கள் போன்ற அரசுகளின் அரண்மனைகளோடு இணைக்கப் பட்டிருக்கலாம். அதுபோல் சிற்றரசர்கள், இளவரசர்கள், இளவரசிகளின் வீடுகளோடும் வீட்டு வேலைகளுக்காக இணைக்கப் பட்டிருக்கலாம். பாண்டியர்களின் கல்வெட்டு சோழ வீழ்ச்சிக்குப் பின் சோழ அரசிகளையும் சோழநாட்டு மேல்தட்டுக் குடிகளைச் சேர்ந்த பெண்களையும் தம் நாட்டுக்குப் பிடித்து வந்ததாகக் கூறுகின்றன. ஆனால் பிற்காலத்தில் அவர்கள் வேளம் என்ற நிறுவனத்தினூடாக அரண்மனையோடு இணைக்கப்படவில்லை. வாரிசுகள் இல்லாத பெண்டாட்டிகள் கோயில்களோடும் மடங்களோடும் இணைந்து தேவரடியார்களாக மாற்றம் பெற்றிருக்கவும் வாய்ப்பு உள்ளது. அதுபோல், சோழர் காலத்திற்குப் பின்பு கைக்கோளர்கள் பொதுவாகத் தொழில் சார்ந்த ஒரு சமூகக் குழுவாக உருவெடுத்தனர். எனவே, அவர்களோடு பெண்டாட்டிகளும் சமூக வாழ்வில் இணைந்திருக்கலாம்.

உசாத்துணை

Daud Ali (2007), 'The Service Retinues of the Chola Court: A Study of the term Velam in Chola Inscriptions', Bulletin of the School of Oriental and African Studies, vol.70, no. 3.

Dauid Ali (2006), 'War, Servitude and Imperial Household: A study of Palace women in the Chola empire', in Indrani Chatterjee and Richard M.Eaton, Slavery and South Asian History, Indiana University Press, Indiana.

Leslie Orr (2000), Donors, Devotees and Daughters of God: Temple Women in Medieval Tamilnadu, Oxford University Press, New York.

Leslie Orr (2021), 'Slavery and Dependency in Medieval South India', in Craig Perry, David Eltis, Stanley L.Engerman and David Richardson, The Cambridge World History of Slavery, Vol.2, AD-500-Ad1420, Cambridge University Press, New Delhi.

M.Eatan (2006), 'Introduction' in Indrani Chatterjee and Richard M.Eaton', Slavery and South Asian History, Indiana University Press, Indiana.

Ramya Sreenivasan (2006), 'Drudges, Dancing Girls, Concubines: Female Slaves in Rajput Polity, 1500–1850', in Indrani Chatterjee and Richard M.Eaton, Slavery and South Asian History, Indiana University Press, Indiana.

Sunil Kumar (2006), Service, Status, and Military Slavery in the Delhi Sultanate: Thirteenth and Fourteenth Centuries in Indrani Chatterjee and Richard M.Eaton, Slavery and South Asian History, Indiana University Press, Indiana.

Y.Subbrayalu (2012), South India Under the Cholas, Oxford University Press, Delhi.

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | சு.இராமசுப்பிரமணியன்

நல்அரா!
சங்க இலக்கியங்களில் நாகப்பாம்பு!!



சென்ற இதழ் தொடர்ச்சி

இடிஓசையால் துன்புறும் நாகம்

“அஞ்சுவரு மரபின் வெஞ்சினப் புயலேறு
அணங்குடை அரவின் அருந்தலை துமிய
நின்றுகாண் பன்ன நீள்மலை மிளிரக்
குன்றுதூ எறியும் அரவம் போல.
முரசு எழுந்து இரங்கும் தானையொடு
தலைச்சென்று..”

(புறநானூறு, பாடல் 211, வரிகள் 1-5)

இடிக்கு அஞ்சுவது நாகம். மலையில் உருவான இடிமுழக்கத்தால் நாகத்தின் தலை துண்டானது. அப்படிப்பட்ட மலை இடிமுழக்கத்தால் அதிர்வதுபோல, முரசு முழக்கத்துடன் மன்னன் கோப்பெருஞ்சோழன் படைகொண்டுசென்று எதிரிகளை வீழ்த்துவான் என்பதாகும். இப்பாடலில், ‘அரவின்’ என்பது பாம்பையும், ‘அரவம்’ என்பது ஓசையையும் குறிக்கும்.

நாகப்பாம்பு எதிரியை எச்சரிக்கும்போது, படம்விரித்துச் சீறும். நாகப்பாம்பின் படத்தை, ‘பை’ என்று குறிப்பிடுகிறது இப்பாடல்.

"-------- -------- -------- -------- --------
-------- -------- பாம்பின்
பைபட இடிக்கும் கடுங்குரல் ஏற்றொடு
ஆலி அழிதுளி தலைஇக்
கால்வீழ்ந் தன்றுநின் கதுப்புஉறழ் புயலே”

(அகநானூறு, பாடல் 323, வரிகள் 10-14)

தலைவன் பிரிவால் வாடுகிறாள் தலைவி. மேகம்கறுத்து, பனிக்கட்டிகளுடன் மழைபொழிகிறது. மழைபொழிதலைக் காணவருமாறு தோழி தலைவியை வற்புறுத்தும் பாடல். மழைபெய்வதற்குமுன் இடி எப்படி இடித்ததென்றால், அச்சத்தில் நடுங்கிய பாம்பின் படம் அழியும் அளவு மிகுந்த ஒலியுடன் இடித்தது.

‘இடிகேட்ட நாகம்போல’ என்று ஒரு பழமொழி உண்டு. நாகத்திற்கு செவி இல்லை. பிறகு எப்படி இடியை நாகம் கேட்கமுடியும் என்று ஓர் ஐயம் வரலாம். உண்மையில் இடி என்பது மிகுந்த ஓசை. ஓசை, ஒலி என்பனவெல்லாம் அதிர்வுகளே. இடிமுழங்கும்போது உருவாகும் நிலஅதிர்வுகளைப் பாம்பு உணரமுடியும். மிகுந்த அதிர்வுகள் பாம்பைத் துன்புறுத்தும். அப்படித்தான் இடியால் நாகம் துன்புறுவதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

“பாம்புப்பை அவிந்தது போலக் கூம்பிக்
கொண்டலின் தொலைந்த ஒண்செங் காந்தள்..”

(குறுந்தொகை, பாடல் 185, , வரிகள் 4-6)

தலைவனின் மலையில் ஒளிமிகுந்த செங்காந்தள் மலர், கூம்பிய நல்லபாம்புப் படத்தைப்போல, கல்லின் மீது கவிழ்ந்துகிடக்கிறது.

பாம்பா ? பழுதா?

"ஓங்குசினைத் தொடுத்த ஊசல், பாம்பு என,
முழுமுதல் துமிய உரும்எறிந் தன்றே
பின்னும் கேட்டியோ? எனவும் அஃதுஅறியாள்"

(அகநானூறு, பாடல் 68, வரிகள் 6,7,8)

இரவுக்குறியில் தலைவன் தலைவியைச் சந்திக்கவந்துக் காத்திருக்கிறான். அன்னை உறங்கிவிட்டாள் என்பதை உறுதிசெய்வதற்காக, அவள் காதருகே சென்று சிலவற்றைக் கேட்கிறாள் தலைவி. அவற்றில் ஒன்றாக, அசோகமரத்தில் கட்டப்பட்டிருக்கும் ஊஞ்சல் கயிற்றைப் பாம்பு எனக்கருதி அதன்மீது விழுந்த இடியின் ஓசையைக் கேட்டாயோ? என்றும் வினவுகிறாள். மறுமொழி வராமல் இருக்கவே அன்னை உறங்கிவிட்டாள் என்று உறுதிசெய்துகொள்கிறாள், தலைவி.

‘பாம்பு என்று அடிக்கவும் முடியவில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுது என்று தாண்டவும் முடியவில்லை' என்னும் சொலவடை நினைவுக்கு வருகிறது.

முழுநிலா மறைக்கும் அரவம்!

"இனிபிறிது உண்டோ அஞ்சல் ஓம்புஎன
-------- -------- -------- -------- -------- --- ----- --------
நிதியம் சொரிந்த நீவிப் போல
அரவுநுங்கு மதியின் நுதல்ஒளி கரப்ப
-------- -------- -------- -------- -------- --- ----- --------
பாம்பு ஊன் தேம்பும் வறம்கூர் கடத்திடை
-------- -------- -------- -------- -------- --- ----- --------
கல்உயர் பிறங்கல் மலைஇறந்தோரே"
(அகநானூறு, பாடல் 313)

பொருள்தேடிப் பிரிந்துசென்ற தலைவனை நினைந்து மனம்வருந்தும் தலைவிக்குத் தோழி ஆறுதல் சொல்கிறாள். தலைவனைப் பிரிந்ததால் ஒளி இழந்துவிட்ட தலைவியின் நெற்றிக்கு, 'முழுநிலாமறைப்பு' நாளில் *(lunar eclipse)* ஒளியிழந்த நிலா உவமை கூறப்படுகிறது. நிலாவை பாம்பு (இராகு) விழுங்குவதாக ஒரு நம்பிக்கை உள்ளது அல்லவா? அந்த (மூட) நம்பிக்கை இப்பாடலில் வெளிப்படுகிறது.

தலைவன் சென்றிருக்கும் காட்டுவழி மிகவும் கொடியது. ஒரு துணிப்பையில் பொற்காசுகள் (நிதியம் - நிதி) நிறைந்திருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அது ஒரு சிறு மூட்டைபோல இருக்கும். அப்பையிலிருந்து காசுகள் அனைத்தும் சொரிந்து வெளியேற்றப்பட்டால் அத்துணிப்பை எப்படி சுருங்கிகிடக்குமோ அப்படி பாம்புகள் வாடிவதங்கிக் கிடந்திருக்கின்றன .

பறவை ஒலியால் ஏமாந்த தலைவன், தலைவி!

"பாம்பு எறி கோலின் தமியை வைகி
தேம்புதி கொல்லோ?- நெஞ்சே ...."
(அகநானூறு, பாடல் 322, வரிகள் 5,6)

இரவுக்குறியில் தலைவியைச் சந்திக்க வரும் தலைவன் பறவைபோல் குரல் எழுப்பி, அவனது வருகையை உணர்த்துவான். அன்றும் அதுபோல் பறவைஒலி எழும்பியது, ஆனாலும் தலைவன் வரவில்லை. அப்போதுதான் தெரிந்தது, அது இயற்கையில் பறவை எழுப்பிய ஒலி என்று. ஏமாற்றத்துடன் தலைவியும், தோழியும் திரும்புகின்றனர். அந்தவேளையில் தலைவன் வந்து குரல் எழுப்புகிறான். அதனைத் தலைவி கேட்டாலும், அது இயற்கையில் பறவை எழுப்பும் ஒலி என்று கருதியதால் தலைவி வீடுதிரும்பிவிட்டாள். தன்னைக்காணாது, தலைவி எப்படித் துன்புற்றிருப்பாள் என்று தலைவன் பலவிதமாக எண்ணிப்பார்க்கிறான். கோலால் அடிபட்டப் பாம்பு எப்படித் துடித்திருக்குமோ அப்படித் தலைவியும் தனிமையில் வருந்தியிருப்பாள் என்றும் எண்ணிப்பார்க்கிறான். கோல்கொண்டு பாம்பினை அடிக்கும் வழக்கம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச்சமூகத்தில் தோன்றிவிட்டது.

"எறிகோல் அஞ்சா அரவின் அன்ன"
(புறநானூறு, பாடல் 89, வரி 5)

ஔவை அதியமான் நெடுமான் அஞ்சியைப் புகழ்ந்து பாடிய பாடல். அதியமான் போர்ப்படையில், அடிக்கும் கோல்கண்டு அஞ்சாத நாகப்பாம்பைப்போன்ற போர்வீரர்கள் இருந்தனர் என்கிறார் ஔவை.

படம்விரித்து ஆடும் சில நாகப்பாம்புகள், கோல் எடுத்து அடிக்கப்போகும்போது, படத்தைச் சுருக்கிக்கொண்டு அஞ்சி ஓடிவிடுவதுண்டு. மாறாக, விரித்தப் படத்துடன் நின்று அஞ்சாமல் எதிர்கொள்ளும் நாகப்பாம்புகளும் உண்டு.

உவமைகள்:

"தண்நில மருங்கில் போழ்ந்த வழியுள்
நிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுக
செல்லும் நெடுந்கை தேரே
முல்லை மாலை நகர்புகல் ஆய்ந்தே"
(அகநானூறு, பாடல் 324, வரிகள் 12-15)

பிரிந்துசென்ற தலைவன் தேரில் இல்லம் திரும்புகிறான். அக்காட்சியை அவனது பணியாள் எண்ணிப்பார்ப்பதுபோன்ற பாடல். முல்லைநிலத்தில் மழைபெய்து நனைந்த நிலத்தில் தலைவனது தேர் ஓடுகிறது. அதன் சக்கரங்கள் ஏற்படுத்திய பள்ளங்களில் மழைநீர் ஓடுகிறது. அந்தக்காட்சி பாம்புகள் வளைந்துநெளிந்து ஓடுவதுபோல இருக்கிறது என்பதாகும்.

பழுநி என்னும் நாட்பட்டக் கள்:

"என்ஆ வதுகொல் தானே முன்றில்
----- ----- ----- ----- ----- ----- ----- -----
நெடுங்கண் ஆடுஅமைப் பழுநி கடுந்திறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாப்புக்கடுப்பு அன்ன தோப்பி வாங்கோட்டுக்
கடவுள் ஓங்கு வரைக்கு ஒக்கி, குறவர்
முறித்தழை மகளிர் மடுப்ப, மாந்தி...."
(அகநானூறு, பாடல் 348, வரிகள் 6-9)

தலைவன் தலைவியைச் சந்திக்க வருகிறான். அவன் நிற்பதை அறியாததுபோல் தலைவி, தோழிக்கு உரைக்கிறாள். தலைவன் தன்னை மணம் செய்துகொள்ள வேண்டும் என்று உணர்த்தும் பாடல்.

தலைவியின் வீட்டு முன்றிலில் மாமரம், பலாமரம் நிற்கின்றன. இரண்டு மரங்களிலும் பழங்கள் பழுத்திருக்கின்றன. அம்மரங்களில் தேன்கூடுகளும் உண்டு. மாம்பழங்கள், பலாச்சுளைகள் ஆகியவற்றுடன் தேன்கலந்து கணுக்களை உடைய மூங்கில் குழலில் நீண்டநாள் வைத்திருந்த தோப்பிக்கள்ளானது நாகப்பாம்பின் சீற்றத்தைப்போன்று வெறி (போதை) உடையதாக இருக்கும். அப்படிப்பட்டக்கள்ளை தெய்வம் உரையும் உயர்ந்த மலைக்குப் படைத்து, அதன்பின்னர் தழையாடை அணிந்த மகளிர் கொடுக்க குறவர்கள் அருந்துவர். 'பழுநி' என்பது முதிர்ந்த கள்ளைக்குறிக்கும்.

நான் திருவண்ணாமலையில் வசித்தபோது, அங்கே பதநீர் விற்பவர்கள், 'பழநி' 'பழநி' என்று சொல்லி விற்பதைக் கேட்டிருக்கிறேன். பதனீரை, தென்மாவட்டங்களில் 'பைநி' என்று சொல்வார்கள். இப்பாடலைப் படித்தபிறகு கள்ளைக் குறிக்கும் 'பழுநி' என்னும் சங்கத் தமிழ்ச்சொல்தான் அப்படி 'பழநி' என்றும், 'பைநி' என்றும் மருவியிருக்க வேண்டும் என்று புரிகிறது.

"தேட்கடுப்பு அன்ன நாட்படு தேறல்"
(புறநானூறு, பாடல் 392)

என்னும் புறநானூற்றுப் பாடலில், தேள் கொட்டினால் எப்படிக் கடுப்பு ஏற்படுமோ அதுபோல் வெறியை ஏற்படுத்தும் கள் என்று குறிப்பிடுவது இங்கே ஒப்புநோக்கவல்லது. நீண்டகாலம் புளிக்கவைக்கப்பட்டக் கள்ளுக்கு அப்படி ஒரு பண்பு கிடைக்கும் என்பது உள்ளுறை விளக்கம்.

அந்த வகையில், நாகப்பாம்பு தீண்டினால் எப்படி நஞ்சு விரைந்து பரவுமோ அதுபோல நாட்படுக் கள்ளின் வெறிகொண்ட போதையும் உண்டாகும் என்றும் பொருள்கொள்ளலாம்.

கானக்களிற்றைத் துன்புறுத்தும் குட்டிநாகம்

"சிறுவெள் அரவின் அவ்வரிக் குருளை
கான யானை அணங்கி யாங்கு
இளையள், முளைவாள் எயிற்றள்
வலையுடைக் கையள்எம் அணங்கியோளே."
(குறுந்தொகை, பாடல் 119)

இயற்கைப்புணர்ச்சி முடிந்து திரும்பும் தலைவன் தன் பாங்கனிடம், "தலைவி இளைமை அழகுடையவள், நாணலது முளைபோலும் ஒளிவீசும் பற்களை உடையவள், வளையல் அணிந்த கைகளை உடையவள். காட்டுயானையை வெண்ணிற வரிகளைக்கொண்ட நல்லபாம்புக்குட்டித் தீண்டித் துன்புறுத்துவதைப்போல, அவளது பிரிவு என்னை வாட்டுகிறது" என்பதாக கூறுகிறான்.

அத்தனை பெரிய காட்டுயானையே ஆனாலும், நல்லபாம்புக் குட்டியிடம்கூட அஞ்சும். காரணம் யானையை வருத்தும் கொடிய நஞ்சினை உடையது நாகப்பாம்பு.

பாம்புச்சட்டை

உயிர் வாழ்தலுக்காக, நாகப்பாம்பு அதன் மேற்தோலை அவ்வப்போது புதுப்பிக்க வேண்டும். பழைய தோலை உரித்துவிட்டு, புதியதோலை உருவாக்கிக்கொள்ளும் பண்பு நாகத்திற்கு உண்டு. அதனை நாங்கள் நல்லபாம்பு சட்டை உரித்திருக்கிறது என்று சொல்வது வழக்கம். கள்ளிகளில் நல்லபாம்பு கழட்டிய சட்டை படர்ந்திருப்பதை பலமுறை நான் பார்த்திருக்கிறேன். சட்டை உரித்த பாம்பை 'கோடிப்பாம்பு' என்று சொல்வது வழக்கம். கோடிப்பாம்பு வெள்ளிபோல் மினுங்கும்., மிகுந்த சீற்றத்துடன் காணப்படும். அந்த பாம்புச்சட்டை உவமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

பாம்புச்சட்டைபோல் வீழும் வெள்ளருவி

" --- --- --- --- --- --- --- --- --- --- ---
பல்வரிப்
ஓம்புமதி வாழியோ வாடை, பாம்பின்
தூங்குதோல் கடுக்கும் தூவெள் ளருவிக்
கல்உயர் நண்ணி யதுவே நெல்லி..."
(குறுந்தொகை, பாடல் 235, வரிகள் 1,2,3)

தலைவன் வாடைக்காற்றுக்குச் சொல்வதுபோல தேர்ப்பாகனுக்குக் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை உச்சியில், தொங்கிக்கொண்டிருக்கும் வெண்ணிற பாம்புச்சட்டைபோல, அருவிநீர் வீழ்ந்துகொண்டிருக்கும். அதன் அருகில் நெல்லிமரம் உள்ள முன்றிலை உடையது தலைவியின் ஊர். கீழ்க்காற்றே, அவளை வருத்தாமல் காப்பாயாக.

நாகப்பாம்பு நாக்குபோல் கிழிந்த ஆடை

"ஈன்ற அரவின் நா உருக் கடுக்கும்என்
தொன்றுபடு சிதாஅர் துவர நீக்கிப்
போதுவிரிப் பகன்றைப் புதுமலர் அன்ன
அகன்றுமடி கலிங்கம் உடீஇச் செல்வமும் .."
(புறநானூறு, பாடல் 393, வரிகள் 15-18)

புலவர் நல்லிறையனார், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியது. அண்மையில் முட்டையிட்ட நாகப்பாம்பின் பிளவுபட்ட நாக்கைப்போன்று கிழிந்திருந்த ஆடையை அகற்றி, பகன்றையின் புதுமலர்போன்ற அகலமான உடையை உடுத்தச் செய்து பரிசில்களும் வழங்கும் மன்னன் கிள்ளிவளவன் மடிந்துவிட்டான் என்ரு கையறு நிலையில் பாடும் பாடல்.

"விரவுவரிக் கச்சின் வெண்கை ஒள்வாள்
வரைஊர் பாம்பின் பூண்டு புடைதூங்க..."
(பெரும்பாணாற்றுப்படை, வரிகள் 71,72)

முத்து, பவளம் போன்ற பொருட்களை விற்கும் வணிகர் கூட்டம் காட்டுவழியில் பயணிக்கும். அக்கூட்டத்திற்கு பாதுகாப்பாக வீரர்கள் வருவார்கள். அவர்களின் மார்க்கச்சையில், யானைத்தந்தத்தினால் ஆன பிடியினைக்கொண்ட வாள் தொங்கிக் கொண்டிருக்கும்.

பாம்புச்சட்டைபோல் பாலைவெயில்

"யாங்குஅறிந் தனர்கொல் தோழி பாம்பின்

உரிநிமிர்ந் தன்ன உருப்புஅவிர் அமையத்து... "(குறுந்தொகை, பாடல் 154, வரிகள் 1,2)

தலைவன் பிரிந்துசென்ற பாலைவழியில் நண்பகல் வேளையில் வெயிலானது சட்டை உரித்தப் பாம்பைப்போல ஒளிரும்.

ஐந்தலைப் பாம்பு

"நஞ்சுடை வாலெயிற்று ஐந்தலை சுமந்த
வேக வெந்திறல் நாகம் புக்கென"
(புறநானூறு, பாடல் 37, வரிகள் 1,2)

நஞ்சும், வெண்ணிறப் பல்லும், மிகுந்த சீற்றமும்கொண்ட நாகப்பாம்பு. அழகிய தலையை (ஐ- அழகு) உடைய பாம்பு (ஐந்து தலைகளை உடைய பாம்பு அல்ல)

துணங்கை ஆடும் பேய்மகள்

"உலரிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்
குழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
சுழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்க
------............ ....
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க"
(திருமுருகாற்றுப்படை, வரிகள் 47-56)

போர்க்களத்தில் பிணம்தின்று, துணங்கை ஆடும் பேய்மகளின் காதுகளில் பாம்புகளைக் கயிறாகக்கொண்டு ஆந்தைகளைக் குண்டலங்களாக தொங்கவிட்டிருக்கிறாள்.

பாம்பு என்றாலே, அது நாகப்பாம்பு என்பதாகத்தான் சங்கஇலக்கிய பாடல்களில் இருந்து அறிந்துகொள்ள முடிகிறது. என்றாலும், மலைப்பாம்பு, பச்சைப்பாம்பு பற்றிய குறிப்புகளும் உள்ளன.

நாகப்பாம்பின் நஞ்சுக்கு முறிவுமருந்து

நவீன மருத்துவத்துவம் நாகப்பாம்பின் நஞ்சினையே, நாகப்பாம்பு தீண்டியவருக்கு மருந்தாகப் பயன்படுத்துகிறது. ஆனால், பல நூற்றாண்டுகளாக நாகப்பாம்பு நஞ்சை முறிக்க இயற்கை மருந்து வடதமிழ்நாட்டில் வாழும் இருளர் பழங்குடியினரிடம் இருந்துவருவதாகவும், உலக அளவில் நாகப்பாம்பின் நஞ்சை முறிக்கும் இயற்கை மருத்துவம் இருளர் பழங்குடியினரிடம் மட்டுமே உள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

சிறுமணவூர் முனிசாமி முதலியார் எழுதிய 'விஷவைத்திய சிந்தாமணி என்னும் நூலில், தமிழ்மண்ணில் காணப்படும் பலவகையன நாகப்பாம்புகள், அவற்றின் வாழ்வுமுறை, அவை தீண்டினால் ஏற்படும் விளைவுகள், நான்கு நச்சுப்பற்களில் முறையே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு பற்களின் கடிக்கு நஞ்சு எப்படி ஏறும் என்னும் விபரம், ,நாகப்பாம்ப் கடிக்கு மாற்றுமருந்து போன்று பலதரப்பட்ட மருத்துவ செய்திகள் மிகவும் செரிவாக காணப்படுகின்றன.

●

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளுரு:
போரின் வலியும் இழப்பும் தோய்ந்த நாடகம்

மதுரை நகரில் அண்மையில் நிகழ்த்தப்பட்ட முருகபூபதியின் போருக்கு எதிரான 'மீளுரு' என்ற நாடகத்தைப் பார்த்திடும் வாய்ப்புக் கிடைத்தது. திறந்தவெளியில் திரைச்சீலைகளின் பின்புலத்தில் காட்சிப் படிமங்கள்மூலம் நடைபெற்ற நாடகம், பார்வையாளரிடம் முடிவற்ற கேள்விகளை எழுப்பியது. வெறுமனே பொழுதுபோக்கு என்று கடந்துவிட இயலாமல் கடுங்கூத்தாக இன்றளவும் நாடகம் துரத்திக் கொண்டிருக்கிறது. மீளுரு நாடகப் பிரதியை எழுதி, இயக்கிய ச. முருகபூபதியின் போர் பற்றிய அவதானிப்பு உருவாக்கியுள்ள கேள்விகள் அரசியல் பின்புலமுடையவை. பள்ளிக்கூடத்தில் வரலாறு பாடப் புத்தகத்தில் மன்னர்களும் அரசியல்ரீதியிலான போர்களும் என்று எளிதில் கடந்துபோன விஷயங்களைச் சமூக அக்கறையுடன் மாறுபட்ட கோணத்தில் நாடகமாக்கியதில் இயக்குநரின் சமூக அக்கறை, வெளிப்பட்டுள்ளது. நடிகர்களின் உடல் மொழியும் உலுக்குகின்ற குரலும் இசைந்திட நிகழ்த்தப்பட்ட காட்சிகள், மனித இருப்பின் அவலத்தை முகத்தில் அறைந்ததுபோல காட்சிப்படுத்தின. ஏன் மனிதர்கள் கொலைவெறியுடன் சக மனிதர்களைப் போர் என்ற பெயரில் கொன்று குவித்தனர் என்று பார்வையாளரிடம் நாடகம், விவாதத்தை ஏற்படுத்தியது. நாடகக் காட்சிகளில் மங்கலான ஒளிக்கற்றையில் உயிர்த்தெழுந்த பிம்பங்களான நடிகநடிகையரின் உடல்களில் இருந்து வெளிப்பட்ட வாதைகள், வெளியெங்கும் மிதக்கின்றன.

காலந்தோறும் மனிதர்களுக்கும் போருக்குமான நெருக்கமான பிணைப்பைக் கண்டறிந்திட வேண்டியுள்ளது. போரையும் போரின் கொடிய விளைவுகளையும் நேரில் கண்டிராத/ அனுபவிக்காத நமக்குப் போர் வெறும் சொல்தான். ஏதோ ஒரு நாட்டில் எங்கோ ஓரிடத்தில் நடக்கிற போர் என்று சாதாரணமாகக் கடந்து போகிற விஷயமல்ல என்று நாடகாசிரியர் பதிவாக்கியுள்ளளார். போர் என்ற சொல்லின் பின்னர் புதைந்திருக்கிற அரசியலையும் வரலாற்றில் போர் விளைவித்துள்ள பேரழிவுகளையும் பேரவலத்துடன் காட்சிப்படுத்தியுள்ள இயக்குநரின் நோக்கம் முழுமையடைந்துள்ளது.

உலகில் வாழ்கின்ற எந்தவொரு உயிரினங்களும் மனிதர்களைப்போல லட்சக்கணக்கில் கூட்டமாக ஒன்று சேர்ந்து ஒரே இடத்தில் வாழ்கிற வழக்கமில்லை. அதேவேளையில் அவை இடம், உணவு போன்றவற்றுக்காக எதிர்க் குழுவினரைக் கூட்டக்கொலைகள் செய்வதும் இல்லை. பண்டைக்காலத்தில் மனிதர்கள் இனக்குழுச் சமூகமாகக் கூடி வாழ்ந்தபோது எதிர் இனக்குழுவுடன் ஏற்பட்ட மோதல்கள், போர் என்ற பெயரில் வீரயுகப் பாடல்களாகப் பதிவாகியுள்ளன. அகத்தில் பெண்ணுடலையும் புறத்தில் நிலத்தையும் துய்த்திட முயன்ற ஆண்களின் அதிகாரம்தான் போர்களுக்கான அடிப்படை. அண்டை நாடுகளை எதிரிகளாகக் கருதி, ஆக்கிரமிக்க முயலுகிற ஆட்சியாளர்களுக்குக் கொல்லப்படும் மனித உடல்கள் ஒருபொருட்டல்ல. மனிதகுல வரலாறு என்பது முழுக்க ரத்தம் சிந்துகின்ற அரசியல்தான். உலகமெங்கும் இதுவரை நடத்தப்பட்ட போர்களினால் நிகழ்ந்த கூட்டக்கொலைகளும் வன்புணர்வுகளும் சூறையாடல்களும் அளவற்றவை. ஜெர்மனியில் பாசிஸ்ட்களின் சித்ரவதைக்கூடங்களில் கொல்லப்பட்ட யூதர்களான ஆண்கள், பெண்கள் எண்ணிக்கைக்குக் கணக்கேது? யுத்தத்தின்போது இன்னொரு நாட்டை ஆக்கிரமிக்க நுழைகின்ற ராணுவத்தினரினரால் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்ட பெண்ணுடல்கள் அடைந்த வதைகள் கொடூரமானவை. ஹிரோசிமா, நாகசாகி நகரங்களில் வீசப்பட்ட அணுகுண்டுகளைவிட வீரியமான கொலைகார ஆயுதங்களுடன் இன்று வல்லரசு நாடுகள் போருக்காகக் காத்திருக்கின்றன; சகமனிதர்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்வதற்காக உயிரியல் யுத்தம் என்ற பெயரில் பில்லியன்கணக்கில் ஆய்வுகள் நடைபெறுகின்றன. பாலஸ்தீனம், ஈழம் தொடங்கி அவ்வப்போது நடைபெறுகின்ற யுத்தங்களினால் பெரிதும் பாதிக்கப்படுவது பெண்களும் குழந்தைகளும் முதியோர்களும்தான். சர்வாதிகாரிகளான ஆண்கள் கட்டமைக்கின்ற அதிகாரத்தின் விளைவான போர்களுக்கு எதிராகப் படைப்பாளர்கள் காத்திரமான படைப்புகள்மூலம் எதிர்வினையாற்றிக் கொண்டிருக்கின்றனர். இலக்கியப் படைப்புகளும் நிகழ்த்துக் கலைகளும் போருக்கு எதிரான குரலை உலகமெங்கும் ஆவேசத்துடன் பதிவாக்கியுள்ளன. தமிழைப் பொருத்தவரையில் போர் பற்றிய கலை, இலக்கியப் படைப்புகள் மிகவும் குறைவு. முருகபூபதி, அடர்ந்த வனத்துக்குள் வாழ்கின்ற பழங்குடியினரின் வாழ்க்கையைச் சிதலமாக்குகிற போர் என்ற கருத்தியலை முன்வைத்துக் கூத்து வடிவில் காட்சிப்படுத்தியுள்ள நாடகக் காட்சிகள் சமகால அரசியலைப் பேசுகின்றன.

நாடகத்தின் தொடக்கத்தில் கானகத்தின் பாறைக்குள்ளிருந்து மரத்தைத் தழுவியிருக்கும் குள்ளப்பெண், விரிந்த கூந்தலுடன் குலவை ஒலியுடன் கையில் சாவிக்கொத்துடன் அரங்கினுள் நுழைகிறாள். அவளுக்குப் பின்னர் அணங்குகளை நினைவூட்டுகிற மூகமூடி அணிந்த கூட்டம். கொதவளையில் தோட்டாக்கள் குத்தித் துளைத்திட துடிக்கிற கதைசொல்லிக்குத் தண்ணீர் கொண்டு வந்த சாவி எனப் பெண் உரத்த குரலில் ஓலமிடுகிறாள். அவள் யுத்தத்தினால் குண்டு துளைக்கப்பட்ட சால்வையை அவிழ்த்துப் போர்க்காயம் படிந்த நிலத்தைத் துடைத்து முனகல்களுடன் வெளியேறுகிறாள். யுத்தத்தின் முதல் பலி பெண் தான் என்று தொடங்கிடும் நாடகத்தின் காட்சிப் படிமம், பார்வையாளரைத் தொந்தரவு செய்கிறது.

பழங்குடியினரான ஆணும் பெண்ணுமான வனவாசிகள் தங்களுடைய வனத்தின் இசைக் கருவிகளையும் மர உரல்களையும் விதைகளையும் கொண்டு இசையுடன் சடங்கியல் நடனமாடுகின்றனர். நாடகம் முழுவதும் இசைக்கப்படும் பழங்குடியினரின் இசைக்கருவிகளில் இருந்து பீறிட்டெழும் இசை, வனவாசிகளின் ஆன்மாவாக வெளியெங்கும் நிரம்பி வழிகிறது. அடர்ந்த வனத்தின் மரங்கள், விலங்குகள், பறவைகள் போன்றவற்றுடன் ஒத்திசைந்து வாழ்கின்ற வனவாசிகள் மூங்கில் இசைக் கருவிகள், தோல் வாத்தியக் கருவிகளுடன் தங்களுடைய இருப்பை அர்த்தப்படுத்தியவாறு இருண்ட வனத்திற்குள் மறைகின்றனர். வனமும் மனிதர்களும் பிரிக்கவியலாதவாறு பிணைந்திருப்பதை நாடகக் காட்சிகள் காட்சிப்படுத்துகின்றன. காட்டுக்குள் மனிதர்கள் வாழும் குடியிருப்பையொட்டி வேங்கை இயல்பாக நடந்து செல்கின்ற குறிஞ்சி நிலக் காட்சியைப் பதிவாக்கியுள்ள சங்கப் பாடல் வரிகள் என் நினைவிலாடுகின்றன.

வன உயிர்களை மூதாக்கள் என்று கருதுகின்ற வனவாசிகள் வாழ்கின்ற காட்டுக்குள்ளே அதிகாரவர்க்கத்தினர் தொடங்கிய போரைக் கண்டித்து வனவாசி குரலெழுப்புகிறான். இரண்டாம் உலகப் போரின்போது உலகமே தன்னுடைய காலுக்குக் கீழ் என்று வதை முகாம்களைத் திறந்த சர்வாதிகாரி ஹிட்லரின் பேராசைக்குப் பலியான சைபீரியா காட்டுக்குள்ளே வாழ்ந்த ஷாமன்னு பழங்குடியினரின் துயரம் அளவற்றது. இரண்டாம் உலகப் போரில் கூண்டோடு கொல்லப்பட்ட ஷாமன் வனவாசிகளின் அவலக்குரல்கள் இன்றும் வனமெங்கும் ஒலிக்கிறதென முருகபூபதி சித்திரிக்கிற காட்சிகளும் உடல்களின் வெளிப்பாடுகளும் முக்கியமானவை. உலகில் எந்தவொரு விலங்கும் பிரயோகிக்காத வன்முறையைக் குற்றமனம் இல்லாமல் இயல்பாகச் செய்கின்ற வன்முறையாளர்களின் கொடுங்கோன்மையை நாடகம் வலியுடன் பதிவாக்கியுள்ளது. மனிதர்கள் மட்டுமல்ல பறவை, விலங்கு, மரம், செடி, புல் போன்ற உயிரினங்களும் பீரங்கிக் குண்டுகளால் நாசமாகின. அன்பின் கருணை மிக்க வனவாசிகளின் குரல்கள் போர்க் காதுகளுக்குக் கேட்கவில்லை. மூதாவின் ஆலோசனையின்பாடி வனவார்சிகள் புதிய மூகமூடிகள் அணிந்து குண்டுச் சத்தத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுகின்றனர். போர்த் தளபதியின் ஆணைக்கேற்ப ராணுவத்தினர் ஷாமன் பழங்குடியினரைக் கூட்டமாகச் சுட்டுக் கொல்கின்றனர். இசைக்கருவிகளை ஆயுதமாக ஏந்திய ஷாமன் வனவாசிகள், ரத்தக்கறை படிந்த பாறைகள்மீது நின்று வாசிக்கத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினர். மூதாவை வணங்கிய வனவாசிகள் இசைக்குள் அடங்கி வனத்தின் இருளுக்குள் மறைந்தனர். மனித உயிர்களைக் கொன்று குவிக்கிற போர்களைத் தேசத்தின் பெயரில் நடத்திட ஆணை பிறப்பிக்கின்ற சர்வாதிகாரிகளின் கொடூர வேட்டைக்கு முதலில் பலியாவது அப்பாவி மக்கள்தான். சைபீரியா காட்டையொட்டி வாழ்ந்த பழங்குடியினரைக்கூடப் போர் விட்டு வைக்காமல் உயிர்களைப் பலி வாங்கிடும் சூழலில், மாநகரங்களில் சொகுசாக வாழ்கின்றவர்கள் மட்டும் விதிவிலக்காகி விட முடியுமா? தேசம், இனம், மொழி, மதம் போன்ற பெயர்களில் விதைக்கப்படும் வெறுப்பு, கசப்பு போன்றவை பல்கிப் பெருகி, காலப்போக்கில் வன்முறையில் தோய்ந்து ரத்த வெள்ளம் தெருக்களில் பாய்ந்தோடும். அப்பொழுது நம்மால் என்ன செய்ய முடியும் என்ற கேள்வியை முரட்டு ஆடைகளுடன் மூகமூடி அணிந்து வனத்தின் வாத்தியக் கருவிகளை இசைத்துத் தாவிக் குதிக்கிற நடிகர்கள் எழுப்புகின்றனர்.

நாடக அரங்கில் எல்லைக்கோடு போல நீண்ட குறுகலான செவ்வகத் துணி விரிக்கப்பட்டுள்ளது. நடுவில் நீண்டிருக்கிற துணியின் இருபுறமும் பெரிய சாவியைத் தூக்கியவாறு வந்து அமர்ந்திடும் நடிகநடிகையர் போர் ஏற்படுத்திய துயரத்தில் தத்தளிக்கின்றனர். காட்சியின் படிமத்திற்கு ஏற்றவாறு புல்லாங்குழல்களின் இசையும் மணிகளின் ஒலியும் எங்கும் பரவிட கூட்டத்தினர் வேதனையுடன் முனங்குகின்றனர். எதிரே விரைத்திருக்கிற சுவருக்கு அப்பால் இருக்கிற மனிதர்களுடன் பேசுவதான பாவனையில் விரிந்திடும் காட்சித் துணுக்குகள் யுத்தத்தின் வலியைச் சித்திரிக்கின்றன. முருகபூபதியின் நெறியாளுகையில் போரில் கொல்லப்பட்ட மனிதர்களுடான உரையாடல்கள், உயிரோடு இருப்பவர்களின் துயரத்தையும்வேதனையையும் நுணுக்கமாக விவரிக்கின்றன. பால் பேதமற்ற வேறுபட்ட மனிதர்கள் போரின் காரணமாக எதிர்கொண்ட இழப்புகளின் வலியைக் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவரும் 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரும் அறமாக விளங்கிடும் தமிழர் வாழ்க்கையில் போரின் விளைவுகளாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நாடகக் காட்சிகள், பார்வையாளர்களை யோசிக்கத் தூண்டுகின்றன. நடிகர்கள் இரு பிரிவுகளாகப் பிரிந்து அடைந்த துயர அனுபவங்களின் இறுதியில் நடுவில் இருக்கிற சுவரை உடைத்து எல்லோரும் ஒன்று சேர்கின்றனர். இதுவரை அடிமைத்தளையில் தகர்க்க முடியாமல் இருந்த தடையை மக்கள் உடைத்தனர் என்று இயக்குநர் காட்சிபடுத்துதல், ஒருவகையில் வன்முறைக்கு எதிரானது. போரினால் வீழ்ந்து மரித்துக் கிடந்த உடல்களை இசையினால் எழுப்பி, வனப்பெண்ணுடன் காட்டுக்குள் போய் மறைகின்றனர். வெறுமனே உருக்கமாகத் துயரத்துடன் காட்சிப்படுத்தப்படும் யதார்த்தமான நாடகக் காட்சிகளுக்கு மாற்றாக நடிகநடிகையரின் உடல், குரல், ஓசை, ஒளி, ஆடை மூலம் அரங்கில் நடைபெறுவது நாடகம் என்ற உணர்வை நாடகக் காட்சியாக்கம் உருவாக்குகிறது.

நாடகத்தின் நிறைவில் பெண்கள் " நாங்க வந்துட்டோம். போர் நிறுத்த முரச இப்ப அடிங்கடா" என்று அணங்குகளாகக் கூடி நின்று இசையுடன் ஆடிப்பாடி உச்ச நிலைக்குப் போகின்றனர். ஒப்பீட்டளவில் போர் பெண்ணுக்கு எதிரானது என்ற கருத்தை வலியுறுத்துகிற காட்சியமைப்பு, இயக்குநரின் படைப்பாக்கத்திற்குச் சான்று. அரங்கில் ஒளி மீண்டும் மங்கலாக ஒளிர்ந்து மறைந்தபோது எங்கும் ஒருவிதமான இறுக்கம் சூழ்ந்திருந்தது. நாடகக் காட்சிகளால் உறைந்திருந்த பார்வையாளர்கள், மெல்லக் கரவொலி எழுப்பினர்.

முத்தமிழ் என்று போற்றப்படுகின்ற தமிழில் இன்று நாடகம் எழுதுதலும் நிகழ்த்துதலும் அருகிக் கொண்டிருக்கின்றன. மின்னணு யுகத்தில் ஸ்மார்ட் அலைபேசியின் தொடுதிரையில் ஒளிர்ந்திடும் காட்சித் துணுக்குகளுக்குள் பலரும் மூழ்கியிருக்கிற சூழலில் மீளொரு நாடகத்தை எழுதி, இயக்கியுள்ள முருகபூபதியின் பணி, நாடக வரலாற்றில் நிலைத்திருக்கும். உடல்களையும் குரல்களையும் முதன்மையாக்கி நாடகத்தில் நடித்த மணல் மகுடி நாடக நிலம் அமைப்பினைச் சார்ந்த நடிகநடிகையரின் நடிப்பு, அற்புதம்.

கட்டுரையாளர்: எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் கரும்பும் பொங்கிய கண்ணீரும் காலனிய காலத்தின் கரும்புத்தோட்டங்களில் அடிமைப்பாடுகள்

01.மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவினை(*Man-environment relationship*) வரலாறு எனலாம். இன்னொருவகையில் சொல்வதானால், மனிதன் தன் தொழில்நுட்பத்தின் வாயிலாக இயற்கையினை தனக்கு ஏற்றதாக மாற்றும் முயற்சியில் எதிர்கொள்ளும் நிகழ்வுகளை வரலாறு எனலாம். தொடக்கத்தில் மனிதன் விலங்குகளை தனக்காக வளர்த்தான், பழக்கினான் (*domestication and tamig*). தொடர்ந்து சகமனிதனையும் தன் நலனுக்காகப் பழக்கினான். விலங்குகளையும் தாவரங்களையும் அதிகமாகப் பழக்கும்போதும் / வளர்க்கும்போதும் மனிதனின் உழைப்பு மேலதிகமாகத் தேவைப்படுகிறது. அவ்வாறு, மனிதச்சமூகம் தனக்கு ஓர் அடிமைச் சமூகத்தினை உருவாக்குகிறது. புதிய கற்காலத்தில், மனிதர் பயிரிடும் முறையினைக் கற்றனர் என்பர். ஆனால், அப்போது அனைத்து வகையான உணவுப் பயிர்களும் பயிரிடப்படவில்லை. மனிதர் நாவினால் சுவைக்கவும் பேசவும் கற்றனர், சுவையின் வகையினையும் அறிந்தனர். சுவைகளில் தலையாயது இனிப்பு. இனிப்பினை பல தாவரங்கள் தருகின்றன. உலகில், இனிப்பான கனிகளே அதிகம். கரும்பு ஓர் இனிப்பான முழுத்தாவரம். இதன் தாவரவியல் பெயர் *Sacharam officianarum*. இது, புல்வகையினை சார்ந்த ஒருவிதையிலைத் தாவரம். கரும்பு இனத்தில் ஏழுவகைகள் உண்டு. இவற்றில் சீனாவிலும் இந்தியாவிலும் விளையும் கரும்புவகை தடிமனானது அதிகமான சாறு உடையது. கரும்பினை சுட்டும் சொற்கள் *Proto-Austronesian* மொழிகளிலிருந்து வந்ததாகவும் இதன் தோற்றம் கி.மு.8000 முதல் 10,000என்றும் சொல்லப்படுகிறது.

02.இங்கு நவீனகாலத்திற்கு முன்புவரை சமூகத்தில் சர்க்கரையின் இடம் என்ன என்பதையும் அது சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களையும் அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு நூலின் வழியே அறியும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

03. இன்றைக்கும் இப்பரந்த உலகில் கரும்பு பெரும்பாலும் தீவுகளில்தான் விளைகிறது. இவை தரும் சர்க்கரையால் உலகநாடுகளின் மக்கள் இனிப்படைகின்றனர். கரும்பின் பிறப்பிடம் ஆஸ்திரேலியாவிற்கு மேல் பசிபிக் பெருங்கடல் பரப்பில் அமைந்துள்ள நியூகினியா என்றும் அங்கிருந்து கடல்வழியே மடகாஸ்கர், சீனா, இந்தியா போன்ற பகுதிகளுக்குப் பரவியாதகவும் அறியப்படுகிறது. நவீன காலத்திற்கு முன்புவரையும், இன்றைக்கும்கூட தீவுகளில்தான் அதிகமான அளவு சர்க்கரை தாயரிக்கப்படுகிறது. அமெரிக்கக்கண்டத்தின் அருகே கியூபாவும்,கிழக்கே சீனாவிற்கு அருகிலுள்ள தைவானும்தான் உலகின் சர்க்கரை கிண்ணங்கள் என்று அழைக்கப்படுகின்றன. மத்தியத் தரைக்கடல் தீவுகளிலும், ஸ்பெயினுக்கு அருகே அமைந்துள்ள தீவுகளிலும் அட்லாண்டிக் கடலின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ள தீவுகளிலும் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. பிரேசிலை ஒட்டியுள்ள தீவுகள் பெருமளவிற்கு சர்க்கரையினை உற்பத்தி செய்கின்றன. இரு அமெரிக்கக் கண்டத்தின் இடையில் அமைந்துள்ள கரிபியன் தீவுகள், ஹவாய்தீவுகள். பிரேசில் அருகேயுள்ள தீவுகள் அட்லாண்டிக் கடலில் அமைந்துள்ள ஐபேரியன் தீவுகள், ஜமாய்க்கா தீவுகள் போன்ற இடங்களில் சர்க்கரை உற்பத்தியால் நிகழ்ந்த பொருளியல்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மாற்றங்களை அறிவதும் இங்கு கவனமாகிறது. சர்க்கரையின் உற்பத்திக்கு அடிமைமுறை எப்படி ஏற்றதாக அமைந்தது என்பதையும் அதனை மேற்கு ஐரோப்பிய நாடுகள் எவ்வாறு தங்களுக்காக பயன்படுத்திக்கொண்டன என்பதையும் இதனால் அறியலாம்; கீழைத்தேய நாடுகளுக்கு உண்டான இழப்பினையும் அறியலாம்.



04. கரும்பிலிருந்து பிரித்தெடுக்கப்படும் சர்க்கரையின் வேதியியல் வாய்ப்பாடு C12H22O11; வேதியியல் பெயர் சுக்ரோஸ்; இதன் உணவுப்பெயர் சர்க்கரை *(brown in colour)*. நன்கு சுத்திகரிக்கப்பட்ட வெண்சர்க்கரை சீனி எனப்படும். இவ்வகைச் சர்க்கரையினை சீனர்கள் முதன்முதலில் தயாரித்ததால் சீனி எனப்பட்டது. உலகத்தின் வரலாற்றில் சர்க்கரை உணவுப் பயன்பாட்டிற்கு வந்து சுமார் 2500 ஆண்டுகள் ஆகின்றன. தொடக்கத்தில் இது ஓர் அரியபொருளாக *(exotic)* அறியப்பட்டது. அரசு விழாக்களிலும், மருத்துவத்திற்கும் பயன்பட்டன. பழங்காலத்தில் இந்தியா, சீனா, மத்திய-ஆசியா, ஆப்பிரிக்காவின் வடக்கு, ஐரோப்பாவின் வளரும் நகரங்களில் மட்டும் சர்க்கரை வழக்கில் பயன்பட்டது.

05. தமிழிலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் கரும்பு, சர்க்கரைபற்றிய குறிப்புகள் உள்ளன. மதுரைவட்டாரத்தில் கிடைத்த ஒரு பழந்தமிழ் கல்வெட்டில் பணித வணிகன் என்றசொல் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சொல், சர்க்கரை வணிகரைக் குறிப்பதாக அறிஞர்கள் சொல்வர். இடைக்காலத்தில் சர்க்கரையினைக் குறிக்கும் முதல்கல்வெட்டுச்சொல் கி.பி.869 ஆம் ஆண்டினைச் சார்ந்தது. கல்வெட்டுகளில் இருவிதமாக சர்க்கரை என்றும் சற்கரை என்றும் குறிக்கப்படுகிறது. சர்க்கரையிலிருந்து செய்யப்பட்ட உணவு சர்க்கரையமுது என்று கி.பி.929 ஆம் ஆண்டின் கல்வெட்டில் பதிவாகியுள்ளது. திடமாக்கப்பட்ட சர்க்கரை சர்க்கரைவட்டு (கி.பி.957;959) என்றும் அக்காரவட்டு (கி.பி.960) என்றும் கல்வெட்டில் சுட்டப்பட்டுள்ளது. கரும்பினைக்குறிக்கும் முதல்கல்வெட்டுச்சொல் கி.பி.931 இல் பொறிக்கப்பட்டுள்ளது. கரும்பின்சாறு கறுப்பஞ்சாறு என்று கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. சர்க்கரையினைத்தரும் கரும்பு சங்கஇலக்கியத்தில் 66 முறையும் அதிகமாக புற நானூற்றில் 12முறையும் அகநானூற்றில் 11முறையும் பயிலப்பட்டுள்ளது. முதன்மைத்திராவிட மொழிகளான கன்னடம், தெலுகு, மலையாளம், துளு போன்றவற்றில் கரும்பினைக் குறிக்கும் வேர்ச்சொற்கள் கரும்பு *(DED: 1083)* எனும் தமிழ்ச்சொல்லில் இருந்து பிறந்தவை. அறநெறி இலக்கியங்களில் காலத்தால் முந்திய குறளில் (கி.மு.200) (குறள் எண்:1078) கரும்பு என்ற சொல் பயிலப்பட்டுள்ளது. கரும்பிலிருந்து தயாரிக்கப்பட்ட சர்க்கரையினைச் சுட்டும் அக்காரம் என்ற சொல் நாலடியாரில் (கி.பி.400) பதிவாகியுள்ளது. பத்தாம் நூற்றாண்டின் இலக்கியமான சீவகசிந்தாமணியிலும் இச்சொல் பதிவாகியுள்ளது. கி.பி.910 ஆம் ஆண்டின் ஒரு கல்வெட்டிலும் இச்சொல் பதிவாகியுள்ளது. சர்க்கரையினை சேர்த்து சமைத்தசோறு அக்காரடலை என்று குறிக்கப்பட்டுள்ளது. பழமொழி நாநூறு (சுமார் கி.பி.700) சர்க்கரையினை சுட்டுவதற்கு அக்காரம் என்றும் சொல்லினை பயன்படுத்தியுள்ளது. தனிப்பாடல் திரட்டில் வெல்லம் எனும்சொல் உள்ளது. வெல்லம் சேர்த்து சமைக்கப்பட்ட சோறு வெல்லச்சோறு என்று (கி.பி.919) கல்வெட்டில் பதியப்பட்டுள்ளது.

06. பொதுவாக கரும்பிலிருந்து எடுக்கப்படும் சர்க்கரை அக்காரம் எனப்படுகிறது. இது சற்று உப்பும் கரிப்புமாக இருக்கும். இவ்வகை சர்க்கரை, பயனற்றுப்போகம், கும்மாயம், அக்கார அடிசில் போன்ற உணவுவகைகளை சமைப்பதற்குப் பயன்பட்டதாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. ஒரு கல்வெட்டு இதனை கண்ட சர்க்கரை என்று குறிக்கிறது. அடர்த்தியான மண்ணின் நிறத்தில் *(dark brown)* உள்ள இவ்வகை சர்க்கரை வடஇந்தியாவில் *gur* என்று அழைக்கப்படுகிறது. தமிழ்மொழியின் ஒலியியலில் அ, ச இரண்டும் மாற்றொலிகள் *(allomorph)* என்று அமைவதால அக்காரம் என்ற சொல் சர்க்கரை என்று வந்திருக்க வேண்டும். இதிலிருந்து *gur* என்ற சர்க்கரைப் பொடியினை குறிக்கும்சொல் வடஇந்தியாவில் வழக்கிற்கு வந்திருக்கலாம். அக்கார என்ற சொல்லும் சக்கார என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் ஒலியியல், மொழியியல் ஆய்விற்கு உட்பட்டன. ஆனால், சக்கரா (Sakkara)என்ற சம்ஸ்க்ருத சொல் கி.மு.500 முதல் 200 வரையிலான காலகட்டத்தில் வந்தன என்பர். இதற்கு கல்வெட்டுச்சான்று இல்லை. தமிழ்நாட்டில் கிறிஸ்துவிற்கு முன்பே சர்க்கரை பயன்பாட்டிற்கு வந்த ஒன்று. இந்தியாவில் வடக்கில் கி.பி.1000 இல்தான் கரும்பினை சாறுபிழிந்து சர்க்கரையினை காய்ச்சும்முறை அறியப்பட்டது என்பர். அங்கு மேலே சொல்லப்பட்ட gur என்ற சர்க்கரைப் பொடியினை காலையில் விவசாயிகள் உணவிற்கு முன்பு சற்றே உண்பர். பொதுவாக, குளிர்காலங்களில் காலையில் உணவிற்குப்பின் விவசாயிகள் சர்க்கரைப்பொடியினை உண்பர். மத்திய ஆசியாவின் இந்துகுஷ்பகுதியில் மலையேறுபவர்கள் எளிதாக சுவாசிப்பதற்கு gurஎன்ற சர்க்கரைப் பொடியினை உண்பர். இதில் மினரல்கள், புரதம், வைட்டமின்கள், கால்சியம், மெக்னீசியம் போன்ற நுண்சத்துகள் உள்ளன. இராணுவ வீரர்களுக்கு சர்க்கரை அளவாக வழங்கப்படுகிறது. குதிரைகள், யானைகளுக்கும்கூட சர்க்கரை கொடுக்கப்படுகிறது. சர்க்கரை, வடஇந்தியாவில் கூலியாக தரப்படுகிறது. அங்கு gur என்ற சர்க்கரை முடிதிருத்துவோர், பூசாரிகள், பாணர்கள், தச்சர்கள், பொற்கொல்லர்கள் போன்றோருக்கு கூலியாக அளிக்கப்படுகிறது. இது கிராமப் பொருளியலை சுலுவாக்குகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், இச்சர்க்கரை விற்பனைக்கு இல்லை. இதுபோன்ற சர்க்கரை கி.பி.500 வாக்கிலேயே பாரசீகம் சென்றது என்பர். இந்த ஆறு பத்திகளில் சொல்லப்பட்ட கருத்துகளின் பின்னணியில் மேலும் சிலசெய்திகள் அடுத்தடுத்த பத்திகளில் பதிவாக்கப்பட்டுள்ளன.

07. சர்க்கரை தொடக்கத்திலிருந்தே இந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதியானதாக அறியமுடிகிறது. இந்தியாவிலிருந்து சுமை வண்டிகள்மூலம் மத்திய-ஆசியா, ஆப்கானிஸ்தான், ஹீரட், காண்டகார் வழியே மத்திய ஆசியாவிற்கு சென்றது. இது இந்தியாவினை மையமிட்ட ஆசியவணிகம் என்று அழைக்கப்படுகிறது. சுமைவண்டிகள் அங்கிருந்து உஸ்பெஸ்கிஸ்தான் தொடங்கி சாமர்கண்ட்வரை சென்றன. கடல்வழிவணிகம் எளிமையானவுடன் தரைவழிவணிகம் குறைவானது. கரும்புவிளைச்சலும் விரிவானது. கி.பி.16-ஆம் நூற்றாண்டில் வங்காளத்தின் சர்க்கரை உலகில் முதலிடம் பெற்றது. 17-ஆம் நூற்றாண்டில் கங்கைப்பகுதியில் சுமார்500 கி.மீ பரப்பளவிற்கு கரும்பு விளைச்சல் இருந்தது என்று பெர்னியர் குறித்துள்ளார். (Bengal river system) வங்காளத்தின் ஆற்றியங்கு முறைக்கு தக்கபடி சர்க்கரைமூட்டைகளை ஏற்றுவதற்கு படகுகள் வடிவமைக்கப் பட்டனவாம்.

08. பழங்காலத்தில் இந்தியா, சீனா, மத்திய-ஆசியா, ஆப்பிரிக்காவின் வடக்கு, ஐரோப்பாவின் வளரும் நகரங்கள் கீழைத்தேயத்தின் சர்க்கரையினைப் பயன்படுத்தின. கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவின் சர்க்கரை சீனாவிற்கு சென்றது என்றும் கி.பி.600 இல் இந்தியாவின் புத்தத்துறவிகள் சீனம் சென்று அங்கு அரசவைகளில் சர்க்கரைசெய்வது எப்படி என்று செய்துகாட்டினர் என்றும் சொல்லப்படுகிறது. கி.பி.1000க்குள் வெண்சர்க்கரை ஆசியாமுழுக்க பரவியது; கி.பி.1200க்குள் ஐரோப்பாவிற்குப் அறிமுகமானது. வெண்சர்க்கரை பொன்னுக்கு நிகராக பகிரப்பட்டது. கரும்பினையும் சர்க்கரையினையும் ஐரோப்பியர் உலகமயமாக்கினர். அதுவரையில் அவர்கள் பீட்ரூட்டிலிருந்து பெறப்பட்ட சர்க்கரையினையே பயன்படுத்தினர். கடந்த 700 ஆண்டுகளாக ஐரோப்பியர்கள் வெண்சர்க்கரையினை அன்றாட வாழ்வின் உணவில் பயன்படுத்துகின்றனர். ஆனால் உலகில் பொதுவாக, நுணுக்கப்பட்ட சர்க்கரைத் துணுக்குகள் பயன்பாட்டிற்கு வந்து 1500 ஆண்டுகளே ஆகின்றனவாம். இது முன்பே குறிப்பிடப்பட்டது போன்று அரசுவிருந்துகள், விருந்துவிழாக்கள், மருத்துவம் போன்றவற்றில் பயன்படுத்தப்பட்டன. மேற்கு ஐரோப்பாவில் ஓராண்டுக்கு ஒருநபர் 45 கிலோகிராம் சர்க்கரை பயன்படுத்துகிறார்; அமெரிக்கர் 60 கிலோகிராம் பயன்படுத்துகிறார். இன்று உலகில் ஓராண்டுக்கு 380 மில்லின் டன்கள் அளவுள்ள சர்க்கரை பயன்படுத்தபடுகிறது. அதிகமான சர்க்கரை உடல்பருமன், சர்க்கரைநோய் போன்றவற்றுக்கு வழிவிடும். இந்தியரும் சீனரும் தயாரித்த சர்க்கரை அட்லாண்டிக் வட்டத்தில் தயாரிக்கப்பட்ட சர்க்கரையினைவிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பட்டது. சீனத்து சர்க்கரை (சீனி) ஆசியா முழுக்க பயன்பட்டது. இதன் வணிகத்தில் ஐரோப்பியர் ஈடுபடவில்லை. சர்க்கரை சீனத்திலிருந்து பம்பாய்க்கு வந்து அங்கிருந்து டெக்னருனா சென்று அங்கிருந்து காஸ்பியன் கடல்வரைக்கும் சென்றது. அங்கிருந்து பாலைவனத்தின் வழியே *Khiva* என்ற இடத்திற்கு சென்றது. ஆனால், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் பாரசீகத்தில் சர்க்கரை ஆலை இயங்கியதாக அறியமுடிகிறது. கி.பி. 1800 வரை மத்திய ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் வெண்சர்க்கரை செல்வது அவ்வளவு எளிதல்ல. பாரசீகர்கள் இன்றைய மத்திய-கிழக்கு பகுதியிலுள்ள அப்வாஸ் என்ற இடத்தில் கரும்பு பயிரிடுதலையும் அதிலிருந்து சாறுபிழிந்து சர்க்கரை தயாரிக்கும் அறிவினையும் பெற்று யூப்ரடிஸ் - டைகிரீஸ் வடிநிலப்பகுதிக்குப் பரப்பினர். இதனால், மத்தியதரைக்கடலின் கடற்கரையோரப் பகுதியில் கி.பி.9-ஆம் நூற்றாண்டில் கரும்பு விளைந்தது. அங்கிருந்து, இவ்வறிவு நைல்நதிப் பகுதிகளுக்குப் பரவியது. இப்பகுதி, அரபுலகம், மத்திய ஐரோப்பிய பகுதிகளுக்காக சர்க்கரை உற்பத்திசெய்யும் இடமாக மாறியது. அங்கிருந்த அரபியரும் பெர்பெர் என்ற இனத்தினரும் (இவர்கள் அரபியர்களுக்கு முன்பே அப்பகுதியில் வசித்துவந்த தொல்குடிகள்) இவ்வறிவினைப்பெற்று ஆப்பிரிக்கா, சாம்பியா, மடகாஸ்கர் போன்ற பகுதிகளில் பரப்பினர். இது தொழில்நுட்பமாக பரவியபோது நிலத்தின்வழி நின்றது; வணிகமாகும்போது நீர்வழியினை தேடியது.

09. அரசதூதுவர்களும் பவுத்த குருமார்களும் கி.பி.7-8-ஆம் நூற்றாண்டுகளில் ஜப்பானுக்கு சர்க்கரையினை அறிமுகப்படுத்தினர். தொடக்கத்தில் மருத்துவத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. நாகசாகி துறைமுகத்தில் 3000 டன்கள் அளவுள்ள சர்க்கரை இறக்குமதி செய்யப்பட்டதாக அறியமுடிகிறது. சீனாவின் ஃபியூஜியன் மாகாணத்திலிருந்து சர்க்கரை கம்போடியா, தாய்லாந்து, ஸ்ரீவிஜயம், மலாய்தீவுகள் போன்ற பகுதிகளுக்கு கடல்வழியே அனுப்பப்பட்டது. தூய்மையான மண்ணிறத்தின் சர்க்கரை செய்யும் முறையினை சீனர்கள் எகிப்தியரிடமிருந்து கற்றிருக்கலாம் என்று மார்கோபோலோ கூறியுள்ளார். கி.பி.7-ஆம் நூற்றாண்டிலிருந்து அரபு, சீன நாடுகளிடையேயான வணிகவுறவு இதற்கு காரணமாகலாம் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், இக்கருத்து ஏற்புடையதாக இல்லை. சீனக் கப்பல்கள் பாரசீக வளைகுடாவரை சென்றன. 1300இல் மார்கோபோலோ இந்தியாவில் வணிகத்திற்கான சர்க்கரை தயாரிக்கப்பட்டதுபற்றி குறிப்பு தருகிறார். தில்லியில் சர்க்கரை சந்தை நடைபெற்றதுபற்றி பேசுகிறார். சீனத்தில் ஃபியூஜியன் மாகாணத்தில் கரும்பு விளைச்சல் பெருமளவு நடைபெற்றது என்று குறித்துள்ளார். சீனத்தில் சுங்வம்சத்தின் காலத்தில் (960-1279) சர்க்கரை மருந்துகள், ரொட்டிகள், பானங்கள் போன்றவற்றுக்குப் பெரிதும் பயன்பட்டதாகக் குறிப்பு உள்ளது. மார்க்கோபோலோவின் காலத்தில் சமையல் நூல்களில் சர்க்கரையின் முக்கியத்துவம் பதியப்பட்டுள்ளது. விழாக்களில் இனிப்புவகை உயர்ரகப் பொருளாக விற்கப்பட்டன. சீனத்தில் மிங்வம்சத்தினர் ஆட்சியின் (1368-1644) காலத்தில் கரும்பு விளைச்சல் விரிவடைந்தது. இந்தியாவில் சுல்தான் பிரோசாஷா-துக்ளக் காலத்தில் வங்காளத்தில் கரும்பு விளச்சலுக்குப் பாசனவசதிகளை உருவாக்கினார் என்று சொல்லப்படுகிறது. புகானன் (1762-1829) என்ற தாவரவியாலர் இந்தியாவின் சர்க்கரை தாய்லாந்தில் இராஜயோகமாக இருந்தது என்கிறார். கரும்பு விளைச்சல் அதிகரிக்க விவசாயிகளுக்கு முன்பணம் வழங்கப்பட்டது. இதில் டச்சுக்களும் சேர்ந்துகொண்டனர். கரும்புச் சான்றிலிருந்து அதன் வெல்லப்பாகினை (*molasses*) பிரித்தெடுக்கும் உத்தி(*innovation*) நன்கு வளர்ந்ததால் சர்க்கரை வணிகம் பெருகிற்று. சீனர்கள் களிமண் முறையினைப் பயன்படுத்தி (*molasses*) பிரித்தனர். கரும்புச் சாற்றிலிருந்து சர்க்கரையினை பிரிக்கும்போது கிடைக்கும் வெல்லப்பாகு கால்சியம், வைட்டமின்-D, வைட்டமைன்-B6, மெக்னீசியம், போன்ற சத்துப்பொருள்களையும் (*nutrients*) நுண்சத்துகளையும் கொண்டது. இது, மது காய்ச்சுவதற்கு பெரிதும் பயன்படும் மூலப்பொருள்களில் ஒன்று. வெல்லப்பாகு பிரிக்கப்படும்முறை அட்லாண்டிக் வட்டத்திற்கும் பரவியது. 17-ஆம் நூற்றாண்டில் சர்க்கரை உலகின் பல பகுதிகளுக்கும் பரவியது.

10. தைவான் தீவு18-ஆம் நூற்றாண்டில் உலகில் அதிக அளவில் சர்க்கரை ஏற்றுமதி செய்தது. இந்நூற்றாண்டில் இத்தீவு 60,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன்கள் எடையுள்ள சர்க்கரையினை தயாரித்தது. அப்போது, பிரேசில் அதிக அளவில் சர்க்கரையினை தயாரித்தது. சீனத்து சர்க்கரைக்கு தென்கிழக்காசிய நாடுகளில் நல்லவரவேற்பு கிடைத்தவுடன் அந்நாடுகளுக்கு சீனத்தின் சர்க்கரைத் தொழிலாளர்கள் புலம்பெயர்ந்தனர். அவர்கள் தம்மை கோங்கிஸ் என்று அழைத்துக்கொண்டனர். தாம் புலம்பெயர்ந்த நாடுகளில் சர்க்கரை தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தினர். இத்தொழில்நுட்பம் அங்கிருந்து ஹவாய் வரை பரவியது. அத்தீவுகளுக்கு 1778-இல் தீவுகளுக்குச் தொடர்ந்து சீனர்களின் சந்தன வணிகமும் சென்றது. அங்கு, சீனர்கள் ஹவாய் பெண்களை மணந்ததன்மூலம் அங்கு நிலத்தினைவாங்கி கரும்பு விளைச்சலை தொடங்கினர். இத்தொழிலை பிலிப்பைன் தீவுகளுக்கும் கொண்டுசென்றனர். மணிலாவாசிகள் தயாரித்த சர்க்கரை 1300டன்கள் பிரிட்டிஷ்-அமெரிக்க வணிகரால் ஏற்றுமதியானது.

11. ஐரோப்பியர் 15-ஆம் நூற்றாண்டில் சர்க்கரையின் தன்மையினையும் சுவையினையும் அறிந்தனர். அப்போது எகிப்தில் சர்க்கரைஉற்பத்தி குறைந்திருந்தது. ஐரோப்பிய தட்பவெப்ப நிலையில் சர்க்கரை உற்பத்தி ஐரோப்பாவின் தென்கோடி தீவுகளிலும் மத்திய தரைக்கடலோரத்து பகுதிகளிலும் நடைபெற்றது. ஐரோப்பாவின் வடமேற்கு மூலையில் அட்லாண்டிக் கடலில் அமைந்துள்ள தீவானமதெய்ரா (*Madeira*) ஐரோப்பாவின் சர்க்கரை சந்தையானது. அப்போது, கரும்பு மூலதனப் பயிரானது.

12. அட்லாண்டிக் கடலின் இன்னொரு தீவுப்பகுதியான ஸ்பெயின் அருகேயுள்ள ஹிஸ்பானியாவில் 1500-களில் கொலம்பஸ் கரும்பினை அறிமுகப்படுத்தினார். அதுசிசிலி, அந்துலேசியா தீவுகளில்விளைந்த கரும்பினைவிட தடித்தும் கூடுதலான இனிப்புச் சுவையுடையதாகவும் இருந்தது. இருபது ஆண்டுகளுக்குப்பின், அங்கு தயாரிக்கப்பட்ட சர்க்கரை இறக்கும் தருவாயில் இருந்த ஸ்பெயினின் அரசர் பெர்டினாண்ட்டிடம் வழங்கப்பட்டது. 1519-இல் (*Welsen and Fugger*) வெல்சன், ஃபுகர் குடும்பத்திலிருந்த இரு குழுவினர் புனித ஜெர்மானிய பேரரசரிடம் ஸ்பானிஷ்-அமெரிக்காவிற்கு அடிமை விற்பனையில் முற்றுரிமை பெற்றிருந்தனர். இக்குடும்பத்தினர் ஹிஸ்பானியாவில் சர்க்கரை வணிகமும் செய்தனர். அங்கிருந்து சர்க்கரை ஏற்றுமதி செய்தனர். அங்கு, கரும்பாலைகளில் வேலை செய்வதற்கு நிறைய அடிமைகளை இழுத்து வந்தனர். அங்கு, கரும்பினைப் பிழியும் ஆலை உருளைகள் கொண்டுவரப்பட்டன. இவை, 13-14-ஆம் நூற்றாண்டுகளில் கோவாவிலிருந்து போர்ச்சுகீஸ்வழியே சென்றிருக்கலாம். இவை, ஸ்பெயினின் தென்கோடிப்பகுதியில் அமைந்துள்ள கனெரி தீவுகள் வழியே மதெய்ராவிற்கு வந்திருக்கவேண்டும். நின்றவாக்கில் சுற்றும் உருளைகளும் கொண்டுவரப்பட்டன. இக்கருவி, தொடர்ந்து ஸ்பெயின், மெக்சிகோ, பெரு, கொலம்பியா, பெட்ரொ-ரிகோ போன்ற பகுதிகளுக்கும் பரவின. 16-ஆம் நூற்றாண்டில் ஸ்பானிஷ்-அமெரிக்கப் பகுதியில் 2000-2500 டன்கள் வரையிலான சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. ஐரோப்பா கண்டத்தின் தாழ்வான நிலப்பகுதியிலிருந்த நாடுகள் சர்க்கரை வணிகத்திற்கு புகழ்பெற்றிருந்தன.

13. பெல்ஜியத்தின் முக்கியத் துறைமுகமான அண்ட்வப் புராட்டஸ்டண்ட் எதிர்ப்பாளர்களின் மையமானபோது சர்க்கரை வணிகம் தடைபட்டது. எனவே, அங்கிருந்த வணிகர்கள் கொலோன், ஹாப்ஸ்பர்க் போன்ற இடங்களுக்குப் புலம்பெயர்ந்தனர். இக்காலகட்டத்தில் ஹாப்ஸ்பர்க் அரசகுடும்பத்திற்கு எதிரான போர்கள் ஐரோப்பாவில் தொடர்ந்தன. இதனால், பலசிக்கல்கள் எழுந்தன. ஸ்பெயினின் கிழக்குப்பகுதியில் உள்ள ஐபேரியன் தீபகற்பத்திலிருந்து தப்பிவந்த யூதவணிகர்கள் பிரேசிலில் புதிய சர்க்கரை ஆலையினை தொடங்கினர். பிரேசிலில் அப்போது பெருமளவு அடிமைகள் சர்க்கரை ஆலைகளில் உழைத்தனர். 1633-1644, இப்பத்தாண்டுகளில் 6600 டன்கள் சர்க்கரை தயாரிக்கப்பட்டது. அங்கு, நின்றவாக்கில் கரும்புச்சாறினை பிழியும் உருளைகள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன.

- தொடரும்

●

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.எட்வின்

65/66

கடவுள் நம்பிக்கையற்றவன் நான். ஆனால் எனக்கு தமிழ் பக்திமரபு பிடிக்கும். தமிழ் பக்திமரபு என்னை அப்படி நெகிழ்த்தும். அதுமட்டுமல்ல உலகின் வேறு எந்த மொழியேனும் பக்திமரபினை தனது அடையாளமாகக் கொண்டிருக்கிறதா என்பது அய்யம்தான். அப்படியே இருந்தாலும் பக்தனையும் கடவுளையும் தமிழ் இணைப்பதுபோல வேறு மொழி இணைக்கும் என்று நான் நம்பவில்லை.

தமிழ் பக்திமரபு அனைவரையும் அணைக்கும், இணைக்கும். தமிழ் பக்திமரபு என்பது குறிப்பாக சைவ பக்திமரபு என்பது சனாதனத்திற்கு எதிரானது.

மடங்களின் அதிபர்களை கிட்டத்தட்ட சாமியாகவே பார்க்கிற அன்பு தமிழ் பக்தர்களின் அன்பு. இந்த அன்பு, எதையும் கடந்தவர்கள் நீங்கள் என்று அவர்கள் கருதுவதால் வருவது. அவர்கள் எளியவர்கள், ஆனால் கூர்மையானவர்கள். வெளிப்படையானவர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாதவர்கள். சரியோ தவறோ எதையும் முகத்திற்கு நேராகக் கேட்டுவிடக் கூடியவர்கள்.

திருவிளையாடல் புராணத்தில் இது இருக்கிறதா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் சினிமாவில் பார்த்திருக்கிறேன். கடவுளுக்கும் பக்தனுக்கும் இடையே இருக்கும் இந்த உறவை... அது கற்பனை என்றே கொண்டாலும், விவரம் தெரிந்த நாள்முதலாக நான் கொண்டாடிக் கொண்டே இருக்கிறேன்.

குறுந்தொகையின் இரண்டாம் பாடலை இறைவன் சிவன் எழுதியதாக நம்பப்படுகிறது. இந்த நம்பிக்கையை நாம் கேள்வி கேட்கவேண்டிய அவசியம் நமக்கு இப்போது இல்லை.

தன் மனைவியின் கூந்தலில் இருந்து வரும் மணம் இயற்கையானதா அல்லது அவள் பூசும் வாசனை திரவியங்கள்வழி வருவதா என்கிற அய்யம் மன்னன் செண்பகபாண்டியனுக்கு வருகிறது. இந்த அய்யம் அவ்வளவு முக்கியமானதா என்கிற அறிவுபூர்வமான வினாக்களுக்குள் நாம் இப்போது போகத் தேவை இல்லை. அவனது அவையில் உள்ள சான்றோர்களிடம் இவனது அய்யத்திற்கான விடை இல்லை. எனவே தனது அய்யத்தைத் தீர்ப்பவனுக்கு தக்க சன்மானம் தரப்படும் என்று அறிவிக்கிறான். இந்த சன்மானத்திற்கு ஆசைப்படும் ஒரு எளிய மனிதனின் வழியாக இறைவன் கீழ்க்காணும் குறுந்தொகைப் பாடலை அனுப்பி வைக்கிறான்.

**"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே"**

செண்பகப் பண்டியனின் அரசவைக் கவிஞரான நக்கீரன் தருமி கொண்டு வந்திருக்கும் இந்தப் பாடலில் பிழை இருப்பதாகச் சொல்கிறார். இதை தருமி சொல்லக் கேட்டதும் சிவனுக்கு கோபம் வருகிறது. அவரே நேராக செண்பகப் பாண்டியனின் அவைக்கு வருகிறார். வந்திருப்பது தாம் வணங்கும் இறைவன் என்பது நக்கீரனுக்குத் தெரிகிறது. அந்தப் பாடலை எழுதியது தாம் தினமும் வணங்கும் இறைவனே என்றாலும் அதை ஏற்க மறுக்கிறார்.

இறைவனுக்கும் நக்கீரனுக்கும் விவாதம் நீள்கிறது.தன்னை தன் பக்தன் வென்றுகொண்டே வருவது இறைவனுக்குப் புரிகிறது. கொஞ்சம் எல்லை தாண்டுகிறார். கோபம் தலைக்கேற,

**"அங்கம் புழுதிபட,
அரிவாளில் நெய்பூசி
பங்கம் பட இரண்டு கால் பரப்பி
சங்கதனைக்
கீர்கீர் என அறுக்கும்
நக்கீரனோ
எம் கவியை
ஆராய்ந்து சொல்லத் தக்கவன்"**

என்று வெடித்து விடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சங்குகளை அறுத்து வளையல் செய்து விற்று வயிறு வளர்க்கும் கடையனான நீ என் பாடலில் பிழை காண்கிறாயா?" என்ற இறைவனின் கோபத்தையும் நேராக எதிர்கொள்கிறார் நக்கீரன்.

நக்கீரர் சொல்வார்,

"சங்கறுப்பதெங்கள் குலம்
சங்கரனார்க்கேது குலம்?"

இந்த இரண்டு வரிகளை நினைக்குந்தோறும் நெக்குருகிப் போகிறேன் சன்னிதானங்களே.

"சங்கரன் நீ
நீ குலமற்று இருப்பதுதானே நியாயம்
நீ எப்படி குல பேதம் சொல்லலாம்"

என்றும் இதற்கு பொருள் கொள்ளலாம் என்றே இந்த எளிய நாத்திகன் நினைக்கிறேன். ஆமாம் சன்னிதானங்களே, நக்கீரனாரின் கோபத்தை இந்த எளியவன் இப்படித்தான் புரிந்துகொள்கிறேன்.

படைக்கப்பட்ட எந்த இறைவனுக்கும் பக்தனுக்கும் இடையே இப்படி ஒரு உறவை உலகில் எங்கும் பார்க்க இயலாது. எந்த ஒரு மொழியும் இறைவனையும் பக்தனையும் இப்படி படைத்தளித்ததில்லை. தமிழ் இந்த அதிசயத்தை செய்திருக்கிறது. இந்த இடத்தில் தமிழ் எதுவரைக்கும் நகர்ந்திருக்கிறது தெரியுமா சாமிகளே...

'திருவிளையாடல்' திரைப்படத்தில் இந்த உரையாடல் இறைவனின் இந்த ஆறு வார்த்தைகளோடு நிறைவுப் பகுதிக்கு நகரும். சிவன் சொல்வார்,

"நக்கீரனே! நின் தமிழோடு விளையாடவே யாம் வந்தோம்"

அய்யோ, அய்யோ, ஒரு பக்தனின் மொழியை ரசித்து சுவைக்க ஏங்குகிறவனாக கடவுளைக் காட்டும் மொழி தமிழ். இதெல்லாம் புனைவு அல்லவா என்று யாரேனும் கேட்பீர்களேயானால், "இறைவனும் புனைவுதானே சாமிகளே" என்பதுதான் எனது பதில்.

"பித்தா
பிறைசூடி
பெருமானே
அருளாளா"

என்று சுந்தரமூர்த்தி சாமிகளையும் எங்கள் தமிழ் பாட வைக்கும். அதற்கு நேர் எதிராக

"தாவாரம் இல்லை
தங்க ஒரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி"

என்று சித்தனையும் பாட வைக்கும். நீங்கள் அரவணைக்க வேண்டியவர்கள்.

"ஏகன் அநேகன்" என்ற ஒப்பற்ற தத்துவத்தின் தூதுவர்கள் நீங்கள். அநேகப் பெயர்களில் இருக்கிறவன் ஒரே ஒருவன்தான். அவனை நாம் சிவன் என்கிறோம். இன்னொருவன் இன்னொரு பெயரில் அழைக்கிறான். அவ்வளவுதான் பிள்ளைகளே. அமைதியாக, ஒற்றுமையாக அணைந்து வாழுங்கள் என்று எங்களை ஆற்றுப்படுத்தி வழிநடத்த வேண்டியவர்கள் நீங்கள்.

எல்லோரிடமும் சமமாக அன்பு பாராட்ட வேண்டியவர்கள். ஒரு மதத்தின் பிரதிநிதி என்பது உங்களது முற்றான அடையாளம் அல்ல.

எல்லோருக்கும் பொதுவானவர்கள் நீங்கள்.
குல்லா தரித்தவனும் உங்கள் பிள்ளைதான்
சிலுவை தரித்தவனும் உங்கள் பிள்ளைதான்
குங்குமம் வைத்தவனும் உங்கள் பிள்ளைதான்

உங்களில் ஒருவர் தொப்பியோடும் தாடியோடும் ஒருவர் தன்னைக் கொல்ல வந்தார் என்று சொல்வது மட்டுமல்ல அதைக் கேட்டு மற்ற சன்னிதானங்கள் மௌனமாக இருப்பதும் தவறுதான்.

குன்றக்குடி பெரிய சன்னிதானத்தின் இறுதி இலக்கிய பொதுமேடை ஜெயங்கொண்டத்தில் நடந்த கலை இரவுதான். அன்று நடந்த வழக்காடு மன்றத்தில் அவரது கீழ் நானும் பேசினேன். கடவுள் இல்லை என்று சொல்லும் நான் எப்போதும் வாயருகே கை வைத்து மரியாதையோடுதான் அவரோடு பேசி இருக்கிறேன். காரணம் மதச்சார்பின்மை என்ற இந்திய அடையாளத்தின் ஒப்பற்ற முகவரி அவர்.

இப்படியாகவே இருங்கள். அன்போடு இருங்கள். அனைத்து சன்னிதானங்களுக்கும் என் அன்பும் நன்றியும்.

அன்புடன்,
இரா.எட்வின்

கட்டுரையாளர்: எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



THE ZUSAANLI GROUPS
Since 1992

முடியில்லா பிரச்சனைகளுக்கு தீர்வு

NAYAGARA
HAIR GRIP OIL

மூச்சு குழாயின் சுவாசம் இலேசாகும்!
ஆயுர்வேதம் தந்த அற்புதம்

மூலிகை ஆராய்ச்சியில் 33 வருடங்களாக ஈடுபட்டுள்ள மூலிகை ஆராய்ச்சியாளர் மற்றும் 15 வருடங்களாக ஆயுர்வேதத் துறையில் உள்ள ஆயுர்வேத மருத்துவர் ஆகியோரின் அற்புதமான தயாரிப்பு **ஸ்வாசஃப்ரீ.**

நாட்பட்ட ஆஸ்துமா, சளி, இருமல், தும்மல் உள்ளிட்ட நுரையீரல் சம்மந்தப்பட்ட அனைத்திற்கும் மிகச்சிறந்தது.

கொரியர் / தபாலில் அனுப்பி வைக்கப்படும்.



கிடைக்குமிடம் :

வெற்றி விநாயகர் மெடிக்கல்ஸ்

தி சுசான்லி அக்குபஞ்சர் & ஆயுர்வேதிக் கிளினிக் வளாகம்,
11-A, பாரதிதாசன் தெரு, பிள்ளையார் கோயில் எதிரில்,
மஞ்சக்குப்பம், கடலூர்–1.
செல் : 93676 22248, போன் : 04142-355418

மேலும் விபரங்களுக்கு : **96003 09546, 93676 22256**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | ஜி. ஜான் சாமுவேல்

வள்ளுவரைத் தேடி ஒரு பயணம்

மொரிசியசில் நடத்தத் திட்டமிட்டுள்ள முதல் அனைத்துலகத் திருக்குறள் மாநாட்டினைத் தென்குமரியில் நடத்துவதற்குப் பல காரணங்கள் இருந்தன. மொரிசியசு நாட்டுக்குப் புலம் பெயர்ந்து சென்ற முதல் தலைமுறையைச் சார்ந்த தமிழர்களில் பலர் திருக்குறளையும் தங்கள் கடற்பயணத்தின்போது எடுத்துச் சென்றதாக அறிகின்றோம். எனினும் திருக்குறள் முதன்முதலாக நூல் வடிவில் 1812 இல் அச்சான நிலையில் அதற்கு முன்னர் சென்ற தமிழர்கள் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்ட திருக்குறளை எடுத்துச் சென்றிருக்க வேண்டும். இவர்கள் திருக்குறளை மொரிசியசு நாட்டில் படித்து வந்ததாக இவர்தம் வழித் தோன்றல்கள் குறிப்பிடுகின்றனர். தமிழ் மொழியை மறந்து போன நிலையில் இவர்கள் திருக்குறள் பகுதிகளைப் பொருள் தெரியாத நிலையில் மனப்பாடமாகச் சொல்லி வைத்தனர் எனத் தெரிகின்றது. காலப்போக்கில் ஏரியல் அவர்களின் திருக்குறள் பிரஞ்சு மொழி பெயர்ப்பு புலம்பெயர்ந்த தமிழர்களின் மத்தியில் திருக்குறளை நிலைநிறுத்தியது. காலப்போக்கில் சங்கிலி எனப் பெயரிய மொரிசியசு தமிழர் ஒருவர் திருக்குறளை அருமையாக பிரஞ்ச் மொழியில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார். பிரஞ்ச் மொழிபெயர்ப்போடு ஜி.யு. போப் அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்பும் மொரிசியசு நாட்டு மக்களிடம் மிகப் பெரிய வரவேற்பினைப் பெற்றது. மொரிசியசு நாட்டுத் தமிழர்களின் திருக்குறள் ஆர்வத்தினைக் கொழுந்து விட்டு எரியச் செய்த பெருமை மேற்கூறிய மூன்று திருக்குறள் மொழி பெயர்ப்புகளுக்கும் உரியது.

மொரிசியசு நாட்டில் அனைத்துலகப் புலம் பெயர்ந்த தமிழர்கள் குறித்த மாநாட்டினை 2014 - இல் மிகச் சிறப்பாக நடத்திய பின்னர் சென்னைக்கு வருகை தந்த நண்பர் பேராசிரியர் பரசுராமன் அவர்களிடம் எனது அமெரிக்க நாட்டு நண்பரும் தமிழக நாட்டுப்புறவியல் வல்லுநருமான முனைவர் எரிக் மில்லர், பேராசிரியர் பிரண்டாபெக் ஆகியோரின் சில ஆய்வுகள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தேன். சிலப்பதிகாரக் காப்பியத் தலைவி பயணித்த வழித்தடங்களை வரைபடமாக முனைவர் எரிக் மில்லர் தயாரித்துள்ளதாகவும் அந்த வழித் தடத்தில் பலர் பயணித்துள்ளதையும் விளக்கினேன். பூம்புகாரிலிருந்து புறப்பட்டு மதுரையை வந்து சேர்ந்த பின் சேர நாட்டுக்குக் கண்ணகி நடந்து சென்ற வழித்தடங்கள் மிகத் துல்லியமாக அவரால் ஆராயப்பட்டு அந்த வழித் தடத்தில் ஆர்வமுள்ளோர் பயணம் செய்வதையும் பேசிக் கொண்டிருந்தேன். கோவில் கோவிலாக நாயன்மார்கள் சென்று இறைப்பாடல்கள் பாடியுள்ள வழித்தடத்தை அறிஞர் சிவபாதசுந்தரம் போன்றோர் பெரியபுராணத்தை மையமாகக் கொண்டு விளக்கியுள்ளதையும் எடுத்தியம்பினேன்.

வள்ளுவர் சென்ற வழித்தடங்களை இப்படிப் பார்க்க முடியுமா. இப்படிப் பார்க்க முடியுமென்றால் ஆண்டுதோறும் மொரிசியசு நாட்டுத்தமிழர் பலர் பயணிகளாக இத்தலங்களுக்கு வரத் தயாராக உள்ளனர். மொரிசியசு நாட்டில் மட்டுமன்றி ரீயூனியன், தென் ஆப்ரிக்கா போன்ற நாடுகளைச் சார்ந்தோரும் வருவர். உங்கள் நாட்டுச் சுற்றுலாத்துறை இவைபோன்ற முயற்சிகளில் ஈடுபடலாமே என்றார்.

வள்ளுவர் தந்த வான்மறை

வாழ்வியலின் அனைத்துக் கூறுகளின் தரத்தினையும் 'அறம்' என்பதை அடித்தளமாக அல்லது உரைகல்லாக (touchstone) வைத்து மதிப்பிடும் மனப்போக்கு தமிழர்களிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்பழங்கால முதல் தொடர்ந்து வந்துள்ளதைக் காணலாம். இது அரசியலுக்கும், வாழ்வியலுக்கும், ஏனைய அனைத்துத் துறைகளுக்கும் பொருந்தும்.

"மாண்ட அறநெறி முதற்றே அரசன் கொற்றம்" என்று முடியாட்சிக் காலத்தில் மலர்ந்த புறநானூறு குறிப்பிடுகின்றது. ஆதிபகவன் முதற்றே உலகு என்று வள்ளுவர் கூறுவதைப் போன்று அறநெறி முதற்றே அரசின் கொற்றம் என்று புறநானூறு குறிப்பிடுகின்றது. வள்ளுவர் சுட்டும் உலகம் ஆதியாகிய பகவனை முதலாகக் கொண்டு *(Primordial God)* இயங்குகின்றது. புறநானூற்றுப் புலவன் கண்ட அரசின் ஆட்சி அல்லது வெற்றி அறத்தை முதலாக உடையது.

அறத்தைத் தெய்வீக நிலைக்கு உயர்த்திய தமிழர்கள்பால் தரவந்த பழவிறல்தாயம் என்று அதனை அறக்கடவுளாகவும் கண்டனர். அறக்கடவுளுக்குப் பால்வரை தெய்வம் என்ற பெயரையும் தந்தனர். அறக்கடவுள் மிகக் கடுமையாகத் தனது அறக்கோட்பாடுகளைச் செயல்படுத்தத் தொடங்கியதைச் சங்கப்பாடல்களும் செந்தமிழ்ச் சிலம்பும் விரிவாகப் பேசும். அரசுக்கு அடித்தளமாக அமைந்த அறம் அரசியல் பிழைத்தோரை அழிக்கும் கூற்றமாகவும் சிலம்பில் சுட்டப்படுவது குறிப்பிடத் தக்கது. அறக்கடவுளுக்குப் பால் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. உலகின் பெரும்பாலான பழங்காலச் சமுதாயங்களைப் போன்று தமிழ்ச் சமுதாயமும் கடவுளர்களை மலைகளோடும், காடுகளோடும் தொடர்பு படுத்தியது. 'பால்' எனும் தெய்வம் மலையோடு தொடர்புபடுத்தப்பட்டுப் பழந்தமிழ் இலக்கியங்களில் பால்வரைத் தெய்வம் என்றே சுட்டப்படுவதைக் காண்கிறோம். பால் எனும் இத்தெய்வம் காதலர்களை இணைக்கும் தெய்வமாகவும், மூதாதையர் இறந்தபின் அவர்களின் சொத்தை அல்லது அரசை அடுத்த தலைமுறையின் கையில் பொறுப்பாக ஒப்படைக்கும் தெய்வமாகவும் கருதப்பட்டது. ஒத்த தலைவனும், தலைவியும் பாலது துணையால் அல்லது ஆணையால் இணைவதாகத் தொல்காப்பியம் குறிப்பிடும்போது இத்தெய்வத்தின் ஆணையால் தான் காதலர்கள் கணவன் மனைவியாக இணையமுடியும் என்ற நம்பிக்கை பழந்தமிழர்களிடம் நிலவியதை உறுதிப்படுத்த முடிகின்றது.

"மூத்தோர் மூத்தோர் கூற்றம் உய்த்தென

பால் தரவந்த பழவிறல் தாயம்"

என்ற புறநானூற்று வரிகள் மூத்தோர்கள் இறக்கும்போது அவர்களின் சொத்து அல்லது அரசாட்சியை முறைப்படி சேரவேண்டிய அடுத்த தலைமுறைக்குப் பங்கீடு செய்து கொடுக்கும் இந்தக் கடவுளின் பணி பேசப்படுவதைக் காணலாம்.

அறக்கடவுள், பால்வரைத் தெய்வம் ஆகியன ஆணா பெண்ணா என்பதையும் அவற்றின் வடிவம் என்ன என்பதையும் அவை எவ்வாறு வழிபடப்பட்டன என்பதையும் பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அதிகமாக அறியமுடியவில்லை.

அறம், பால், பகவன் ஆகிய பெயர்களின் அடிச்சொற்கள் முறையே அறுத்தல், பிரித்தல், பகுத்தல் என்ற பொருளில் வருவது குறிப்பிடத்தக்கது. 'பாதீடு' *(apportioning)* என்பது தனியுடமை வளர்ச்சி பெறாத பழங்கால இனக்குழுச் சமுதாயத்தில் கிடைத்தவற்றைச் சமமாகப் பங்கீட்டு நுகரும் வாழ்வுமுறை வழக்கத்திலிருந்ததைத் தெரிவிக்கும் சான்றாக உள்ளது. இந்தப் பங்கீடு சரியாக நெறிப்படி பாரபட்சமாக இல்லாது செய்யப்படுவதைப் பார்த்துக் கொள்ளும் தெய்வங்களே பால்வரைத் தெய்வங்கள் என்றும் சுட்டப்படுகின்றன. பால் என்பது பகுதி, பிரிவு என்ற பொருளில் ஐம்பால் உமட்டியர், வேற்றுமை தெரிந்த நாற்பால், அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்றெல்லாம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இனக்குழு வாழ்வு அழிந்த காலகட்டங்களில் மேற்கூறிய வேர்ச் சொல்லிலிருந்து பிறந்த பெயர்ச் சொற்கள் பொருள் விரிவடைந்து அறம், பால்வரை தெய்வம், பகவன் என்று வழங்கின. பகு என்பது வெட்டுதல், பிளத்தல், பங்கீடுதல் என்ற பொருளில் வருவது காணலாம். பகுபதம், பகுத்தல் (பகுத்தலும் - திருக்குறள்) பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்பன இதற்குச் சான்று. பகவன் என்ற சொல் பெரும்பாலும் பௌத்தர்களாலும் சமணர்களாலும் கையாளப்பட்டது. பால்வரை தெய்வம் காலப்போக்கில் ஊழ் என்ற பொருளையும் தந்து பின்னர் வழக்கிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்து விட்டது. அறம், அறக்கடவுள் போன்ற வழக்குகள் சமயச் சார்பு இல்லாமல் மிகப் பரந்து விரிந்த நிலையில் பெருவாரியாகப் பயன்பாட்டில் உள்ளன.

திருவள்ளுவர் என்பவர் திருக்குறளை எழுதியதாக வழிவழியாக நம்பப்பட்டு வருகின்றது. இந்த நம்பிக்கையைத் தவிர ஆதார பூர்வமான திருவள்ளுவர் தொடர்பான வரலாற்றுச் சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. தொல்காப்பியப் பாயிரம் "தொல்காப்பியனெனத் தன் பெயர் தேற்றி" என்று கூறுவதிலிருந்து தொல்காப்பியத்தை எழுதியவர் பெயர் தொல்காப்பியன் என்பதை அறிய முடிகின்றதேயன்றி இதை மேலும் நிலைநாட்டுவதற்கு வேறு சான்றுகள் எதுவுமில்லை. நூலை எழுதியவர் தன் பெயரைப் பதிவு செய்யும் மரபு தொல்பழங்காலத்தில் பெரும்பாலும் இருந்ததில்லை எனத் தெரிகின்றது. இதற்குரிய காரணம் தெளிவாகப் புலப்படவில்லை. பெரும்பாலான பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் நூலாசிரியன் பெயர் மூலநூலில் இடம் பெறவில்லை. சங்கப் பாடல்களுக்குப் பல காலங்களுக்குப் பின்னர் அவற்றைத் தொகுத்து அடிக்குறிப்பு எழுதியோர் நூலாசிரியருக்குத் தாம் எண்ணியவாறெல்லாம் பெயரும் கொடுத்துள்ளனர். இயற்கை வருணனை அதிகமுள்ள கவிதையாக இருந்தால், குறிப்பாக குறிஞ்சி நிலக்காட்சி நிறைந்துள்ள கவிதை என்றால், அதன் ஆசிரியர் கபிலர் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. காலத்தால் பிற்பட்ட கலித்தொகையிலுள்ள குறிஞ்சிப் பாடல்களுக்கும் கபிலரின் பெயர்தான் தரப்பட்டுள்ளது. அகநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை அனைத்திலும் கபிலரே குறிஞ்சித் திணையிலமைந்த பாடல்களுக்கு ஆசிரியராகப் பதிவு செய்யப்பட்டுள்ளார். அவ்வாறே நெய்தல் என்றால் அம்மூவனார்; வரலாற்றுக் குறிப்புக்களைத் தரும் பாடலாயின் அவற்றின் ஆசிரியர் பரணர் என்றெல்லாம் பதிவு செய்யப்பட்டுள்ளன. வெள்ளி வீதியார், கபிலர், பரணர் ஆகிய பெயர்கள் மூலநூல் பாடல்களில் சுட்டப்பட்டுள்ளன. இப்பாடல்களைப் பாடிய புலவர்கள் பிற கவிஞர்கள் எனத் தெரிகின்றது.

காலத்தால் பிந்திய அடிக்குறிப்புக்களும், நூலாசிரியர் அல்லாத பிறர் எழுதிய பாயிரங்களுமே நூலாசிரியர் பெயரை நமக்குத் தெரிவிக்கின்றன. அவ்வாறே காலத்தால் முற்பட்ட பழம்புலவர்களின் பெயரில் காலத்தால் பிற்பட்ட வேறு புலவர்கள் பாடியதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள திருவள்ளுவமாலையின் பாடல்கள் மூலமாகத்தான் திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர் என்ற குறிப்புக் கிடைக்கின்றது. திருக்குறளை எழுதியவர் பற்றிய குறிப்பினை முதன்முதலாக நமக்குத் தரும் மணிமேகலை அவரைப் பொய்யில் புலவன் என்று சுட்டுகின்றதேயன்றி அவர் பெயர் திருவள்ளுவர் என்று குறிப்பிடவில்லை.

திருக்குறளின் ஆசிரியர் வள்ளுவர் என்று பொது நிலையில் ஏற்றுக் கொள்ளும் திருவள்ளுவ மாலையின் ஒரு பாடல் இப்படிப்பட்ட ஒரு மாபெரும் கவிஞனை வள்ளுவன் என்று கூறுபவன் ஒரு பேதை என்றும் அப்பேதையின் கூற்றை ஒருவரும் ஏற்கமாட்டார் என்றும் மிகுந்த சினவுணர்வோடு பேசுகின்றது. இது திருவள்ளுவமாலை எழுந்த காலத்தில் திருக்குறளை எழுதியவர் வள்ளுவர் என்று கருதும் மரபுக்கு எதிர்ப்பு இருந்ததைக் காட்டும். உயரிய கவிதைகள் உயர் நிலையிலுள்ள, சமுதாய, சாதீய அல்லது வர்ண வரிசையில் உயர்ந்த நிலையிலுள்ள சாதி சார்ந்தவர் அல்லது வர்ணம் சார்ந்தவரிடமிருந்து தான் வந்திருக்க வேண்டுமே தவிர தாழ்ந்த சாதியிடமிருந்து தோன்றுவது ஏற்புடையதாக பழைய சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதை திருவள்ளுவ மாலையின் இப்பாடல் மறைமுகமாகக் காட்டும். வள்ளுவர் என்பது பிறப்பால் தாழ்ந்த வள்ளுவகுலத்தைச் சார்ந்தவரைச் சுட்டும் ஒரு பொதுப் பெயராகும். அரசுச் செய்திகளை யானைமீது அமர்ந்து பறையறைந்து மக்களுக்குத் தெரிவிப்பவர் வள்ளுவர் அல்லது பறையர் எனப்பட்டனர். தாழ்ந்த குலத்தில் பிறந்தவர் வள்ளுவர் என்று கருதியமைக்குக் காரணம் திருக்குறள் ஒரு வேத மறுப்பு நூல் என்பதாகலாம். பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும் என்று வர்ணாசிரமப்படி வாழும் உயர்சாதி சார்புடைய ஒருவர் கூறமுடியாது. பிறப்பால் மனிதர்கள் மேலென்றும் கீழென்றும் வேறுபட்டவர் என்பது வர்ணாசிரம மரபு. எனவே உயரிய வர்ணப் பிரிவினருக்கு அறிவுரை கூறும் நூலாக இது ஏற்கப்படவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தெளிவு. இது கீழோர் நூலாகவே வேத நெறி சார்ந்தோரால் கருதப்பட்டிருக்க வேண்டும்.

இதனை மறுத்து வள்ளுவர்களை அரச மரபினராகப் பேசும் மரபும் உள்ளது. சங்க இலக்கியங்கள் நாஞ்சிற் பொருநன் என்ற பெயரில் ஒரு மன்னனைப் பற்றிப் பேசுகின்றன. இவன் நாஞ்சில் நாட்டுப் பகுதியை ஆண்டவன் எனத் தெரிகிறது. அரிசி கேட்ட ஔவையாருக்கு வரிசையறிந்து யானையைப் பரிசிலாகக் கொடுத்தவன் இவன். இவனது கொடையினை கொடை மடத்திற்குச் சான்றாகப் பேசுவர். இவனை "மடவன் மன்ற ...." என்றழைத்து ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடல் ஓர் அழகான செந்நெறிக் கவிதையாக மலர்ந்துள்ளது. நாஞ்சிற்கொடி (கலப்பைச் சின்னம் பொறித்த கொடி) யேந்திய இந்த மன்னன் தலைசிறந்த வீரனாகத் திகழ்ந்ததால் இவன் நாஞ்சிற் பொருநன் என்று அழைக்கப்பட்டான். இவனை நாஞ்சிற்குறவன் என்று அழைக்கும் மரபும் உள்ளது. பிற்கால நூல்கள் இவனை நாஞ்சில் வள்ளுவன் என்று குறிப்பிடுகின்றன. இதற்குக் காரணம் இவன் வாழ்ந்த பகுதியும் அதைத் தொடர்ந்த பகுதிகளும் வள்ளுவ நாடு என்று அப்போது அழைக்கப்பட்டது தான். வள்ளுவ நாட்டு இரணியல் முட்டம் என்ற குறிப்பிலிருந்து இன்றைய இரணியல், முட்டம் போன்ற பகுதிகள் வள்ளுவ நாடு என்று முற்காலங்களில் அழைக்கப்பட்டன என்பது தெளிவு. எனவே நாஞ்சிற்பொருநன் அல்லது நாஞ்சில் வள்ளுவன் வள்ளுவநாட்டை ஆண்ட மன்னன் என்பதும் திருவள்ளுவர் நாஞ்சில் வள்ளுவன் வழியில் வந்த வள்ளுவன் என்னும் அரச பரம்பரையைச் சார்ந்தவர் என்பதும் ஒரு சாரார் கருத்து.

இன்றைய கேரளப்பகுதியில் இயற்கை எழில் கொஞ்சும் இன்னொரு வள்ளுவநாடு உள்ளது என்பதும் அப்பகுதியைச் சார்ந்தோரை வள்ளுவ நாடன் என்றழைக்கும் மரபு இன்றும் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கன. இது அன்றைய தமிழகத்தின் ஒரு பகுதியான சேரநாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அடிப்படையில் திருவள்ளுவர் யானை மீதமர்ந்து முரசறைந்து மன்னர்களின் ஆணைகளை மக்களுக்கு அறிவிக்கும் வள்ளுவர் குலத்தில் பிறந்தவர் அல்லது வள்ளுவநாட்டுப் பகுதிகளை ஆண்ட மன்னர் குலத்தில் பிறந்தவர் என்ற இருவேறுபட்ட கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன.

திருவள்ளுவரின் பிறப்பிடம் குறித்து நீண்ட காலம் எழுதிக் கொண்டிருக்கும் நண்பர் டாக்டர் பத்மநாபன் அவர்கள் இன்றைய குமரி மாவட்டத்தின் ஒரு பகுதியான பழைய வள்ளுவ நாட்டிலுள்ள முட்டம் என்ற அழகான சிற்றூரின் பக்கத்திலுள்ள திருநயினார்க் குறிச்சியில் அவர் பிறந்தவர் என்று வாதிடுகின்றார். திருநயினார்க்குறிச்சி என்ற ஊர்ப் பெயர் கி.பி.16 ஆம் நூற்றாண்டிற்குப் பின் வந்தது என்றும் எனவே வள்ளுவர் பிறந்த ஊர் அதுவல்ல என்றும் வாதிடுகிறார் முனைவர் கேசவ சுப்பையா அவர்கள். திருநயினார்க்குறிச்சிக்குச் சற்று தொலைவிலுள்ள குறத்தியறை எனும் தென்பாண்டிப் பகுதியில் வள்ளுவர் பிறந்தவர் என்றும் ஆணித்தரமாக பறைசாற்றுகின்றார் அண்மையில் மறைந்த நண்பர் கேசவ சுப்பையா அவர்கள். வள்ளுவர் திருநயினார்க்குறிச்சியில் பிறந்தவர் என்றும் குறத்தியறையில் பிறந்தவர் என்றும் வாதிட்ட இவ்விருவரும் மேற்கூறிய மாறுபட்ட கருத்துக்களால் பகைவர்களாக மாறி பத்திரிகைகளில் மாறி மாறி எழுதியதும், எதிர்த்து ஒருவருக்கு ஒருவர் நேருக்கு நேர் திட்டியதும் பின்னர் இருவருக்கும் கைகலப்பு ஏற்பட்டு காவல் துறை வழக்கு, குற்றவியல் வழக்கு என்று பல வழக்குகள் நடந்து கொண்டிருந்ததும் என்னை வியப்பில் ஆழ்த்தின. முதல் அனைத்துலகத் திருக்குறள் மாநாட்டினை நாகர்கோவிலில் நான் நடத்தியபோது இருவரும் என்னை அடிக்கடி சந்தித்து ஒருவர் மீது ஒருவர் சரமாரியாகக் குற்றச்சாட்டுகளைச் சாட்டிக் கொண்டனர்.

திருவள்ளுவர் குமரி மாவட்டத்தில் எந்த இடத்தில் பிறந்தார் - திருநயினார்குறிச்சியிலா அல்லது குறத்தியறையிலா - என்பது தொடர்பாக ஆவேசமாக மோதிக் கொள்ளும் இருவரும் 85 வயதைத் தொட்டவர்கள் அல்லது தாண்டியவர்கள். திருவள்ளுவர் பிறந்த இடம் தொடர்பாக நண்பர்களாக இருந்த இருவர் மிகப் பெரிய பகைவர்களாக மாறி ஒருவரை ஒருவர் தூற்றுவதும் வசைபாடுவதும் கேலிக்குரியன. இருவரையும் முதல் அனைத்துலகத் திருக்குறள் மாநாட்டில் ஆய்வுரை வழங்க அழைத்தேன். இத்தகைய கீழ்த்தரமான சண்டை சச்சரவுகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவரை முன்னிறுத்தி இவர்கள் செய்வது மடத்தனமான செயல் என்று கூறியதோடு வள்ளுவர் பிறந்த பூமியைக் கண்டறிவதாகக் கூறிக்கொண்டு இப்படியெல்லாம் செயல்படுவது திருவள்ளுவரைக் கொச்சைப் படுத்தும் இழிந்த செயல் என்பதை நான் தெளிவாகவே இவர்களுக்கு எடுத்துச் சொன்னேன்.

திருக்குறளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள், தொடர்கள், உவமைகள், இடம் பெற்ற சில வழக்குகள், ஆகியன இன்றும் குமரித்தமிழில் இருப்பதால் வள்ளுவர் பிறந்தது தென்குமரி ஆகலாம் என்ற கருத்து ஓரளவு ஏற்புடையதே.

"இருபுனலும் வாய்த்தமலையும் வருபுனலும்

வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு"

தென்குமரியில் பேச்சிப்பாறையின் பக்கத்திலுள்ள வள்ளுவன் பொற்றை எனும் சிறுகுன்றில் ஏறிநின்று கண்களை அகலவிரித்து நோக்கினால் இலட்சிய நாடு குறித்த மேற்கூறிய வள்ளுவரின் குறள் காட்சிகளை நாம் நம் கண்களால் இன்றும் தரிசிக்க முடியும். வள்ளுவர் அடிக்கடி இம்மலைக்கு வந்ததால் இம்மலை இப்பெயரினைப் பெற்றது என்று மலைவாசி மக்களான காணிக்காரர்கள் என்னிடம் கூறியபோது நான் மிகவும் வியப்படைந்து போனேன். அருமையான மலைகள், ஆற்றுநீர், மழைநீர், ஊற்றுநீர் ஆகியன இணைந்த கடல் நீர், மலையிலிருந்து ஓடிக்குதித்து வரும் ஆறுகள், அழகான கோட்டைகள் எல்லாவற்றையும் ஒருவர் ஒருங்கே இங்கிருந்து காணமுடியும். இவற்றை மட்டும் வைத்துக் கொண்டு திருவள்ளுவர் தென்குமரியில் பிறந்தார் என்று கூறிவிட முடியாது. ஒரு கவிஞன் வாழ்ந்த புவிப் பின்னணி அழகாக இருந்தால் அவனது கவிதைக் காட்சிகளும் அழகாகத் தான் இருக்கும் என்று கூறிவிட முடியாது. கவிஞர்களின் கற்பனையாற்றலால் அவர்களால் எந்த அழகான காட்சிகளையும் சொற்களால் தீட்ட முடியும். கவிஞனின் சொந்த புவிப் பின்னணி அழகாக, வளமாக இருந்தால் அவனது இயற்கை பற்றிய சொல்லோவியங்களும் சிறப்பாக அமைந்தமைக்கு வார்ட்ஸ்வர்த், திரிகூடராசப்பக் கவிராயர் போன்றோரின் படைப்புக்கள் சான்று.

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்

தூண்டிற் பொன்மீன் விழுங்கியற்று
(931)

திருக்குறளின் சூது குறித்த மேற்கூறிய உவமை பௌத்த பிடக நூல்களில் மீண்டும் மீண்டும் இடம்பெறுவதைக் காணலாம். சூதாட்டத்தில் கிடைக்கும் வெற்றி பொன்மீன் தூண்டிலை விழுங்குவது போன்றது என்பது இந்தக் குறளின் கருத்து. முட்டம் போன்ற பகுதிகளில் கடலில் தூண்டில் போடும் மீனவர்கள் மீன்களைக் கவர ஒளிரும் பொன்போன்ற உலோகத்தினைக் கட்டி மீன் பிடிக்கும் வழக்கத்தை இது படம் பிடிப்பதாக உள்ளது என்று விளக்குகின்றார் நண்பர் முனைவர் பத்மநாபன். என்னோடு அவர் முட்டத்திற்கு வந்தபோது தூண்டிலில் கட்டும் வண்ண மயமான சரிகை போன்ற ஒன்றை வலைகள் விற்கும் கடைகளிலிருந்து வாங்கி வந்து என்னிடம் காட்டினார். மேற்கூறிய குறளைத் 'தூண்டிற்பொன்' என்று பிரித்ததால் ஏற்பட்ட தவறு இது என்று அவருக்குத் தெளிவுபடுத்தினேன். தூண்டில் + பொன்மீன் என்று படிக்கக் கூறினேன். பௌத்த நூல்களைக் கற்ற திருக்குறளின் ஆசிரியர் தனக்கு மிகவும் பரிச்சயமான பௌத்த நூல்களிலிருந்தே இந்த உவமையை எடுத்திருக்க வேண்டும். சூதில் சிக்கியவர்களுக்குத் தூண்டிலினை விழுங்கிய பொன்மீனை உவமையாகக் கூறுவது பௌத்த பிடகப் பயிற்சியுள்ளவர்களுக்கு எளிதில் விளங்கும். தன் கருத்தை நிலைநாட்ட செய்திகளையும் மூல நூலையும் சிதைத்து தாம் விரும்பியவாறு தொன்மையான ஒரு நூலை வளைத்து ஒடித்துப் பொருள் கொள்வது தற்சார்பு (*Subjective*) மிக்க ஆய்வாக அமையுமேயன்றி தற்சார்பற்ற ஆய்வாக (*Objective Research*) அமையாது என்பதை அவருக்குத் தெளிவுபடுத்தினேன். எனினும் அவர் இதை ஏற்றுக் கொள்ளவில்லை.

திருவள்ளுவர் குறித்து எழுந்த கதைகள் அனைத்தும் கற்பனைக் கதைகளே என்பதில் எனக்கு எந்த ஐயமுமில்லை. திருவள்ளுவர் என்ற பெயரில் ஒருவர் வாழ்ந்தார் என்பதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. திருக்குறள் ஒன்றினை முதன்முதலாக முழுமையாகச் சுட்டும் மணிமேகலைக் காப்பியம் கூட அதன் ஆசிரியரை பொய்யிற் புலவன் என்று தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுகின்றது. எனினும் திருக்குறள், தொல்காப்பியம் ஆகிய நூல்களை ஆழமாகப் பயிலும்போது அவற்றின் பிறப்பிடம் தென்குமரியாக இருக்கலாம் என்பதை என்னால் முழுமையாக மறுக்கவும் முடியவில்லை. திருக்குறள் என்ற அருமையான நூலை எழுதிய ஆசிரியரின் பெயர் தெரியாத நிலையில் அந்நூல் வைதீகத்திற்கு எதிரான நூல் என்பதை உணர்ந்து தாழ்ந்த சாதியைச் சுட்டும் வள்ளுவர் என்ற புனை பெயரை அதன் ஆசிரியர் பெயராகத் தந்திருக்க வேண்டும் என்பது தெளிவு.

உயர் வர்ணத்தின் வர்ணாசிரமக் கோட்பாட்டை எதிர்த்து வைதீகக்கொள்கைகள் பலவற்றிற்கெதிராகப் போர்க்குரல் எழுப்பிய ஒரு நூலின் ஆசிரியர், வர்ணம் சார்ந்த உயர் வர்ணத்தினராகக் காட்டப்படாது கீழ்ச் சாதியைச் சார்ந்த வள்ளுவர் என்று காட்ட முற்பட்டோரின் முயற்சியே திருவள்ளுவர் எனும் பெயரின் உருவாக்கம் ஆகும். இது கீழ்ச் சாதியைச் சார்ந்தவர் திருக்குறளின் ஆசிரியர் என்று நிலைநாட்டிய மேல் சாதி சார்ந்தோரின் முயற்சியின் விளைவாகும் என நான் எண்ணுகின்றேன்.

தொடக்க நிலையில் வைதீகர்கள் யாரும் திருக்குறளைக் கற்கவோ, போற்றவோ முன்வரவில்லை என அறிகிறோம். முதன்முதலில் திருக்குறள் மீது அதிக உரிமை கொண்டாடியவர்கள் பௌத்தர்களே என்பது என் கணிப்பு. வர்ணாசிர தர்மத்தைத் தூக்கிப் பிடித்த வேதகால பிராமணியத்திற்கு எதிராக மிகுந்த ஆற்றலுடன் எழுந்த புரட்சிக்குரல் கௌதம புத்தருடைய குரல் என்பதில் ஐயமில்லை - பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும் என்ற புரட்சிக்குரலை இந்தியத் திருநாட்டில் முதலில் எழுப்பியவர் புத்தரே. வடநாட்டில் எழுந்த புத்தரின் இக்குரல் 500 ஆண்டுகள் கழித்து தமிழகத்தில் திருக்குறள் ஆசிரியரால் எழுப்பப்பட்டது. சாதாரண மனிதனும் அவனது மொழியும் புத்தரால் புத்துயிரூட்டப்பட்டன. பௌத்தக் கோட்பாடுகள் ஆற்றலுடன் திருக்குறளில் எதிர் ஒலித்ததை உணர்ந்த மணிமேகலைக் காப்பியம் திருக்குறள் ஆசிரியரை பொய்யில் புலவன் என்று புகழ்ந்தது.

பௌத்தத்திற்கு அடுத்த நிலையில், கொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை போன்ற சமணக் கோட்பாடுகளுக்குக் கலைவடிவம் தந்த திருவள்ளுவரைச் சமண சமயத்தினர் ஒரு சமணராகவே கண்டனர். தமது கேட்பாடுகளை உருவாக்கிய குந்த குந்தாச்சாரியாரே திருக்குறளை எழுதியவர் என்று பிரகடப்படுத்தினர். ஏறத்தாழ 10 ஆம் நூற்றாண்டு வரை திருக்குறள் வைதீகர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

திருப்பாவை பாடிய ஆண்டாள் "தீக்குறளை சென்று ஓதோம்" என்று உறுதிமொழி எடுப்பதைக் காண்கிறோம். இது திருக்குறளைக் குறிக்கவில்லை என்றும் குறளைப் (கோள்) பேச மாட்டோம் என்பதையே சுட்டுகிறது என்றும் வியாக்கியானம் தருபவர்களும் உண்டு. இது தமிழ்ச் சொற்றொடர், சொற்றொடரின் பொருளமைப்பு, தமிழ் வழக்காறுகள் ஆகியவற்றை உணராமல் பேசுவதாகும். ஓதோம் என்ற எதிர்மறைச் சொல்லின் அடியாக அமைவது ஓது என்ற வினைச்சொல்லாகும். ஓது என்பது வேதம் ஓதுதல், மந்திரம் ஓதுதல் என்பன போன்ற உயர் வழக்குகளில் கையாளப்படும் சொல்லாகும். ஓதல் என்ற தொழிற்பெயர் வேதம் ஓதுதல் என்ற பொருளில் "ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேற்றே" என்று பார்ப்பனர்களின் பணிகுறித்துத் தொல்காப்பியத்தில் பேசப்படுவதைக் காண்கிறோம். ஓது (*Chant*) என்ற வினையடியாகப் பிறக்கும் ஓத்து எனும் பெயர்ச் சொல் வேதம் அல்லது மறைபொருள் எனப் பொருள்படும். குறளைப் பேசுதல் என்ற தொடர் கோள் சொல்லுதல் என்ற பொருளைத் தரும். குறளை ஓதுதல் அல்லது ஓதோம் என்பது அடித்தட்டு மக்களின் மறை நூலான (திருக்) குறளை அதாவது தீக்குறளை (தீமை பயக்கும் குறளை) சென்று ஓதமாட்டோம் என்ற பொருளை மட்டும் தான் தரும். திருக்குறளின் மீதிருந்த வெறுப்புணர்ச்சியை அதன் செல்வாக்கு மாற்றியபோது திருக்குறளை எழுதியவர் வள்ளுவர் எனத் தொடர்ந்து கூறியது தவறு என்ற பொருளில் "வள்ளுவன் என்பான் ஓர் பேதை" என்று திருக்குறள் மாலை பேசத் தொடங்கியது.

- தொடரும்

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதத்துவமும் பின்-மனிதத்துவமும்

'மனிதத்துவம்' என்பது ஓர் ஆய்வு முறை, கல்வி அமைப்பு; இத்தாலியில் 13, 14 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றி பிற ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவியது. மனித வாழ்க்கைக்கு அழுத்தம் தருகின்ற மேலைநாட்டு நம்பிக்கைகள், ஆய்வுமுறைகள், தத்துவங்கள் ஆகியவை இதனைப் பயன்படுத்துகின்றன. இதற்கு மறுமலர்ச்சி மனிதத்துவம் என்றும் பெயருண்டு. அப்போது மறுமலர்ச்சி என்ற பெயர் கொடுக்கப்படாவிட்டாலும் அக்காலகட்டத்தில் ஏற்பட்ட புதுப்பித்தல், புது விழிப்புணர்வு அடிப்படையில் மனிதம் சார்ந்த தோற்றுவாயாக இருந்தது.

முதலில் 19ஆம் நூற்றண்டில் ஜெர்மன் அறிஞர்கள் கல்வியில், செவ்வியல் பட்டங்களுக்கு மறுமலர்ச்சிக் காலத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதைக் குறிக்க இந்தக் கருத்தியலைப் பற்றிச் சொன்னார்கள். சிசரோ தந்த கருத்தியலான *humanitas* (மனிதத் தன்மை, கருணை, நாகரிகம்) என்பது கல்வி அரசியல் சித்தாந்தம்.

Humanitas என்பது மனித விழுமியத்தின் வளர்ச்சியைக் குறிக்கும். இப்போது மனித இனம் (*humanity*) என்ற சொல்லோடு தொடர்புடையது. அதில் புரிதல், இரக்கம், கருணை, ஆகியவற்றோடு மன உறுதி, நீதி, விவேகம், மாண்பின்மேல் ஆர்வம் ஆகியனவும் அடங்கும். *Humanitas* ஐ உடையவர் கற்றுத் தேர்ந்த அறிஞராகவும் தன்னைத் தனிமைப் படுத்திக் கொள்ளும் தத்துவ ஞானியாகவும் மட்டுமே இல்லாமல், செயல்படுகின்ற வாழ்க்கையில் பங்களிப்பவராகவும் இருப்பார். செயலும் சிந்தனையும் சேர்ந்து சமநிலையில் இருக்கும்.

மனிதத்துவம் பண்பாட்டைச் சீர்திருத்தும். இருளில் இருக்கும் பழைய சமுதாயத்தை மாற்றி அமைக்கும். மனிதனிடம் உள்ள உள்ளாற்றல்களைப் பிரதிபலிக்கும், ஊக்கப்படுத்தும். தனிமனித நிலையிலிருந்து ஆட்சி அரசுக்குக் கொண்டு செல்லும்.

மறுமலர்ச்சிக் கால மனிதத்துவத்தின் பரப்பு இளைஞருடைய கல்வியும் ஆட்சியாளர் உட்பட்ட மூத்தோருக்கு வழிகாட்டுதலும் ஆகும். இது தத்துவார்த்தக் கவிதை வழியாகவும் பேச்சு/ எழுத்து வழியாகவும் நடைபெறும். மெய்நிலை சமுதாய விமர்சனம், வரலாற்றை மறுமதிப்பீடு செய்வது, வருங்காலத்தைத் துணிச்சலுடன் மறு உருவாக்கம் செய்வது ஆகியவை இதில் அடங்கும். சுருக்கமாகச் சொன்னால், மனிதத்துவம் பண்பாட்டை முழுமையாகச் சீர்திருத்தி, இருண்ட காலத்து அறியாமைச் சமூகத்தைப் புது அமைப்பாக மாற்றுவது. இது மனிதனின் சிறப்பு உள்ளாற்றல்களைப் பிரதிபலித்து ஊக்கப்படுத்தும்.

Humanitas என்பதன் ஊற்று செவ்விலக்கியம். குறிப்பாக கிரேக்க ரோமானியச் சிந்தனை மீண்டும் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் பண்டைய இலக்கியங்கள் அடிப்படையை மனிதத்துவத்திற்கு வழங்கின.

மனிதத்துவம் (*humanism*) என்ற சொல்லும் கருத்தியலும் பலவகைகளில் பயன்படுகின்றன. அவற்றை மூன்று வகைகளில் வகைப்படுத்துவார்கள்: செவ்வியலியியம், வாழ்வியல் புலங்கள் (அறிவியல் தவிர்த்த பிற கலைத்திட்டங்கள்) சார்ந்த நவீனக் கருத்தியல், மனிதனை மையப்படுத்தும் மனிதத்துவம். இலக்கியத் திறனாய்வில், புது மனிதத்துவ இயக்கம் 20ஆம் நூற்றாண்டில் இர்விங் பாபிட், பால் எல்மர் மூர் அகியோரால் உருவானது.

மனிதத்துவம் என்பது மனித அனுபவத்தை மையமாகக் கொண்ட நவீனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோட்பாடுகளுக்கும் செயல் முறைகளுக்கும் பயன்படுகிறது. ஷில்லர் பயன்வழி மனிதத்துவம் பற்றியும், ஜேக்ச் மரிடைன் கிறிஸ்தவ மனிதத்துவம் பற்றியும் பேசினார்கள். மதச்சார்பற்ற மனிதத்துவமும் இயக்கமாக உருவாயிற்று. மார்க்சிய மனிதத்துவம் சமூக, பொருளாதார நீதி மனித மாண்புகளையும் தனிமனிதருக்கும் குழுவினருக்கும் அதிகாரம் வழங்குவதையும் பெறுவதற்கான போராட்டம் என்று கருதுகிறது. இவை அவற்றின் கருப்பொருள்களில் மாறுபட்டாலும், எல்லாமே மனித மையத்தை வலியுறுத்தின.

மனிதத்துவச் சிந்தனையின் அடிப்படைக் கூறுகளாக கல்வி, பகுத்தறிவு, தனிமனிதம், எல்லாருக்குமான மனிதத் தன்மையில் தளராத நம்பிக்கை ஆகியவற்றைக் குறிப்பிடுவார்கள். மேலும் அக்கொள்கையாளர்கள் பகுத்தறிவு, அனுபவம், நம்பத்தகுந்த அறிவு ஆகியவற்றின் அடிப்படையிலான நடைமுறை ஒழுக்க நெறியைப் பயன்படுத்தி கருணை, நீதி, இரக்கம் மிகுந்த மக்களாட்சிச் சமுதாயத்தைக் கட்டி எழுப்ப விழைகிறார்கள்.

மனிதத்துவக் கோட்பாட்டின் ஊற்று செவ்வியல் இலக்கியம் என்று பார்த்தோம். மறுமலர்ச்சி மனிதத்தத்துவவாதிகளுக்கு அரிஸ்டாட்டில், சிசரோ முதலானோருடைய எழுத்துகளும், தத்துவமும், வரலாறும் மாதிரிகளாக அமைந்தன. செவ்வியலை நோக்கிச் சென்ற மனிதத்துவ அறிஞர்கள் சிசரோ, லிவி முதலானோருடைய எழுத்துக்களால் கவரப் பட்டார்கள். இத்தாலிய மறுமலர்ச்சியாளர் மாக்கியாவலி மனிதம் என்பதற்கு *umanita* எனற சொல்லைப் பயன்படுத்துகிறார். அதற்கு இரக்கம் என்பதைவிட ஆழமான பொருள் உண்டு. மனிதத்துவவாதிகள் செவ்வியலை வருங்காலத்தோடு தொடர்புப்படுத்தினார்கள்.

மெய்ம்மை வாதம் மரபுசார் அனுமானங்களைத் தள்ளிவிட்டு, பெறப்படும் அனுபவத்தைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும் என்று வற்புறுத்திற்று. இது மனிதத்துவ வாதிகளுக்கு ஏற்புடையது. வரலாற்றைக் கற்று இளையோருக்குக் கற்பித்தார்கள், எழுதினார்கள். சரியான வரலாற்று முறை அவர்கள் மனித மெய்நிலயைப் புரிந்துகொண்டு இன்றைய அவர்களது பணியில் சிறக்க உதவும் என்று நம்பினார்கள். மாக்கியவெலி, ஆல்பெர்டி, டெகாமரான் எழுதிய பொக்காசியோ முதலானோர் மனிதத்துவத்தைத் தங்கள் நூல்களில் கொண்டுவந்தார்கள். முழுமையான தூய்மை அவர்கள் லட்சியம் இல்லை. அன்றாட உலகச் செயல்களின் மாண்பை மதித்தார்கள். புகழையும் செல்வத்தையும் தேடுவதை ஏற்றுக் கொண்டார்கள். அறச்செயல்களை வலியுறுத்துகின்ற வள்ளுவர் செல்வம் ஈட்டலை மறுக்கவில்லை என்பதைக் காண்க.

விழுமியங்களுடனான செயல் கற்றலின் இலக்கு என்பது மனிதத்துவத்துக்கு அடிப்படை என்று சொல்வார்கள். 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பல்மியரி, "அறத்தின் உண்மையான பெருமை பயனுள்ள செயலில் அடங்கும். பயனுள்ள செயலுக்குச் சில திறன்கள் அவசியம்" என்றார்.

மனிதத்துவத்தின் வளர்ச்சியை 13 ஆம் நூற்றாண்டு ஃப்ளாரன்சில் காணலாம். அதற்கு லாட்டினி என்ற தனியொரு மனிதர் காரணம் என்பார்கள். அவருடைய குடிமை உரிமை (*civic rightrs*), தனிமனிதச் செயல் முனைவு, தலைமை, சிசரோவின் கருத்தியலான சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதத்துவச் சிந்தனையின் அடிப்படைக் கூறுகளாக கல்வி, பகுத்தறிவு, தனிமனிதம், எல்லாருக்குமான மனிதத் தன்மையில் தளராத நம்பிக்கை ஆகியவற்றைக் குறிப்பிடுவார்கள். மேலும் அக்கொள்கையாளர்கள் பகுத்தறிவு, அனுபவம், நம்பத்தகுந்த அறிவு ஆகியவற்றின் அடிப்படையிலான நடைமுறை ஒழுக்க நெறியைப் பயன்படுத்தி கருணை, நீதி, இரக்கம் மிகுந்த மக்களாட்சிச் சமுதாயத்தைக் கட்டி எழுப்ப விழைகிறார்கள்.

மெய்நிலை, தனிமனிதனின் அறிவாற்றலை ஏற்றல், அரசியல் கல்வியின் முக்கித்துவம் ஆகியவை பற்றிய கருத்தாக்கங்கள் மனிதத்துவத்திற்கு உருக்கொடுத்தன. இத்தாலியக் கவிஞர் தாந்தேயும் மனிதத்துவத்தைப் போற்றினார். பின்னர் வந்த கருத்தியல்கள் இவற்றின் அடிப்படையிலானவையே. 14 ஆம் நூற்றாண்டில் மனிதத்துவம் வலுப்பெற்றுப் பிரிந்து பரவிற்று. பெர்ட்ரார்க், பொக்காசியோ ஆகியோரின் பங்களிப்பைப் பார்த்தோம். பதினாறாம் நூற்றாண்டுக்குள் ஃப்ரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின் முதலிய பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் இக்கருத்தியல் பரவிற்று. ஆனால் இப்போது அதன் பயன்பாடு முக்கியமாக கல்விப்புலத்திலும் இலக்கியத்திலும் இருந்தது. பெர்ட்ரார்க்கிற்கு நிகரான எராஸ்மஸ் என்ற டச்சுக்காரர் இன்னொரு முக்கியமான மனிதத்துவவாதி. அவருடைய கருத்தியலின் தாக்கம் 16 ஆம் நூற்றாண்டு கலையிலும் இலக்கியத்திலும் காணப்பட்டது. ராபலே, மான்டெய்னியா ஆகிய ஃப்ரெஞ்ச் அறிஞர்களும், ஷேக்ஸ்பியர் ஆகியோரும் அவரது தாக்கத்துக்கு உள்ளானவர்களே. ஆங்கிலேய மனிதத்துவம் பதினைந்தாம் நூற்றாண்டில் தொடங்கியது. சர் தாமஸ் மூர் போன்றோரின் படைப்புகளும் பின்னர் ஃபிலிப் சிட்னி, பென் ஜான்சன், ஷேக்ஸ்பியர் ஆகியோரின் பங்களிப்பும் இங்கிலாந்து மனிதத்துவத்தினை வளர்த்தன. பென் ஜான்சன் தனது மனிதத்துவப் பணியை விளக்கும்போது 'ஒரு நல்ல கவிஞன் இளைஞருக்கு எல்லா நல்ல துறைகளிலும் கற்பிக்கவும். வளர்ந்தோரிடமும் எல்லா நற்பண்புகளையும் ஒளியூட்டவும், முதியோர் அவர்களது சிறந்த உயர்ந்த நிலையில் இருக்கவும் அல்லது அவர்கள் குழந்தைப்பருவத்திற்குப் போகும்போது அவர்களது முதல் வலிமையைத் திரும்பப் பெறவும் செய்ய முடியும்" என்றார்.

ஷேக்ஸ்பியருக்குப் பிறகு ஆங்கில இலக்கியத்தில் பேக்கனும் ஜான் மில்டனும் மனிதத்துவ முறைகளைப் பின்பற்றினாலும் மனிதத்துவதின் மையக் கருத்திலிருந்து விலகிச் சென்றார்கள். பேக்கன் இயற்கை அறிவியலிலும் மில்டன் இறையியலிலும் கவனம் செலுத்தினார்கள். பேக்கன் மனிதரைவிட இயற்கைக்கு அழுத்தம் தந்தார். மில்டன் கடவுளை மையப்படுத்தினர். மனிதத்துவ மதச்சார்பின்மையை ஏற்கவில்லை. பின்னர் வந்தவர்களிடம் மனிதத்துவக் கோட்பாடுகளில் ஏற்பட்ட பிளவுகளைக் காண முடிந்தது. தத்துவத்திற்கும் இலக்கியத்துக்கும் இடையேகூட விரிசல் தோன்றியது. மெய்யியலாளர் தங்களைக் குறுகிய வட்டத்துக்குள் அடைத்துக் கொண்டார்கள். படைப்பாளிகளும் திறனாய்வாளர்களும் வெவ்வேறு நிலைப்பாடுகளை எடுத்துக் கொண்டார்கள். இதற்கு விதிவிலக்காக ஜோனத்தன் ஸ்விஃப்ட் இருந்தார், மனித மாண்புகளை மீண்டும் வலியுறுத்தினார்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் மனிதத்துவம் வலுவிழந்து போயிற்று. இன்றைய உலகில் மனிதத்துவம் என்பது அறிவியல் அல்லாத பல்கலைக்கழகப் பாடத்திட்டம் (*art and humanities*) என்றுதான் அறியப்படுகிறது.

இதற்கிடையில் 1910 முதல் 1930 வரையில் அமெரிக்காவில் புது மனிதத்துவம் என்ற கோட்பாடு தோன்றியது. இது பத்தொன்பாதாம் நூற்றாண்டு ஆங்கிலக் கவிஞரும் திறனாய்வுக் கோட்பாட்டாளருமான மாத்யூ ஆர்னால்டின் இலக்கிய - சமூதாயக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. ஆர்னால்ட் இதுவரையில் சிந்திக்கப்பட்ட, சொல்லப்பட்ட மிகச் சிறந்தவற்றை மீண்டும் கொண்டு வரவேண்டும் என்றார். பண்டைய நாகரிகங்களின் ஒழுக்க நெறிப் பண்பினை, தொழில்மயமாகி வரும் பொருள்முதல் வாதத்தின் காலத்தில் மீட்டெடுக்கவேண்டும் என்பது அவரது கோட்பாடு. இலக்கிய மெய்நிலை, இயற்கைவாதம் ஆகிய அறிவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த தத்துவங்களை எதிர்த்த புது மனிதத்துவவாதிகள், மனிதர் இயற்கையின் படைப்புகளில் தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்றார்கள், அனுபவத்தின் சாரம் அடிப்படையில் ஒழுக்க நெறி சார்ந்தது, மனிதத் தன் விருப்பு சுற்றுச் சூழலால் உருவாக்கப்பட்டாலும் அது சுதந்திரமானது என்ற கருத்தாக்கங்களைக் கொண்டிருந்தார்கள். பால் எல்மர் மூர், இர்விங் பாபிட் ஆகியோர் அவர்களில் முக்கியமானவர்கள். அவர்கள் பண்பாட்டுத் தளத்தில் மேல்மட்டத்தினர், அழகியலில் பழமைவாதிகள் என்றும் கருதப்பட்டார்கள்.

• •

மனிதத்துவம் மாந்தரின் தனித்தன்மையான அறம், செயல்முகமை (*agency*), ஒழுக்கநெறியில் மேல் உயர்நிலை ஆகியவற்றில் அசைக்க முடியாத நம்பிக்கையின் அடிப்படையிலான மெய்யியல், ஒழுக்க நெறி ஆகிய இயக்கங்களை உள்ளடக்கியது என்று பார்த்தோம். இது மனிதர்கள்தான் எப்போதுமே அறநெறி உலகின் ஒரே முகவர்களாக இருக்கிறார்கள், இருப்பார்கள் என்ற கருத்தியல் கொண்டது. இதனைப் பின்-மனிதத்துவம் கேள்வி கேட்டது. இன்றைய எந்திரமயமாக்கப்பட்ட வருங்காலத்தில் உலகில் அறநெறியை உயர்வாகக்கொண்டு மனிதர்களை உச்சத்தில் வைப்பதில் பொருளில்லை என்பது அவர்கள் வாதம்.

இனி வருங்காலங்களில் உடல் உள் வைப்புகள் (*implants*), மரபணுக்களை மாற்றல், அறிதிறன்களில் மேம்பாடு, பிற உயிர்-மருத்துவத் தொழில் நுட்பம் ஆகியவற்றால் இன்றைய மனிதரால் அடையாளம்காண முடியாத ஒரு புது உயிரினமே உருவாகிவிடும் என்று பின்-மனிதத்துவத்தின் ஒரு பிரிவினரான *transhumanists* கூறுகிறார்கள். இப்போது நமக்கென்று இருக்கும் மனித வரலாறு முடிவுக்கு வந்துவிடும் என்று கூகுளின் ரே குர்ஸ்வெயில் போன்றார் முன்னுரைக்கிறார்கள்.

வேறொரு பின்-மனிதத்துவக் கோட்பாட்டினர் மனிதர்களும் தொழில்நுட்பமும் ஒன்றிணையும்போது மனிதத்தை உடலளவில் மேம்படுத்தாது என்றும் நாமும் மனிதரல்லாத உயிரனங்களிலிருந்து வேறுபடாமல் அவர்களோடு தொடர்புடையவர்களாக இருப்போம் என்றும் சொல்கிறார்கள். இக் கருத்தியலை முன்வைக்கும் தத்துவஞானி டோனா ஹாரவே எந்திர - மனிதர்களாக (*cyborgs*) ஆகும்போது நாம் மனிதருக்கும் மனிதரல்லாதவற்றிற்கும், இயற்கைக்கும் செயற்கைக்கும், தானுக்கும் - மற்றதுக்கும், உயிரிகளுக்கும் உயிரியில்லாத வைக்கும் இடையில் அமைத்திருக்கும் எதிரெதிர் கருத்துகள் உடைக்கப்பட்டு புது கருத்தாக்கங்கள் ஏற்படும் என்று கூறுகிறார். அப்போது நம்மை ஒரு பகுதி மனிதராகவும் ஒரு பகுதி எந்திரமாகவும் பார்ப்பதில் நாம் நிறைவு கொள்வோம். காலாவதியாகிப்போன பாலின, இன, உயிர் வகை எதிர்நிலைகள் உடைந்து போகும். ஹாரவேயின் பின்-மனிதத்துவம் நம்மிலிருந்து மாறுபட்ட பொருட்கள் ஆகியவற்றிடமும், இந்த உலகில் நம்மோடு வாழும் உயிரினங்கள், பொருட்களிடமும் நமது அறநெறிக் கோட்பாட்டை விரிவுபடுத்துகிறது. பின்-மனிதத்துவ வருங்காலத்தில் உயிர் (உயிரில்லாது) இனங்கள் சந்திக்கும். அப்போது நமது அறநெறியில் அவற்றிற்கும் இடம் அளிப்போம்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இந்த

'காக்கைச் சிறகினிலே' மாத இதழுக்கு படைப்புகளை அனுப்பும் எழுத்தாளர்களின் கவனத்துக்கு:

கட்டுரை மற்றும் சிறுகதை 1200 வார்த்தைகளுக்கு மிகாமலும் நூல் அறிமுகம், நூல் மதிப்புரை 600 வார்த்தைகளுக்கு மிகாமலும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.

பக்கங்களின் அளவு கருதி பல படைப்புகளை உடனுக்குடன் அந்தந்த இதழில் வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.

–ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டின் தொடக்கத்திலும் மனிதர், மனிதரல்லாத உயிரிகள், எந்திரங்கள் ஆகியவை ஒன்றோடு ஒன்று குறுக்கிடுதல் நிகழ்கிறது. இதனையே பின் மனிதத்துவம் என்று சொல்வார்கள். மேலை நாட்டு பின்மனிதத்துவக் கோட்பாடு ஐரோப்பியச் சிந்தனையை மையமாகக் கொண்டிருப்பதால் தொழில்நுட்பம் பற்றிய சமூக ஆய்வுகள் முதலான வெவ்வேறு துறைகளின் மரபுகளைப் பயன்படுத்துகிறது. மனிதனே அண்டவெளியின் மையம் என்ற கருத்தியலின் அடிப்படையில் பிற உயிர்கள், உயிரற்ற பொருள் ஆகியவை பற்றிய மனிதனுடைய அணுகுமுறை இருந்து வந்திருக்கிறது. ஆனால் பின்-மனிதத்துவக் கோட்பாடு மனிதனை மையத்திலிருந்து விலக்கி, எல்லாப் பருப்பொருளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை, ஒன்றையொன்று சார்ந்தவை, ஒன்றாகவே பரிணாம வளர்ச்சி பெற்றவை என்று கூறுகிறது.

பின்-மனிதத்துவம்என்றசொற்றொடரிலுள்ள பின் *(post)* என்ற முன்னொட்டு மனிதத்துவ நிலைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு புது யுகத்தின் வருகையைக் குறிக்கிறது. புதிய அரசியல் மெய்யியலின் மாதிரி அது. மனிதத்துவத்தின் விமர்சன மரபினைப் பயன்படுத்தி அதன் கருத்தியல்களை எதிர்த்து மனிதன் - மனிதனல்லாதது என்ற இரட்டை எதிர்நிலையில் நிறுத்தி மனிதனையும் உலகினையும் புரிந்து கொள்கிறது.

சமூக விஞ்ஞானிகள் மனிதரையும் மனிதரல்லாதவற்றையும் வேறுபடுத்த முடியாத சூழலில் பின்-மனிதத்துவம் புதிய பார்வையைக் கொடுக்கிறது என்று சொல்கிறார்கள். இன்னொரு சாரர் மனிதத்துவத்திலிருந்தும் அதன் வழிமுறைகளிலிருந்தும் விலகிப்போவது பற்றிக் கவலை கொள்கிறார்கள். இன்னொரு பிரிவினர் நாம் மனிதர்களாக இருந்திருக்கிறோமா என்ற கேள்வியை எழுப்பி புதியதொரு கோட்பாடு தேவையா என்று ஐயம் கொள்கிறார்கள்.

பின்-மனிதத்துவம் என்பதை மனிதத்துவத்துக்கு அடுத்து வருவது அல்லது அதற்கு அப்பாற்பட்டது என்ற கருத்தியலில் பார்க்கிறார்கள். இது பல வகைகளைக் கொண்டது. எதிர் மனிதத்துவம் *(anti-humanism)* மனிதத்துவத்தின் மரபு சார்ந்த மனிதனின் நிலை, உயிர்த்துடிப்பு, முகமை ஆகிய கருத்துகளை எதிர்க்கிறது. மனிதத்துவம் பின் மனிதத்துவம் பற்றி லக்கான், ஃபூக்கோ போன்றோர் முன்வைக்கும் கருத்துகள் இதனைப் புரிந்து கொள்ள உதவும். எதிர் மனிதத்துவத்தைப் போலவே மாற்று மனிதத்துவத்தை *(transhumanism)* இன்னொருசாரார் முன்வைக்கிறார்கள். பண்பாட்டுப் பின்-மனிதத்துவம் மனிதன், மனிதத் தன்மை ஆகிய அடிப்படை அனுமானங்களைக் கேள்வி கேட்கிறது. மனிதத்தன்மை தொடர்ந்து ஒரு சமகாலத் தொழில்நுட்ப அறிவியல் *(technoscience)* அறிவுக்குத் தன்னைப் பக்குவப்படுத்தி மாற்றிக் கொள்கிறது. மனித இனத்துக்கே உரியது ஒழுக்க நெறி. அதனை மனித இனத்திற்கு அப்பால் கொண்டு செல்வதால் ஏற்படும் அறநெறி விளைவுகளை ஆராய்கிறது மெய்யியல் சார்ந்த பின்-மனிதத்துவம்.

பின்-மனிதத்துவம் என்ற சொற்றொடரை உருவாக்கிய இஹாப் ஹசன் தன்னுடைய "*Prometheus as Performer: Toward a Posthumanist Culture*" என்பது வெவ்வேறு வகைப் பனுவல்களைப் பாத்திரங்களாகக் கொண்ட நாடகம் போன்ற கட்டுரை. அதில் புதிய வகைப் பண்பாட்டின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகிறார். அதனைப் பின்-மனிதத்துவப் பண்பாடு என்று அழைக்கிறார். "நமது தோல்விகள் - மாசுபடுத்தல், மக்கள் தொகை, அடக்கியாளப் பயன்படுத்தும் அதிகாரம், மனிதன் தன்னையும் இயற்கையையும் இரக்கமற்றுச் சுரண்டுதல் ஆகியவை பற்றி நமக்குத் தெரியும்," என்று சொல்கிற ஹசன், தொழில் நுட்பத்தின் துணை கொண்டு மனிதன் கடந்து போகும் புதிய சாத்தியங்கள் இருக்கும் என்ற நம்பிக்கையையும் அளிக்கிறார்.

பின் மனிதத்துவக் கருத்தியலுக்கு வரும் இரண்டு எதிர்ப்பு நிலைகளைப் பார்க்கலாம்:

பின்-மனிதத்துவம் மருத்துவத் துறையில் ஏற்படும் முன்னேற்றங்களையோ, தொழில்நுட்ப மாற்றத்தையோ மட்டும் விளக்குவதில்லை. இரண்டுமே முக்கியம்தான். எப்படி தொழில்நுட்பத்தால் மனித இனம் மாற்றம் பெறுகிறது என்ற கற்பனைகள் குறிப்பிடத்தக்கவை, பின்-மனிதத்துவக் கருத்தியல்களின் வெளிப்பாடுகள். ஒன்றாக ஆதல், மாறும் தன்மை, எல்லைகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டுதல், இந்தக் கருத்தியல்களில் மனிதனின் நிலைப்பாடு ஆகியவற்றையும் அது குறிக்கும்.

ஃபுகுயாமா 2002 ஆம் ஆண்டில் கூறிய கருத்து கவனிக்கத்தக்கது: மனிதத்துவவாதிகள் மனிதரின் இடத்தில் வேறொரு உயிரினத்தை வைக்க முயல்கிறார்கள் என்பது ஃபுகுயாமாவின் கருத்து. அவர் மாற்று மனிதத்துவத்திற்கும் பின்-மனிதத்துவத்துக்கும் இடையே வேறுபாடு காண்கிறார். மருத்துவத் துறையில் ஏற்படும் முன்னேற்றங்களை ஆராயும் அவர் இனிவரும் நாட்களில் பின்-மனிதத்துவம் வருங்காலத்தை வரையறை செய்து ஒரு சட்டகம் தரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். எனினும் அந்த வருங்காலம் ஒழுக்க நெறி எல்லைகளைத் தாண்டுவதாக இருக்கும். மருத்துவம் ஒரு வணிகத் தொழிலாக மாறிவிடும் என்பது அவரது அச்சம். அவருடைய *End of History*, *Factory X* ஆகிய நூல்கள் இதனை விளக்குகின்றன.

தொழில்நுட்பப் பண்பாடு பற்றிய கருத்தியலைப் பெப்பர் என்பவர் ஆராய்கிறார். அவரைப் பொருத்தவரையில் பின்-மனிதத்துவத்தில் மனிதத்தன்மை அருகியிருக்கிறது "நாம் படைக்கும் தொழில்நுட்பங்கள் மனிதனுடைய மேலாதிக்கத்திற்கும் தனித்தன்மைக்கும் அறை கூவல் விடுக்கின்றன. மனிதன் - எந்திரம் இவற்றிற்கு இடையேயுள்ள மேலாதிக்கம் மெல்ல இடம் மாறுகிறது," என்று அவர் எச்சரிக்கிறார். எனினும் அவருடைய பிந்தைய எழுத்துகளில் (2005) இந்தப் பின்-மனிதத்துவம் மாறக்கூடியது, மனித இனம் மாற்று மனிதத்துவத்திலிருந்து பின்-மனிதத்துவத்துக்கு முன்னேறுகிறது என்று கூறுகிறார்.

பின்-மனிதத்துவத்துவம் நோக்கிய பயணத்தில் சமுதாயத்திலிருந்து இயற்கையைப் பிரிக்க முடியாது என்ற விழிப்புணர்வின் தாக்கம் இருக்கிறது. மேலும் மரபணு மாற்றம், செயற்கை நுண்ணறிவு, மீநுண் தொழில்நுட்பம், இனப்பெருக்க தொழில்நுட்பங்கள் முதலான தொழில்நுட்ப அறிவியலில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள், உணவுப் பழக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள், பொது மருத்துவம் (கொரானா நினைவிருக்கிறதா?), பருவநிலை மாற்றம் ஆகியவை மனிதனின் உணர்வுபூர்வச் சிந்தனையில் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்பு பின்-மனிதத்துவம் சார்ந்த விவாதங்களைத் தொடங்கியிருக்கின்றது. எப்படியிருப்பினும் நாம் புது யுகத்தில் காலடி எடுத்து வைக்கிறோம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். தொழில்நுட்பத்தில் நம்பிக்கை உள்ளோர் நவீன அறிவியல் இவற்றிலிருந்து நம்மை விடுவிக்கும் என்று எண்ணுகின்றனர். தனிமனித வளர்ச்சிக்குப் புது வழிகள் திறக்கப்பட்டு முதலாளித்துவப் பொருளாதர வள்ர்ச்சியை ஏற்படுத்தும் என்று நம்புகிறார்கள். இதற்கு நேரெதிராக, புதிய பின்-மனிதத்துவ நிலை இறுதி அழிபாட்டின் (*apocalyptic*) முன்னோட்டம் (டெரிடா இதே சொல்லைப் பயன்படுத்துகிறார்) என்றும், மனிதர் என்ற அடையாளத்துக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்றும், வருங்காலத்தில் பூமிப் பந்தில் மனிதர் வசிப்பது இயலாது போகும் என்று எச்சரிக்கிறார்கள்.

இது செயற்கை நுண்ணறிவு யுகம். ரோபோட்டுகள் ஆட்சி புரியத் தொடங்கிவிட்டன. வகுப்பறைகளில் அவையே ஆசிரியர் இடத்தில் இருந்து பாடம் சொல்லிக் கொடுப்பதைப் பார்க்கிறோம். அதிகாரத்தின் அடையாளமாக இருக்கும் ஆசிரியரின் இடத்தில் எந்திரப் பெண்! பின்-மனிதத்துவம் மனிதனின் வருங்காலம், மனிதரின் சட்டதிட்டங்கள், மனிதன் என்ற கருத்தியல், சமூக அமைப்பு ஆகியவற்றில் அதன் தாக்கம் ஆகியவற்றை ஒழுக்க நெறியின் அடிப்படையில் ஆராய வேண்டும் (செயற்கை நுண்ணறிவு தரும் *chat gpt aaps* ஐப் பயன்படுத்தி ஓர் எழுத்தாளர் ஒரு நாவலை எழுதினார் என்றால் அது யாருக்குச் சொந்தம்? யாருடைய நாவல் அது? 'ஆப்சு'க்கா, அதை நிரலிட்டவருக்கா? இனப் பெருக்கத்தில் செயற்கைக் கருத்தரித்தலில் அல்லது குளோனிங்கில் உருவான உயிர் யாருடையது? இங்கு எழுகின்ற வினா ஒழுக்க நெறியில் தொழில்நுட்பம் ஏற்படுத்தக் கூடிய தாக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத்தான்.

பின்-மனிதத்துவம் விலங்குகளையும் தாவரங்களையும் மனித இனத்தின் உடன்பிறப்பு வகைகள் என்றே கருதுகிறது. தாவரம்சார் சிந்தனை (*vegetal thinking*), விலங்குத் தன்மை (*animality*), ஆகிய கருத்தியல்கள் மனிதரும் பிற உயிர் வகைகளும், உயிரற்ற பருப்பொருளும் ஒன்றோடுஒன்று பின்னிப் பிணைந்திருப்பதைக் காட்டுகின்றன. சாமானியர்களின் கலை, நிகழ்த்துக் கலைகள் கட்டடக் கலைகளில் கூடப் பின்-மனித்ததுவக் கருத்துகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கப்படுகின்றன.

இனி இலக்கியம், இலக்கியத் திறனாய்வு ஆகியவற்றில் பின்-மனிதத்துவத்தின் இடத்தைப் பார்க்கலாம்.

படைப்பு இலக்கியங்களில் இக் கோட்பாடு எப்படி முன்வைக்கப் படுகிறது, அவற்றின் ஆசிரியர்களின் நிலைப்பாடு என்ன என்று ஆராய முடியும். அதுபோல இலக்கியப் பனுவல்களில் இக்கோட்பாடுகளில் எந்த வகை வெளிப்படுகிறது என்றும் பார்க்க முடியும்.

பின்-மனிதத்துவக் கருத்துகள் 1990களுக்குப் பிறகுதான் பரவலாக ஆக்கப்பட்டாலும் அக்காலக் கட்டத்திற்கு முந்தைய இலக்கியங்களில் அவற்றின் தோற்றங்களைக் காணலாம். ஸ்டீவன்சனின் டாக்டர் ஜெக்கில் அன்ட் மிஸ்டர் ஹைடு, எச் ஜி. வெல்சின் இன்விசிபிள் மேன், ஆர்வெல்லின் 1984, ஆடனின் ப்ரேவ் நியூ ஓர்ல்ட் ஆகிய நாவல்கள் தொழில்நுட்ப, உயிர் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பின் ஆதிக்கங்களைக் காட்டுகின்றன.

இயற்கையோடு மனிதன் இணைந்து ஒன்றாவது தமிழிலக்கியத்தில் பரவலாகக் காணமுடியும். மோப்பக் குழையும் அனிச்சத்தை உவமைக்கு எடுத்தாளும் வள்ளுவர் நாம் இயற்கையை எவ்வளவு மென்மையாகக் கையாளவேண்டும் என்று நமக்கு மறைமுகமாகப் பாடம் புகட்டுகிறார். முல்லைக்குத் தேர் கொடுத்ததையும், மயிலுக்கு ஆடை அணிவித்ததையும் அறியாமை என்று இகழாமல் அடிப்படையில் பின்-மனித்ததுவத்தின் ஓர் எடுத்துக்காட்டு பார்ப்போமே! வாடுகின்ற பயிர் கண்டு வாடும் வள்ளலார் நமக்கும் செடிகொடிகள்பால் இரக்கம் இருக்க வேண்டும் என்று கூறி நம்மை மனம் உருகச் செய்கிறார்.

விலங்குகள் பறவைகள் இன்றைய கவிஞர்களின் உயிர்த் தோழர்கள். எப்போதோ வருகின்ற குருவிக்குச் சட்டியில் நீர் வைக்கும் சக்தி ஜோதி, பன்றிக் குட்டியைப் பாட்டுடைத் தலைவனாக ஆக்கும் வெய்யில் என்று பல எழுத்தாளர்களைப் பின்-மனிதத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் பார்க்கமுடியும்.

எந்திரங்களும் மனிதரின் துணைவர்கள் (பகைவர்களும்கூட). அவற்றிற்கும் மனிதர்போல உணர்வுகள் இருந்தால்?

இன்றைக்குப் பல அறிவியல் புதினங்கள் வருகின்றன. அவற்றில் அறிவியலின் பயன்பாடுகள் குறித்து மனித நோக்கில் கதைகள் உள்ளன. ஐசக் அசிமாவின் நாவல்களைப் பார்க்க. தமிழிலும் பல அறிவியல் கதைகள் வருகின்றன. அவற்றில் அறிவியல் முன்னேற்றத்துக்கும், எந்திர மனிதன், பிற கோள் உயிரிகள் ஆகியவை பற்றிய அதீதக் கற்பனைக்கும் முக்கியத்துவம் தரப்பட்டாலும் பல கதைகளில் பின் மனிதத்துவக் கருத்தான, மனிதரும் எந்திரமும் இணைந்து செயலாற்றுவதாகக் கற்பனை செய்யப்படுகிறது. குறிப்பாக, குழந்தைகளுக்கு எழுதப்படும் கதைகளில் இதனைப் பார்க்கலாம் (பார்க்க: பாலபாரதியின் மரப்பாச்சி சொன்ன இரகசியம், மதுரை சரவணனின் குழந்தைகள் கதைகள்).

இந்த நேரத்தில் ஆசிய ஆப்பிரிக்க நாட்டுக் கதைகளில் இக்கருத்தியல் தொன்மங்களாகத் தோன்றுகின்றது என்ற கருத்தையும் ஆராய வேண்டும். விலங்கு உருவத்தில் அல்லது தாவர உருவத்தில் இருக்கும் பாத்திரங்கள் அல்லது தெய்வங்கள் இந்த மனித - விலங்கு - தாவர உறவைக் காட்டச் சொல்லப்பட்டிருக்குமா? இந்துத் தொன்மக் கதைகளை இங்கு எடுத்தாளலாம்.

செயற்கை நுண்ணறிவு படைப்பிலக்கியத்தையும் கல்வி முறைகளையும் ஆட்சி செய்யத் தொடங்கிவிட்ட இப்புது யுகத்திற்குள் இலக்கியத் திறனாய்வும் வேகமாக வளர்ந்து வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

பார்வைக்கு உரியவை:

Grudio, Robert. "Humanism" Britannica. Mar 29, 2024

Jansen Yolande, Jasmijin Leewkenkamp and Lerie Urricelqui. "Posthumanism and the 'postersing impulse,'" https://creativecommons.org/licenses/by-nc-nd/3.0/

Lorumer, J. Posthumanism/ Posthumanistic Geographies. International Encyclopedia of Human Geography, 2009

Miah Andy. Posthumanism : A Critical History of Posthumanism in Medical Enhancements & Posthumanity. New York: Routledge. January 2009

Nayar, Pramod K. Posthumanism; Oxford Bibliographies 21 Feb 2023.

•

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | சிதம்பரம் இரவிச்சந்திரன்



அண்டார்டிகாவின் பனி மழையிலும் நுண் பிளாஸ்டிக்குகள்

அண்டார்டிகாவில் இப்பருவத்தில் பெய்த முதல் பனிப்பொழிவில் நுண் பிளாஸ்டிக் துகள்கள் இருப்பது முதல்முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தாவர விலங்குகளுக்கு தீவிர பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இத்துகள்களை நியூசிலாந்து விஞ்ஞானிகள் அங்கு சேகரிக்கப்பட்ட 19 மாதிரிகளில் இருந்து கண்டுபிடித்துள்லனர். இது பற்றிய ஆய்வுக்கட்டுரை சமீபத்திய க்ரையோஸ்பியர் (*The Cryosphere journal*) இதழில் வெளிவந்துள்ளது.

பொழியும் பனியிலும் நுண் பிளாஸ்டிக்குகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது பனி மற்றும் பனிப்படலங்கள் உருகுவதை துரிதப்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது. இதனால் இக்கண்டத்தின் தனிச்சிறப்புமிக்க சூழல் மண்டலம் பாதிக்கப்படும் ஆபத்து அதிகரித்துள்ளது. அரிசியை விட சிறிய அளவுள்ள இத்துகள்கள் முன்பு இப்பகுதி கடலின் மேற்பரப்பு நீரில் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது. என்றாலும் புதிதாகப் பொழியும் பனியில் இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இதுவெ முதல்முறை.

ஆழ்கடல் முதல் உலகின் உச்சிவரை

இந்த ஆய்வுகள் டாக்டர் லாரா ரேவல் (*Dr Laura Revell*) மேற்பார்வையில் கேண்ட பரி (*Canterbury*) பல்கலைக்கழக முனைவர் பட்ட மாணவி அலெக்ஸ் ஆவெஸ் அவர்களால் (*Alex Aves*) மேற்கொள்ளப்பட்டது. நுண் பிளாஸ்டிக்குகள் ஆழ்கடல் முதல் எவரெஸ்ட் வரை பூமி முழுவதையும் இன்று ஆக்ரமித்துள்ளது.

வாயு மண்டலத்தில் இருந்து நுண் பிளாஸ்டிக்குகள் பனிப்பாறைகளில் கலந்துள்ளதா என்பதை அறிய 2019ல் ஆவெஸ் அண்டார்டிகாவில் உள்ள ராஸ் பனி அலமாரியில் (*Ross ice shelf*) இருந்து பனித்துகள் மாதிரிகளை சேகரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பனி அலமாரி என்பது நிலப்பகுதியுடன் நிரந்தரமாக இணைந்துள்ள மிதக்கும் பனிப்படலம். மனித நடமாட்டமே இல்லாத தூய அண்டார்டிக்கில் நுண் பிளாஸ்டிக் துகள்கள் இருக்காது என்றே தாங்கள் நினைத்ததாக ரேவல் கூறுகிறார். அவர் தன் மாணவியை ஸ்காட் முகாம் பகுதி மற்றும் மெக்மோர்டோ நிலையத்தில் *(Scott Base&Mc-Murdo station)* இருந்து மாதிரிகளைச் சேகரிக்க ஆலோசனை கூறினார்.

வேறெங்கும் பிளாஸ்டிக் துகள்கள் இருக்க வாய்ப்பில்லை என்று உறுதியாக நம்பிய தான் கூறிய இந்த முன்னெச்சரிக்கை செயல்கள் தேவையற்றதாகிவிட்டது என்கிறார் ரேவெல். நுண் துகள்கள் சேகரிக்கப்பட்ட 19 மாதிரிகளிலும் இருந்தன. இது மிக வருத்தம் தரும் செய்தி. என்றாலும் அண்டார்டிகாவில் பொழியும் முதல் பனிப்பொழிவிலும் இத்துகள்கள் கலந்திருப்பது நிலைமையின் தீவிரத்தை எடுத்துக்காட்டுகிறது என்கிறார் ஆவெஸ்.

உண்பதும் உடம்பினுள் இருப்பதும் பிளாஸ்டிக்குகளே

உலகம் முழுவதும் மக்கள் இன்று பிளாஸ்டிக் துகள்களையே உண்கின்றனர். அருந்துகின்றனர். சுவாசிக்கின்றனர். சமீப ஆய்வு ஒன்று மனித செல்களையும் இவை பாதிக்கின்றன என்று கண்டறிந்துள்ளது. 2021ல் வெளியிடப்பட்ட ஆய்வுமுடிவு ஒன்று நுண் பிளாஸ்டிக்குகள் உலகம் முழுவதும் சுழல்வதாகக் கண்டறிந்தது.

ஆவெஸ் சேகரித்த மாதிரிகளில் சராசரியாக ஒரு லிட்டர் உருகிய பனித்துகளில் 29 வகையான நுண் பிளாஸ்டிக்குகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது அடர்த்தியான கடல் பனிப்படலத்தில் இதற்கு முன்பு ராஸ் *(Ross)* கடல் மற்றும் அண்டார்க்டிக் கடலில் சுற்றுப்புறத்தில் காணப்பட்ட பனிப்படலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சராசரி அளவை விட அதிகம்.

ராஸ் தீவில் ஆய்வுக்கூடங்கள் அமைந்துள்ள ஸ்காட் மற்றும் மெக்மோர்டோ பகுதிகளுக்கு அருகில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் இதர தொலைதூரப் பகுதிகளைக் காட்டிலும் இத்துகளின் அடர்வு அதிகம் காணப்பட்டது. 13 வேறுபட்ட பிளாஸ்டிக்குகள் பனிப்பொழிவில் கலந்திருப்பது தெரியவந்துள்ளது. இவற்றில் பானங்கள், ஆடைகள் தயாரிப்பில் பயன்படும் பி இ டி *(Poly Ethylene Therapthalate PET)* எனப்படும் பிளாஸ்டிக் அதிகம் இருந்தது.

இத்துகள்கள் வாயு மண்டலத்தில் காற்றின் மூலம் ஆயிரக்கணக்கான மைல்கள் பயணித்து அண்டார்டிகா வந்துசேர்கின்றன. மனிதர்கள் ஆய்வு செய்யும் பகுதிகளில் நுண் பிளாஸ்டிக் துகள்களின் கால் தடம் *(plastic foot print)* அதிகமாகக் காணப்படுகிறது. பனிக்கண்டத்தில் வழி அடையாளத்திற்காக வைக்கப்பட்டுள்ள பல வண்ணக்கொடிகளில் இருக்கும் நிறங்கள் தாங்கள் கண்டுபிடித்த நுண் பிளாஸ்டிக் துகளின் நிறங்களுடன் பொருந்துகின்றன என்று ரேவல் கூறுகிறார்.

இதற்கு முன்பு இப்பகுதியில் வாயு மண்டலத்தில் இருக்கும் நுண் பிளாஸ்டிக் துகள்கள் பூமி வெளியிடும் கதிரியக்கத்தை உறிஞ்சும் ஆற்றல் பெற்றுள்ளன என்று ஆய்வுகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது. கரும் நுண் பிளாஸ்டிக்குகள் *(dark micro plastics)* பனி படர்ந்த பரப்புகளில் விழும் சூரிய ஒளியை உறிஞ்சி அப்பகுதியின் வெப்பநிலையை அதிகரிக்கிறது.

அண்டார்டிகாவில் இதுபற்றிய ஆய்வுகள் இன்னும் தீவிரமாக நடத்தப்படவேண்டும். இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளவை நமக்கும் நல்லதில்லை. பூமிக்கும் நல்ல சேதியில்லை.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

Owned and Published and Printed by V.Muthiah and Published from 22/32 M.J.B Street,Triplicane, Chennai-600005 and Printed at Sekar Offset Printers, 50/168, Big Street, Chepauk, Chennai-600005. Editor: V.Muthiah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடல் திறப்பு

கிராமப் பொருளாதாரத்தை தம் வசம் வைத்திருந்த நிலப்பிரபுக்களின் உதவியால்தான் மாமன்னர்கள் நீண்ட காலம் ஆட்சி செய்தார்களென்ற விசயம் நீண்ட கால கேள்விக்கு பதிலானது. அதே சமயத்தில் அவர்களைப் பற்றி அறியவும் தூண்டுகிறது. அதன் தொடர்ச்சிதான் இன்றைய பெரும் விவசாயிகளென்றும் அறிய முடிகிறது. வக்பு சட்ட திருத்தம் தொடர்பான சாதக பாதகங்களை விவாதித்தது திருத்தம் யாருக்கு பாதகத்தையும் சாதகத்தையும் தருகிறதென்பதை விளக்கியது சிறப்பு. திராவிட கட்சிகளின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு காரணம் அதன் சித்தாந்த கோட்பாடுகள்தான். இக்கோட்பாடுகளிலிருந்து விலகிச் செல்லும் கட்சிகளை ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகம் சுட்டிக்காட்டிய விதம் அருமை. உணர்ந்து செயல்பட்டு கட்சியையும் அவர்களை நம்பியிருக்கும் மக்களையும் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை பொய்த்துப் போகாதென்றே எண்ணுகிறேன். சந்தையில் புழக்கத்திலிருக்கும் செயற்கை நுண்ணறிவு தளங்களையும் அது செயல்படும் விதத்தையும் அது எவ்வாறு தவறான தகவல்களை கொடுக்கும் என்பதையும் எடுத்துச் சொன்ன விதம் எச்சரிக்கை உணர்வோடு இருக்க வேண்டியதை வலியுறுத்துகிறது. தகவல் தொடர்பு யுகத்தில் மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு போராடி தீர்வுகளைப் பெற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் போது 300 வருடங்களுக்கு முன்பு தங்களின் வரிச்சுமையை குறைக்க போராடியதையும் அதில் அவர்கள் வெற்றி பெற்றதையும் வாசித்த போது பேராச்சரியமும் மலைப்பும் தோன்றுகிறது. உழவனின் போராட்டம் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதும் நல்ல படிப்பினையே. நல்ல பாம்பின் பெயர்க்காரணம் புதுத் தகவல். மூட நம்பிக்கையும் உயிர் பயமும் எப்படியெல்லாம் அழைக்க வைக்கிறதென்பதை அறிய முடிகிறது. தற்குறியும் கையெழுத்தும் கட்டுரை பல்வேறு அனுமானங்களுக்கும் விவாதத்திற்கும் இட்டுச் செல்கிறது. ஒரு வருடத்தில் 6 பேர் மட்டுமே எழுத்தறிவு பெற்றார்களா? அப்படியானால் அக்காலகட்டத்தில் அடிப்படைக் கல்வியறிவு என்றொன்று இல்லையா? என்ற கேள்வியும் எழுகிறது. எதையுமே கற்காமல் எல்லோரும் எப்படி இருந்திருக்க முடியுமென்ற சிந்தனையும் தோன்றுகிறது. இன்றைய சூழலில் பெரியாரின் தேவை தமிழ்நாட்டை கடக்க வேண்டியது அவசியமென்றாலும் இன்னும் தமிழகத்தில் கிராமங்களுக்குள்ளேயே பெரியார் விலக்கப்பட்டவராக இருக்கிறார் காரணம் கடவுள் மறுப்பு கொள்கையே. அவரைப்பற்றி ஒன்றுமே தெரியாதவர்கள் கூட கடவுள் மறுப்பு கொள்கையே முன்னிறுத்துகின்றனர். இம்மனநிலையை மாற்றி அம்மக்களையும் பெரியாரை வாசிக்க தூண்டும் சிந்தனை மனப்பான்மையையும் ஏற்படுத்த வேண்டிய தேவையுள்ளது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ஐயா பழனித்துரை அவர்களின் ஒவ்வொரு கட்டுரையும் மக்களாட்சியில் மக்களின் கடமைகள் என்னென்னவென்று குழந்தைகளுக்கு பாடம் புகட்டுவது போன்று தொடர்ந்து வருவது பயனுள்ளதாக அமைந்துள்ளது. மேமாத இதழிலும் வாக்களிப்பதுடன் கடமை முடிந்து விடுவதில்லை அவர்களை கண்காணித்து வழிநடத்துவதும் மக்களாட்சியின் கடமையே என்றுரைத்தது அறிவுக்கு விருந்தாக அமைந்தது. அத்துடன் மக்களாட்சியை எவ்வாறு வீழ்த்தி வருகிறோம் என்பதும் அனைவரும் சிந்தித்து மாற்றிக் கொள்ள வேண்டிய இன்றியமையாத விசயமாகும். உறுத்தலாக அமைந்தது விசயம் பகுத்தறிவுக்கு ஒவ்வாத கற்பனையாக கட்டமைக்கப்பட்ட மக்களிடையே ஏற்றத்தாழ்வுகளுக்கு காரணமான கதையான பசுவின் கன்றுக்கு நீதி வழங்கிய மன்னனை தமிழரின் பெருமைமிகு முன்னோடிகளில் சுட்டிக் காட்டியதுதான். ஆசிரியரும் இதை அறியாதவர் அல்லர். மனிதர்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகளை கற்பிக்கும் நூல்களுக்கெதிரான சமூக நீதி நூல்கள் இல்லாமலா இருந்தது அக்காலங்களில் என்ற நினைத்து வருந்தியதுண்டு ஆனால் அது என் அறியாமையின் வெளிப்பாடு என்று இப்போது புரிகிறது 'மறந்த நீலகேசி' நூலைப் பற்றி தெரிந்து கொண்டபின்பு. மனிதன் தன் வாழ்வை பயனோடு கூடிய சிறப்பானதாக மாற்றிக் கொள்ள மதத்தின் கொள்கைகள் ஏதாவது ஒரு வகையில் உதவி செய்துள்ளது. ஆனால் அது அனைவருக்குமானதாக இல்லாத போது அதிலிருந்து வெளியேறி புரட்சியை ஏற்படுத்திய சமூக நீதி சமயத்தலைவர்களும் இருந்திருக்கிறார்கள் எனபதையும் அவர்களின் கொள்கைகளையும், புரட்சி செயல்களையும் கடந்த சில இதழ்களில் அறியச் செய்ததற்கு நன்றிகள் பல காக்கைக்கு. இது போன்ற கட்டுரைகள்தான் காக்கையை ஒவ்வொரு மாதமும் மேலும் சிறப்பிப்பதோடு அதன் வருகைக்கு காத்திருக்கவும் வைக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

சி சு ஜெகன்நாதன் பெங்களூரு

மே இதழில் தோழர் எஸ் வி ஆர் அவர்கள் தன் பிறந்த நாள் செய்தியாக தந்தை பெரியார் தனது பிறந்தநாளில் விடுத்த செய்தியை தெரிவித்ததும், பெரியாரியத்தின் பெரும்பயன் தமிழகத்தை தாண்ட வேண்டும் எனும் கட்டுரையில் பெரியாரது கருத்துகளின் தாக்கம் பிற மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டிருந்தால் சமய அடிப்படையிலான பிரிவினை போக்குகள் கட்டுக்குள் அடங்கி இருக்கும் என்றதும் சிறப்பு.நூலின் பதிப்பகம், விலை விபரங்களுடன் நூலின் சிறப்பினை எடுத்துரைக்கும் நூல் மதிப்புரை பகுதி பயனுள்ளதாக உள்ளது தொடர்ந்து எதிர் நோக்குகிறோம்.

லலிதா மோகன், சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 /43921
Postal Registration No. TN/CH(C)/617/2024-2026
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month Posted at patrika channel, Egmore. between 29th-4th of every month



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org